உ

கடவுள் துணை

# மாதர் நீதி

இஃது
இந்து தேசத்துப் பெண்களின் உபயோகத்திற்காகச்
சேலம் ஜில்லா-லோகல் பண்டு மாராமத்து இலாகா

லேட் ஸூபர்வைசர் ஸ்ரீமான்

ஆரணி C. முருகேச முதலியாரால்

இயற்றப்பட்டு,

ஸ்ரீமான் அ. மஹாதேவ செட்டியாரால்

புதியமுறையில் அமைக்கப்பெற்று
ஷியார் எழுதிய முன்னுரையோடும் கூடியது.

INTRODUCTION BY

**Mr. T. P. Meenakshisundaran M.A., B.L.,**

*Councillor, Corporation of Madras*

திருத்தமான ஆறாம் பதிப்பு

பதிப்பாளர் :—

ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலை,
நெ. 4/34, நயினியப்ப நாயக்கன் வீதி,
பார்க் டவுன் (P.O.), சென்னை.

*All Rights*] 1930 [*Reserved*

ஓம்


## ரிஜிஸ்டர் காப்பிரைட் அறிவிப்பு

[*Copyright Registered*
*All Rights & Tranlation Reserved*]

காப்பிரைட் :—1925௵ ஜனவரி௴ 16௳ முதற் கொண்டு, சேலம் ஜில்லா-லோகல்பண்டு மாரமத்து இலாகா லேட்சூபர்வைசர் ஆரணி C. முருகேச முதலியார் அவர்கள் வசன வடிவுடன் இயற்றிய மாதர் நீதி என்னும் நூலின் 4-ம் பதிப்பின் பிரசுரக் கர்த்தர் ஷை முதலியார் அவர்கள் குமாரர் சென்னை பிரப்பூர் பாரக்ஸ் மங்கபதி நாயக்கன் வீதி 6-ம் நெம்பர் வீட்டிலுள்ள ஆரணி M. வேதாசல முதலியார் அவர்களிடமிருந்து காப்பிரைட் பெற்றவர் சென்னை ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலையின் அதிபர் சை. ந. பாலசுந்தரம் செட்டியாராவர். இப் புத்தகம் இந்தியன் காப்பிரைட் பிரகாரமாகவும், அன்னியதேசியாது காப்பிரைட் பிரகாரமாகவும் காக்கப்பட்டிருக்கின்றது. எவர்க்கும் இப் புத்தகத்தை முழுவதுமாவது அல்லது இதில் ஒரு பாகத்தை யாவது தாம் வேறாக அச்சிடவும், மற்றொரு பாஷையில் மொழி பெயர்த்து அச்சிடவும் அதிகாரமில்லை; அவர்கள் இதிலுள்ள பாடங்களையாவது பதங்களையாவது ஹெட்டிங்கு களையாவது காப்பி செய்வார்களாயின், அது காப்பிரைட்டை உல்லங்கனஞ் செய்ததே ஆகும்.

S. N. B.

AUM

# PREFACE

## To Ist Edition

Though our benevolent Government has created many facilities for the education of native women, the Hindu Zenana habits prevent our sisters and daughters from receiving perfect education for want of long scholastic career. The scheme of education for females must necessarily differ much from that for males, as all who are interested in the female education should know. It has been found in most cases that the same text-books prescribed for boys are placed in the hands of girls in our public schools, and in these books lessons on practical morality for females have not generally found a place. To supply this want, the following pages have been written with the hope that they may be of use to girls in our schools and to women who have already become wives, mothers and mothers-in-iaw. For the inculcaation of morals, choice stanzas from standard and popular works, such as Kasikandam, Kural, Muthurai, Naladiar, Nithinerivilakkam, Nithivenba, Vivegachinthamani &c., have been here quoted and explained with a view that this book may also serve as a little anthology for women.

The Author is fully aware that the present work is not the first of its kind; but if it should in any way be helpful to those for whose benefit it is intended he will feel himself amply recompensed for the labour he has bestowed on it.

The book being intended to be used as a Reader, is divided into III Parts :—The first, dealing with the scholastic career of young momen; the second, their duties in their after-life to their husbands; and the third, their duties to their children and others &c. The lessons on morals are illustrated by familiar stories which, it is hoped will be found interesting and instructive to the readers both young and old. My thanks

are duo to Messrs. G. S. Abboy Naidu, Dy. Inspector of Schools., and Sudarisana Mudaliar of Anantapoor for their kind suggestions.

SALEM,
*1st August, 1886* } A. C. M.

(TO 3RD EDITION)

The favourable reception of the "Mather Neethy" testified in the sale of the 2nd Edition, within the last two years, increases the Author's obligations to render it to the utmost of his ability, more worthy of such public approbation.

With the object, the Harischandra Puranam, was prosed and appended with this edition, to illustrate the life of Chandramati Devi, who was one of the most virtuous and chaste women of ancient India, and the beloved Queen of King Harischandra, an incarnation of Truth.

VEELORE,
*20th November, 1894* } A. C. M.

(TO 4TH EDITION)

Considering the value and suitability of the use of this book now-a-days, and hoping that the morals may be green in the minds of the sisters of this generation, I, as the son of the deceased author, wish to continue the publishing of this book to the general public. If anything noticed wrong I shall feel highly thankful to them who point them out to me with their justification.

ARNI,
*25th October, 1921* } I beg &c.,
A. M. VEDACHALA MUDALIAR.

ஓம்

# ஐந்தாம் பதிப்பின் முன்னுரை

---

நெடுங்காலமாக மிகப் பிரசித்தி யடைந்துள்ள இந் நூலுக்கு ஓர் முன்னுரை எழுதி வாசகர்களுக்குத் தெரிவிப்பது அவசிய மின்றேனும், எனது ஆப்தரும், இந்நூற் பதிப்பாசிரியருமான ம-ள-ள-ஸ்ரீ சை. ந. பாலசுந்தரஞ் செட்டியாரவர்கள் வேண்டுகோட் கிணங்கி இங்குச் சுருக்கமாக நூலின் புதிய பதிப்பின் அமைப்பைப்பற்றிச் சிறிது எழுதத் துணிந்தேன்.

இந் நூலின் முதன் மூன்று பதிப்புக்கள் நூலாசிரியர் காலத்திலேயே வெளிவந்துள்ளன ; நான்காவது பதிப்பு ஷை நூலாசிரியர் காலத்திற்குப் பிறகு ஷை நூலாசிரியர் குமாரரால் வெளியிடப்பட்டது. இப் பதிப்பின் காப்பிகள் அநேகமாகச் செலவழிந்துவிட்டமையாலும், உள்ளூரிலும் வெளியூரிலும் உள்ள அன்பர்கள் பலர் ஷை நூலை விரும்பிக் கேட்பதாலும், ஷை நூலாசிரியர் குமாரரிடமிருந்து ஷை நூலின் சம்பந்தமாயுள்ள முழு சுதந்தரத்தையும் (*Registered Copyright All Rights Reserved*) உள்பட ஷை எனது நண்பரவர்கள் 1925ஆம் ஜனவரிமீ 16-ந் தேதி கிரயத்திற்குப் பெற்றார்கள்.

முருகப்பெருமான் புகழின் சம்பந்தமாயுள்ள திருமுருகாற்றுப்படை-பரிமேலழகர் உரை, கந்தரநுபூதி உரை, கந்தர் சஷ்டி கவசமுரை, கந்தரலங்கார முரை ஆகிய இவற்றைப் புதிய முறையில் அமைத்துக் கொடுத்தமைபோல், மாதர் நீதி

என்னும் இந் நூலையும் பார்ப்பதற்கு மிகு அழகாகவும், விஷயங்கள் விளக்கமாகவும், நீண்ட பாராக்களைச் சிறு பாராக்களாகவும் அமைப்பதோடு இன்னும் செய்யவேண்டிய திருத்தங்களையும் செய்து தருமாறு ஷை எனது நண்பரவர்கள் என்னைக் கேட்டுக்கொண்டார்கள். ஷையார் விருப்பத்தை அனுசரித்துப் பலவகையாக யோசனை செய்ததில், புதிய யோசனை ஒன்று தோன்றிற்று! அதன்படி இந்நூலை அமைத்துள்ளேன். இந்த மாதிரி அமைப்பில் வெளிவருவது இது தான் முதன் முறையாகும்.

இந் நூலாசிரியர் நமது பெண்மணிகளின் உபயோகத்திற்கென்றே நெடுநாள் சிரமங்கொண்டு இந்நூலை இயற்றியிருக்கின்றாரென்று தெரிகிறது. நூல் முற்றும் வாசிப்பவர்கட்கு இதன் உண்மை விளங்கப்பெறும். இதன் வாசக நடையோ மிகவும் செம்பாகமா யமைந்துள்ளது; படிக்கப் படிக்க மனதிற்கு உற்சாகத்தைத் தருகின்றது. நமது பெண் மணிகளுக்கு எங்கெந்த வகைகளில் நீதிகளைப் புகட்டவேண்டுமோ அவற்றை மிக நன்றாக யோசித்துச் சில விடங்களில் நயமாகவும், சில விடங்களில் கண்டிப்பாகவும், சில விடங்களில் அன்பாகவும் இந் நூலாசிரியர் கூறியிருக்கின்றார்; இந் நூலில் நமது தினசரி அனுபவத்தில் வழங்கிவரும் பழமொழிகளைச் சமயோசிதமாகக் கூறியிருப்பது மிகவும் பாராட்டற்பாலதாம். ஷை பழமொழிகள் இதற்குமுன் பதிப்புக்களில் வாசகத்தின் இடையிடையே கலந்திருந்தன. இப்போது பதிப்பித்துள்ள புதிய பதிப்பில் ஆரம்ப முதல் கடைசிவரையிலுள்ள பழமொழிகளுள் ஒவ்வொன்றும் பைகா ஆண்டிக் பெரிய எழுத்தில் ஒரு வரியாகவும், இரண்டு வரியாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றது.

இந் நூலில் வரும் மேற்கோள் செய்யுட்களுள் ஒவ்வொன்றும் இன்ன நூலில் இத்தனையாவது செய்யுள் என்று விவரம்

குறிப்பிடப்பட்டுள்ளது. காசிகாண்டத்தைச் சார்ந்த மேற்கோள் செய்யுள்களுக்கு விவரம் குறிப்பிடக்கூடவில்லை; ஏனெனில், ஒத்திடுவதற்கு மூல புத்தகமாவது, மூலமும் உரையும் சேர்ந்த புத்தகமாவது கிடைக்கவில்லை. அதுபற்றிப் பழைய பதிப்பின்படி பொதுவாகக் காசிகாண்டம் என்று மட்டும் குறிப்பிடப்பட்டது.

இந்நூலில் வரும் மேற்கோள் செய்யுட்களுள் ஒவ்வொன்றுக்கும் உரை அநேகமாக விளக்கமாகவும், சில விடங்களில் சுருக்கமாகவுங் காட்டப்பட்டுள்ளது. ஷை உரைப்பாகங்கள் ஒவ்வொன்றிலும் எத்தனை விஷயங்கள் கூறப்பட்டுள்ளனவோ அவற்றிற்கெல்லாம் தொடர் இலக்கங்கள் கொடுத்துத் தனித் தனி பாரா அமைக்கப்பட்டுள்ளது.

சம்பாஷணைகள் வரக்கூடிய இடங்களில் ஒவ்வொருவருடைய சம்பாஷணையையும் தனித்தனியே பிரித்து, பிரதி சம்பாஷணைகளினும் எத்தனை விதமான அபிப்பிராயங்கள் வெளிவந்துள்ளனவோ அவற்றிற்கெல்லாம் தனித்தனி இலக்கங்கள் கொடுத்திருக்கின்றேன்; அவை பல பாராக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

சில இடங்களில் சம்பாஷணையாக இல்லாமல் தமது மனோ பாவனையை வெளிப்படுத்த எத்தனை விதமாகத் தமது மனோ பாவனையைக் கூறியிருக்கின்றாரோ அவற்றிற்கெல்லாம் மேற்கூறிய சம்பாஷணையின் அமைப்பை அனுசரித்து, அவற்றைப் பல பாராக்களாகப் பிரித்து இலக்கங்கள் கொடுத்திருக்கின்றேன். இந்த அமைப்பு நூதனமாக இந்நூலில் அமைக்கப்பட்டது. வேறே எந்த நூல்களிலும் இவ்வித அமைப்புக் கிடையாது. இம்மாதிரி யெல்லாம் புதிய விதமாக அமைத்ததற்குக் காரணம் யாதோவெனின், நமது பெண்மணிகளுக்கு ஒவ்வொரு விஷயமும் மிகச் சுலபமாக விளங்குதற் பொருட்டேயாம்.

புஸ்தகத்தின் ஒவ்வொரு பக்கத்தின் தலைப்பிலும் இன்ன பருவம், இன்ன இலக்க பாடம், இன்ன விஷயம், கதையின் பெயர் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.

முன் பதிப்புக்களில் மேற்கோளாகக் குறிப்பிடப்பட்டுள்ள செய்யுளகாதியில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை என்பவற்றின் தொடர்மொழிகளின் முதற் குறிப்புகள் சேர்க்கப்படவில்லை. இப் பதிப்பில் அவை சேர்க்கப்பட்டுள்ளன.

இரண்டாவது பதிப்பின் இங்கிலீஷ் முகவுரை அடங்கிய பிரதி கிடைக்காமையால். மூன்று பதிப்புக்களின் முகவுரைமட்டும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நூலாசிரியர் ஒரு புதிய முறையை யனுசரித்திருக்கின்றார்; அஃதாவது ஒரு பாடத்தில் முன்னே ஒரு விஷயத்திற்கு இலக்கணங் கூறிவிட்டு, அடுத்த பாடத்தில் அதைக் கதை மூலமாக விளக்கிக் காட்டியிருப்பதேயாம். நமது பெண்மணிகளின் உபயோகத்திற்கென்று வேறு சில புஸ்தகங்கள் வெளிவந்துளவேனும், இவ்விதமான அமைப்பில் வேறே ஒரு புஸ்தகமும் இதுகாறும் வெளிவாவில்லை.

இந்நூலாசிரியர் மிக அரும்பாடுபட்டு, காருண்ய சிந்தையுடன், நமது பெண்மணிகளின் உபயோகத்திற்கென்றே ஞான பொக்கிஷத்தை வைத்துப் புகழுடம்பு பெற்றுப் போயிருக்கின்றார். அப் பொக்கிஷம் நமது பெண்மணிகளுள் ஒவ்வொருவருக்கும் சொந்தமேயாகும். அப் பொக்கிஷமாவது மாதர் நீதி என்று கூறப்படும் இந் நூலேயாம்.

இந்நூல் பல கலாசாலைகளில் பாடபுஸ்தகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

ஒழுக்கவிதிகளைக் கவனித்து அதின்படி நடவாமையாற்றான் பலர் மிகத் துன்புறுகின்றனர்.

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

என்று தமிழ் மறை கூறுவது இங்குக் கவனித்தற்பாலதாம்.

ஒழுக்கவிதிகளைப் படித்து விஷயங்களைத் தெரிந்துகொள்வதுமட்டும் போதாது. ஷை நல்லொழுக்க விதிகளை ஒவ்வொரு பெண்மணியும் பொன்னேபோற் போற்றி அதன்படி அநுசரித்து நடக்க முயலல்வேண்டும்; அப்போதுதான் அவர்கள் பாக்கிய லட்சுமிகள் என்று சொல்லப்படுவார்.

இந்நூல் "ஸ்திரீ புருஷர்களுள் ஒவ்வொருவரும் வாங்கி வாசித்தற்குரியதாம். ஸ்திரீகளுக்குரிய நூலைப் புருஷர்கள் வாசிப்பதனால் யாது பயன் விளைதல்கூடும்?" என்று சிலர் ஆக்ஷேபம் நிகழ்த்தல்கூடும். புருஷர்கள் இந்நூலை வாசித்து இந்நூலிற் கூறப்பட்டுள்ள விதிவிலக்குகளைத் தங்கள் பெண்மணிகளுக்கும் மனைவிமார்கட்கும், போதித்துவந்தால், காலக்கிரமத்தில் மிக மேம்பாடு அடைதல்கூடும்.

இந்நூலில் ஸ்திரீ புருஷர்கள் பொதுவாக அறிந்துகொள்ளக்கூடிய பொது நீதி விஷயங்கள் பல உள்ளன. உதாரணமாக:— வாய்மை, பொய்யாமை, கள்ளாமை முதலியன. இவை எல்லோருக்கும் பொதுவன்றோ? ஸ்திரீகளுக்கென்றே பல விஷயங்கள் இந் நூலிற் கூறப்பட்டுள்ளன. இன்னும் விரிக்கின் விஷயம் மிக நீண்டு போமாதலால் இன்னும் இரண்டொரு விஷயங்களைக் கூறிவிட்டு இம் முன்னுரையை முடிக்கின்றேன்.

இந்நூலின் மூன்றாம் பதிப்பில், நூலுக்குப்பின் அநுபந்தமாக ஸ்ரீ சந்திரமதிதேவியின் சரித்திரத்தை நமது பெண்மணிகள் படித்தறிந்து ஆநந்த மடையும்பொருட்டு, அரிச்சந்திர புராணமூலம் வசன நடையில் சுருக்கமாக எழுதப்பட்டிருந்தது. யாது காரணத்தாலோ நான்காவது பதிப்பில் இந்தப் பாகம் சேர்க்கப்படாமற் போயிற்று. காரணமோ

தெரிந்துகொள்ளல் முடியவில்லை. இப்போது மாதர்நீதியை முன்னதாக வெளியிட்டுவிட்டு, ஷை நூலின் பின்பாகமாக ஷை சரித்திரத்தை வெளியிடுவதாக ஷை எனது நண்பரவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நூலில் என்னையும் அறியாமல் சில விடங்களில் ஏதேனும் பிழைகள் நேர்ந்திருக்கக் கூடும். அதை முன்னிட்டு என்மீது கோபித்துக்கொள்ளா திருக்குமாறு கற்றறிந்த பெரியோர்களை வணக்கமாகப் பிரார்த்திக்கின்றேன்.

இந்நூலைப் புதியவிதமாக அமைத்ததை முன்னிட்டு என் சகோதர சகோதரிகள் ஏதும் வித்தியாசமாக எண்ணிக் கொள்ளாதிருக்குமாறு அவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். விஷயங்களை மிகு சுலபமாகக் கிரகித்துக்கொள்ளும் பொருட்டே இம்மாதிரி நூதன முறையை யனுசரித்தற் குறியவனானேன். இதற்குமுன் சில நூல்களை இம்மாதிரி நூதன முறையில் யான் அமைத்துக் கொடுத்ததற்குங் காரணம் இதுதான்.

இம்மாதிரி காரியங்களில் அடியேனுக்கு ஊக்கத்தையும் சிந்தனையையும் கொடுத்தருளிய எல்லாம் வல்ல இறைவனது திருவடிகளையும், ஸ்ரீ மாதாபாத கமலங்களையும், ஸ்ரீ சற்குரு மூர்த்தி திருவடிகளையும் மனமொழி மெய்களால் வந்தித்து இம் முன்னுரையை இவ்வளவோடு நிறுத்துகின்றேன்.

சுபம். சுபம். சுபம்.

இங்ஙனம்,

[திருவொற்றியூர்-சென்னை.] அ. மஹாதேவ செட்டி.

AUM

# INTRODUCTION

### *Sixth Edition*

The publisher of this book has been kind enough to request me to write an introduction to this popular book which is uudergoing its sixth edition. He has left nothing to be desired by way of attractive and clear printing. The book, as first published, aimed at supplying the long-felt want of a text book on Morals for our Girls, especially those who were, on account of their zenana habits, denied their School education. It is not of much interest for us to know whether it has fulfilled its aim. For us, its interest lies in its easy and persuasive style in the sweet and famous poems quoted and in the fine and classical stories narrated to illustrate the moral principles explained. This book gives us the quintessence of our old world morality. Yet, the book is, except for the emphasis on Cloister-Virtue and the insistence on women's dependence, as modern as any other. Duty, however, rather than Right is its keynote, which sounds rather jarring in the ears of modern women who have become accustomed to listen with rapture the Music of

Rights. The wheel of Nemesis has gone round. Woman the incarnation of Beauty and Love, cannot be denied her birth right of Divinity and Freedom for ever. Light cannot be hidden in a hay stack. Haystack will itself blaze forth. God is the friend of the poor and the helpless and therefore Woman's rights are God's rights. But atleast in this Divine Temple of Beauty in Love and Freedom, the moral equilibrium must be reached. Or else the pendulam may swing back. Tyranny is no substitute for slavery. Rights and duties are complementary: they are but two sides of the same coin. In this era of aggressive rights, I welcome this book as a possible corrective. I wish this book many editions of usefulness.

Tamilaham,
Chintadrepet, Madras.
21—1—30.

T. P. MEENAKSHISUNDARAN
M.A., B.L.,
Councillor, Coporation of Madras.

ஸ்ரீ:

தேவ கோட்டை

மஹா வித்வான், பிரஹ்மஸ்ரீ

## உ. வே. ஸௌந்தரராஜ அய்யங்கார் சுவாமிகள்

# அபிப்பிராயம்

---

மாதர் நீதி என்பது பெண்களால் நடந்துகொள்ளப் படும் நன்மார்க்கம் என்னும் பொருளைத்தரும். இத்துணைப் பெருமைவாய்ந்த அர்த்தபுஷ்டியோடுகூடிய இந் நூலை இயற்றியவர் சேலம் ஜில்லா லோகல்பண்டு மராமத்து இலாகா லேட் ஸூப்ரவைஸர் ஸ்ரீமான் ஆரணி-C. முருகேச முதலியாரவர்களாகும். இந்நூலின்கண்ணுள்ள விஷயங்கள் யாவும் எல்லா மாதராலும் மாந்தராலும் தத்தம் கண்ணுண் மணிபோற் கருதி போற்றற்குரியனவாகும். இது சிறந்த நூலென்பதற்கு இப் புத்தகம் ஆறும் பதிப்பு என்பதே போதுமான ஆதாரம். மேனாட்டாருடைய பழக்கவொழுக் கங்களில் மனமழுங்கிக் கிடந்துழல்வோர் மலிந்த இக்காலத்து இந்நூல் முன்னுள்ள பதிப்புகள் செலவாய்விட்டனவென்கிற அஸ்தமன ஸமயத்தில் அனைவர்க்கும் அறிவுச் சுடரொளி பரப்பவெழுந்த செங்கதிர்த் தீபமே என்று பகர்வது மிகை யாகாது. இந்நூல் தகுந்த மேற்கோள்களுடன் எளிய செந்தமிழ் நடையால் இலக்கண வழுக்களின்றி எழுதப்பட் டிருப்பதும் உலகிலுள்ளோர்க்குப் பேருபகாரமே. ஏன் எனில் இத்தகைய நீதிகளைப் போதிக்கும் நம் முன்னோர்க ளது பன்னூல்களும் செய்யுட்களாலமைக்கப்பெற்றனவாகிக் கற்றுணர்ந்தார்க்கே பயன் படுவதுபோலல்லாது இந்நூல் ஏனையோர்கட்கும் எளிதில் பொருளாகும்படி இருப்பதே அதற்கு முதற்காரணம். இந்நூலாசிரியர் தாமெடுத்துக் காட்டிய மேற்கோள்களில் அர்த்தமாகாத சிலவற்றிற்குச்

சுருங்கவும் தெளிவாகவும் கருத்துரை வரைந்திருப்பதும் பேருபகாரமென்னத் தடையில்லை. இதில் சமயத்திற்கேற் பப் பல பழமொழிகள் காணப்படுகின்றன. இத்துணைப் பழமொழிகள் நடுநடுவே காணப்படுவதாலன்றோ நமது அருணாசலக்கவிராயரவர்கள் ஸ்ரீ ராம நாடகமும், வேத நாயகம் பிள்ளையவர்கள் ஸர்வஸமய ஸமரஸ கீர்த்தனமும் பொன்னேபோற் போற்றப்படுகின்றன. மான்காட்டி மான் பிடிப்பதுபோல் உலக வழக்கச் சொல்லைக்கொண்டே உல கோரை வசப்படுத்துவதுதானே அறிவுள்ளார் செய்கை. தவிர நூலாசிரியர் தான் போதிக்கத்தொடங்கிய நீதிகளை சிறுசிறு கதைகளின் வாயிலாகப்படிப்போர் மனதில் ஊன்ற வைத்திருப்பதும் எழில் உடைத்தாகும். அன்றியும் எதிர் மறையி (வ்யதிரேகத்தி)னாலும் தானெடுத்துக்கொண்ட விஷயங்களை நிலைநாட்டியுள்ளார். குணம் எந்த ஆன்மாவுக் கும்தானே யுண்டு. மேலே மறைத்துக்கொண்டிருக்கும் குற்றங்களைக் களையவேண்டியதே மக்களின் கடமை. ஆகை யால் குற்றங்களை எதிர்மறை மொழியினால் கூறுவது மிகப் பொருத்தமாகும். 'தான்கற்ற நூலளவேயாகும் நுண் ணறிவு' என்ற முதுமொழிப்படி இதுபோன்ற நூல்களைப் படிப்பதனாலேயே நுண்ணறி வேற்படுமென்பதும் நிர் விவா தாம்சமே. ஆகையால் நூலாசிரியர் எடுத்துக்கொண்ட முயற்சியும் பதிப்பாசிரியர் தொடர்ந்த வழியும் பலிதமாகும் வண்ணம் உலகிலுள்ள தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் இதனை வாங்கிப்படித்து அவ்வாறே நடந்து இம்மை மறுமைப்பயன் களை எய்தி மகிழக்கடவார்களென்று எல்லாம்வல்ல இறைவன் மலரடி வணங்கிப் போற்றுகின்றேன்.

இங்ஙனம்:

தேவகோட்டை, வித்வான்

**உ. வே. ஸௌந்தரராஜ அய்யங்கார்.**

ஸஜ்ஜனவிதேயன்

1—2—1930
சென்னை.

# MATHAR NEETHY

## CONTENTS


| Lesson | Subject | Page |
|---|---|---|
| | **1st Scholastic Career** | |
| 1 | Conduct in School ... | 2 |
| 2 | Idling ... | 3 |
| 3 | Do. (*Continued*) [The fable of a Grasshopper] | 4 |
| 4 | Evil habits. [The Story of Gungamony] ... | 6 |
| 5 | Truth. [The Story of Sathyavathi] ... | 9 |
| 6 | Obedience. [Do. of Marakadam] ... | 11 |
| 7 | Pilfering ... | 13 |
| 8 | Do. (*Continued*) [The Story of Nayagam ... | 14 |
| 9 | Loitering on the way ... | 18 |
| 10 | Do. (*Continued*) [The Story of Ambujam] ... | 19 |
| 11 | Cleanliness ... | 20 |
| | **2nd. : Married Life** | |
| 12 | Marriage ... | 22 |
| 13 | Do. (*Continued*) ... | 23 |
| 14 | Duties to Husband ... | 25 |
| 15 | Domestic life ... | 28 |
| 16 | Co-operation ... | 30 |
| 17 | Do. (*Continued*) [The Story of Nethramani] | 32 |
| 18 | Do. Do. Do. Do. ... | 37 |
| 19 | Chastity ... | 41 |
| 20 | Do. (*Continued*) [The Story cf Kamalavathi] | 46 |
| 21 | Do. Do. Do. ... | 49 |
| 22 | Do. Do. [The Story of Gunanidhi] ... | 52 |
| 23 | Do. Do. Do. ... | 55 |
| 24 | Do. Do. Do. ... | 61 |
| 25 | Sathimuthappulavar and his chaste wife ... | 65 |
| 26 | Charity ... | 78 |
| 27 | Do. (*Continued*) [The Story of Amirthavathi] | 83 |
| 28 | Do. Do. Do. ... | 85 |
| 29 | Extravagance ... | 90 |
| 30 | Do. (*Continued*) [The Story of Chandramani] | 93 |

| Lesson | Subject | Page. |
|---|---|---|
| 31 | Training Children ... | 97 |
| 32 | Welcoming guests ... | 99 |
| 33 | Benevolence ... | 102 |
| 34 | Kind offices find their reward [The Story of King Anibushanan ... | 105 |
| 35 | Kind offices find their reward. [The Story of King Anibushanan] ... | 108 |
| 36 | Patience elevates ... | 112 |
| 37 | Back biting contemptuous ... | 116 |
| 38 | Quarrelling is unwisdom ... | 119 |
| 39 | Infidelity is a great vice ... | 123 |
| 40 | Fate of the unchaste [The Story of Vachirangi] | 127 |
| 41 | Do. Do. ... | 129 |
| 42 | Indolence begets evil ... | 134 |
| 43 | Modesty ... | 137 |
| 44 | Envy begets poverty ... | 141 |
| 45 | Do. (*Continued*) [The Story of Bageeradi] ... | 142 |
| 46 | Kindness to relatives ... | 149 |
| 47 | Evils of covetousness ... | 152 |
| 48 | Do. (*Continued*) [The Story of Ponni the Shepherdess] ... | 153 |
| 49 | Reclaiming erring husbands ... | 156 |
| 50 | Do. (*Continued*) [The Story of Shunbagavalli] | 158 |
| 51 | Prudence of a wife in averting the misfortune of the husband ... | 169 |
| 52 | Education of Girls ... | 176 |
| | **3rd. : Old Age** | |
| 53 | Vice of old age ... | 181 |
| 54 | The cruel treatment of daughters-in-law and its result ... | 183 |
| 55 | How to treat daughters-in-law ... | 185 |
| 56 | Advice to the old ... | 188 |
| 57 | Subordination to their sons necessary in old age | 194 |
| 58 | Aryan Morals in Tamil [Kommi Pattu] ... | 197 |

# மாதர் நீதி


| பாடம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| | **பாடங்களின் விவரம்** | |
| | முதலாவது : | |
| | **கல்வி கற்கும் பருவம்** | |
| 1 | பள்ளிக்கூட முறைமை ... ... | 2 |
| 2 | வீண்காலம் போக்கு ... ... | 3 |
| 3 | ,, (தொடர்ச்சி) [வெட்டுக்கிளியின் கதை] ... | 4 |
| 4 | துர் அப்பியாசங்கள் [கங்காமணியின் கதை] ... | 6 |
| 5 | உண்மை [சத்தியவதியின் கதை] ... ... | 9 |
| 6 | கீழ்ப்படிதல் [மரகதம் என்னும் பெண்ணின் கதை] | 11 |
| 7 | திருட்டுத்தனம் ... ... ... | 13 |
| 8 | ,, (தொடர்ச்சி) [நாயகமென்னும் பெண்ணின் கதை] ... ... ... | 14 |
| 9 | வேடிக்கைப் பார்த்தல் ... ... | 18 |
| 10 | ,, (தொடர்ச்சி [அம்புஜமென்னும் பெண்ணின் கதை] ... ... ... | 19 |
| 11 | பரிசுத்தம் ... ... ... | 20 |
| | இரண்டாவது : | |
| | **கணவனோடு கூடிவாழும் பருவம்** | |
| 12 | விவாகம் ... ... ... | 22 |
| 13 | ,, (தொடர்ச்சி) ... ... ... | 23 |
| 14 | நித்தியக் கடன்கள் ... ... ... | 25 |
| 15 | இல்வாழ்க்கை ... ... ... | 28 |
| 16 | ஒற்றுமை ... ... ... | 30 |
| 17 | ,, (தொடர்ச்சி)[நேத்திரமணியென்பவள் கதை] | 32 |
| 18 | ,, ,, ,, ,, ,, | 37 |

| பாடம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 19 | கற்பு ... ... ... ... | 41 |
| 20 | ,, (தொடர்ச்சி) [கமலாவதி யென்பவள் கதை] | 44 |
| 21 | ,, ,, ,, ,, | 49 |
| 22 | ,, [குணநிதி யென்பவள் கதை] | 52 |
| 23 | ,, ,, ,, ,, | 55 |
| 24 | ,, ,, ,, ,, | 61 |
| 25 | சத்திமுத்தப்புலவரும், கற்புள்ள அவர்மனைவியும் | 65 |
| 26 | தருமகுணம் ... ... ... | 78 |
| 27 | ,, (தொடர்ச்சி) [அமிர்தவதியின் கதை] | 83 |
| 28 | ,, ,, ,, ,, | 85 |
| 29 | வீண் செலவு ... ... ... | 90 |
| 30 | ,, [சந்திரமணி யென்பவள் கதை] ... | 93 |
| 31 | பிள்ளைகளைப் பயிற்றுதல் ... ... | 97 |
| 32 | விருந்தினரை யுபசரித்தல் ... ... | 99 |
| 33 | உபகாரம் ... ... ... | 102 |
| 34 | உபகாரம் வீண்போகாதென்பது [அணிபூஷண ராஜன் கதை] ... ... | 105 |
| 35 | தொடர்ச்சி [ ,, ,, ] | 108 |
| 36 | பொறுமை மேன்மைப்படுத்து மென்பது ... | 112 |
| 37 | புறங்கூறல் இகழ்ச்சி யென்பது ... ... | 116 |
| 38 | சண்டை பிடித்தல் புத்தியீனம் என்பது ... | 119 |
| 39 | பரபுருஷரை யிச்சித்தல் மகா கொடிதென்பது ... | 123 |
| 40 | விபசாரியின் முடிவு [வச்சிராங்கியின் கதை] ... | 127 |
| 41 | ,, ,, ,, (தொடர்ச்சி) ... | 129 |
| 42 | சோம்பல் கேட்டைத் தருமென்பது ... | 134 |
| 43 | அடக்கம் ... ... ... | 137 |
| 44 | பொறாமை தரித்திரத்தை யுண்டாக்குமென்பது ... | 141 |
| 45 | ,, (தொடர்ச்சி) [பாகீரதியின் கதை] ... | 142 |
| 46 | சுற்றத்தாருக் கிணங்க நடத்தல் ... ... | 149 |
| 47 | பேராசை பெருநஷ்ட மென்பது ... ... | 152 |
| 48 | ,, (தொடர்ச்சி) [இடைச்சி பொன்னி யென்பவள் கதை] ... ... | 153 |

| பாடம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 49 | துன்மார்க்கப்புருஷரைசன்மார்க்கத்தில் திருப்புதல் | 156 |
| 50 | ,, (தொடர்ச்சி) [சண்பகவல்லியின் கதை] | 158 |
| 51 | மனைவியின் யுக்தியினால் கணவனுக்கு நேரிட்ட ஆபத்து நீங்கியது ... ... | 169 |
| 52 | பெண்பிள்ளைக் கல்வி ... ... | 176 |
| | மூன்றாவது : | |
| | **முதுமைப் பருவம்** | |
| 53 | முதுமையில் ஸ்திரீகளுக்குண்டாகும் துர்க்குணங் | 181 |
| 54 | கள் ஸ்திரீகள் தம் மருமக்கள்மாருக்குச் செய்யுங் கொடுமைகளும், அவற்றின் விளைவும் ... | 183 |
| 55 | ஸ்திரீகள் தங்கள் மருமக்கள்மாரை நடத்தவேண்டிய நல்வழிகள் ... ... | 185 |
| 56 | ஸ்திரீகள் முதுமையில் கவனித்து நடக்கவேண்டிய முறைமைகள் ... ... | 188 |
| 57 | முதுமைப்பருவத்தில் ஸ்திரீகள் தங்கள் புத்திரருக்கு அடங்கி இருக்கவேண்டுமென்பது ... | 194 |
| | நீதிமார்க்கக் கொம்மி ... ... | 196 |



## மாதர் நீதி

நவசக்தி 7-1-1926-ல் " இந்நூலின் 5-ம் பதிப்பு வெளியாகியிருப்பது ஒன்றே இஃது எவ்வளவு உபயோகமான நூல் என்பதை விளக்கப் போதுமானது. பெண்மக்களுக்கு தினசரிவாழ்க்கையில் பயன்படக்கூடிய பல ஹிதோப தேசங்கள் இந்நூலில் காணப்படுகின்றன. பெண்மக்களின் வாழ்நாளை, கல்வி கற்கும் பருவம், கணவனோடுகூடி வாழும் பருவம், முதுமைப் பருவம் என மூன்று பிரிவாக வகுத்து அந்தப் பருவத்துக்குரிய நடைமுறைகளை எடுத்துக் காட்டுக்களுடனும், உதாரணக் கதைகளுடனும் நிறம்பட விவரித்துள்ளார், இந்நூல் பெண்மக்களுக்குப் பெரிதும் பயன்படக்கூடியதொன்றென்பதில் ஐயமில்லை " விலை ரூபா 1-0-0.

## உதாரணச் செய்யுள்களின் முதற்குறிப்பு அகராதியும், மேற்கோள் நூற்களின் பெயரும்



| செய்யுள் | | பக்கம் | நூற்பெயர் |
|---|---|---|---|
| அடிசிற்கு இனியாளே | ... | 44 | திருவள்ளுவநாயனர். |
| அத்தி மலரும் | ... | 128 | நீதிவெண்பா. |
| அல்வித்தழுக்காறுடை | ... | 141 | திருக்குறள். |
| அழகின் வீக்கஞ் சிறிதில | ... | 47 | காசிகாண்டம். |
| அறம் பொருளின்பம் | ... | 177 | நீதிநெறி விளக்கம். |
| அறம், புகழ், கேண்மை | ... | 59 | நாலடியார். |
| அறனிழுக்கா தல்லவை | ... | 60 | திருக்குறள். |
| அன்பும் அறனும் | ... | 39 | திருக்குறள். |
| அன்னை தயையும் | ... | 26 | நீதிவெண்பா. |
| ஆலகாலவிஷத்தையும் | ... | 129 | விவேகசிந்தாமணி. |
| ஆழ அமுக்கி முகக்கினும் | .. | 153 | வாக்குண்டாம். |
| ஆன முதலில் அதிகம் | ... | 92 | நல்வழி. |
| இழுக்குடைய பாட்டில் | ... | 115 | நல்வழி. |
| இளமையிற்கல் | ... | 4 | ஆத்திசூடி. |
| இனிய கேள்வர் | ... | 115 | காசிகாண்டம். |
| இன்சொல் விளைநிலனு | ... | 79 | அறநெறிச்சாரம். |
| ஈன்ற பொழுதிற் | ... | 99 | திருக்குறள். |
| ஈவது விலக்கேல் | ... | 81 | ஆத்திசூடி. |
| உடம்பா டிலாத மனைவி | ... | 30 | இன்னாநாற்பது. |
| உப்பொடு செய்பால் | ... | 187 | நாலடியார். |
| எய்தும் இற்றுறந்தேகலர் | ... | 49 | காசிகாண்டம் |
| எறியென்றெதிர் | ... | 114 | நாலடியார். |
| எசியிடவின் இடாமை | ... | 82 | ஔவையார். |
| எதிலான் தன் எழில்கண் | ... | 62 | காசிகாண்டம். |
| ஐயமிட்டுண் | ... | 33 | ஆத்திசூடி. |

| செய்யுள் | பக்கம் | நூற்பெயர் |
|---|---|---|
| ஐயிரண்டு திங்களாய் ... | 186 | பட்டணத்துப்பிள்ளை. |
| ஒப்பொடு முகமலர்ந்தே ... | 80 | விவேக சிந்தாமணி. |
| ஒளவியம் பேசேல் ... | 142 | ஆத்திசூடி. |
| கடமுண்டு வாழாமை ... | 124 | இனிது நாற்பது. |
| கடிமணஞ் செய்யுங் ... | 118 | காசிகாண்டம். |
| கண்ணிற் சிறந்த உறுப்பு ... | 23 | நான்மணிக்கடிகை. |
| கண்ணுக் கணிகலம் ... | 139 | திரிகடுகம். |
| கல்லாத மாந்தர்க் ... | 31 | மூதுரை. |
| கற்புமேய கனங்குழை ... | 45 | காசிகாண்டம் |
| கற்பெனப்படுவது ... | 41 | கொன்றைவேந்தன். |
| காக்கபொருளா அடக்கத்தை | 139 | திருக்குறள். |
| காதல் மனையாளும் ... | 81 | நன்னெறி. |
| காமமே குலத்தினையும் ... | 59 | விவேக சிந்தாமணி |
| காலத்தினாற்செய்த உதவி ... | 111 | திருக்குறள். |
| கொடிது கொடிது ... | 118 | ஒளவையார். |
| கொண்டான் குறிப்பறிவாள் | 27 | திரிகடுகம். |
| கொலையஞ்சார் ... | 57 | நீதிநெறி விளக்கம். |
| கொழுநன் உண்டபின் ... | 43 | காசிகாண்டம். |
| கொழுநர் சீறிற் ... | 113 | காசிகாண்டம். |
| கொழுநற்சொற்கடவாதுறை | 41 | காசிகாண்டம். |
| சிறியோர் செய்த ... | 191 | நறுந்தொகை. |
| சிறைகாக்குங் காப் ... | 164 | குறள். |
| செல்விருந்தோம்பி வரு ... | 102 | திருக்குறள். |
| சோம்பரென்பவர் ... | 137 | கொன்றைவேந்தன். |
| தம்மின் மெலியாரை ... | 141 | நீதிநெறி விளக்கம். |
| தலைவனோ டெதிர்த்து ... | 124 | நீதிசாரம். |
| தற்காத்துத் தற்கொண்டான் | 42 | திருக்குறள். |
| தாதை தன்னினும் ... | 41 | காசிகாண்டம். |
| தாயோ டறுசுவைபோம் ... | 42 | நீதிசாரம். |
| தூற்றும் பெண்டிர் ... | 128 | கொன்றைவேந்தன். |

| செய்யுள் | பக்கம் | நூற்பெயர் |
|---|---|---|
| தெய்வந் தொழாஅள் ... | 43 | திருக்குறள். |
| நண்ணுகற்புடை ... | 51 | காசிகாண்டம். |
| நற்குணமுடைய ... | 89 | விவேக சிந்தாமணி. |
| நாராய்! நாராய்! ... | 68 | சத்திமுத்தப்புலவர். |
| நாலாலுமாருய் ... | 39 | நாலடியார். |
| நாவினுனியில் ... | 80 | நீதிவெண்பா. |
| நோவஞ்சாதாரோடு ... | 101 | திரிகடுகம். |
| பகை பாவம் அச்சம் .. | 59 | திருக்குறள். |
| பத்தாவுக்கேற்ற பதிவிரதை | 31 | ஔவையார். |
| பாத்திராபாத்திரங்கள் ... | 105 | நீதிசாரம். |
| பேதைமை யென்பது ... | 140 | கொன்றைவேந்தன். |
| பொருவில் கற்பின் ... | 126 | காசிகாண்டம். |
| பொன்னும், கரும்பும் ... | 58 | நீதிவெண்பா. |
| மங்கையை வாழுநாளில் ... | 117 | நீதிசாரம். |
| மண்டலத்தோர் செய் ... | 139 | விவேக சிந்தாமணி. |
| மந்திரிக்கழகு ... | 60 | வெற்றிவேற்கை. |
| மயிர் வனப்பும், கண் ... | 176 | சிறுபஞ்சமூலம். |
| மருவிய காதல் மனை ... | 29 | அறநெறிச்சாரம். |
| மனைத்தக்க மாண்புடை ... | 96 | திருக்குறள். |
| மின்னன்மை விபசாரத் .... | 133 | நீதிசாரம். |
| முறையுங் குடிமையும் .... | 62 | நீதிநெறி விளக்கம். |
| மூத்தோர் சொன்ன .... | 11 | கொன்றைவேந்தன். |
| வண்டுகளிருந்திடில் .... | 122 | கொன்றைவேந்தன். |
| வருந்தியழைத்தாலும் .... | 35 | விவேக சிந்தாமணி. |
| வளவனுயினும் ...., | 90 | கொன்றைவேந்தன். |
| வெறும்புற்கையு மரிதாம் .... | 74 | சத்திமுத்தப்புலவர். |
| வேதமோதிய வேதியர் .... | 45 | விவேக சிந்தாமணி. |
| கைகறைத் துயிலெழு .... | 20 | ஆத்திசூடி. |
| வையத்துள் வாழ்வாங்கு .... | 29 | திருக்குறள். |

உ

கடவுள் துணை

# மாதர் நீதி

இந்நூல் மாதர்களென்று சொல்லப்பட்ட பெண்பிள்ளைகள், தம் வாழ்நாட்களில் தெரிந்து நடக்கவேண்டிய நீதிகளைப் போதிப்பதால், இதற்கு மாதர்நீதி யெனப் பெயரிடப்பட்டது. இது, கல்வியிலும் நாகரீகத்திலும் தேர்ச்சியடைந்திருக்கும் ஐரோப்பா முதலிய தேசத்து ஸ்திரீகளுக்காக எழுதப்படாமல், பெரும்பாலும் இந்து தேசத்துப் பெண்களின் உபயோகத்திற்கென்றே எழுதப்பட்டது.

இந்நூலானது, (க) இளமைப்பருவம், (உ) கணவனோடு கூடிவாழும் பருவம், (ங) முதுமைப்பருவம் என மூன்று பாகங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றது. இவற்றுள்,

(க) இளமைப் பருவத்தில் பெண்கள்: கல்வி, நன்னடக்கை முதலியவற்றிற் பயிற்சி செய்யவேண்டிய முறைமைகளும்,

(உ) கணவனோடு கூடிவாழும் பருவத்தில்: இல்வாழ்க்கையில் அவர்கள் அநுசரித்து வரவேண்டிய விதிகளும்,

(ங) முதுமைப் பருவத்தில்: தங்கள் புத்திரருடைய சவரக்ஷணையின் கீழ் வந்த பிறபாடு கடைசியாய்க் கவனித்தறிய வேண்டிய விஷயங்களும்,

பல பாடங்களாய்ப் பிரித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றிற்குத் திருஷ்டாந்தமாக அங்கங்கே வேடிக்கையான சிறு கதைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

முதலாவது

# கல்வி கற்கும் பருவம்

## 1-ம் பாடம்

## பள்ளிக்கூட முறைமை

பெண்பிள்ளைகளுக்குக் கல்விகற்கும் பருவமானது சாதாரணமாய் ஆண்பிள்ளைகளைப்போலவே ஐந்து வயது முதல் தொடங்குகின்றது. பெண்கள் இப்பருவத்தில் வித்தியாப்பியாசம் செய்யத் தொடங்குங்காலையில் கவனிக்கவேண்டிய முறைமைகள் அநேகமாயிருப்பினும் அவற்றுள் சிலவற்றை இங்கே விளக்கிச் சொல்லுவோம்.

பெண்கள், கல்வி கற்பதற்காகத் தினந்தோறும் தங்கள் கல்விச் சாலைக்குப் போகும்போது, விளையாட்டுத்தனமும் அடக்கமில்லாமையுமுள்ள பெண்களோடு சேராமலும், அங்கங்கே வழிகளில் நடக்கும் வேடிக்கை முதலானவைகளைப் பார்க்காமலும், தங்களுக்குத் தினந்தோறும் உபாத்தியாயரால் குறிக்கப்பட்டிருக்கும் பாடங்களைச் சிந்தித்துக் கொண்டே கிரமமாய்ப் போகவேண்டும். பாடசாலையில் நுழைந்த பிறகு, பெண்ணானவள், பாடந் துவக்குமுன் தன்னுடைய வகுப்புப் பெண்களோடு சேர்ந்து வாசித்துத், தனக்குத் தெரியாமலிருப்பவைகளைத் தன்னிலும் வாசிப்பில் தேர்ந்த பிள்ளைகளைக் கேட்டுத் தெரிந்துகொண்டு, உபாத்தியாயர் அவற்றைக் கேட்கும்போது மயங்காமல் பதிலுத்தரம் சொல்வதற்கு ஆயத்தமா யிருக்கவேண்டும்.

சில சோம்பேறிப் பெண்கள் அப்படிச் செய்யாமல் தங்கள் புத்தகங்களைத் திறக்காமலே வைத்திருந்து வீண் வார்த்தைகளைப் பேசிக் காலத்தைப் போக்கிவிட்டுப், பாடம்

ஆரம்பித்த பிறகு உபாத்தியாயர் கேட்குங் கேள்விகளுக்குப் பதில் சொல்லச் சக்தியில்லாமல் விழிப்பார்கள். இவ்வித கெட்ட வழக்கங்களிற் பயிலும் சிறுவர் ஒருக்காலும் வாசிப்பில் தேறமாட்டார்கள்; புத்திசாலிப் பெண்களென்று நல்ல பெயரு மெடுக்கமாட்டார்கள்.

பெண்கள் தினந்தோறும் இரவில் தாம் மறுநாள் ஒப்புவிக்கவேண்டிய பாடங்களைத் தீபத்தின் முன்பாகப் பலமுறை வாசித்துக் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால், மறுநாள் பள்ளிக்கூடத்தில் பாடம் ஒப்புவிக்கத் திராணியில்லாமல் மற்றப் பெண்களுக்கு முன்பாகயிருந்த அவமான மடைவார்கள்.

2-ம் பாடம்

## வீண்காலப் போக்கு

**பாடசாலைக்குப்** போய்ப் படிப்பதில் செல்லுங்காலம் போக மற்றக் காலங்களிலும், தங்கள் கல்விச்சாலைக்கு அப்போதைக்கப்போது நியமிக்கப்பட்டிருக்கும் விடுமுறை நாட்களிலும், பெண்பிள்ளைகள் வீட்டில் காலத்தை வீணாய்க் கழிக்கக்கூடாது. பழைய பாடங்களை வாசிப்பதிலும், தையல் வேலைகள் - சித்திர மெழுதுதல் முதலானவைகளை அப்பியாசிப்பதிலும் பொழுதைப் போக்கி, அவற்றை நன்றாய்க் கற்கும்படி முயலவேண்டும். அவர்கள் இவற்றையே விளையாட்டாகவும், வேடிக்கையாவும் பாவிக்கவேண்டும்.

சில புத்தியீனமுள்ள பெண்கள் காலத்தை அப்படிச் சரியான வழியில் செலுத்தாமலும், பள்ளிக்கூடத்துக்குப் போக மனமில்லாமலும், எந்நேரமும் விளையாட்டிலேயே நாள் கழித்துவிட்டு. வாசிப்பை அசட்டை செய்கின்றார்கள். இது மிகவும் பெரிய தவறு; ஏனென்றால், இந்த இளமைப்

பருவந்தான் கல்வி கற்பதற்கு உரியது; இப் பருவத்தில் காலத்தை விருதாவாய்ப் போக்கிவிட்டால் பிற்காலத்தில் வயது முதிர்ந்த பிற்பாடு வாசிப்பில் புத்திசெல்லமாட்டாது. இதனால் கல்வியால் அடையவேண்டிய பலவித நன்மைகளை யும், பலன்களையும், அக் காலத்தில் அநுபவிக்கும்படியான பாக்கியத்தைப் பெண்கள் பெறமாட்டார்கள்.

" இளமையிற் கல் "

என்னும் நீதிவாக்கியத்தை இதற்காகவே ஔவையார் சொன்னது; ஆகையால்: கல்வியா லுண்டாகும் பலனை யடைய விரும்பும் பெண்கள்: இந்த இளமைப் பருவத்தில் காலத்தை வீணாய்ப் போக்காமல் சரியாய்க்கற்க முயன்றால் மாத்திரம் தக்க அநுகூலங்களைப் பெறலாமே யொழிய, தங் களுக்கு வாய்க்கும் தகுதியான பருவத்தை வீணில் செலு த்திவிட்டு, அப் பருவம் நீங்கியபின்பு முயற்சி செய்தால் மிக்க பலனை அடையமாட்டார்கள். மேலும், இளமையில் பிரயாசைப்பட்டு கல்வி கற்றுத்தேறிய பெண்களைப்பார்த்து இவர்கள் பிற்காலத்தில் அதிக துக்கப்படும்படியாகவும் நேரிடும். இதற்குத் திருஷ்டாந்தமாகப் பின் பாடத்தில் சொல்லியிருக்கும் வெட்டுக்கிளியின் கதையைக் கவனிக்க வேண்டும்.

## 3-ம் பாடம்

## வீண்காலப் போக்கு (தொடர்ச்சி)

### [வெட்டுக்கிளியின் கதை]

பசியினாலும், குளிரினாலும் மிகவும் வருந்தி யிளைத்த ஓர் வெட்டுக்கிளியானது, பூரணமாய் மது நிறைந்திருக்கும் ஓர் அழகான தேன் கூட்டைப் பார்த்து, அதை நெருங்கி தேனீக்களைப் பார்த்துச் சொல்லுகின்றது:—

"ஓ! இஷ்டர்களே! என்னுற் சகிக்க முடியாத இப்பசி நோயால் நான் படுந்துயரம் நீங்கிச் சற்றே தேறுதலடையும் படிக்கு என்மேல் தயைகூர்ந்து எனக்குச் சில தேன்துளிகளைத் தாமாட்டீர்களா?" என்று மிகவும் தாழ்மையுடன் பணிந்து விண்ணப்பஞ் செய்துகொண்டது.

இவ் வார்த்தைகளைக் கேட்டுத் தேனீக்கள் நகைத்து, "அடடா! இதென்ன ஆச்சரியம்! இவனென்ன பயித்தியக்காரனோ! சோம்பேறியோ!" என்று தங்களுக்குள் சந்தேகித்து, வெட்டுக்கிளியைப் பார்த்துச் சில வார்த்தைகள் சொல்லுகின்றன:—

"ஓ மித்திரா! நீ என் இப்போது பசியால் இவ்விதமாய் வருந்துகின்றாய்? நீ கோடைகாலத்தை எவ்விதமாய்ப்போக்கினாய்? மாரிகாலம் வரப்போகிறதென்று சற்றாகிலும் உனக்குத் தோன்றாமற்போய்விட்டதா? இதோ பார்! நாங்கள் வெயிற்காலத்தில் பிரயாசைக்கு அஞ்சாமல் அங்கங்கே புஷ்பங்கள்தோறும் திரிந்து மழைக்காலத்துக்குப்போதுமான தேனை ஜாக்கிரதையுடன் சேகரித்து வைத்துக்கொண்டதினால், இப்போது துரைகளைப்போல் சவுக்கியமாய் இவ் வுணவைப் புசித்துக்கொண்டு, ஆநந்தமாகவும், வேடிக்கையாகவும் காலங் கழிக்கின்றோம். நீ என் இப்படிச் செய்துகொள்ளத் தப்பிப்போனாய்? மூடா!" என்று தேனீக்களெல்லாம் சேர்ந்து கைகொட்டி நகைத்து, வெட்டுக்கிளியைப் பார்த்துப் பரிகாசம் செய்தன.

இவ் வார்த்தைகளைக் கேட்ட வெட்டுக்கிளியானது அவமானத்தால் தலை யிறங்கி, தேனீக்களைப் பார்த்துச் சொல்லுகின்றது:—"ஓ! தோழர்களே! நான் புத்தியீனத்தால் பிற்காலத்துக்கு வேண்டிய ஆகாரத்துக்காக உங்களைப்போல் கோடைக்காலத்திலேயே வழிதேடிக்கொள்ளாமல் சிரிப்பிலும், ஆட்டத்திலும், பாட்டிலும் காலம் போககிவிட்டேன்;

அதனால் இப்போது உணவுக்கு வழியில்லாமல் வறுமையடைந்து, உங்களை வெட்கத்தை விட்டு வருந்திநமஸ்கரித்துப் பிச்சைக் கேட்கும்படியாயிற்ற; இப்பொழுது உங்களைப் பார்த்து எனக்கும் புத்தி வந்தது, ஆகையால், நீங்கள் இவ்வேழையின் விண்ணப்பத்தை உதாசனிக்காமல் ஏற்றுக்கொண்டு இச்சமயத்தில் உதவுங்கள்!" என்று உயிர் நீங்கத்தக்க இளைப்புடன் பரிதாபமாய்க் கூவிக் கேட்டது.

அதைக் கேட்ட தேனீக்கள் மன மிரங்கி, வெட்டுக்கிளியின் நிர்ப்பாக்கிய திசையைப் பார்த்துச் சகிக்கமாட்டாமல், அதன் ஆகாரத்துக்காகக் கொஞ்சம் தேன் கொடுத்துக் காப்பாற்றின.

இதைப்போலவே தக்க பருவத்தில் பெண்கள் பிரயாசைப்பட்டுக் கல்வியைக் கற்றுக்கொள்ளாவிட்டால் பிற்காலத்தில் மற்றவர்கள் முன்பாக அவமானமும் வருத்தமும் அடைவார்கள்,

---

## 4-ம் பாடம்

## துர் அப்பியாசங்கள்

### [கங்காமணியின் கதை]

சிறுவர்களுக்குப் பாலியத்தி லுண்டாகும் அப்பியாசங்கள் வயது முதிருந்தோறும் விர்த்தியாய்க்கொண்டு வருமாகையால், எவர்களும் இளமைப் பருவத்தில் நல்ல வழக்கங்களையே அநுசரித்து வரவேண்டும். கீழ்ப்படிதல், உண்மை, அடக்கம்முதலிய நற்குணங்களுள்ள பெண்களோடு கூடி அவர்களுடைய நன்னடக்கைகளில் தாமும் பழகிக்கொண்டு வரவேண்டும். அப்படிக்கில்லாமல், ஒழுக்கமற்ற துஷ்டப்பெண்களுடன் கூடித், துர்வழக்கங்களில் தாமும் பயின்று வருவார்களானல்,

"தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்."

என்றபடி, பிற்காலத்தில் அவைகள் சகிக்கக்கூடாத கெடுதிகளை விளைவித்து, எவ்வளவு முயன்றாலும் நீங்காமல் உயிருள்ளமட்டும் ஒழியாத துன்பங்களையே அனுபவிக்கச்செய்யும்.

எப்படியென்றால், சிங்காரபுரமென்னும் ஊரில் கங்காமணி என்னும் ஓர் பெண்ணிருந்தாள். இவளுடைய தகப்பன் அதிக செல்வ வந்தனாயிருந்தபடியாலும், தனக்கு வேறே பிள்ளைகள் இல்லாமையாலும், தானும் தன் மனைவியும் இக்கன்னிகையை அதிக பட்சத்துடன் வளர்த்துக்கொண்டு வந்தார்கள். ஆனால், இக் கங்காமணியானவள் சிறுபோதில் எந்நேரமும் தன் வீதியிலிருக்கும் ஒவ்வொரு வீட்டுக்கும் ஓடிப்போய் அங்கே விளையாட்டுத்தனமுள்ள வேறு பெண்களுடன் கூடிக்கொண்டு காலம் போக்கி வருவாள். இவளுடைய தாய் தகப்பன்மாரோ, இக் கங்காமணி தங்களுக்கு ஏகபுத்திரியாகையால், 'அவளைக் கண்டிப்பதினால் மனவருத்தமடைவாள்' என்னுங் கருத்துடையவர்களாய் அவளை வேறு மார்க்கத்தில் திருப்பாமல், அவள் போன போக்கிலேயே போகவிட்டிருந்தார்கள். அதனால் கங்காமணியினுடைய துரப்பியாசங்கள் சற்றுங் குறையாமல் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டேவந்தன. அவளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினாலும் போகாமல், ஊர் திரியப் பழகின தன் தூர் வழக்கத்தையே உறுதியாய்ப் பிடித்துவந்தாள். இப்படியே இச் சிறுமிக்கு வயது பத்தானவுடன், இவளுடைய தாய் தந்தையர் ஒரு விவேகியான வாலிபனுக்கு இவளைப் பாணிக்கிரகணம் செய்துகொடுத்தார்கள்.

சிலகாலம் சென்றதின்மேல் கங்காமணியானவள் பருவமடைந்து, தன் கணவனோடு கூடி வாழ்ந்துவரும் நாளில், ஒருநாள் அவன் தன் ஊருக்குச் சமீபமாய் இரண்டு நாழி

கை வழி தூரமுள்ள ஓர் கிராமத்திக்குச் சில அவசரமான காரியமாய்ப் போனான். இதற்குள்ளாக கங்காமணி, தன் வீதிக்கடுத்த வேறொரு வீதிக்குப் போய் ஒரு வீட்டுத்தெருத் திண்ணையின்பேரில் உட்கார்ந்துகொண்டு, அயோக்கியமான வேறு சில பெண்பிள்ளைகளோடு கூடிச் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்தாள்.

அப்போது கிராமத்திற்குப் போயிருந்த இவளுடைய புருஷன் வீட்டிற்குக் திரும்பித், தற்செயலாய் அதே வழி யாய் வருகையில், தன் மனைவியானவள் இப்படியே வேறு வீதிக்கு வந்து, தகுதியற்ற பெண்களுடன் கூடிச் சொக்கட் டான் ஆடிக்கொண்டிருப்பதைப் பார்த்து, அவன் மனதுக்கு நீங்காத் துயரமும் அவமானமு முண்டாய், அக் கங்கா மணியை அழைப்பித்து, "நான இல்லாத காலத்தில் என் அநுமதியின்றி வீட்டை விட்டு இவ்வளவு தூரமான வேறு வீதிக்கு வந்து அயலார் வீட்டில் இவ்விதமாய்க் காலம் போக் கும்படி உனக்குக் கற்பித்ததார்?" என்று சொல்லி, அதிக கோபத்துடன், "இனி உன் முகத்தைப் பார்க்கவேமாட் டேன்" என்று, அவளைத் தாய் வீட்டுக்கு அனுப்பிவிட்டுத் தான் வேறோர் மாதை மணம்புரிந்து கொண்டான்.

கங்காமணி அதிக செல்வவானுடைய புத்திரியாயிருந் தும், அவளுடைய தௌர்ப்பாக்கியம் அப்புறம் எப்படி யிருக்குமென்று பெண்கள் கவனித்துப் பார்க்கவேண்டும். பெண்களே! இவ்வளவுக்குங் காரணம் அவள் இளமையில் நன்னடக்கையிற் பயிலாமை அல்லவா? ஆகையால் பெண் கள் சிறுவயதில் நல்லவர்களோடு சேர்ந்து, நற்செய்கைகளிற் பழகிக்கொண்டு வரவேண்டும்.

---

5-ம் பாடம்

## உண்மை

[சத்தியவதியின் கதை]

பெண்கள் இளமையில் அநுசரிக்கவேண்டிய விதிகளில் முக்கியமானது பொய் சொல்லாமையாம். இதையே உண்மை யென்றும், சத்திய மென்றுஞ் செல்வதுண்டு, எந்தச் சமயத்திலும் பொய் சொல்லாம லிருத்தலென்னும் விரதமானது பெண்களுக்குமாத்திரமல்ல, ஆடவர்களுக்கும் முக்கியமும் அவசியமுமானது, உண்மையில்லாதவர்களைப் பொய்யரென்றும், சூதரென்றும், கபடிகளென்றும் மற்றோர் இகழ்வார்கள். மேலும், பொய் சொல்வதினால் அநேக தீமைகள் உண்டாகின்றன, உண்மையினாலோவென்றால்: நன்மையையும், பெருமையையும், பாக்கியத்தையும் பெறலாம்.

இதற்குத் திருஷ்டாந்தம்:—

நித்தியபுரமென்னும் ஓர் நகரத்தில் சித்திரதரன் என்னும் ஓர் சீமான் இருந்தார். அவனுக்குச் சத்தியவதி யென்னும் ஓர் குமாரத்தி யுண்டு. இவளுக்குச் சுமார் ஏழெட்டு வயதாயிருக்கும்போது, ஒருநாள் சில பெண்களுடன் உப்பரிகையின் பேரில் விளையாடிக்கொண்டிருக்கையில் தன் தகப்பன் ஆயிரம் வராகன் செலவு செய்து அந்த உப்பரிகையின் அந்தரங்கமான ஓர் அறையின் சுவரில் மகா வேடிக்கையாகவும், விநோதமாகவும் தீட்டியிருந்த அற்புதமான சித்திரங்களை 'அவற்றின் கீழேயிருப்பது சுவரோ, அல்லவோ பார்ப்போம்,' என்று அறியும்படி,

"குயவனுக்கு ஒருநாளைய வேலை,
தடிகாரனுக்கு ஒரு விநாடி வேலை."

என்றபடி, சத்தியவதியானவள் விளையாட்டுத்தனமாய் ஒரு நொடியில் கலைத்துவிட்டாள்.

மறுநாள், சித்திரதரன், உப்பரிகையின்பேரில் உல்லாசமாய்க் காலங்கழிக்க எண்ணிப் போனபோது, அறையின் சுவரில் அதிக பொருட்செலவோடும், பிரயாசையோடும் நிர்மாணிக்கப்பட்டிருந்த சித்திரங்கள் அழிக்கப்பட்டிருக்கக் கண்டான்.

இதைக் கண்டவுடன் அவன் மகா கோபங்கொண்டவனாய்க், கத்தியை யுருவிக்கொண்டு, உப்பரிகையை விட்டுக் கீழே யிறங்கிவந்து, "மேல் மெத்தை யறையில் எழுதி யிருந்த சித்திரங்களை யழித்ததார்?" என்று வீட்டு ஜனங்களையும், வேலைக்காரர்கள் முதலான மற்றவர்களையும் அதிக கோபத்தோடும், விசனத்தோடும் விசாரணை செய்துகொண்டிருந்தான்.

இப்படியிருக்கையில், சத்தியவதிக்கு இது சேதி தெரிந்து, அதிசீக்கிரமாய்த் தன் பிதாவினிடத்திற்கு ஓடிவந்து, "தந்தையே! இப்பெருந்த குற்றம் செய்தது யான்தான்; அறிவின்மையால் அதைக் குற்றமென் றெண்ணாமல், விளையாட்டாகச் செய்துவிட்டேன்; அதற்காகத் தாம் செய்ய உத்தேசித்திருக்கும் தண்டனையை வேறொருவருமின்றி, யானே பெறவேண்டுவது நியாயம்" என்று வணங்கிச் சொன்னாள்.

சித்திரதரன் இதைக்கேட்டு மிகுந்த ஆச்சரியப்பட்டுச், சொல்லி முடியாத களிப்புடன் உருவின கத்தியை உறையிலிட்டுத், தன் மகளை வாரியெடுத்து முத்தமிட்டு, "என் கண்மணியே! நான் ஆயிரம் வராகன் செலவுசெய்து வரைவித்த அந்த அலங்காரமான சித்திரங்களை யழித்தது குற்றமென்று சொல்லக்கூடியதா யிருந்தபோதிலும், 'அதைச்செய்தது நானே, என்று ஒருவராலும் கேட்கப்படாமலே, அக் குற்றத்தை நீ ஒப்புக்கொண்டு உண்மை யுரைத்தது எனக்கு நூறாயிரம் வராகன் நீ வெகுமதி கொடுத்ததற்கு ஒப்பாயிற்று"

என்று சொல்லி ஆனந்தமடைந்து, அதற்கு அறிகுறியாக விலையுயர்ந்த ஓர் மோகனமாலையை உடனே தருவித்துச் சத்தியவதியின் கழுத்தில் போட்டான்.

இந்த வர்த்தமானம் அவ்வூர் அரசன் கேள்விப்பட்டு, அவளுடைய உண்மைக்கு மெச்சி, அக் கன்னிகையைத் தன் குமாரனுக்கு மணம் புரிவித்தான்.

ஆகையால், சத்தியவதிக்கு உண்டான பெருமையும் சம்பத்தும் அவ் வுண்மையினு லென்று திருஷ்டாந்தப் பட்டது.

## 6 - ம் பாடம்

## கீழ்ப்படிதல்

### [மரகதம் என்னும் பெண்ணின கதை]

கீழ்ப்படிதல் என்பது, தனக்கு மூத்தோராயிருக்கும் தாய் தந்தையர் முதலிய சுற்றத்தாரும், கல்வி கற்றுக்கொடுக்கும் உபாத்தியாயர்களுக்கும், மற்றும் பெரியோர்களுக்கும் அடங்கி அவர்கள் சொற் கேட்டு நடத்தலாம். அவ்விதமாய் நடக்கவேண்டியதற்குக் காரணம் என்னவென்றால், சிறுவர்கள் எந்த விஷயங்களைப் பற்றியாவது தங்கள் சொந்த அறிவினால் பகுத்தறியும் சக்தியற்றவர்களா யிருப்பதுதான் ஆகையால், தம் சுயபுத்தியினால் காரியங்களுடைய நன்மை தீமைகளைத் தெரிந்துகொள்ளும் பருவ மடையும்வரையில் பிள்ளைகள் பெரியோர்களுக்கு அடங்கி நடக்கக் கடமைப் பட்டவர்களா யிருக்கின்றார்கள்.

[கோன்றைவேந்தன் எரு-ம் சூத்திரம்]

"மூத்தோர் சொன்ன வார்த்தை யமிர்தம்."

என்னும் நீதிவாக்கியப்படி பெரியோர்களுடைய சொல்லைத் தேவாமிர்தமாகப் பாவித்தல்வேண்டும், அப்படிக்கில்லாமல்

அவர்களுடைய வார்த்தையை அலட்சியம் செய்பவர்களுக்கு அதனால் பொல்லாங்குகளும், துன்பங்களும் நேரிடும்.

எப்படியென்றால், பருவதமென்னும் பட்டணத்தில் மரகதம் என்னும் ஓர் பெண்ணிருந்தாள். இவள் எப்போதும் தன் தாய் தகப்பன்மார் சொல்லும் வார்த்தைகளைக் கேட்காமலே நடக்கும் வழக்க முடையவளாயிருந்தாள், பள்ளிக்கூடத்திற்குப் போகச்சொன்னாலும் சரியாய்ப் போகாமல், எந்நேரமும் விளையாட்டின் பேரிலேயே சிரத்தையாயிருப்பாள்.

இப்படியிருக்க, ஓர் நாள் இந்தப் பெண்ணானவள் வழக்கப்படி விளையாடுவதற்காகத் தெருவில் ஓடும்போது, அவளுடைய தாயானவள் பார்த்து, "அடி அம்மா, மரகதம்! நீ வெளியில் போகவேண்டாம்! பக்கத்து வீதியில் அம்மை விடாதி வியாபித்திருக்கிறதாகவும், அதனால் அங்கே சில பிள்ளைகள் பத்து நாட்களாய் மெத்தவும் துயரப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் கேள்விப்படுகின்றேன். நீ சில நாள் எங்கேயும் ஓடாமல் வீட்டிலேயே இரு, அல்லது பள்ளிக்கூடத்திற்காவது போ!" என்று கண்டித்துச் சொன்னாள்.

"என்ன சொன்னாலும் என் புத்தி போகாது,"

என்றபடி, அவ் வார்த்தைகளுக்கு மரகதம், சற்றாவது செவி கொடாமல், பக்கத்து வீதிக்கு ஓடி விளையாடித் திரிந்துவிட்டுத், திரும்பி வீட்டுக்கு வரும்போதே ஜுரத்துடன் வந்து, படுத்துக்கொண்டாள். மறுநாளே அம்மை கண்டு மகா வேதனைப்பட்டு, ஒரு மாதம்வரையில் படுத்த படுக்கையில் கிடந்து முடிவில் ஒரு கண் பார்வை கெட்டுவிட்டது. அப்போது அவளுக்கு வயது எட்டு. பின்பு அவளுக்கு விவாகம் செய்து கொள்ளும் பருவம் வந்தும் 'ஒற்றைக்கண் குருடு' என்று அவளை யாரும் கலியாணம் செய்துகொள்ளவேயில்லை,

மரகதம் இருபது வயது வரையிலும் அப்படியேயிருந்து, பின்பு வேறு வழி யில்லாமையால்,

"இதை விட்டாலும் கதி யில்லை,
அப்பால் போனாலும் வழி யில்லை."

என்பதைப்போல், இரண்டு கண்களு மில்லாத ஓர் பிறவிக் குருடனுக்கு வாழ்க்கைப்படும்படி நேரிட்டது. புருஷனுக்கு இரண்டு கண்களு மில்லாமல் அவளுக்கு ஒரு கண்ணிருந்தமையால், அவன் எங்கே போனாலும் அவளைக் கையைப்பிடித்து வழி காட்டச்சொல்லி யிட்டுக்கொண்டு போகச்சொல்லுவான்.

பெண்களே! இப்படியிருந்தால் மரகதத்தினுடைய தௌர்ப்பாக்கியம் எப்படிப்பட்டதாக விருக்கும் பாருங்கள்! இவ்வளவு பொல்லாங்குக்குங் காரணம் இளமையில்

"தாய்சொல் துறந்தால் வாசக மில்லை."

என்னும் நீதி மொழிப்படிக்குத் தன் தாயானவள் போக வேண்டாமென்று சொன்ன இடத்துக்குப் போனதே தவிர வேறல்ல.

ஆகையால், பெண்கள் எப்போதும் தம் தாய் தந்தையர் முதலிய பெரியோர்களுக்கு அடங்கி அவர்கள் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்.

---

## 7-ம் பாடம்

## திருட்டுத்தனம்

பிள்ளைகள் ஒருவருடைய பொருளை மற்றொருவர் கவரும்படி இச்சித்தல் கூடாது. ஏனென்றால், அது அவர்களுக்கு நஷ்டத்தை யுண்டாக்கும். தன்னுடைய புத்தகத்தை யாவது, ஆபரணத்தையாவது தனக்குத் தெரியாமல் வேறொருத்தி எடுத்துக்கொண்டால், அதற்காக அதை இழந்த தனக்கு எவ்வளவு வருத்தமும் துக்கமு முண்டாகின்றன. அதை

போலவே அந்நியர்க்கும் உண்டாகுமென்று நினைத்துத் தான் ஒருவருடைய சொத்தை அபகரிக்க எண்ணங் கொள்ளுதல் கூடாது.

ஒருவேளை ஒருத்தி தன்னுடைய புத்தகத்தையாவது, வேறு வஸ்துவையாவது மறந்து பள்ளிக்கூடத்திலாவது, வேறு இடங்களிலாவது வைத்துவிட்டுப் போனால், அதைப் பார்த்துக்கொண்டிருந்த மற்றொருத்தியானவள் அப்பொருளைப் பத்திரப்படுத்திச் சொந்தக்குடையவளிடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்க வகை தேடவேண்டும். அல்லது, அவள், சமீபத்தி லிராவிட்டால், அப்பொருளைத் தன் உபாத்தியாயரிடம் ஒப்புவிக்கவேண்டும். இவ் விரண்டு விதங்களில் ஒன்றையும் செய்யாமல் தானே அதை எடுத்துக்கொண்டால் அது திருட்டுத்தனமாய்விடுகின்றது. அதனால் திருடியென்றும், கள்ளியென்றும் இழிவான பெயர்களுண்டாகின்றன.

திருட்டுத்தனமுள்ள பெண்களை யாவரும் தங்கள் சமீபத்தில் சேர்க்கமாட்டார்கள்; அவர்களிடத்தில் பட்சம் வைத்துப் பேசவுமாட்டார்கள்; அதனால் பிற்காலத்திலும் பெண்களுக்கு அடியில் வரும் பாடத்தில் சொல்லியிருக்கிறபடி அதிக துக்கமும் அவமானமு முண்டாகின்றன.

---

## 8-ம் பாடம்

## திருட்டுத்தனம் (தொடர்ச்சி)

### [நாயகமென்னும் பெண்ணின் கதை]

வேயகம் என்னும் கிராமத்திலிருந்த ஓர் வித்தியாசாலையில் நாயகம் என்னும் நாமமுள்ள ஒரு கன்னிகை வாசித்துக்கொண்டிருந்தாள். அவள் தன் வகுப்புப் பெண்களில் எவளாவது சற்று ஏமாந்திருந்தால், அவளுடைய உடைமை

களையும் புத்தகமுதலான வஸ்துக்களையும் அவளுக்குத் தெரியாமல் திருடிக்கொண்டு போவதும், அவளைக் கேட்டால், "நான் ஒன்றும் காணேன், அது யார் செய்த மாயமோ" என்று சொல்லி அழுவதுமாய்ப் பாசாங்கு பண்ணுவாள்.

இப்படி யிருக்கையில், ஒருநாள் அவ்வூர்த் திருவிழாவின்பொருட்டுப் பள்ளிக்கூடத்துக்கு விடுமுறை நாள் வந்தது. அன்றையதினம் பெண்கள் யெல்லாருமாய்ச் சேர்ந்து ஆடையாபரணங்களை யணிந்து சிங்காரம் செய்துகொண்டு, வழக்கப்படி தங்கள் உபாத்தியாயரைக் கண்டு, அவர் காலில் விழுந்து குருசேவை செய்துகொண்டு, திருவிழாவைப் பார்ப்பதற்காகப் போவதற்குப் பாடசாலைக் கட்டடத்தின் தாழ்வாரத்தில் சிறிது நேரம் தங்கினார்கள்.

அங்கே தங்கியிருக்கும்போது பெண்களில் ஒவ்வொருவரும் அவரவர்களுக்குத் தெரிந்த பாட்டுகளைப் பாடிக்கொண்டு கொண்டாடிக்கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களில் மாணிக்கம் என்னும் பெண்ணின் தங்க வளையானது திருகாணியின் தளர்ச்சியால் அவளுக்குத் தெரியாமல் கழன்று கீழே விழுந்துவிட்டது,

அதைப் பார்த்துக்கொண்டே அருகிலிருந்த நாயகம், மெள்ள எடுத்துத் தன் சரிகைச்சேலையில் சொருகி வைத்துக்கொண்டு, மற்றவர்களோடு விளையாடிக்கொண்டிருந்தாள்.

அதைத் தற்செயலாய்ப் பக்கத்தில் சூழ்ந்திருந்த பெண்களில் ஒருத்தி பார்த்துவிட்டு, "அடி பெண்களே! நாயகத்தின் மடியைச் சோதியுங்கள்! ஒரு வேடிக்கை யிருக்கிறது" என்றாள்.

இதற்குள்ளாகத் தன் கைவளைகளி லொன்றில்லாததைக் கண்ட மாணிக்கம் என்பவள் திடுக்கிட்டு, அவள் மடியைச் சோதிக்க,

"பலநாளைய திருடி ஒருநாளைக்கு அகப்படுவாள்."

என்றபடி, அவள் அகப்பட்டுக்கொண்டாள்.

இதைப் பார்த்த மற்றப் பெண்க ளெல்லாரும் சிரித்துப் பரிகாசஞ்செய்து, "நாயகம்! என்ன காரியம் செய்தாய்? நல்லவளாய் நடித்து வந்தாயே," என்று, அன்று முதல் அவளுக்குத் திருட்டுநாயகம் என்று பெயரிட்டுவிட்டார்கள். இது சங்கதி ஊரெங்கும் பிரசித்தமாய் விட்டபடியால், அவளை எல்லாரும் அதே பெயரிட்டுக் கூப்பிடத் தலைபட்டார்கள்.

மேற் கூறியவாறு நாயகத்துக்கு உண்டான கெட்ட பெயர் அவ்வளவோடு நீங்கவில்லை, பிற்காலத்தில்,

"தன் நிழல் தன்னோடே வரும்."

என்பதைப்போல், அவள் பெரியவளாய் விவாகமான பிற்பாடும் அந்தப் பெயர் அவள் கூடவே யிருந்தது. வேறு ஊரில் தன் மாமியார் வீட்டுக்குப் போன பிற்பாடும், இளமையில் தன் பழைய செய்கையா லுண்டான பெயர் தெரிந்தவர்களைக் கண்டால், அந்தப் பெயரிட்டுத் தன் மாமி, கணவன்முதலானவர்கள் முன்பாக அழைக்கப் போகிறார்களென்று சீக்கிரமாய்ச்

"சூடுகண்ட பூனை அடுப்பங்கரையிற் சேராது"

என்றபடி உள்ளே நுழைந்துகொள்வாள்.

இவ்வளவு பயத்தோடு அதிக ஜாக்கிரதையாய் நாயகமானவள் காலத்தைக் கழித்துக்கொண்டு வந்தும், ஒருநாள் பாலியத்தில் தன்னுடன் பள்ளிக்கூடத்தில் வாசித்துகொண்டிருந்த அமிர்தம் என்னும் பெண்ணானவள், கலியாணஞ் செய்துகொண்டு, இரண்டு பிள்ளைகளுக்குத் தாயாகித், தன் கணவனுடன் வேறே ஊருக்கு ஒரு வண்டியி லேறிக்கொண்டு நாயகமிருக்கும் வீதி வழியாய்ப் போகும்போது, இவள் வீதியில் நின்றுகொண்டிருந்ததைப் பாத்து, "என்னடி திருட்டு நாயகம்! பெரியவளாய் விட்டாயே! பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது உன்னைப் பார்த்தது, அடையாளமே தெரியவில்லையே! இதுதானா உங்கள் மாமியார் வீடு? உனக்கு எத்தனைக் குழந்தைகளடி?" என்று சாதாரணமாய்ப் பெண்களி

லொருவரையொருவர் நாள் சென்று பார்க்கும்போது பேசிக் கொள்ளும் முறைமைப்படிக்கு நடுத்தெருவி லிருந்துகொண் டே உரத்த சத்தத்துடன் பேசினாள்.

இதைக் கேட்ட நாயகம், இரண்டு பக்கங்களிலும் திரும் பிப் பார்த்துக்கொண்டே மெதுவான குரலுடன், "ஆம்! ஆம்; இதுதான் என் மாமியார் வீடு; நீ போய் வாடியம்மா! உனக்கொரு கும்பிடு" என்று சொல்லிவிட்டு, 'இதை வீட்டி லுள்ளோர் யாராகிலும் கேட்டுவிட்டார்களோ என்னவோ.' என்று கையை முறித்துக்கொண்டு,

"திருடனைத் தேள் கொட்டினது" போல

ஒருவரோடும் சொல்லாமல் வழக்கப்படி தலையை உள்ளே மறைத்துக்கொண்டாள். திருட்டுநாயகம் என்று அவள் கூப் பிட்டபோது இவளுடைய நல்ல வேளைக்கு ஒருவரும் கிட்ட இல்லாமலிருந்தார்கள்.

அந்தச் சமயத்தில் தன் வீட்டிலுள்ளோர் யாராகிலும் அங்கேயிருந்து இந்தச் சம்பாஷணையைக் கேட்டுக்கொண் டிருந்தால், இவளை எவ்வளவு அவமரியாதையாய் நடத்தி யிருப்பார்களோ தெரியாது. இப்படியே இவள் மரணபரி யந்தம் தன் பழைய பெயரைத் தெரிந்தவாகள் எங்கே தன்னை அந்தப் பெயரிட்டுக் கூப்பிடுகிறார்களோ என்று ஆச்சப்பட் டுக் கொண்டே இருந்தாள்.

பெண்களே! இப்படிப்பட்டவளுடைய வாழ்நாட்களில் என்ன சந்துஷ்டியிருக்கும் பார்த்தீர்களா! ஆகையால் பெண் கள் இளமையில் இவ்வித துஷ்ட செய்கைகளைச் செய்வதற் குக் கற்காமல், மிகுந்த ஜாக்கிரதையுடன் தன் பார்க்கத்தில் நடந்து பழகவேண்டும். இல்லாவிட்டால் நாயகம் அடைந்த அவமானங்களையும், அவள் ஆயுள் உள்ள நாள்மட்டும் பட்ட பாடுகளையும் படவேண்டுவதாய் நேரிடும்.

9-ம் பாடம்

## வேடிக்கைப் பார்த்தல்

சிறு பெண்களில் சிலர் பள்ளிக்கூடத்துக்குப் போகும் போது, நேரே போகாமல் அங்கங்கே நடக்கும் வேடிக்கை, சந்தடி முதலானவற்றைக் கவனித்துக்கொண்டே போவது வழக்கம்: இது பெரிய தப்பிதம் ஏனென்றால், வேடிக்கை முதலானவற்றைப் பார்க்கிறதற்காக ஜனங்கள் கூட்டம் சேர்ந்திருக்கு மிடத்தை நெருங்குவதினால், சில பெண்கள், தாமணிந்திருக்கும் ஆபரணங்களை இழந்து விடுவதுமன்றி, பாடசாலையில் ஒப்புவிக்கவேண்டிய பாடங்களைச் சிந்திக்கும் காலத்தையும் வீணாய் இழந்துவிடுகிறார்கள்.

சில சமயங்களில் ஜனக்கூட்டம் சேர்ந்திருப்பதினால் 'அங்கே ஏதோ வேடிக்கை நடக்குப், பார்க்கலாம்' என்று சமீபத்தில் போனவுடனே, அது வேடிக்கையாயிராமல் துஷ்டத்தன முள்ளவர்கள் ஒருவருக்கொருவர் குடிவெறியினால் போடப்பட்ட சண்டையாயிருப்பது முண்டு. அங்கே போவதில் அவர்கள் ஒருவரையொருவர் அடிக்கப்பட்ட அடியானது வேடிக்கைப் பார்க்கப்பட்டவர்கள் பேரில் விழுந்து, இரத்தம் உண்டாகும்படியான காயங்கள் உண்டாய்த், துன்பத்தைத் தருவது முண்டு, அல்லது, இவ்விதமான கூட்டத்தில் சச்சரவுபட்டுக்கொண்டிருந்தவர்களை நகர விசாரணைக்காரர்கள் குற்றவாளிகளென்று தண்டிப்பதற்காக நியாயஸ்தலங்களுக்குக் கொண்டுபோகும்போது, அருகிலிருந்து வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்தவர்களையும் சாட்சி சொல்வதற்காக அவர்களுடன் சேர்த்து இழுத்துக்கொண்டுபோய் அவஸ்தைப்படுத்துவது முண்டு. இப்படி வேடிக்கைப் பார்ப்பதில் பலவித நஷ்டங்களும் கஷ்டங்களும் உண்டாகின்றன,

## 10-ம் பாடம்

# வேடிக்கைப் பார்த்தல் (தொடர்ச்சி)

[அம்புஜமென்னும் பெண்ணின் கதை]

ஒரு நாள் அம்புஜம் என்னும் பெண்ணானவள் பாடசாலைக்குப் போகும்போது, மார்க்கத்தில் சில சிறுவர்கள் கூடிக் காற்றாடி விட்டுக்கொண்டிருந்தார்கள். அதை வேடிக்கையாகச் சில சோம்பேறிப் பிள்ளைகள் திரண்டு, சூழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். அம்புஜம், 'இதென்ன கூட்டம், என்று கிட்டிப் பார்த்துக்கொண் டிருக்கும்போது, அருகிலிருந்த துஷ்டனொருவன் அவள் கழுத்திலிருந்த ஓர் விலையேறிய முத்துமாலையை அவளுக்குத் தெரியாமலே பக்குவமாய்க் கத்தரித்துக்கொண்டான். இவ்விதமாய் இப் பெண்ணானவள் அரைமணி நேரம் வரையில் வேடிக்கைப் பார்ப்பதில் வீண் காலம் போக்கிவிட்டு வந்தபடியால், தன் பாடசாலையில் அக் காலத்தில் கணிதபாடம் சற்றேறக்குறைய முடிந்துவிட்டது. நேரம்பொறுத்து வந்ததற்காக உபாத்தியாயர் இவளை ஒரு மணி நேரம் நிற்கவைத்தார். பின்பு தன்னுடைய வகுப்பிற் பிரவேசித்தவுடன், மற்றப் பெண்களெல்லாம் இவளைப் பார்த்து, "அடி அம்புஜம்! உன் கழுத்திலிருந்த முத்துமாலை எங்கே காணோம்? ஏன் கழற்றிவிட்டாய்? அது இல்லாமல் உன் கழுத்தினழகு குறைந்துவிட்டது "என்று கேட்டார்கள்.

இதைக் கேட்டு இவள் திடுக்கிட்டுக் கழுத்தைத் தடவிப் பார்க்க, ஆபரணத்தைக் காணாமையால் அழ ஆரம்பித்தாள்.

உடனே இது சங்கதி உபாத்தியாயர் கேட்டு, உடைமை போக்கடிந்துபோன முகாந்திரத்தை விசாரித்தறிந்து, அவளுடைய தாய் தந்தையருக்கு அறிக்கையிட, அவர்களும் அவளைத் தண்டித்து அதுமுதல் அவள் பள்ளிக்கூடத்திற்

குப் போகும்போதெல்லாம் அவளுக்கு ஒரு நகையும் போடாமல் அனுப்பிக்கொண்டு வந்தார்கள். மேற்சொன்ன விதமாய் அம்புஜம் கொஞ்சநேரம் வேடிக்கைப் பார்த்ததினுலுண்டான கஷ்டங்களைப் பாருங்கள்.

முதலாவது: பாடத்தை யிழந்தது.

இரண்டாவது: விலையுயர்ந்த அணியை யிழந்தது.

மூன்றாவது: தாய்தகப்பன்மாரால் தண்டனையடைந்தது.

நான்காவது: அன்று தொடங்கி நகைகளில்லாமல் பள்ளிக்கூடம் போக நேர்ந்தது.

ஆகையால், பெண்கள் வேடிக்கைப் பார்ப்பதினுல் உண்டாகும் நஷ்டங்களைக் கவனித்து அவ் வழக்கத்தை நீக்க வேண்டும்.

## 11-ம் பாடம்

## பரிசுத்தம்

பிள்ளைகள் அசுத்தமாயிராமல் எப்போதும் பரிசுத்தமாயிருக்கவேண்டுவது மிகவும் அவசியம். அதாவது, தாங்கள் வஸ்திரங்களை அழுக்குடன் தரித்தல் கூடாது. அப்போதைக்கப்போது ஸ்நானம் செய்து தேகத்தைச் சுத்தமாய் வைத்திருத்தல் வேண்டும். பெண்கள், காலையில் அதிக நேரம் தூங்காமல்,

[ஆத்திசூடி: 106-ம் சூத்திரம்]

"வைகறைத் துயிலெழு."

என்றபடி, அருணோதயத்திற்கு முன்னர் நித்திரையிலிருந்தெழுந்து, காலக்கடனை முடித்துத், 'தந்தசுத்தி செய்து, கை

கால்களைக் கழுவித், தலைவாரிப் பின்னல் போட்டுக்கொண்டு அவரவர் குலாசாரப்படிக்கு நெற்றியில் பொட்டு முதலான வற்றை வைக்கும்படியாயிருந்தால் அவற்றை வைத்துக்கொண்டு, காலை போஜனம் செய்து, பின்பு பள்ளிக்கூடத்திற்குப் போதல் முதலான மற்ற விஷயங்களைக் கவனிக்க வேண்டும். சுத்த மில்லாத பெண்களை யார் கண்டபோதிலும் அசயங்கியப் படுவார்கள். அதுவுமன்றி, "இவள் யார்? மூதேவியா யிருக்கிறாள்" என்று இகழ்வார்கள். சிறுபோது முதல் பரிசுத்தத்தோடிருக்கும் வழக்கமில்லாத பெண்கள், வயது முதிர்ந்த பிற்பாடும் அப்படியேயிருந்து, தங்களை விவாகம் செய்துகொள்ளும் புருஷருக்கும் அருவருப்பை யுண்டாக்குகின்றார்கள். இப்படி அசுத்தத்தோடிருக்கும் வழக்கம் இளமையிலேயே உண்டாவதால் பெண்கள் அதிக ஜாக்கிரதையுடன் அவ் வழக்கத்தை ஒழித்து, எப்போதும் பரிசுத்தமா யிருக்கவேண்டும்.

இரண்டாவது

# கணவனோடு கூடிவாழும் பருவம்

## 12-ம் பாடம்

## விவாகம்

கன்னியர்க்கு மேற்கூறியவாறு கல்வி கற்கும் பருவமானவுடன் இல்வாழ்க்கையில் பிரவேசிக்கச் செய்வதான வேறே பருவம் தொடங்குகின்றது, இதற்குக் கணவனோடு கூடி வாழும் பருவம் என்று இங்கே பெயரிடப்பட்டிருக்கின்றது, இப் பருவத்தில் பெண்கள் கற்றுணரவேண்டிய பலவித முக்கியமான நீதிகள் பின்வரும் பாடங்களில் விவரித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன, இப்பருவம் தொடங்குவதற்கு விவாகம் முதற்காரணமாகின்றது.

ஐரோப்பா முதலிய அந்நிய தேசங்களில், பெண்ணும் பிள்ளையும் ஒருவருக்கொருவர் விவாகம் செய்துகொள்ளும்படியாய்ப் பிரியப்பட்டதின்பேரில் விவாகத்தை நிறைவேற்றி வைப்பது தாய் தந்தையர்களுடைய கடமையாயிருக்கின்றது. நம்முடைய இந்து தேசத்திலோ அவ்விதமான வழக்கம் பெரும்பாலுமில்லாமல், தாய் தகப்பன்மாரே தம்பெண்களுக்குத் தக்க நாயகரைத் தேடி மணம் புரிவிக்கின்றார்கள், சிறுபான்மை சதிபதிகளாகப்போகிற இருவருடைய சம்மதத்தைக் கோருவதுமுண்டு, இவ்வித வழக்கங்களுக்குக் குறைவு எதனாலென்றால், பெண்கள் தமக்குத் தகுந்த மணவாளரைப் பகுத்தறியும் பருவம் வருவதற்கு முன் அதிக பால்யத்திலேயே அவர்களுக்கு விவாகத்தை நடத்திவிடுவதினாலும், சில பிள்ளைகள் தாயினிடத்தில் பால் உண்ணும் குழந்தைகளா

யிருக்கும்போதே அவர்களைக் கலியாணம் செய்துகொடுத்து அவர்களுக்குப் பெண்ஜாதிமார் என்னும் பெயரையுண்டாக்கி விடுவதினாலுந்தான். மேலும், கலியாண மாகுங்காலத்தில் தகுந்த பருவம் வந்திருந்தபோதிலும், அந்நிய தேசத்து ஸ்திரீகளைப்போல இவர்களுக்குக் கல்வியறிவில்லாமையால், தமக்குரிய நாயகன் இவனென்று ஒருவனைத் தெரிந்தெடுக்கச் சக்தியற்றவர்களாயு மிருக்கின்றார்கள்.

## 13-ம் பாடம்

## விவாகம் (தொடர்ச்சி)

மேலே சொல்லியிருக்கின்றபடி இருவருடைய சம்மதியின் பேரிலாவது, அல்லது தாய்தந்தையரின் மனோ பீஷ்டப்படிக் காவது, நியமிக்கப்பட்ட புருஷனுடன் அவரவர்கள் மதாசாரப்படிக்கு விவாகச் சடங்குகள் நிறைவேறியவுடன், பெண்ணுக்கு மனையாட்டி யென்றும், இல்லாள் என்றும், பல பெயர்கள் உண்டாகின்றன. விவாகம் நடந்துவருங் காலத்தில் இவள்: மணமகள் என்றும், கலியாணப்பெண் என்றும், அழைக்கப்படுகின்றார்கள்.

இவ்விதமாய் விவாகம் நிறைவேறி முடிந்தவுடன், பெண்ணானவள் தனக்கு வாய்த்த புருஷனுடைய சுக துக்கங்களுக்குப் பூரண பாத்தியதை யுடையவளாய் விடுகின்றாள். எப்படி யென்றால், நேரிட்ட புருஷன் தனக்கு இரத்தக் கலப்பில்லாத தூரபந்துவா யிருந்தாலும், அல்லது, வெகு தூர தேசவாசியாக இருந்தாலும், அவன் இவளுக்குப் புருஷனானவுடன்,—

[நான்மணிக்கடிகை: 56-ம் செய்யுள்]

“கண்ணிற சிறந்த உறுப்பில்லை; கல்வியின்
நண்ணிய வாய பொருளில்லை;—கொண்டானின்

துன்னிய கேளிர் பிறரில்லை; என்றுளின்
என்ன கடவுளு மில்."

என்று சொல்லியிருக்கிறபடி, கண்ணுனது அவயவங்களுக்
கெல்லாம் எப்படிச் சிறந்ததாயிருக்கிறதோ, அப்படியே கண
வனானவன் தன் மனைவியின் சுற்றத்தார் யாவாலும் சிறந்த
பந்துவாகிறான்; அதைப்போலவே, மனைவியும் தன் நாயக
னுக்கு அதிக நேசமுள்ள உயிர்த் தோழியாய்விடுகிறாள்.
விவாகமானது சதிபதி யென்று சொல்லப்பட்ட இருவருக்
கும் இவ்வளவு நெருக்கமான சம்பந்தத்தை யுண்டாக்குவத
னால் தான் இதை யாவரும் இரகசியத்திற் செய்து கொள்
ளாமல் சகல சுற்றத்தார். மித்திரர்முதலான பல ஜனங்களுக்
கும் முன்பாக மங்களகரமாயக் கொண்டாடுகின்றார்கள்.
மேலும், இவ் விவாகமானது ஸ்திரீ புருஷர் இருவருடைய
வாழ்நாட்களில்மிக்க சிறப்புள்ளதாயும், அதிக விசேஷமுள்ள
தாயு மிருப்பதால், இதை விவாகமஹோத்ஸவம் என்றுங்
கூறுவதுண்டு.

இவ்விதமாய்ச் சிறப்புப்பெற்ற கலியாணக் கோலங்கள்
முதலானவை நடந்தேறிய பின்னர், பெண்பிள்ளையானவள்
தன் கணவனுக்கு மனையாள் என்னும் பெயரை வகித்து,
அவனோடு இல்வாழ்க்கையிற் கூடிவாழ்வதற்குரிய நடைகளிற்
பயிற்சியடையக் கடமைப் பட்டவளா யிருக்கின்றாள். அவை
களின் முறைமைகளையும் விதிகளையும் பின்வரும் பாடங்களி
னால் கற்றறியலாம்,

இத் தேசத்தில் சாதாரணமாய்க் கலியாண மான
வுடனே பெண்பிள்ளைக்குக் கணவனோடு கூடிவாழும் பருவம்
தொடங்குகிறதென்று சொல்லக்கூடவில்லை. ஏனென்றால்,
பெரும்பாலும் பெண்களுக்குத் தக்க வயது வருவதற்கு முன்
விவாகமாய்விடுகிறது. ஆகையால், தன் கணவனுடன் சேர்ந்து
வாழ்வதற்குரிய காலம் வந்த பிறபாடு அவர்களுக்கு அப்
பருவம் தொடங்குவதாய்ப் பாவித்துக் கொள்ளவேண்டும்.

## நித்தியக் கடன்கள்

மேற்கூறிய விதமாய்க் கணவனோடு கூடிவாழும் பருவம் வந்தவுடன், பெண்பிள்ளையானவள் தன் கணவனுக்குப் பிரியமாய் நடந்து கொள்ளவேண்டிய விதங்களைக் கற்றறிய வேண்டியவளா யிருக்கின்றாள். அவைகளில் முதலாவது: தன்னுடைய நித்தியக் கடன்களை யனுஷ்டிப்பதில் மிகுந்த ஜாக்கிரதையாயிருத்தலாம், அதாவது, பெண்ணானவள்

(1) இரவில் தன் கணவன் தூங்கினபின் தான் தூங்கி

(2) அவன் நித்திரையிலிருந்து விழித்தெழுந்திருப்ப தற்கு முன்னர்த் தான் எழுந்து,

(3) தந்த சுத்திசெய்தல் முதலான நித்தியக்கடன்களை முடித்துக்கொண்டு,

(4) பொழுது விடியுமுன் படுக்கையிலிருக்குந் தன் நாய கனை யெழுப்பவேண்டும்.

(5) அவன் எழுந்தவுடன் அவனுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களைச் சோம்பலின்றி அதிக ஜாக்கிரதையுடன் செய்யவேண்டும். எவ்வாறெனில்,

(1) புருஷனுக்குத் தந்தசுத்தி, ஸ்நானம் முதலானவை களுக்கு ஜலம் தயார் செய்வித்துக் கொடுத்துப்,

(2) பின்பு அவனுக்குத் தேவையான போஜன தாம் பூலம் முதலியவற்றை அப்போதைக்கப்போது சரியாய்த் தாமதமில்லாமல் கொடுக்கவேண்டும்.

இவைகளைக் காலமறிந்து ஜாக்கிரதையுடன் செய்வதி னால் மனைவியின் பேரில் கணவனுக்கு அதிகபிரீதி யுண்டா கும் சிலர் இப்படிச் செய்வதில் அஜாக்கிரதையைக் காட்டு வதினால் புருஷருக்குச் சில சமயங்களில் கோபம் உண்டாக்கி அவர்கள் திட்டுவதற்கும், அடிப்பதற்கும் இடம் தேடிக் கொள்ளுகின்றார்கள். அதனால் இருவருக்கு முள்ள பிரியம் தப்பிப்போகிறது முண்டு.

மேலும், "பெண்ணானவள் தினந்தோறும் நித்திரையி விருந்து எழுந்திருக்கும்போதே தன் கணவனுடைய ஆயுர் விருத்திக்காகவும், அவனுடைய ஆரோக்கியத்திற்காகவும் கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டே யெழுந்திருத்தல் வேண்டும்" என்று சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால், புருஷனுடைய சுகதுக்கங்களெல்லாம் மனைவியைச் சேர்ந்தனவாயிருக்கின்றன. இவற்றைப் பெண்கள் சரியாய்க் கவனித்து மேலே சொன்ன தங்களுடைய நித்தியக் கடன்களைச் செய்வதில் உற்சாகமுடையவர்களாகி, அவற்றைச் சிறிதும் வெறுப்பின்றிச் செய்துகொண்டு வரவேண்டும்.

மேலும், பெண்ணென்று சொல்லப்பட்டவள், தன் கணவன் விஷயத்தில் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டுமென்றால்,—

[நீதிவேண்பா: 30-ம் செய்யுள்]

"அன்னை தயையும், அடியாள் பணியு(ம), மலர்ப்
பொன்னி னழகும், புவிப்பொறையும் - துன்னுமெழில்
வேசி துயிலும், விறல்மந் திரிமதியும்,
பேசி லிவையுடையாள் பெண்."

என்று சொல்லியிருக்கிற பிரகாரம்:

(1) அவனிடத்தில் தாயைப்போன்ற தயை யுள்ளவளாயும்,

(2) தாதியைப்போல அவனுக்குப் பணிவிடைகள் செய்பவளாயும்,

(3) அவன், கோபத்தில் என்ன சொன்னாலும் பூமியைப்போல் பொறுத்துக்கொள்ளும் பொறுமை யுள்ளவளாயும்,

(4) கணவனுடன் சயனித்துக்கொள்ளுங் காலத்தில் வேசியைப்போல் இன்பம் விளைவிப்பவளாயும்,

(5) சமயத்தில் யுக்தி சொல்லுவதில் ஒரு விவேகியான மந்திரியைப் போன்றவளாயும், நடந்துகொள்ளவேண்டும்.

இதுவுமன்றி, தன் கணவனுக்கு மேற்சொன்ன விதமாய் ஒரு ஸ்திரீயானவள் செய்யும் உபசாரங்களைச் சமயத்துக்குத் தக்கபடி அவனுடைய குறிப்பை யறிந்து செய்வதே மகா சிரேஷ்டம். அப்படித் தன் கணவனுடைய குறிப்பை யறிந்து மனதார உபசரிக்கும் பெண்களை,—

[திரிகடுகம்: 96-ம் செய்யுள்]

"கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி; கொண்டன
செய்வகை செய்வான் தவசி; கொடிதோரீஇ
நல்லவை செய்வான் அரசன்; இம்மூவர்
பெய்யெனப் பெய்யு மழை."

என்று, பலவரும் நூல்களும் புகழ்ந்து கூறுகின்றன. இதன் பொருள் யாதெனில்:—

(1) தன்னைக் கொண்ட கணவனுடைய குறிப்பை யறிந்து, அவனை யுபசரித்து நடக்கிறவள் பெண்டாட்டி யாவாள்.

(2) தான் மேற்கொண்ட விரதங்களைச் செய்யவேண்டிய விதிப்படி செய்கிறவன் தவசியாவான்.

(3) பொல்லாங்குக ளுண்டாக்கும் காரியங்களைத் தள்ளித், தன் குடிகளுக்கு நன்மைகளை யுண்டாக்குங் காரியங்களைச் செய்பவன் அரசனாவான்.

(4) இவ்வித நற்செய்கை யமைந்த மூவரும் "பெய்" என்று சொன்னமாத்திரத்தில் மழை பெய்யு மென்பதாம்.

ஆகையால், பெண்கள் தம் கணவருக்குத் தினந்தோறும் செய்யும் உபசாரங்களை மிகுந்த ஜாக்கிரதையுடன் செய்துவரல் வேண்டும்.

---

15 - ம் பாடம்

## இல்வாழ்க்கை

இல்வாழ்க்கை யென்பது நாயகனும் நாயகியும் கூடி வாழும் வாழ்க்கையாம். பெண்பிள்ளையானவள் இல்வாழ்க்கையில் அநுசரிக்கவேண்டிய அறநெறி யென்னுந் தருமஞ் செய்யும் விதிகளையும், தன்னுடைய பர்த்தாவின் மனங் கோணாமல் அவன் சொற்படி நடந்து, அவனைச் சந்துஷ்டி செய்து மேன்மைப்படுத்தும் வழிகளையும் அறிந்து, நடக்க வேண்டியவளாய் இருக்கின்றாள்,

இவ் இல்வாழ்க்கையை மேற்கூறிய சதிபதிகளாகிய இருவரில் ஒருவர் மாத்திரம் நடத்துவது அசாத்தியம்.

அவன் முன்னிழுத்தால் இவள் பின்னிழுக்காமலும்,

அவன் பின்னிழுத்தால இவள் முன்னிழுக்காமலும், இருவரும் மனமொத்து இவ் இல்வாழ்க்கையை நடத்த வேண்டியவர்களா யிருக்கின்றார்கள். முன்னிழுத்தால் பின்னிழுத்தல் என்பது எப்படியென்றால்,

(1) கணவன் மனைவியை நோக்கி, "பெண்ணே! இவனுக்கு அதிக தாகமாயிருக்கிறதாம்; கொஞ்சம் ஜலம்கொடு!" என்றால், அவள், "ஜலம் குளத்திலிருக்கிறது; அங்கே போய்ச் சாப்பிடச்சொல்லும்" என்று சொல்லுவதும்;

(2) "நான் விடியற்காலத்தில் ஸ்நானம் செய்துகொண்டு கோவிலுக்குப் போகவேண்டும்; கொஞ்சம் வெந்நீர் தயார் செய்துகொடு!" என்று சொன்னால், "எனக்குத் தலைவலியா யிருக்கிறது; வெந்நீர் காயவைக்க என்னா லாகாது,"

என்று தாறுமாறாகப் பதில் சொல்லுவதுமாம்.

இப்படிப்பட்ட ஸ்திரீயினுடைய இல்வாழ்க்கை ஒரு போதும் செவ்வையாய் நடைபெறமாட்டாது. ஸ்திரீ புருஷர் இருவரும் ஒருமித்து நடத்தினால் மாத்திரம், தருமம்,

தானம், பரோபகாரம் முதலியவைகளைச் செய்வதற்கு இடமுண்டாகும். இல்லாவிட்டால் அவைகளிலொன்றுஞ் சித்தியாக மாட்டாது. இதற்குத் திருஷ்டாந்தமாய்,—

[அறநெறிச்சாரம்]

"மருவிய காதல் மனையாளுந் தானும்
இருவரும் பூண்டிர்ப்பி னல்லால்—ஒருவரால்
இல்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடம்
செல்லாது தேற்றிற்று நின்று."

என்பதாப் நீதி நூற்களிலும் கூறப்பட்டிருக்கின்றது. இதன் பொருளென்னவெனில், "இல்வாழ்க்கையென்னும் தருமசுபாவத்தையுடைய பெருமைதங்கிய வண்டியானது, கணவனிடத்து நீங்காமற் பொருந்திய அன்பினையுடைய மனைவியும், கணவனாகிய தானும் சேர்ந்து மேற்கொண்டிழுத்தால் நடக்குமே யல்லாமல், இவ் விருவரில் ஒருவரால் மாத்திரம் இழுக்கப்பட்டால் நடவாமல், அது தடைப்பட்டு நின்றுவிடும்" என்பதாம்.

இவ்விதமான இல்வாழ்க்கையின் விதிகளைச் சரியா யறிந்து வாழும் ஸ்திரீ புருஷர்களை, ஐம்புலன்களையும் விட்டுக் காடுகளிற் சென்று முத்தி அடைவதற்காகத் தவஞ் செய்து வரும் துறவிகளைவிடச் சிரேஷ்டமானவர்களென்றும் சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது. மேலும்,—

[திருக்குறள்: 5-ம் அதி: இல்வாழ்க்கை 10-ம் செய்யுள்]

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்."

என்று திருவள்ளுவ நாயனாரும் அருளியிருக்கின்றார்.

இதன் கருத்தென்னவென்றால், "இப் பூமியின்கண் இல்லறத்தோடு கூடிவாழவேண்டிய முறைமைப்படி வாழ்பவன், உலகத்திற்பிறந்த மனிதனாயிருந்தபோதிலும், வானுலகமென்று சொல்லப்பட்ட தேவலோகத்தில் வசிக்கும் தேவருள் ஒருவராக மதிக்கப்படுவான்," என்பதாம்.

பெண்களே! இல்லறத்தில் ஒருவனுக்கு இவ்வித சிறந்த பேறு உண்டாவதற்குக் காரணம், நல்லொழுக்க முள்ள தன் மனைவியல்லவா? ஆகையால், நீங்கள் இவ் இல்வாழ்க்கையின் விதிகளைச் சரியாய்க் கற்றறிந்து, அதன்படி கிரமமாய்ச் சன்மார்க்கத்தில் நடந்து மேலே சொன்னபடி உங்கள் கணவரை மேன்மைப்படுத்தி, அதனால் நீங்களும் மேன்மையடையவேண்டும்.

---

## 16-ம் பாடம்

## ஒற்றுமை

ஸ்திரீ புருஷர்களிருவரும் மனமொருமித்து ஒருவரையொருவர் நேசித்து நட்பதே ஒற்றுமை யெனப்படும். இவ்வித ஒற்றுமை யுண்டாவதற்குக் காரணம் பெண்களின் நற்குண கல்வி கேள்விகளாலும், தாம் அடையப்பெற்ற நற்சகவாசத்தினாலும் உண்டாக வேண்டும். பெண்ணானவள் உள்ளன்புடன் தன் கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொண்டு வருவாளாகில் ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடன் வாழ்வதற்கு யாதொரு தடையு மிராது. புருஷன் ஒன்று சொன்னால் இவள் ஒன்றைச் செய்கிறதும், அவன் ஒன்றைக் கேட்டால் இவள் ஒன்றைக் கொடுப்பதுமாயிருந்தால் அப்படிப்பட்ட மனைவியால் அவர்களுக்குள் ஒற்றுமை யென்பது ஒருபோதும் உண்டாகமாட்டாது. அப்படிப்பட்டவர்களுடைய செய்கைகளெல்லாம்,—

[இன்னா நாற்பது: 12-ம் செய்யுள்]

"உடம்பா டிலாத மனைவிதோள் இன்னா."

என்றபடி, தன் கணவனுக்கு அதிக துன்பத்தைத் தருவதாகும்,

மேலும், பெண்சாதியினிடத்தில் இவ்வித ஒருமைப்பாடில்லாவிடில்,

(1) எந்நேரமும் குடும்பக் கலகங்களும்,

(2) கணவனுக்கு மீளாத் துயரங்களும்,

(3) பலவித சஞ்சலங்களும்,

உண்டாவதற்கு ஏதுவாகிறது.

(4) கடைசியாய் இப்படிப்பட்ட ஸ்திரீயினுடைய செய்கைகளால் தன் கணவனுடைய உயிருக்கும் சேதமுண்டாய் விடும்.

ஆகையால், இவ்வித குணமுடையவள்,—

[வாக்குண்டாம் (மூதுரை): 27-ம்செய்யுள்]

"கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்;
அல்லாத மாந்தர்க்கு அறங்கூற்றம்;—மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம்; கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்."

என்றபடி, தன் கணவனுக்கு எமனுவாளென்று சொல்லப்பட்டிருக்கிறது.

மனைவியானவள் தன் நாயகனிடத்தில் பிரீதிவைத்து அவனுடன் ஒருமித்து நடப்பாளாகில், அப்படிப்பட்டவர்களுடைய இல்வாழ்க்கையில் பலவித இன்பங்களுண்டாகும். அவைகளைப் பார்க்கிலும், ஒரு ஸ்திரீக்கு உலகத்தில் வேறு இன்பங்கள் கிடையா. அவ்வொருமைப்பாடு இல்லாவிடிலோ, அவளுக்கு அதைவிட உலகத்தில் துக்கத்தைத் தருவது வேறு கிடையாது.

வேலும், ஒருவன் ஒருமித்து நடக்காத பெண்சாதியுடன் கூடி வாழ்வதைவிட,—

[ஔவையார்]

"பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானல்
எத்தாலுங் கூடி யிருக்கலாம்,—சற்றேனும்

ஏறுமா றாக இருப்பாளே யாமாயிற்
கூறுமற் சந்நியாசங் கோள்''

என்றபடிக்கு, "ஒருவரோடும் சொல்லாமல் சந்நியாசியாக ஓடிப்போவது நல்லது,'' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பெண்கள் தம் கணவரோடு கூடி வாழும் பருவத்தில் அநுபவிக்கவேண்டிய எல்லாவிதமான சுகங்களுக்கும் மூல காரணம், இவ் வொற்றுமையே யொழிய வேறொன்று மல்ல; ஆகையால், பெண்கள் தம் இல்வாழ்க்கையில் இவ் வொற்று மையானது நாளுக்குநாள் விருத்தியாய்க்கொண்டு வரும் படி யாய்த் தக்க முயற்சி செய்துவரவேண்டும்.

மேலும், 'இவ் வொற்றுமையை யநுசரிக்க, இடம், பொருள், ஏவல் என்பனவைகள் அமைந்த செல்வவான்களு க்கு மாத்திரம் கூடும்' என்றும்,

'அதிக ஏழைகளாயி ருப்பவர்களுக்கு அசாத்தியம்' என்றும்,

சிலர் நினைக்கிறார்கள். இது மிகவும் தவறு. எப்படி யென் றால், தன் புருஷன் தினந்தோறும் பிச்சை யெடுத்து ஜீவ னம் செய்கிறவனாயிருந்தாலும், அவனுடன் ஒருமித்து வாழ் ந்து அநேக பெண்கள் கீர்த்தியடைந்திருக்கின்றார்கள். அதற் குத் திருஷ்டாந்தம் இதற்குப் பின்வரும் பாடத்தில் அறிய லாம்,

---

## 17-ம் பாடம்

## ஒற்றுமை (தொடர்ச்சி)

[நேத்திரமணி யென்பவள் கதை

க்ஷேத்திரபுர மென்னும் ஊரில் பாத்திரகரன் என்னும் ஓர் வறிஞன் இருந்தான். இவனுக்கு நேத்திரமணி யென் னும் பெண்சாதி யொருத்தி யிருந்தாள். இவள், தன்

கணவன் தினந்தோறும் அவ் வூரிலுள்ள வீடுகளுக்குப் போய்ப் பிச்சையெடுத்துக் கொண்டுவரும் அரிசிமுதலான வைகளைச் சமைத்து அவனுக்கிட்டுத், தானும் சாப்பிட்டு, மிகுந்ததைத் தம்மிலும் வறியரா யிருப்போர்க்கும் போட்டுக் கொண்டு வருவது வழக்கம்.

நேத்திரமணியானவள் தன் புருஷன் மிகவும் ஏழையா யிருந்தும்,

(1) அவனைச் சற்றுவது அலட்சியஞ் செய்யாமல்,

(2) அவனைச் சிமானாகப் பாவித்து,

(3) அவனுடைய வார்த்தைகளுக்கு அடங்கி,

(4) பூவும் மணமும் போலவும், மணியும் ஒளியும் போலவும், அவனுடன் அதிக அந்நியோந்நியமாய் வாழ்ந்து வந்தாள்.

இப்படி யிருக்குங்காலத்தில், இவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. இவர்கள் அதிக தரித்திரராயிருந்தும், இது இவர்களுக்கு ஒரே குழந்தையாகையால்,

"காக்கைக்குத் தன்குஞ்சு பொன் குஞ்சு,

என்பதைப்போல், அப் பிள்ளையை மிகுந்த பக்ஷத்துடன் வளர்த்துவந்தார்கள். அப் பிள்ளைக்கு வயது ஐந்தான வுடன், அதன் கல்வியபிவிர்த்திக்கும் வேண்டிய முயற்சி செய்துவந்தார்கள்.

இவ்வாறு இவர்கள் நடந்துவருவதைப் பார்க்கும் க்ஷேத்திர புரத்திலுள்ள ஜனங்களெல்லாம்,

(1) "நேத்திரமணியின் கணவன் தினந்தோறும் யாசகஞ்செய்து ஜீவிக்கும்படியான தரித்திரத்தோ டிருப்பதையும், அப்படியிருந்தும் அதில் புருஷன், பெண்ஜாதி, பிள்ளை ஆகிய இம் மூவரும் இன்பமாய் நாள்கழித்து,

[ஆத்திசூடி: 9-ம் சூத்திரம்]

"ஐய மிட்டுண்."

என்பதை யுணர்ந்து இரப்போர்க்கும் ஈந்து, தாமும் ஜீவனம் செய்துகொண்டு வருகிறார்களல்லவா!" என்று அதிசயிப்பார்கள்.

(2) மேலும், "புருஷனும் பெண்சாதியும் இவ்வித துர்த்தசையிலும் மிக ஒற்றுமையுடன் ஒருவருக்கொருவர் அதிக அன்புபாராட்டி நடந்துவருகிறார்கள்" என்றும் வியந்து,

(3) நேத்திரமணியை,

(1) "மகாலட்சுமி" என்றும்,

(2) "உத்தமி" என்றும்,

(3) "உலகத்திற் பெண் பிறந்தால் இப்படியல்லவோ கீர்த்தி சம்பாதிக்கவேண்டும்." என்றும்,

பலவாறாய்ப் புகழ்ந்து கொண்டாடுவார்கள்.

இவ்விதமாய் இவர்களிருவரும் வாழ்ந்துவரும் நாளில், ஒருநாளிரவில்,

"வெறும் வாயை மெல்லுகிறவனை வெற்றிலை தா!" என்றாற்போல், ஒரு சந்நியாசி மிகுந்த பசியால் வருந்தி இவர்கள் வீட்டுக்குள் வந்து பிச்சை கேட்டார்.

பாத்திரகரன் தன் கஷ்டதசையையும் பாராமல், 'இவர் மகா உத்தமராய்க் காணப்படுகிறார்' என்று தனக்குள் யோசித்து, "சுவாமி! வாரும்! எங்கள் வீட்டிலுள்ளதை அதிருப்தியின்றிச் சாப்பிடும்! தங்களைப் பார்த்தால் மஹாதபோபலம் பெற்றவராய்க் காண்கிறது; எங்கள் பாவந் தீரும்படி அநுக்கிரகம் செய்யவேண்டும்," என்று நமஸ்கரித்துச் சொன்னான்.

இதை அருகில் கேட்டுக்கொண்டிருந்த நேத்திரமணியானவள். உடனே தானும் அந்தப் பெரியவரை நமஸ்காரஞ் செய்துகொண்டு, தாமதமில்லாமல் தங்கள் வீட்டிலுள்ளதைச் சமைத்து, அவருக்குப் போஜனம் சித்தப்படுத்தி, "இலை வேண்டியதாயிருக்கிறதே; அது இல்லாமல் அத் துறவிக்கு அமுது படைக்கத் தவக்கமாயிருக்கிறதே" என்று புருஷனுடன் சொல்லிக்கொண்டாள்.

இவ்விதமாய்த் தன் கணவனுடன் சொல்லிக்கொண்டிருந்ததைச் சமீபத்திலிருந்து கேட்டுக்கொண்டு நின்ற

குமாரனானவன், "அம்மா! நம்முடைய வீட்டிற்குப் பின் பக்கத்தில் இருக்கும் வாதுமை மரத்தில் இலைகள் நன்றாய்த் தழைத்திருக்கின்றன; யான் போய்ப் பறித்துக்கொண்டு வருகிறேன்; இப்போது இரவில் வேறுவிதத்தில் இலை கிடைப்பது பிரயாசை," என்று சொல்ல,

நேத்திரமணியும் அதற்கிசைந்து, "குழந்தாய்! அப்படியே செய்; இருண்ட இரவாதலால் மரத்தின்பேரில் ஏற வேண்டாம்; கீழேயிருந்தபடி கைக்கெட்டின சில இலைகளை மாத்திரம் பரித்துக்கொண்டு சீக்கிரமாய் வா!" என்றுசொல்லி விட்டுத் தானும் தன் கணவனும் மற்ற வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்க்ள்.

அப்படியே இச் சிறவன் போய் இலை பறிப்பதற்காக மரத்தடியில் கால் வைத்தவுடனே, அங்கிருந்த ஓர் கிருஷ்ண சர்ப்பந் தீண்டி, அவன் மூர்ச்சையடைந்து கீழே விழுந்து விட்டான்.

சிறுவன் வாசமையைக் கண்ட தாயானவள், 'மைந்தன் இலை பறிக்கப் போய் வெகு நேரமாயிற்றே! இன்னம் வரவில்லையே!' என்று சமீபத்தி லிருந்தபடியால், "அப்பா குழந்தாய்!" என்று கூப்பிட்டாள்.

அதற்குப் பதிலுத்தரம் கிடைக்காமையால், சந்தேகித்துப் புருஷனைப் போய்ப் பார்க்கும்படி சொன்னாள்.

அப்படியே இவன் போய்ப் பார்த்ததில், தன் குமாரன் கீழே விழுந்து ஸ்மரணையில்லாமல் கிடப்பதை யறிந்து நெஞ்சுங் கலங்கி, அவனைத் தோளின் பேரில் தூக்கிப்போட்டுக் கொண்டு, கொஞ்சம் இலைகளையும் எட்டிப் பறித்துக் கொண்டு, வீட்டுக்கு வந்தான். வந்தவுடன், வெளிச்சத்தில்மகனைப்பார்த்ததில், 'பாம்பு கடித்ததினால் இறந்து பிரேதமாய் விட்டான்' என்று நினைத்து, அதிக துக்கங் கொண்டு,

[நல்வழி: 5-ம் செய்யுள்]

"வருந்தி யழைத்தாலும் வாராத வாரா;
பொருந்துவன போமினென்றாற் போகா;-இருந்தேங்கி

நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரந் தானினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்."

என்று மனதை ஒருவாறு தேற்றித், துக்க மிகுதியாற் புலம்பும் தன் மனைவியாகிய நேத்திரமணிக்கும் வேண்டிய தேறுதல்களைச் சொல்லலுற்றான்:—

"பெண்ணே! சந்நியாசிக்கு இதுவரையில் பசி அதிகரித்திருக்கும்; அவருக்குப் பசிவேளையில் தாமதமின்றி நாம் அன்ன மிடவேண்டியதாகையால், நம்முடைய பிள்ளை யிறந்துபோன சங்கதியை அவர் அறிந்தால் நம்முடைய வீட்டில் புசிப்பு எடுத்துக்கொள்ளமாட்டார்; அவரை வெகுநேர பசியாயிருக்க வைப்பதில் நமக்கு பாவம் சம்பவிக்கும்; ஆகையால், இப் பிரேதத்தை வீட்டின் பின்பக்கத்தில் ஒரு வஸ்திரம் போட்டு மறைத்துவை! அவர் சாப்பிட்டானவுடன் இச்சங்கதியை வெளிப்படுத்தலாம்." என்று சொன்னான்.

இதைக் கேட்ட நேத்திரமணியானவள் தன்னுடைய ஆசைப் புதல்வன் இறந்துபோன ஆறாத பெருந்துயரத்தையும் சகித்துக்கொண்டு, தன் பத்தாவினுடைய வார்த்தையைச் சிரசால் வகித்து, அப்படியே இறந்துபோன தன் குமாரனைத் தானொரு பக்கமும் கணவனொரு பக்கமுமாய்ப் பிடித்துக் கொண்டுபோய், "அப்பா மகனே! உனக்கு நாங்கள் இப்படிப்பட்ட பணிவிடைகள் செய்யவேண்டுமென்று கடவுள் முன்னமே விதித்திருந்தாரோ? இந்தக் காட்சி காண்பதற்காகவா உன்னைப் பிள்ளையாய்ப் பெற்றோம்?" என்று பலவிதமாய்ப் புலம்பிக்கொண்டு, அப் பிரேதத்தை வீட்டின் பின் புறத்தில் படுக்கவைத்து, ஒரு வஸ்திரத்தை அதின் பேரில் போர்த்து மறைத்துவைத்தாள்,

பின்பு தானும் தன் கணவனும் சந்நியாசியினிடம் வந்து நமஸ்கரித்து, "சுவாமி! போஜனத்துக்கு எழுந்தருள வேண்டும்" என்று அழைத்தார்கள்.

அதன் பிரகாரம் அவரும் கை கால்களை யலம்பிக் கொண்டு இலையின் முன்பாக வந்து உட்கார்ந்தார். உடனே,

அவர், நேத்திரமணியைப் பார்த்து, "அம்மா! உன் குமாரனும் என்னுடன் கூடச் சாப்பிட வேண்டும்" என்று விரும்புகிறேன்; அச் சிறுவனைக் கூப்பிட்டு அவனுக்கும் என் பக்கத்தில் ஒரு இலை போடவேண்டும்" என்று கேட்டு கொண்டார்.

## 18-ம் பாடம்

## ஒ ற் று மை (தொடர்ச்சி)

## [நேத்திரமணி யென்பவள் கதை]

இவ்விதமாய் அச் சந்நியாசி சொன்னதைச் செவியுற்ற நேத்திரமணியானவள், 'உண்மையைச் சொன்னால் இவர் நம்முடைய வீட்டில் போஜன மெடுத்துக்கொள்ள மாட்டார்' என்று, தன் புருஷன் சொல்லியிருந்த வார்த்தைகளை நினைத்து, சுவாமி! பையன் தூங்கிவிட்டான்," என்று சொன்னாள்.

அதற்கு அச் சந்நியாசி அவன் சில நிமிஷங்களுக்கு முன் நான் பார்த்தபோது இலை பறிப்பதற்காக ஓடினானே! இதற்குள்ளாகத் தூங்கியிருக்கமாட்டானம்மா! தூங்கிவிட்டிருந்தபோதிலும் எழுப்பி என்னுடன் கூட உட்காரவைக்க வேண்டும்" என்று மிகவும் வேண்டிக்கொண்டார்.

இதற்கு இவர்க ளிருவரும் மஹா துக்கங்கொண்டவர்களாய், "தெய்வமே! இவருக்கு என்ன மறுமொழி சொல்லுவோம்?" என்று திப்பிரமையுடன் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக்கொண்டு மயங்கி நிற்க,

அதைக் கண்ட துறவியானவர் சந்தேகித்து, "உண்மையை யெனக்குச் சொல்லவேண்டும்" என்றார்.

இதைக்கேட்ட நேத்திரமணியும், அவளுடைய கணவனும், "இத்துறவியின் பசியை மாற்றுவதற்காக நம்முடைய

பிள்ளை யிறந்துபோனதையும் மறைத்து, மனதைப் பல வாறாய்த் தேற்றிக்கொண்டு, அந்த மஹாநுபாவர் நம்முடைய வீட்டில் எப்படியாவது அன்னம் புசிக்கவேண்டுமென்று பிரயாசைப்பட்டும்,

"ஐங்காதம் போனாலும் தன் பாவம் தன்னோடே"

என்றபடி, நம்முடைய பாவ விசேஷத்தினால் அப் பலன் சித்திக்கவில்லையே!" என்று மகா துயரப்பட்டார்கள். மேலும், உண்மையைச் சொல்லாவிட்டால் நாம் இதுவரையில் பட்ட பிரயாசைகளையெல்லாம் வீணாக்கிவிட்டு, அவர் கோபித்து எழுந்து போய்விடுவாரே!" என்று பயந்து,

"உற்றதைச் சொன்னால் அற்றது பொருந்தும்"

என்று ஆலோசித்து, "எங்கள் குமாரன் இலை பறிக்கப்போன விடத்தில் சர்ப்பம் தீண்டி யிறந்துபோனான்," என்று தேகம் துடிக்க, வாய் பதற, துக்கத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு சொன்னார்கள்.

இதைக் கேட்டவுடன் சந்நியாசி திடுக்கிட்டு, அதிக விசனத்துடன், "ஆ! ஆ! இப்படிப்பட்ட செய்தியா இந்த சற்குணரிடத்தில் கேட்கும்படிக்காயிற்று கர்த்தாவே!" என்று காதில் கையை வைத்துக்கொண்டு,

"பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்."

என்பது சரியாயிருக்கின்றதே! இவர்கள் முன்னமே அதிக தரித்திரத்தை யனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்; அப்படிப்பட்டவர்கள் உத்தமரா யிருக்கிறார்களென்று அவர்களுடைய தரித்திரத்தையும் எண்ணாமல், நாம் அவர்களிடம் விருந்தாளியாய் வந்துவிட்டோம்; இதற்கே அவர்கள் எவ்வளவோ பிரயாசைப்பட்டுக் கொண்டிருக்கையில், அத்துடன் கூட அவர்களுக்கு ஒரே புத்திரனாயிருந்த பிள்ளையும் நம்மால் இறந்துபோய் விட்டானல்லவா" என்று மிகவும் பரிதாபப் பட்டு, "பின்னும் இவைகளெல்லாம் போகட்டும், பிள்ளை யிறந்ததை நமக்குச் சொன்னால் நாம் இவர்கள் வீட்டில் புசிப் பெடுத்துக்கொள்ளாமற் போவோமென்று பயந்து தங்க

ளுடைய அருமையான புத்திரன் இறந்துபோனதையும் நம க்கு மறைத்துச் சொன்னார்களல்லவா!" என்று தனக்குள் தான் அதிக ஆச்சரியமு மடைந்தார். மேலும்,—

[திருக்குறள்: 5-ம் அதி —இல்வாழ்க்கை—5 ம் செய்யுள்]

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது."

என்று திருவள்ளுவ நாயனார் சொல்லியிருக்கிறபடி, "இல் வாழ்க்கையின் குணமும் அதன் பலனு மென்னவென்றால், கணவனும் மனைவியும் அந்நியோந்நியமாய் ஒருவருக்கொருவர் மன வொற்றுமையுடன் வாழ்தலே அதன் குணமும், அவ் வொற்றுமையோடு கூடிச் செய்யும் தர்மங்களே அவ் இல் வாழ்க்கையின் பலனுமாகும்," எனபது இவர்களிடத்தில் சரி யாய் அமைந்திருக்கிறது. இதுவுமல்லாமல்,—

(நாலடியார்: 39-ம் அதி.—கற்புடையமகளிற்—3-ம் செய்யுள்)

"நாலாறு மாறாய் நனிசிறதாய் எப்புறனும்
மேலாறு மேலுறை சோரினும்—மேலாய
வல்லாளாய் வாழுமூர் தற்புகழு மாண்கற்பின்
இல்லாள் அமர்ந்ததே இல்."

என்றபடி, "தான் வசிக்கும் வீடானது நான்கு பக்கங் களிலும் வழியுள்ளதாயும், மிகவும் சிறியதாயும், மேலே கூரையிலிருந்து மழைத்துளிகள் ஒழுகும்படியான துவாரங்க ளுள்ளதாக இருந்தாலும், அவ்வித தரித்திரத்தைக் குறித் துச் சிந்தியாமல், தன் புருஷன்மீது அன்பு வைத்து அவனை வழிபட்டு, தருமம்முதலிய மேலான காரியங்களை இயன்ற மட் டும் செய்ய வல்லவளாயும், தான் வாழும் ஊரிலுள்ளோர் தன் னைப் புகழ்ந்து கொண்டாடும்படி சிறந்த கற்புள்ளவளுமான மனைவி வசிக்கும் இடமே வீடென்று சொல்லவேண்டும்" என்பதற்கு, இன்றுதான் தகுந்த திருஷ்டாந்தங் கண்டோம், 'இந்தப் புண்ணியவதியைப்போல் புருஷனுடன் ஒருமித்த மன உறுதியோடுகலந்து தர்மசிந்தை யுள்ளவளாய் வேறொரு ஸ்திரீயும் இவ் வுலகத்தில் இருப்பளா' என்று நேத்திரமணி

பினுடைய ஒற்றுமைக்கும் உறுதிக்கும் அதிசயித்துத், தான் எப்படியாவது அந்தப் பிள்ளையை உயிரப்பிக்கவேண்டுமென்று தனக்குள் தீர்மானித்து, "இறந்துபோன பிள்ளையைக் கொண்டு வாருங்கள்!" என்று சொன்னார்.

அதைக் கேட்டவுடன், அவர்கள் அப் பிரேதத்தை அப்படியே கொண்டுவந்து அவர் முன் வைத்தார்கள்.

"நம்மால் இத் தர்மவான்களுக்கும் இவ்வளவு பெரிய ஆபத்து வந்ததல்லவா!" என்று சொல்லிக்கொண்டு, தான் எவ்வளவோ காலமாய் செய்துவந்த தவவலிமையால் கிடைக்கப்பெற்றிருந்த அமிர்த சஞ்சீவி யென்கிற ஓர் குளிகையை அப் பிரேதத்தின் பேரில் பூசினார்.

அவ்விதமாய்ப் பூசினவுடன், அப் பிள்ளை நித்திரையிலிருந்து எழுந்தவனைப்போல் எழுந்து, அத் துறவியின் பாதத்தில் விழுந்து, நமஸ்கரித்து நின்றான்.

இவ் வற்புதக்காட்சியைக் கண்ட அப் பிள்ளையின் தாய் தந்தையர், இறந்துபோய்ப் பிழைத்த தங்கள் குமாரனை வாரியெடுத்து, மார்போ டணைத்து, முத்தமிட்டு, "அடா! எங்கள் கண்மணியே! அடா! ஆசை மகனே உன் திருமுகத்தை நாங்கள் மறுபடியும் பார்க்கக் கிடைத்ததல்லா!" என்று வாயினாற் சொல்லிமுடியாத மனக்களிப்புடன் ஆநந்தக் கூத்தாடினார்கள் சந்நியாசியின் மகிமையை வியந்து பாடினார்கள்.

பின்பு அவர் இஷ்டப்படிக்கு, அப்பிள்ளையும் அவருடன் கூட உட்கார்ந்து சாப்பிட்டான்.

இவ்விதமாய் அத் துறவியானவர் இவர்களுடைய வீட்டில் போஜனம் செய்தானவுடன், அவர்களுக்குச் "சகல பாக்கியங்களும் உண்டாவதாக," என்று ஆசீர்வதித்துப் போய் விட்டார்.

அன்றுமுதல் இவர்கள் வறுமை நீங்கி நாளுக்குநாள் ஐசுவரியங்கள்பெருகி, சதிபதிகளாகிய இருவரும் அதிக ஒற்றுமையுடன் சுகித்து வாழ்ந்துவந்தார்கள்,

## 19-ம் பாடம்

# கற்பு

[கொன்றைவேந்தன்: 14-ம் சூத்திரம்]

"கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை"

என்று ஔவையார் சொல்லியிருக்கிறபடி, கற்பென்பது, கணவனுடைய வார்த்தைக்கடங்கி, அதற்கிசைந்து நடந்து, அக்கணவனையே தெய்வமென்று மனப்பூர்த்தியாய் எண்ணி, அவனை மேன்மைப் படுத்துவதேயாம். இது ஜாதி, மதம் இவைகளின் பேதத்தால் மாறுபடாமல் சகலமான ஜனங்களாலும் வழுவாமல் அநுசரிக்கப்படவேண்டிய விதியாயிருக்கிறது.

மேலும், ஒரு ஸ்திரீயானவள், தனக்கு உலகத்தில் தன் பதியைவிட வேறே பாக்கியங்களில்லை யென்றும், அவன் எப்படிப்பட்டவனா யிருந்தபோதிலும் சிந்தியாமல், அவனையே பெருஞ் செல்வமாக முழுமனதோடு எண்ணி நடப்பாளானால் அவளே "பதிவிரதா சிரோன்மணி" என்றும், "கற்புடைய மங்கை" என்றும் உலகத்தாரால் மிகவும் புகழப்படுவாள். இதுவுமல்லாமல்,—

[காசிகாண்டம்]

"தாதை தன்னினும், தன்அனை தன்னினும்,
மாதர் மென்மொழி மைந்தர்கள் தம்மினும்,
கோதில் கற்புடை யார்தம் கொழுநர்பால்
காதல் கூர்ந்து களிமகி ழெய்துவார்."

என்றபடி, கற்புடைய ஸ்திரீயானவள் தன் தாய் தந்தை, புத்திரர் இவர்களெல்லாரைப் பார்க்கிலும் தன் கணவன் மேல் அதிக அன்புவைத்து நடந்துகொள்ளுவாள். மேலும்,

[காசிகாண்டம்]

"கொழுநன் சொற்கட வாதுறை கொள்கையே
வழுவில் நல்லறம், வான்தவ மாற்றுதல்

தொழுது தெய்வம் பராய்மலர் தூவுதல்
பழுதில் கற்புடைப் பத்தினிக் கென்பவே."

என்று சொல்லியிருக்கிற பிரகாரம், ஒரு குற்றமற்ற பதிவிரதா ஸ்திரீக்குத் தருமம், தவம், தேவதார்ச்சனை முதலாகிய இவ்வித விரதங்களெல்லாம் தன் கணவனுடைய வார்த்தையை மீறி நடக்காமலிருப்பதே யொழிய, வேறே யெவ்விதமான விரதமுங் கிடையவே கிடையாதாம். இதுவுமன்றி, "கற்பென்பதை உடைத்தா யிருப்பவளே பெண்" என்றும் "அஃதில்லாதவள் பெண் அல்ல" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும்,—

[திருக்குறள்: 6-ம் அதி.—வாழ்க்கைத்துணைநலம்-6-ம் செய்யுள்]

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்."

என்று திருவள்ளுவ நாயனாரும் சொல்லியிருக்கின்றார். அதாவது, "கற்பு நிலையிலிருந்து வழுவாமல் தன்னைக் காத்துத், தன்னைக் கொண்ட கணவனையும் போஜன முதலியவற்றால் தகுந்தபடி யுபசரித்துக் காத்துத், தன் நற்குண நற்செய்கைகளிற் பிசகாமலிருப்பவளே பெண்ணாவாள்" என்பதாம்.

இவையன்றி, "ஒரு மனிதனுக்கு உலகத்தில் எல்லாப் பேறுகளைவிட கற்புடைய மங்கையை மனைவியா யுடைத்தா யிருப்பதே உயர்ந்த பேறு" என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

[நீதிசாரம்]

"தாயோ டறுசுவை போம்; தந்தையோடு கல்விபோம்;
சேயோடு தான்பெற்ற செல்வம்போம்;—தூயவுடல்
வந்தோன் மரிக்கில் வலிபோம்; மனையேனிலோ
அந்தோ! இவையெலாம் போம்."

என்று கூறியிருக்கிறபடி, "ஒருவன் தன்னுடைய தாய், தந்தை, புத்திரன், சகோதரன் முதலியவர்களை யிழப்பானாகில் அதினால் அவனுக்கு அதிக நஷ்டம் உண்டாகாது. மேற்சொன்ன கற்போடுகூடிய தன் பாரியை அவன் இழந்த

ளுகில் அவனுக்கு உலகத்தில் உண்டான எல்லாச் சம்பத்து களும் அவனோடேபோய்விடும்.'' மேலும்,—

[திருக்குறள்: 6-ம் அதி.—வாழ்க்கைத் துணைநலம்-5-ம் செய்யுள்]

"தெய்வந் தொழாஅள், கொழுநன் தொழுதெழுவாள்:
பெய்யெனப் பெய்யு மழை."

என்றபடி, "ஒரு ஸ்திரீயானவள் இதர தெய்வங்களைத் தொழாமலே, தினந்தோறும் நித்திரையிலிருந்து எழுந்திருக்கும்போது, தன் கணவனையே தெய்வமாகப் பாவித்துத் தொழுதுகொண்டு வருவாளானால், அப்படிப்பட்ட பதிவிரதையின் வாக்கால, 'பெய்' என்று சொன்னமாத்திரத்தில் மழை பெய்யும்."

பின்னும், கற்புடைய மங்கையரின் செய்கைகள் எப்படி யிருக்குமென்றால்,—

[காசிகாண்டம்]

"கொழுநன் உண்டபின் தானுகர் கொள்கையும்,
விழி துயின்றபின் துஞ்சலும், மேன்துயில்
எழுதல் முன்னம் எழுதலுமே யன்றே
பழுதில் கற்புடைப் பாவையர் செய்கையே."

"எய்தும் இற்புறந் தேகலர்: இல்லகல்
தையலார் முகங் காணினும் சாம்புவார்;
மையல் காதலர் வந்தவை யாயினும்
செய்தி ரேறன்லும் செய்தன மென்பரால்."

என்பனவாம்.

இவற்றின் கருத்தென்னவெனில்:—

(க) "தங்கள் புருஷர் உண்டபின் தாம் உண்பதும்,
(உ) அவர்கள் தூங்கியபின் தாம் தூங்குவதும்,
(ங) தாம் அயலார் வீட்டுக்குப்போக விரும்பாமையும்,
(ச) அப்படிப் போகும் பெண்களைப் பார்த்தால் கோபிப்பதும்,

(ஙி) தம் கணவர் எதையாயினும் செய்யச் சொன்னவுடன் 'செய்தோம்' என்று ஜாக்கிரதையாய்ச் செய்துமுடித்தல் முதலானவைகளும்,

குற்றமற்ற பதிவிரதா ஸ்திரீகளின் செய்கைகளாம்,''

இவ்வித நற்செய்கைகளுள்ள ஸ்திரீயை ஒருவன்மனைவியாய்க் கிடைக்கப்பெற்றால், அவனேயே உலகத்தில் 'பாக்கியவான்' என்று சொல்லவேண்டும், அப்படிப்பட்ட ஸ்திரீயை ஒருவன் இழந்தால், அவனுக்கு அதினால் உண்டாகும் துக்கத்திற்கு அளவுண்டா? அவன் மனம் சீக்கிரததில் துணியுமா? இதற்குத் திருஷ்டாந்தமாகத் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரும் மேற்கண்ட பதிவிரதா லட்சணங்களமைந்த தனனுடைய மனையாள் இறந்து போய்ப் பிரேதத்தை மயானத்துக்குக் கொண்டு போகும்போது, அவர் புலம்பினதைக் கேளுங்கள்!—

[திருவள்ளுவ நாயனார்]

"அடிசிற்கு இனியாளே! அன்புடைய யாளே!
படிசொல் கடவாத பாவாய்!—அடிவருடிப்
பின் தூங்கி முன்னெழூஉம் பேதையே! போதியோ!
என்தூங்கும் என்கண் இரா."

அதாவது,

(1) "என் நாவிற்கு இனிமையான அறுசுவையோடு கூடிய உணவைச் சமைத்து, என் அருகிலிருந்து இதமான வார்த்தைகளால் என்னை யுபசரித்து உண்பித்து வந்தவளே!

(2) என்னிடத்தில் நீங்காத உள்ளன்புடையவளே!

(3) தெரு வாசற்படி கடவாதவளே!

(4) என்னுடைய வார்த்தைக்கு எப்போதும் எதிர்த்துப் பேசாமல் கடவுள் வாக்காய்ப் பாவித்து நடந்துவந்தவளே!

(5) இரவில் என் பாதத்தை நெடுநேரம் வருடிக்கொண்டிருந்து, நான் நித்திரை செய்தபின்பு என்கால் மாட்டிலேயே சற்றுநேரம் நித்திரைசெய்து, நான் விழிப்பதற்கு முன்பாக விழித்தெழுந்திருப்பவளே!

(6) இப்பொழுது உன் அன்பனாகிய என்னை விட்டுப் பிரிந்து போய்விடுகின்றாயே!

(7) இனி நான் எப்படிக் கண்ணுறக்கங் கொள்ளுவேன்!"

என்று அவர் கண்ணீர்விட்டு அலறி யழுதார்.

மேலே விவரித்த கற்பிலட்சணங்களுள்ள ஸ்திரீகளின் பெருமை யெப்படிப் பட்டதென்றும், அவர்களுக்குக் கடைசியாய் எவ்விதமான பலன்கள் உண்டாகு மென்றுங் கேட்டாலோ,—

[விவேக சிந்தாமணி—முதற்பர்கம்—21-ம் பாடல்]

"வேத மோதிய வேதியர்க் கோர்மழை;
நீதி மன்னர் நெறியினுக் கோர்மழை;
மாதர் கற்புடை மங்கையர்க் கோர்மழை;
மாத மூன்று மழையெனப் பெய்யுமே."

[காசிகாண்டம்]

"கற்பு மேய கனங்குழை மாதரைப்
பெற்றுளோர் தம் மரபும், பெருந்தவக்
கற்பினர் கொண்ட காதல னுருயிர்ச்
சுற்றம் யாவும், துறக்கத்தி னெய்துவார்."

என்றபடி, அப்படிப்பட்ட ஸ்திரீகளுக்காகவும் உலகத்தில் மழை பெய்கிறதென்றும், அப் புண்ணியவதிகள் பிறந்த தங்கள் சந்ததியாரும்—தங்கணவருடைய சந்ததியாரும்—இன்னும் மற்றுமுண்டான அவ் விருதிறத்தாருடைய சுற்றத்தார் யாவரும்—முடிவில் சுவர்க்கலோகத்திற் சேர்ந்து எல்லா பாக்கியங்களையும் அடைவார்களாம்.

ஆகையால், ஸ்திரீகளுக்குப் பதிவிரதா தர்மத்தைவிட மேலாகிய பேறு உலகத்தில் வேறொன்று மில்லை.

20-ம் பாடம்

## கற்பு (தொடர்ச்சி)

### [கமலாவதி யென்பவள் கதை]

அமராவதி யென்னும் நகரத்தில் கமலாவதி யென்னும் ஒரு இராஜ கன்னிகையிருந்தாள். காட்டில் வசித்துக் கொண்டிருப்போனாகிய ஓர் இருஷி அப் பட்டணத்திற்கு வந்த போது, அக் கன்னிகையின் அழகைப் பார்த்து, அவளை மனைவியாக்கிக்கொள்ளக் கருதி, அவளுடைய தகப்பனாகிய அந்நகரத்தரசனைக் கண்டு, தன்னுடைய, கருத்தை வெளியிட்டான்.

அதைக் கேட்ட அரசன் மகா துயரப்பட்டு, அவனுக்குத் தன் மகளைக் கொடுப்பதற்குச் சற்றாவது பிரியமில்லாமலிருந்தும், அவன் இருஷியாயிருப்பதினால் அவனுடைய கருத்துக்கு இணங்காவிட்டா என்னவிபரீதம் உண்டாகுமோ என்று பயந்து,

"கிளியை வளர்த்துப் பூனையினிடம் ஒப்புவித்ததைப்போல்"

அவனுக்குக் கமலாவதியைக் கலியாணம் செய்து கொடுத்தான்.

அதிக செளந்தரியமுள்ள இராஜகன்னிகையாகிய இந்தக் கமலாவதிக்கு இவன் தக்க நாயகனாயிராமல், பனங்காயைப்போல கன்னங்கரேலென்று கறுத்த நிறமும், மயிர் நிறைந்த தேகமுள்ள அதிக விகாரரூபமுள்ளவனுமாயிருந்தான். இவர்களிருவர் சிலநாட் சென்றபின்,

"அமாவாசைச் சந்திரனைக் கிரகணம் பிடித்ததுபோல்"

அவனுக்குக் குஷ்டரோகமும் சம்பவித்துவிட்டது.

இப்படித் தெய்வீகமாய் வாய்த்த தன் கணவனுடைய விகார ரூபத்திற்காகவும், அதனுடன் அவனுக்குத் தற்செயலாய்ச் சம்பவித்த பெருவியாதிக்காகவும், கமலாவதியான

வள் அதிக செல்வத்தில் வளர்ந்த இராஜ கன்னிகையா யிருந்தும்,—

[காசி காண்டம்]

"அழகின் வீக்கஞ் சிறிதில ராயினும்,
ஒழிவில் நோய் நிரப்புற்றவ ராயினும்,
கிழவத் தன்மைய ராயினும், கேள்வரைப்
பழுது சொல்கலர், பண்பின் முயங்குவார்."

என்பதில்,—"நற்குணமுள்ள பதிவிரதா ஸ்திரீகள் தம் கணவர் சற்றுவது அழகில்லாதவர்களாயும் அதிக நோய்களடைந்து விர்த்தாட்பியராயு மிருந்தாலும், அவைகளுக்காக அவர்கள் விஷயத்தில் யாதொரு குறையையும் எண்ணமாட்டார்கள்."

என்று சொல்லியிருக்கிற பிரகாரம், அவள் சற்றுவது மனத்தளர்ச்சியும் வெறுப்பும் அடையாமல், தன் பர்த்தாவின் தேகத்தை அடிக்கடி ஜலத்தினுல் கழுவுகிறதும், அதினுல் உண்டான ஈரத்தைத் தன் வஸ்திரத்தினுல் பக்குவமாக ஒற்றுகிறதுமான உபசாரங்களைச் சோர்வின்றிச் செய்துகொண்டு வருவாள். அதற்குத் தக்கபடி இந்த இருஷியானவன் இராமல் கமலாவதியைக்,

"குரங்கு கையில் அகப்பட்ட பூமாலை" யைப்போல்

காரணமில்லாமலே துர்ப்பாஷைகளாகில் திட்டிக்கொண்டும், வியாதியின் கொடுமையால் அவள்பேரில் அடிக்கடி கோபித்துக்கொண்டும் வருவான்.

இவ்வித குரூர செய்கைகளுக்காக அவள் சற்றேனும் மனங் கோணுமல், தன் கணவனுக்கு எந்த விதத்தினுலும் ஆயாசம் உண்டாகாமற்படிக்கு நடந்துகொள்ள முயலுவாள்.

இப்படியாக இவர்களிருவரும் வாழ்ந்துகொண்டு வரும் நாளில், ஒருதினம் அந்த இருஷியானவன் தான் நடப்பதற்குச் சக்தியில்லாத முடவனுயிருப்பதை நினைத்து,

"கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்"

என்று சும்மாயிராமல், தன மனைவியைக் கூப்பிட்டு, "ஓ பெண்ணே! நம்முடைய ஊருக்குச் சமீபமாய் இரண்டு நாழிகை வழி தூரத்தில் கமண்டல மென்னும் நதியணித் தான ஆரணி யென்னும் பட்டணத்தில் நாளையதினம் திரு விழா நடக்கப்போகிறதாமல்லவா? அதை நான் பார்க்க மிகு ந்த ஆவல் கொண்டிருக்கிறேன். எனக்கோ, வியாதியின் உபத்திரவததால் நடக்கச் சக்தி யில்லை! பாவியாகிய நான் என்ன செய்வேன்? கடவுள் செயல் இப்படியாக இருக் கிறது," என்று

"மூடவன் கோம்புத் தேனுக்கு இச்சித்ததைப்"போல

அதிக விசனத்துடன் சொன்னான்,

இதைக் கேட்ட கமலாவதியானவள், "சுவாமி! இதற் காகத் தாங்கள் ஏன் விசனப்படவேண்டும்? நான் தேவரீரை யெப்படியாவது அந் நகரத்திற்குக் கொண்டுபோய்த் தங்க ளுக்குத் திருவிழாவின் வைபவங்களைக் காட்டுகிறேன்.

"வெண்ணெயை வைத்துக்கொண்டு
நெய்க்கு அலைவாவேன்."

அடியாள் இருக்கிறவரையில் எதற்காகவும் தாங்கள் சிந் திக்கவேண்டுவதில்லை," என்று தன் கணவனுக்கு வேண்டிய் தேறுதல்களைச் சொன்னாள்.

அதன் பிரகாரம் மறுநாள் காலையில் தன் கணவனை ஒரு சிறு தொட்டியில் உட்காரவைத்து, அத்தொட்டிலைத் தன்தலை யில் தூக்கி வைத்துக்கொண்டு, கொஞ்சமாவது மனஞ்சோரா மல் நடந்துபோய், அந்த ஆரணி நகரத்தைச் சேர்ந்தாள் கமலாவதி தன் புருஷனைத் திருப்தி செய்வதைக் கருதி இவ் வளவு வருத்தத்தையும் சற்றுவது இலட்சியம் செய்யாமல் அன்றையதினம், சாயங்திரம் அங்கே நடந்த திருவிழா வின் வேடிக்கைகளைத் தன் கணவனுக்குக் காண்பித்துவிட் டுச் சூரியன் அஸ்தமன மானவுடனே புருஷனை முன்போலத் தொட்டிலில் வைத்துத் தூக்கிக்கொண்டு அமராவதிக்குத் திரும்பினாள்.

## 21-ம் பாடம்

## கற்பு (தொடர்ச்சி)

[கமலாவதி யென்பவளுடைய கதை]

மேலே சொன்ன விதமாய்த் தொட்டிலைத் தலைமேல் வைத்துக்கொண்டு, தன் பர்த்தாவுக்குப் பசியுண்டாகுமுன் வீட்டுக்குப் போய்ச் சமையல் முதலானதைச் செய்ய வேண்டியிருக்கிறதே யென்று ஆலோசித்துக் கொண்டே, கமலாவதியானவள் அதிக சீக்கிரமாய் நடந்து வருகையில், சூரியன் அஸ்தமனமாய் இருளும் சற்றே அதிகரித்துக் கொண்டே வந்தது.

அவ் விருளில் அவள் ஒரு பெரிய ஆலமரத்தடியிற் போகும் பாதையிற்போய்க் கொண்டிருக்கும்போது, காலில் பலத்த காயத்தினால் அம் மரத்தடியிற் பிராணாவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்த ஒரு சந்நியாசியின் காலைத் தெரியாமல் மிதித்துவிட்டாள்.

முன்னமே அவர், காலில் உண்டான காயத்தினால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்க, அக் காலை இவளும் மிதித்து விட்டபடியால், அவருக்கு வேதனை யதிகரித்து, "ஓ! ஓ!!" என்று கூக்குரலிட்டுக்கொண் டெழுந்து, கமலாவதியை நோக்கி, "ஆரடி! ஆசைப் புருஷனைத் தூக்கித் தலைமேல் வைத்துக்கொண்டு இறுமாப்புடன் வழியில் போகிறவள்? அப்படிப் போகிறவள் சும்மாபோகாமல், காயத்தினால் அதிக பாதைப் பட்டுக்கொண்டிருக்கும் என் காலை மிதித்து என் துயரத்தை யதிகரிக்கச் செய்துவிட்டுப் போகின்றாய்; ஆனபடியால், நீ பொழுது விடியுமுன் அந்த ஆசை நாயகனை யிழந்து அமங்கலியாய்ப் போகக்கடவாய்!" என்று சாபமிட்டார்.

இதைக்கேட்ட கமலாவதியானவள், "ஓ! ஓ!! மோசம் வந்துவிட்டது; நம்முடைய நிலைமை.

"குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டது" போலவும்,

"பிள்ளைவரங் கேட்கப் போனவிடத்தில்
புருஷனைப் பறிகொடுத்தது" போலவும்

ஆய்விட்டதே! நம்முடைய பர்த்தாவின் மனத்திற்குச் சந்துஷ்டி யுண்டாகும்படியாய் நாம் இவ்வித பிரயாசைகளை யெல்லாம் பட்டுக்கொண்டு வந்தும் கடைசியாய் இப்படிப் பட்ட சாபத்தைப் பெற்றுக்கொள்ள நேர்ந்ததே! இம் மரத்தடியில் யாரோ ஒரு மஹாத்மா உபத்திரவப்பட்டுக் கொண்டிருந்ததைப் பாவியாகிய நான் கவனித்துப் பாராமல் அவருடைய பாதத்தை மிதித்துவிட்டேனே; தெய்வமே! இனி நான் என்ன செய்வேன்? எவ்வளவோ அன்புடன் உபசரித்துவரும் என்னுடைய நாயகனுக்கு இச் சாப விசேஷத்தால் இன்று பொழுது விடியுமுன் மரணம் சம்பவிக்கப் போகிறதல்லவா!" என்று துக்கித்துக்கொண்டே, "நான் இதுவரையில் என் கணவனுடைய ஆக்கினையைக் கடவாமலிருந்ததும், ஆதிமுதல் என்னுள்ளத்தில் பர்த்தாவே தெய்வமென்று சதா எண்ணிக்கொண்டு வந்ததும் நிஜமானால், இன்று இராப்பொழுது விடியாமலே யிருக்கவேண்டும்" என்று கடவுளைப் பலவாறாய்ப் பிரார்த்தித்துக்கொண்டாள்.

இப்படியாகக் கமலாவதியானவள் மனத்தில் எண்ணிய பிரகாரம், இவளுடைய பதிவிரதா தர்மத்தின் மகிமையால் அன்றையதினம் பொழுது விடியாமலே யிருந்துவிட்டது.

இதை உலகத்தில் உள்ள ஜனங்கள் எல்லாரும் கண்டு பயந்து, "இதென்ன விபரீதம் உலகத்துக்கு வந்துவிட்டது! 'யுகாந்த காலத்தில் உலகம் முடிவுக்கு வரும்' என்று முன்னோர் சொல்லிக் கொள்வார்களே! அப்படிப்பட்ட காலம் இதுவாகவே யிருக்கவேண்டும்!" என்று நடுநடுங்கித் தியங்கினார்கள்.

தேவர்களும் "நிலவுலகில் பொழுது விடியாமலே யிருப்பது என்ன ஆச்சரியம்" என்று யாவரும் ஒன்றாய்ச் சேர்

ந்து ஆலோசித்து, "இது ஒரு மகா பதிவிரதையின் சாபத்தினுடைய விளைவு" என்று நிச்சயித்து, அவர்களும் இப் பூவுலகின்கண் இறங்கிவந்து கமலாவதியைப் பார்த்து, "ஓ! பதிவிரதா சிரோமணியே! நீ உன் கற்பின் மகத்துவத்தால் இட்ட சாப விசேஷமானது உலகத்துக்கே முடிவை யுண்டாக்குவதா யிருக்கிறதே! இப்படிப் பொழுது விடியாமலிருப்பதால் உலக வியாபாரம் ஒன்றும் நடப்பதற்கு இல்லையே! இவ் வுலகின்கண்ணுள்ள மனிதர்கள் எல்லோரும் தத்தளிக்கின்றார்களே! இவற்றிற்கென்ன செய்யலாம்" என்றும் கேட்க,

கமலாவதியானவள், தேவர்களைப் பார்த்து, பயபக்தியுடன் வணங்கி நமஸ்கரித்துச் சொல்லுகிறாள்: "கடவுளரே! மிகவும் ஏழையாகிய அடியாள் என்ன செய்வேன்? ஈசன் கட்டளையால் எனக்குப்பர்த்தாவாய் வாய்ந்த இந்த மஹானுபாவர் 'இவ் விராப்பொழுது விடியுமுன் இறக்கவேண்டும்' என்று அதோ! ஆலமரத்தினடியில் எழுந்தருளியிருக்கும் மஹாத்மாவின் சாபம் நேரிட்டிருக்கிறதே! அதற்காக அடியாள் பயந்து, 'இப்படிப் பொழுது விடியாமலே யிருக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக்கொண்டேன்." என்பதாய் அதிக விநயத்துடன் விண்ணப்பஞ் செய்துகொண்டாள்.

இவைகளையெல்லாம் தேவர்கள் கேட்டு மனமகிழ்ந்து சொல்லுகிறார்கள்: "ஓ! கமலாவதி யம்மையே! இம் மண்ணுலகத்தில் உன்னுடைய பதிவிரதா தர்மத்துக்குச் சமானமானது வேறென்ன விருக்கிறது?

[காசிகாண்டம்]

"நண்ணு கற்புடை நங்கையர் சீரடி
மண்ணின் எவ்விடந் தோயினு மற்றது
எண்ணு கின்ற தலங்கள் எவற்றிலும்
புண்ணிய யத்தல மேன்று புகல்வரால்."

என்பதில், "கற்போடுகூடிய ஸ்திரீகளுடைய பாதங்கள் பூமியில் எந்த விடத்திற் பட்டாலும், அப்படிப்பட்ட இடங்களை மற்றெல்லாப் புண்ணிய ஸ்தலங்களைவிட உயர்வானவைக

ளாகும்" என்று சொல்லியிருப்பது, தாயே! உன்னைப்போலொத்த மாதுசிரோமணிக்கே சொல்ல வேண்டுவதாயிருக்கின்றது," என்று பலவாருய்க் கமலாவதியின் கற்பை வியந்து கொண்டாடி, அத் துறவியின் சாபம் நீங்கும்படியான மார்க்கமும் தேடிப், பின்பு கமலாவதியின் சாபம்மாறி பொழுது விடியும்படிச் செய்யவேண்டுமென்று அப் பதிவிரதையைக் கேட்டுக்கொண்டார்கள்,

அதின்பிரகாரமே, கமலாவதியானவள், "என்னுடைய மனக்குறை நீங்கிவிட்டபடியால், உடனே பொழுது விடிய வேண்டும்," என்று சொன்ன மாத்திரத்தில் வழக்கப்படி பொழுது விடிந்தது.

இதைக் கண்ட தேவர்கள் பூமாரி சொரிந்தார்கள். உடனே அப் பதிவிரதையின் புருஷனுக்குக் குஷ்டரோகமும் நீங்கிக், கோடி சூரியப்பிரகாசமான திவ்விய தேகமுண்டாய், நீடூழிகாலம் சகல சம்பத்துடன் வாழ்ந்திருக்கும்படியாகவும் தேவர்கள் ஆசீர்வதித்து மறைந்து போனுர்கள்,

பிறகு இச் சதிபதிக ளிருவரும் இம்மைக்குரிய சகல போக பாக்கியங்களையும் அனுபவித்துப், பிற்காலத்தில் மோட்ச சாம்பிராச்சியத்தையும் அடைந்தார்கள்.

ஆகையால், பெண்களே! கற்பின் மகிமை யிப்படிப் பட்டதென்று மேற் சொன்னவைகளால் நீங்கள் நன்றுப்க் கவனித்தறிந்து நடக்கவேண்டும்.

## 22-ம் பாடம்

## கற்பு (தொடர்ச்சி)

### [குணநிதி யென்பவள் கதை]

**உ**த்தரதேசத்தை யடுத்த மணமதியென்னும் நகரத்தில் குணநிதி யென்னும் ஓர் இராஜ கன்னிகை யிருந்தாள். இவள் மகா ரூபசௌந்தரியவதியா யிருந்தபடியால், இவளை

அனேக ராஜகுமாரர்கள் மணம்புரிய வேண்டுமென்று அபேட்சித்திருந்தார்கள். அவர்களுக்குள் வனபதி யென்னும் அரசன், 'அவளை யெப்படியாவது மனைவியாக்கிக் கொள்ளவேண்டும்' என்று, வெகுநாளாய் அநேக பிரயத்தனங்களைச் செய்துகொண்டு வந்தான். இப்படியிருக்கக் கடைசியாய்க் குணநிதியின் தகப்பன் தன் பந்துவர்க்கத்திற் சேர்ந்த வேறொரு இராஜனுடைய குமாரனாகிய தனபதி யென்பவனுடைய குணாதிசயங்களைக் கேள்வியுற்றுத், தன் குமாரத்திக்குத் தக்க மணவாளன் அவனே யென்று நிச்சயித்துக், குணநிதியை அவனுக்குக் கலியாணம் செய்து கொடுத்துவிட்டான்.

இச் செய்தியைக் கேட்ட வனபதி யரசன் அதிக மன வருத்தமடைந்து, "ஓ! ஓ!! நாம் குணநிதியைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று அநேக நாளாய் பகீரதப் பிரயத்தனங்களெல்லாம் செய்துகொண்டு வந்தும்,

"இடித்துப் புடைத்தவளிருக்க
எட்டிப் பார்த்தவள் கொட்டிக்கொண்டு போனாள்."

என்னுங் கதையின்படி, தனபதியென்பவன் யாதொரு பிரயத்தனமு மில்லாமலே அவளை மனைவியாக்கிக் கொண்டானல்லவா!' என்று, குரூரமாகிய எண்ணத்தோடே, இதற்கு ஏதாகிலும் தகுந்த சூழ்ச்சி தேடிக் குணநிதியை யெப்படியாவது தன் சுவாதீனப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று துராலோசனை செய்துகொண்டே யிருந்தான்.

இப்படியிருக்க இங்கே குணநிதிக்கு விவாகமான பிற்பாடு, அவள் தன் கணவனுடைய வார்த்தைக்குக் குறுக்கிட்டுப் பேசாமலும், அவனுடைய கட்டளைகளை மீறாமலும், தன்னுடைய கற்பைக் காத்துக்கொண்டு, மிகவும் அடக்கத்துடன் நடந்து வந்தாள்.

இவளுடைய நன்னடைக்கையைக் கேள்விப்பட்ட அந் நகரத்துப் பிரஜைகளெல்லாரும் இவளை, "மகா பதிவிரதை" என்றும், "நம்முடைய அரசனுக்கு இவள் மனைவி

யாய் வாய்த்தது இந் நாட்டிலுள்ளோர் செய்த தவப்பயன்' என்றும், பலவாறாய்ப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

இவ்விதமாய்த் தனபதியும் குணநிதியும் மிகவும் அந்நியோந்நியமாய் வாழ்ந்துகொண்டு வருங்காலத்தில், முன்னால் மனதிற் குரூர எண்ணம் வைத்துக்கொண்டிருந்ததாய்ச் சொல்லப்பட்டிருந்த வனபதியரசனானவன் தன் பகையைத் தீர்த்துத் தான்செய்திருந்த உத்தேசத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகத் திரண்ட சேனைகளைச் சேர்த்துக்கொண்டு, தனபதிராஜனுடைய தேசத்தின்மீது படையெடுத்து, அவனோடு பலமான யுத்தஞ்செய்து ஜெயித்து, அவனையும் அவன் மனைவியாகிய குணநிதியையும் சிறைப்படுத்தித் தன் இராச்சியத்திற்குக் கொண்டுபோய்க் காவலில் வைத்துக்கொண்டான்.

அவ்வாறு இவர்க ளிருவரையும் சிறைப்படுத்தி வனபதியரசனுடைய பட்டணத்து வீதியிற் கொண்டுவரும்போது, இவர்களைப் பார்த்த ஜனங்களெல்லாரும் கண்களில் ஜலம் ஆறாய்ப் பெருக அழுதுகொண்டு,

"ஐயோ! இவர்களைப் பார்த்தால் இரதியும் மன்மதனும் போல் இருக்கின்றார்களே! இந்த ராஜஸ்திரீ முகத்தைப் பார்த்தால் இலட்சுமியைப்போலவும் இவளால் தான் இவ்வுலகத்தில் மழை பெய்கிறதுபோலவும் தோன்றுகின்றதே! இப்படிப்பட்ட புண்ணியவதியை நம்முடைய கொடுங்கோலரசன் எப்படி மனம் வந்து சிறைப்படுத்தினான்? இந்த ராஜஸ்திரீயின் விதிவசம் இப்படியும் இருக்குமா?

"நாட்டை ஆளப் பெண் பிறந்தாலும்
போட்ட புள்ளி போகாது."

என்று சொல்லுவதும் சரியாயிருக்கிறதே" என்று நானாவிதங்களா யிரங்கிப் புலம்பினார்கள்.

## 23-ம் பாடம்

## கற்பு (தொடர்ச்சி)

### [குணநிதி யென்பவள் கதை]

இவ்விதமாய்க் குணநிதியையும் அவள் கணவனையும் தன் நகரத்துக்குக் கொண்டுவந்து சிறையில் வைத்துச் சில நாள் சென்ற பிற்பாடு, வனபதியானவன் தன் நெடுநாளைய கோறிக்கையை யீடேற்றிக்கொள்ளக் கருதி, ஒருநாள் குணநிதியை வரவழைத்து எதிரில் நிறுத்திக்கொண்டு சொல்லுகிறான்:—

"ஓ! குணநிதி! உன்னுடைய அழகுக்காகவும் குணத்திற்காகவும் இச்சித்து, உன்னைக்கலியாணம் செய்துகொள்வதற்காக ஆதியில் நான் செய்த பிரயத்தனங்களுக்குக் கணக்கில்லை. இவ்வளவு பிரயத்தனங்களை நான் செய்தும், என்னுடைய புஜபலபராக்கிரமத்தையும், சௌரியத்தையும், அழகையும், செல்வத்தையும் எண்ணிப் பாராமல், அறிவில்லாத மூடனாகிய உன் தந்தை, சுவல்ப இராச்சியத்தையாளப்பட்டவனாகிய தனபதி யென்பவனுக்கு,

"நெய்யை யுருக்கி நிலத்தில் ஊற்றினது" போல்,

உன்னை மிகவும் அருமையாய் வளர்த்து, அவனுக்குக் கலியாணம் செய்து கொடுத்துவிட்டான், இப்போது உன் கணவனுக்கிருந்த அந்த சுவல்ப இராச்சியமும் பராதீனமாய், அவனும், அவனுடைய மனைவியாகிய நீயும், என்னுடைய காவலுக் குள்ளாய்விட்டீர்கள்; நீ எனக்கு மனைவியாக வேண்டியவளாயிருக்க, வேறொருவனுக்கு மனைவியானதைக் கடவுள் பொறுக்காமல், உன்னை இப்போது என்னிடத்திற்குக் கொண்டுவந்து சேர்த்துவிட்டார்; இனி நாமிருவரும் சந்தோஷமாய்க் கூடி வாழலாம்; இன்று முதல் உனக்கு யாதொரு குறையுமில்லை; நான் உன்னையே என்னுடைய பட்ட ஸ்திரீயாக்கிக் கொள்ளுகிறேன்; உன்னு

டைய அழகுக்குத் தகுந்த நாயகனாகிய என்னை இப்போது கடவுள் உனக்குக் கூட்டிவைத்தார். நான் கடவுளை வெகு நாளாய்ப் பிரார்த்தித்து வந்தபடி இப்போது என்னிஷ்டத்தையும் நிறைவேறும்படி அநுக்கிரகித்தார்; கடவுள் இருக்கிறா ரென்பதற்கு இதுவே போதுமான திருஷ்டாந்தமாய் விட்டது! ஓ! அழகில் மிகுந்த குணநிதி! இப்போது என்ன சொல்கிறாய்?"

என்று பலபல விதங்களாய்த் தன் மீது குணநிதிக்கு விருப்ப முண்டாகும்படிக்கு வனபதியானவன் நயமான வார்த்தைகளாற் பேசினான்.

இவைகளையெல்லாங் கேட்ட குணநிதிக்குச் 'செவியில் நாராசம் காய்ச்சி விட்டதைப்போல்' சொல்லி முடியாத துயர முண்டாய், வனபதியைப் பார்த்துச் சொல்லுகிறாள்: "அடா! பாபி சண்டாளா! நீ தேசத்தை யாளப்பட்ட ராஜனாயிருந்தும் பரதார கவனஞ் செய்யத் துணிந்தாயே! அதிலும், சிறைப்பட்டவர்களை யிவ்விதமாய் நடத்தும்படி எந்தத் தரும சாஸ்திரத்திற் சொல்லியிருக்கிறது? பூர்வத்தில் இராமனுடைய பத்தினியாகிய சீதையை இச்சித்த இராவணன் பட்ட பாடுகளை நீ கேட்டதில்லையா?

"புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமா?"

என் பிராணன் போவதாயிருந்தாலும், 'என் பர்த்தாவே தெய்வம்' என்றென்னும் என்னுடைய கற்பின் நெறியில் அணுவளவாகிலும் நான் தவறமாட்டேனென்று நீ உறுதியாய் நினை.

"நெருப்பின்பேரில் ஈ மொய்க்குமா?"
"கல்தூணைச் செல் அரிக்குமா?"

இப்படிச் செய்யச்சொல்லி உனக்குக் கற்பித்ததாரடா? துரோகி!

"கெடுவான் கேடு நினைப்பான்"
"விநாசகாலே விபரீத புத்தி"

என்பது போல உனக்கு முடிவு சீக்கிரத்தில் வந்துவிட்டது,'' என்று குணநிதியானவள் மகா உக்கிரத்துடன் சொன்னாள்.

இவ்வளவோடே நிற்காமல் மனக்கொதிப்பினால் பின்னுஞ் சொல்லுகிறாள்: "அடா தோஷி! என்னோடு இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசினதைப் பார்க்கிலும் என்னைக் கொன்றுவிட்டிருக்கலாமே! மேலும், காமப்பேய் பிடித்த நாய்கள்,—

[நீதிநெறி விளக்கம்: ௭௮-ம் செய்யுள்]

"கொலையஞ்சார்; பொய்ந் நாணார்; மானமும் ஓம்பார்;
களவொன்றோ ஏனையவும் செய்வார்;—பழியோடு
பாவமிஃ தென்னார்; பிறிதுமற் றென்செய்வார்;
காமங் கதுவப்பட் டார்."

என்று சொல்லியிருக்கிறபடி,

(க) கொலைசெய்ய அஞ்சமாட்டார்கள்;
(உ) பொய் சொல்லக் கூசார்கள்;
(ந) மானத்தைக் காப்பாற்றிக்கொள்ளமாட்டார்கள்;
(ச) அவர்களுக்குப் பழிபாவமென்பது கிடையவே கிடையாது''

என்று, தேகந் துடிக்கக் கூவிச்சொன்னாள். இதையங்கே சமீபத்தில் நின்று கேட்டவர்களெல்லாம் நடுநடுங்கிப் பயந்து, "அந்த அரசனுக்கு சீக்கிரத்தில் ஏதோ கேடு வரப் போகின்றது; பத்தினிவாக்குப் பலிக்காமற்போகாது;

"எளியாரை வலியா ரடித்தால்
வலியாரைத் தெய்வம் அடிக்கும்."

என்பது பொய்யாது'' என்று மிகுந்த பரிதாபத்துடன் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள்.

குணநிதியின் வார்த்தைகளைக் கேட்ட வனபதியும்,

"உளையி லழுந்திய கடா"வைப்போல்,

ஒன்றும் செய்யத் தோன்ருமல் சற்றுநேரம் மயங்கி, "இவளுடைய புருஷனை உயிரோடு நாம் வைத்திருக்கும் வரையில் இவள் நம்முடைய சுவாதீனத்திற்கு வரமாட்டாள்' என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு, குணநிதியையும் அவள் புருஷனையும் பிரத்தியேகப்படுத்தி, அன்றுமுதல் அவர்களை வெவ்வேருன காவற்சாலைகளில் வைக்கும்படியாய்க் காவற்சாலைகளின் அதிகாரிகளுக்கு உத்திரவு செய்துவிட்டான்.

இவ்வாறு நடந்த வர்த்தமானங்களைக் கேட்ட வனபதி யரசனுடைய முதல் மந்திரியாகிய மதிநேசன் என்பவன், "ஓ! ஓ!! நம்முடைய அரசனுக்கு ஏதோ கெடுதி வந்துவிட்டது," என்று ஓடிவந்து, அரசனை வணங்கிச் சொல்லுகிருன்:—

"ஐயா! வேந்தனே! இப்போது தேவரீர் அந்த மஹா பதிவிரதையாகிய குணநிதியம்மையை யிழிவாய் நடத்துவது ராஜ தர்மமல்ல; உத்தமர்களுடைய மனதை வருத்துவது உலகத்தில் உள்ள எல்லா மனிதர்களுக்கும் அடாத செய்கையாச்சுதே! அப்படிப்பட்ட அதர்மமான காரியத்தைத் தம்மைப்போன்ற அரசர் செய்யலாமா? மேலும்,—

[நீதிவெண்பா: கூச-ம் செய்யுள்]

"பொன்னும், கரும்பும், புகழ்பாலும், சந்தனமும்
சின்னம் படவருத்தஞ் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்றும்; நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து."

என்றபடிக்கு, சுவர்ணத்தையும், கருப்பஞ்சாற்றையும் பாலையும், எவ்வளவு காய்ச்சினுலும் அவற்றின் சுபாவங் கெடாமல் முன்னிலும் அவைகள் மேன்மைப்படும்;

சந்தனத்தை அதிகமாய் அரைத்தபோதிலும், அதன் வாசனை சிறிதேனும் குறையாமல் மிகுந்த வாசனையைக் கொடுக்கும்.

அதைப்போல், உத்தம ஸ்திரீகள் எவ்வித துன்பமடைந்த காலத்திலும், ஐயோ! தங்களுடைய பதிவிரதா தர்மத்திலிருந்து அணுவளவாகிலும் தவறமாட்டார்களே! ஆகையால், தாங்கள் கொண்ட எண்ணத்தை விட்டுவிட்டால் தங்களுக்கு யாதொரு குறையும் உண்டாகமாட்டாது.

இதுவுமன்றி,—

[நாலடியார்: ௯-ம் அதிகாரம் - பிறர்மனை நய்வாமை - ௨-ம் செய்யுள்.]

"அறம், புகழ், கேண்மை, பெருமை இந்நான்கும்
பிறன் தாரம் நச்சுவார்ச் சேரா—பிறன்தார
நச்சுவார்ச் சேரும்: பகை பழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள்."

[திருக்குறள்: ௧௫-ம் அதி.-பிறனில் விழையாமை.-௬-ம் செய்யுள்.]

"பகை பாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்."

என்று சொல்லியிருக்கிற பிரகாரம், "பிறனுடைய மனையாளை யிச்சிப்பவருக்குத் தருமம், கீர்த்தி, உறவு, மேன்மை ஆகிய இவைகள் அழிந்து; பகை, நிந்தனை, பாவம், அச்சம் ஆகிய இந்நான்கும் உண்டாகும்." மேலும்,—

[விவேக சிந்தாமணி: க-ம் பாகம்.-௬௭-ம் செய்யுள்]

"காமமே குலத்தினையு நலத்தினையுங் கெடுக்கவந்த
　　களங்க மாகும்;
காமமே தரித்திரங்க ளனைத்தினையும் புகட்டிவைக்குங்
　　கடார மாகும்;
காமமே பரகதிக்குச் செல்லாமல் வழியடைக்குங்
　　கபாட மாகும்;
காமமே யனைவரையும் பகையாக்கிக் கழுத்தரியுங்
　　கத்தி யாமே."

என்றபடி,

(௧) காமமானது ஒருவனுடைய குலத்தையும், நலத்தையும் கெடுக்கும் விஷமாயிருக்கிறது;

(உ) இதனால் அவனுக்குச் செல்வங்க ளழிந்து, எல்லாத் தரித்திரங்களும் உண்டாகின்றன;

(ங) இதுவுமல்லாமல் அது நற்கதியை அடையவொட்டாமல் அவனை நரகத்தில் தள்ளும்;

(ச) பந்து மித்திரர் முதலான யாவருக்கும் பகையையுண்டாக்கிக் கடைசியாய் மரணத்தையும் உண்டாக்கும்.” மேலும்,—

[திருக்குறள்: நகூ-ம் அதி.—இறைமாட்சி.—ச-ம் செய்யுள்]

“ அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு. ”

என்றபடி, “ தர்ம சாஸ்திரங்களில் தவிர்க்கும்படியாய்ச் சொல்லியிருக்கும் கொலை, களவு, காமம் முதலிய அதர்மங்களைச் செய்யாமலும், அப்படிப்பட்டவைகள் தன்னாட்டில் நடக்காமலும், பாதுகாக்கவேண்டுவது இராஜ தர்மம்” என்று சாஸ்திரங்களிற் கூறப்பட்டிருக்கிறதே! அப்படியிருக்க, அவற்றிற்கு முற்றும் விரோதமான இப் பாதார கவனத்தைத் தாங்களே செய்ய முயன்றது, எவ்வளவும் தகாது; ஆனபடியால்,

[வெற்றிவேற்கை: அ-ம் சூத்திரம்]

“ மந்திரிக்கு அழகு வரும்பொரு ளுரைத்தல். ”

என்கிற விதிப்படிக்கு, அடியேன் இனிச் சம்பவிக்கப் போகிற காரியத்தை இப்போதே தங்களிடம் விண்ணப்பம் செய்துகொண்டேன்; இனித் தங்கள் சித்தம் என் பாக்கியம்” என்று, மந்திரியானவன் பலவித நியாயங்களையும் சாஸ்திர விதிகளையும் எடுத்துக் காட்டினான்.

மதிநேசன், வனபதியரசனுக்குப் புத்தியுண்டாகும்படியாக இவ்வாறு சாஸ்திரங்களைப் போதித்தும்,

“ கேடுமேதி கண்ணுக்குத் தோன்றாது. ”

என்றபடி, இவற்றிற்கு அவன் சற்றுவது செவிகொடுக்கவேயில்லை.

## கற்பு (தொடர்ச்சி)

### [குணநிதி யென்பவள் கதை]

மேற்கூறிய விதமாய் அரசன் பிறப்பித்த ஆக்கினையின் பிரகாரம் காவலாளிகள் குணநிதியையும், தனபதியரசனை யும் வெவ்வேறான காவற்சாலைகளில் வைத்துவிட்ட பிற்பாடு குணநிதியானவள் துக்கசாகரத்தில் முழுகினவளாய்த், தன் கணவனுக்கு 'வனபதிராஜன் வேறென்ன தீங்குகள் செய்யப் போகிறானோ' என்று இரவும் பகலும் மீளாத் துயரங் கொண்டவளாய், 'அவருக்கு யாதொரு தீங்கும் நேரிடா மல் காக்கவேண்டும்' என்று, தன் இஷ்ட தெய்வங்களை உடைவிடாமல் தியானித்துக்கொண்டே யிருந்தாள்.

தன்பதியும், அதேவிதமாய்த் தன்னுடைய மனைவிக்கு 'வனபதி யென்ன கெடுதிகள் செய்யப்போகிறானோ' என்று அதிக கிலேசத்துடன் நாள் கழித்துக்கொண்டுவந்தான்,

இப்படியிருக்க, வனபதிராஜனுடைய மனைவியாகிய தாரை யென்பவள், தனபதியினுடைய அழகைப் பார்த்து, அவன்மீது மோகங் கொண்டு, ஒருநாளிரவில் காவற் சேவ கனைப் போல் வேஷந் தரித்துக்கொண்டு, மதிற் சுவரேறிக் குதித்துத், தனபதியிருந்த காவலறைக்குள் யாவருக்குந் தெரியாமல் நுழைந்தாள்.

தாரையானவள் இவ்விதமாய் உள்ளே நுழைந்து, நித் திரை யில்லாமற் படுத்துக்கொண்டிருக்கும் தனபதி யரசன் சமீபத்திற் போய்த், தான் இன்னாளென்றும், தான் இவ் வளவு பிரயத்தனங்களோடு வந்த காரியம் இன்னதென்றும், குறிப்பாய் வெளிப்படுத்தினாள்.

இதைக்கேட்டவுடன் தனபதி யரசன் திடுக்கிட்டுத், தாரையை நோக்கித், 'தாயே! நீ கொண்ட எண்ணம் மஹா கொடிது; ஸ்திரீகள் தம் சொந்த நாயகரை விட்டுப் பர புருஷ

ருடைய அழகைப் பார்த்து மோகிப்பது, உலகத்தில் எல்லா வற்றிலும் மகா பாதகம் என்றும்,—

[காசிகாண்டம்]

"ஏதி லான்தன் எழில்கண் டுவப்பவர்
பேது மெய்துழல் பேயுரு வெய்துவார்."

என்கிற சாஸ்திர விதிப்படிக்கு, "அப்படிச் செய்யும் பெண்கள் பிசாசின் ரூபத்தை யடைவார்கள்." பின்னும்,—

[நீதிநெறிவிளக்கம்: அ௯-ம் செய்யுள்]

"முறையும், குடிமையும், பான்மையு நோக்கார்;
நிறையு நெறிநோனும் பேணார்;—பிறிதுமோரு
பேற்றிமை பேதமைக் குண்டே? பெரும்பாவம்
கற்பில் மகளிர் பிறப்பு."

என்றபடி, பரபுருஷரை யிச்சிக்கும் சிந்தையுள்ள துஷ்டப் பெண்கள்:

(க) "பந்து முறைமையையும், தாம் பிறந்த குடியின் பெருமையையும் பார்க்கமாட்டார்கள்;

(உ) தங்கள் மனதைப் பிறர்பாற் செல்லாமல் காக்கவு மாட்டார்கள்;

(௩) ஸ்திரீகளுக்கு இருக்கவேண்டிய நாணமென்பதும் அவர்களுக்கு இராது;

(௪) அவர்களுக்கு வேறெவ்விதமான நல்மாவது உண்டா? இல்லையே?

(௫) ஆகையால், கற்பில்லாத ஸ்திரீகளுடைய பிறப் பானது மஹா பாவமானதா யிருக்கிறது,"

கற்பு நெறியிலிருந்து தவறும் பெண்களுக்கு இவ்வாறு மஹா பாதகங்கள் உண்டாவதாயிருப்பதால், அம்மணீ! உன்னுடைய தகாத எண்ணத்தை விட்டுவிடு. மேலும், இந் தச் செய்திகளை உன் கணவன் அறிந்தால், நம் மிருவரையும் சிரச்சேதம் செய்துவிடுவானே! ஆகையால், காவலாளிகள்

விழித்துக்கொள்வதற்கு முன், தயவுசெய்து நீ வெளியில் போய்விடுவாயம்மா!" என்று, தனபதியரசன் அநேக விதமான நீதிகளையும் எடுத்துக் காட்டி, மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டான்.

இவைகளை யெல்லாங் கேட்ட தாரையானவள், தான் வந்த காரியம் சித்திக்கவில்லையே யென்று மஹா துக்கங் கொண்டவளாய்,

"அணிலேறவிட்ட நாயைப்" போல்

பதில் யாதொன்றும் சொல்லத் தோன்றாமல் விழித்துக் கொண்டு, வாசற்படியில் தான் வந்த வழியைப் பார்த்து நின்றுகொண்டிருந்தாள்.

இவளுடைய நிலைமை யிப்படியிருக்க, இவளுடைய கணவனாகிய வனபதிராஜன், தான் முன்னால் கொண்டிருந்த எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டுத் 'தனபதியை ஒருவரு மறியாமற் கொன்று போடவேண்டும்' என்று, ஒரு வாளாயுதத்தைக் கையி லெடுத்துக்கொண்டு, ஊர்ச் சந்தடி யடங்கின பிற்பாடு மெதுவாய் அடிமேல் அடி வைத்து நுழைந்தான்.

இப்படியவன் நுழைந்தவுடன், வாசற்படியிற் புருஷ வேஷத்துடன் ஏக்கம் பிடித்து நின்றுகொண்டிருந்த தாரையைப் பார்த்து, 'இவன்தான் தனபதி' என்று நினைத்து, வெகு தீவரமாய்த் தன் கையிலிருந்த வாளாயுதத்தினால் வெட்டிப்போட்டான்.

இதனால் உண்டான அரவத்தினால், நித்திரையிலிருந்து விழித்துப் பார்த்த காவற் சேவகன், கீழே யிரு துண்டங்களாய் விழுந்திருக்கும் பிரேதத்தையும், அதன் பக்கத்தில் வாளாயுதத்துடன் நின்றுகொண்டிருக்கும் மனிதனையும் பார்த்து,

"ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு."

என்பதைப்போல், நிதானியாமல், 'இவன்தான் கொலையாளியாயிருப்பான்' என்றும், இவனை உடனே கொல்ல

விட்டால் தனக்கு அரசனுல் என்ன தண்டனை விதிக்கப் படுமோ என்றும் பயந்து, உறையிலிருந்த தன் கத்தியை யுருவி வனபதி ராஜனை யிரு துண்டங்களாய் வெட்டிக் கீழே வீழ்த்தினன்.

இவ்விதமாய்ச் சிறைச்சாலையில் உண்டான சந்தடியினல், மற்றக் காவலாளிகளெல்லாம் விழித்துக்கொண்டு, ஒன்ருய்ச் சேர்ந்து, விளக்கைக் கொண்டுவந்து நிதானித்துப் பார்க்கும்போது, தங்கள் அரசனும், அவன் மனைவியும் வெட்டுண்டு இறந்து கிடப்பதை யறிந்து, நடுநடுங்கி, இந்த வர்த்தமானங்களை உடனே மந்திரி பிரதானிகளுக்கு அறிக்கையிட்டார்கள்.

அவர்களும் அதைச்கேட்டுத் தாமதமின்றி அங்கே ஓடி வந்து பார்த்து, நடந்தவைகளைத் தீர விசாரித்து, உண்மையை யறிந்து, "நம்முடைய அரசன் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்தது" என்று மகா விசனமும், ஆச்சரியமும் அடைந்து, "இவைகளெல்லாம் மஹா பதிவிரதையான குணநிதி யம்மை யானவள் அன்றையதினம் மனம் நொந்து கூறின வார்த்தைகளின் பலன்" என்றும், "அம் மாது சிரோமணியை யிச் சண்டாள அரசன் இச்சித்ததினுல் வந்த கேடுகள்" என்றும் தீர்மானித்தார்கள்.

இவற்ருேடே யிந்தச் சந்தர்ப்பத்தில் தன் புருஷனுக்குத் துரோகஞ் செய்து, பாபுருஷனைத் தேடிவந்த வனபதி ராஜனுடைய மனைவியாகிய தாரைக்கு உண்டான முடிவையும் பார்த்து அதிசயித்து, "இவைகளெல்லாம் கடவுளுடைய கட்டளையின்படி முடிந்துவிட்டது" என்று நிச்சயித்தார்கள்.

இதற்கு மேல் "இராஜாங்கம் நடக்கவேண்டுவது தவக் கப்படும்" என்று மந்திராலோசனைச் சபையாரெல்லாம் கூடி யோசித்துக், காவற்சாலையிலிருந்த குணநிதியையும், தனபதி யரசனையும் விடுவித்துப் இந்த அரசனுக்கே இராச்சிய பட்டாபிஷேகம் செய்துவிட்டார்கள்.

அதின் பிரகாரம் தனபதியும் அரசாட்சியைக் கைக்கொண்டு, மனுநீதி சற்றுவது வழுவாமல் அனேக அரசர்கள் தனக்குப் பகுதிகட்டும்படியாகக், கற்புநிலை யெக்காலத்தும் தவறாத தன்னுடைய பத்தினியாகிய குணநிதியுடன் புத்திரபாக்கியங்களைப் பெற்றுப், பூரணயுளோடு அரசாண்டு வந்தான்.

இந்தக் கதையினால் குணநிதிக்கு முதலில் உண்டான ஆபத்துக்களையும், அப்படிப்பட்ட காலத்திலும் மனவுறுதியினால் தன் பதிவிரதா தர்மத்தைக் காப்பாற்றிக்கொண்டு, தன் கணவனுக்கும் தனக்கும் உலகத்தில் நீங்காத கீர்த்தி சம்பாதித்து வைத்த வழிகளையும் பெண்கள் கவனித்து நடக்கவேண்டும்.

25-ம் பாடம்

## சத்திமுத்தப் புலவரும் கற்புள்ள அவர் மனைவியும்

இப் பரதகண்டத்தில், தமிழ்ப்பாஷை வழங்குந் தொண்டை நாட்டில், சத்திமுத்தமென்னும் ஓர் ஊருண்டு. அவ்வூரில் கச்சியப்பன் என்னும் பெயரையுடைய ஒருவர் இளமைமுதல் தமிழென்னும் கடலை நீந்துவதற்குரிய தெப்பங்களாகிய நூல்களை யாராய்ச்சி செய்வதையே தொழிலாய்க் கொண்டு, நாளுக்குநாள் கல்வி மிகுதியும், அதனால் நாமகளாகிய சரஸ்வதியின் அருள் நோக்கும் பெற்றவராய், வாழ்ந்து வந்தார். பிற்காலத்தில் இதனால் இவருக்குச் சத்திமுத்தப் புலவர் என்னும் புகழ்ப்பெய ருண்டாயிற்று.

இவர் தன் குலத்திற் பிறந்த அழகும் நல்லொழுக்கமும் அமைந்த ஓர் கன்னிகையை மணம் புரிந்து வாழ்ந்து வரும் நாளில், இவர் கல்வி முயற்சியிலேயே காலங் கழித்துக்கொண்டு பொருள் தேடும் உபாயங்களை மறந்திருந்தமையால், தமது முன்னோர் சம்பாதித்துவைத்த ஆஸ்திக

ளெல்லாம் நாளுக்குநாள் குறைந்து, கடைசியாய் வறுமை மேலிட்டுக்கொண்டே வந்தது.

இவ்வாறு மேலிட்ட வறுமைக்காக இவரது மனைவி யானவள் சற்றேனும் மனஞ்சோராமல்,

"கல்லா வோருவன் தோள் சேர்தலினும்
கற்றவனோடு அல்லற்படுதே லழகன்றோ."

என்றபடி, தன் கணவனுடைய கல்வியையே பொருளாய் மதித்து, அவ் வூரிலுள்ள கனவான்களுடைய வீடுகளுக்குத் தினந்தோறும் போய், நெல்லைக் குத்திக் கொடுத்து, அதற்காக அவர்கள் கொடுக்கும் கூலியரிசியை வாங்கிக்கொண்டு வந்து சமைத்துத், தன் பத்தாவுக்குப் படைத்துத், தக்க உபசாரங்களுடன் அவரை யுண்ணச் செய்து, தானும் உண்டு, இவ்வாறே புலவருக்கு வறுமையா லுண்டாகுந் துன்பங்களைக் காட்டாமல் சுகமாய்க் காலத்தைக் கழித்துக் கொண்டு வந்தாள். அவர், "உலகவின்பங்க ளெல்லாவற்றி லும் கல்வியாராய்ச்சியினா லுண்டாகும் இன்பமே பெரிது" என்று அதிலேயே தன் சிந்தையை முழுதும் நாட்டியிருந் தார்.

இவ்வளவு மனவுறுதியோடும், பதிபக்தியோடும் அவருடைய மனைவியானவள் தன் கணவனுக்கு எவ்வித மன வருத்தமும் உண்டாகாமற் பாதுகாத்துவரும் நாளில், ஒரு நாள் அந்த இலட்சுமிக்கு சுரநோயுண்டாய், தேகவலிமை குறைந்தும், அதைச் சிந்தியாமல் தன் கணவன் பசியால் வருந்தப்போகிறா ரென்று, அன்றும் வழக்கப்படி நெல்லைக் குத்திக் கொடுத்தற்குக் கூலியாய்க் கிடைத்த கொஞ்சம் அரிசியைச் சமைத்தானவுடன் உப்பில்லாமையால், அதைத் தன் பத்தாவுக்கு எப்படி யிடுகிறதென்று மனக்கவலை மிகுந்தபடியாலும், நோயினாலுண்டான தேக மெலிவாலும், மூர்ச்சையடைந்து தரையில் விழுந்துவிட்டாள்.

இதை யறிந்த புலவர், திடுக்கிட்டு ஓடிவந்து, தன் மனைவியை வாரியெடுத்து மார்போடணைத்துப், "பெண்ணே!

உனக்கு யாதுகாரணத்தா லிவ்வித களைப்புண்டாயிற்று?" என்று வினவினர்.

அதற்கந்தக் கற்பரசியானவள், "பிராண நாதா! சில தினங்களாய் எனக்குண்டாயிருந்த சுரநோயின் களைப்பே யன்றி, வேறொன்றுமல்ல" என்றாள்.

அவள் இவ்வாறு சொல்லியும் நம்பாமல், தான் அன்றையதினம் சமையல் வீட்டைப் பார்த்தவுடன் தன் குடித்தன நிலைமை யின்னதென்றும், தன் தேக போஷணைக்காகத் தன் மனைவி தினந்தோறும் படுந் துயரங்களையும் புலவர் குறிப்பா லறிந்து,

[திருக்குறள்: உரு-ம் அதி.—அருளுடைமை—சு-ம் செய்யுள்]

"பொரு ளில்லார்க்கு இவ்வுலக மில்லை."

என்னும் நாயனார் மொழிப்படி, "இனி யில்லறம் நடத்துவதற்கு நாம் பொருள் தேடாவிடில் நமது உயிர்த்துணையாகிய மனைவியை யிழக்கும்படி நேரிடும்" என்று பயந்து,

"என் ஆசை நாயகியே! நீ எனக்காக இதுவரையில் பட்ட கஷ்டங்களை நிர்ப்பாக்கியனாகிய யான் அறியாமற் போனேனே; இனி நான் உனது துன்பங்களைப் பார்த்துச் சகியேன்; நீயும் 'நமது குடித்தன நிலைமை யிவ்வாறு இருக்கின்றது என்று முன்னமே யெனக்குத் தெரிவிக்காமற் போய்விட்டாயே; கல்வி யாராய்ச்சியில் காலத்தைப் போக்கிக்கொண்டே யிருந்துவிட்டு, நம்முடைய உணவுக்குத் தேவையான பொருளைத் தேடு முயற்சியில் சிறிதும் நான் கவனம் வைக்காமற் போய்விட்டேன்; என்று அபசாரங்களைப் பொறுப்பாயாக!" என்று தன் மனைவிக்குத் தக்க தேறுதல்களைச் சொல்லிவிட்டு,

"மதுரையில் அரசாட்சி செய்யும் நெடுமுடிமாரன் என்னும் பாண்டியராஜன் கல்வியில் மிகுந்தவன்" என்றும் "அவனிடம் போகும் புலவர்களுக்குத் தகுந்த பரிசு கொடுத்து ஆதரிக்கின்றான்" என்றும் தான் முன்னால் கேள்வியுற்றிருந்தபடி யவனிடம் போய்த் தனது கல்வியின் பெருமையைக் காட்டிப் பரிசுபெறலாமென்றும், உடனே புலவர், மதுரையை நோக்கிப் புறப்பட்டார்.

இவ்வாறு சத்திமுத்தத்தை விட்டுப் புறப்பட்ட புலவரானவர், நெடுந்தூரம் வழி நடந்து, மதுரைப் பட்டணத்தை யடைந்து, இரண்டு நாள்வரையில் இராஜதரிசனம் கிடைக்கப் பெறுமையால் மனவருத்தமுற்று, உண்பதற்கு உணவும் உடுப்பதற்கு இடையிலோர் கந்தையன்றி வேறொன்று மில்லாமையால் மனக்கவலையுடன், அன்றிரவு அப் பட்டணத்து இராஜ வீதியிலுள்ள தேரடியில் படுத்துக் கொண்டு, 'நாம் இந்த நிர்ப்பாக்கிய நிலைமையில் அரசனை யெவ்வாறு காணப்போகின்றோம்? நமது மனைவியை நாம இதுவரையில் விட்டுப் பிரிந்தோமில்லையே; இப்போது பிரிய நேரிட்டதற்காக அவள் ஆகாரம் நித்திரையின்றி யெவ்வாறு துயரப்பட்டுக்கொண் டிருக்கின்றாளோ?" என்று, அதிக மனக் கவலையுடன் நித்திரையின்றி விழித்துக்கொண்டிருந்தார்.

அப்போது ஆகாயத்தில் ஓர் ஆண் நாரைப்பட்சியானது தனக்கு நேராய்க் கத்திக்கொண்டே தெற்கேயிருந்து வடக்கே பறந்து போவதைச் சத்தத்தா லறிந்த புலவரானவர், அந் நாரையை நோக்கி,

"நாராய்! நாராய்! செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயுநின் துணைவியும்
தென்றிசைக் குமரியாடி
வடதிசைக்கு ஏகுவீராயின்,
எம்மூர்ச் சத்திமுத்த வாவியுட் டங்கி
நனைசுவர்க் கூரைக் கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்குமென் மனைவியைக் கண்டு,

"எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடையின்றி, வாடையின் மெலிந்து,
கையது கொண்டு மெய்யது போத்திக்,
காலது கொண்டு மேலது தழீஇப்,

பேழையுள்ளிருக்கும் பாம்பெனவுயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம்,' எனுமே."

என்னும் ஓர் இணைக்குறள் அகவற்பாவைச் சொன்னார்.

இதன் பொருள்:—

"சிவந்த கால்களையுடைய ஓ நாரைப்பட்சியே! பழம் படுக்கும் பனையின் கிழங்கைப் பிளந்ததைப்போலவும், பவளத்தைப்போற் சிவந்தும் கூர்மையுள்ள வாயையுமுடைய நாரைப்பட்சியே! நீயும் உன் மனைவியும் தென்திசையிலிருக்கும் கன்னியாகுமரியில் நீராடி வடதிசைக்குத் திரும்பும்போது, சத்திமுத்த மென்னும் எமது ஊரிலுள்ள தடாகத்திற் றங்கி, மழையினால் சுவர் நனையும்படியான துவாரங்களுள்ள மேற்கூரையையுடைய எமது பழைய குடிசையில், 'நமது கணவன் திரும்பி வருகிறாரென்று பல்லிச் சத்தம் எப்போது கேட்போம்?' என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் என் மனைவியைப் பார்த்து,

(க) 'போர்வைக்கு வஸ்திர மில்லாமல் வடகாற்றினால் மெலிந்தும், கைகளால் தேகத்தைப் பொத்திக்கொண்டு, கால்களை மேலே பின்னிக்கொண்டு,

(உ) பெட்டிக்குள்ளிருக்கும் பாம்பைப்போல் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கும் உன் கணவனாகிய இந்த ஏழையைப் பாண்டியராஜன் ஆளப்பட்ட மதுரைப் பட்டண வீதியில் கண்டோம்' என்று சொல்லுவாயாக" என்பதாம்.

இக் கருத்தடங்கிய பாடலை அன்று நடுராத்திரியில் புலவர், நாரையைப் பார்த்துச் சொல்லிக்கொண்டிருந்த சமயத்தில், மாறு வேஷத்துடன் நகரி சோதனைக்காக இராஜ வீதியைச் சுற்றிக்கொண்டு தேரடியின் சமீபத்தில் வந்த பாண்டியராஜன், பாடல் ஆரம்பமுதல் முடிவுவரையில் உற்றுக் கேட்டான்,

இதைக் கேட்ட அரசன் திடுக்கிட்டு,

(க) "ஆ! ஆ!! இதென்ன ஆச்சரியம்!

(உ) சொல்நயம் பொருள்நயம் அமைந்த இவ் வற்புத மான பாடலைப்போல் நாம் இதுவரையில் கேட்டதில்லையே?

(ங) இதைப் பாடிய நாவலருடைய பெருமையை யென்னவென்று சொல்லலாம்.

(ச) இவர் நாமகளுடைய அருள் பெற்றவராயிருக்க வேண்டும்.

(ரு) ஆயினும், இவ்வித கல்விப் பெருமையை யுடைய வருக்கு அப்பாடலில் விவரித்தபடி யுண்டாயிருக்கும் தரித் திர நிலைமையைக் கேட்கச் சகிக்கக் கூடவில்லையே.''

என்று பலவாறு புலவருடைய பெருமையை வியந்து, தன் கருத்தில் சில நாளாய்ப் புதைந்திருந்து அப் பாடலில் வெளிப்பட்ட வோர் உபமானத்திற்காகவும் அதிசயித்தான்.

அதாவது, இவ் வரசன் ஒருநாள் வேட்டைக்குப் போய்க் காட்டிலிருந்து திரும்பும்போது, ஓர் ஏரிக்கரையின் பேரில் குதிரை யேறித் தன் பரிவாரங்களுடன் வருகையில், அவ்வேரிக்கரையில் நீரோரமாய் அலைகளால் வேரின் கீழி ருந்த மண் அலைபட்டு, அடி தெரிய ஓர் பனங்கன்று நிற் பதையும், அதற்குச் சமீபமாக வோர் செங்கால் நாரை யானது அடி பருத்து நீண்டு, திரண்டு, நுனி சிறுத்துச் சிவ ந்து பிளவுபட்ட வாயுடன் நிற்பதையும், இதைப்போலவே அடி பருத்துத் திரண்டு நீண்டு பிளவுபட்டு அப் பனங் கன்றி னடியிலிருக்கும் பனங்கிழங்கையும் பார்த்து, இவ் விரண்டிற்கும் உபமானம் மிகவும் பொருந்தியிருப்பதைத் தன் மனதில் வைத்துக்கொண்டு, சந்தோஷித்துக்கொண்டே அரண்மனை சேர்ந்து, தன் சபையிலுள்ள புலவர்களை யெல் லாம் தருவித்து, "நாரை மூக்குக்கு, எப்பொருளை உபமான மாய்ச் சொல்லலாம்?'' என்று கேட்டான்.

அதற்கு அவ் வித்துவான்களெல்லாம் தமக்குத் தோன் றினபடி ஒவ்வொருவரும் ஒவ்வொரு பொருளை உபமான மாய்ச் சொன்னார்கள்.

அதைக் கேட்ட அரசனுக்குத் தான் ஏரிக்கரையில் அன்று பிரத்தியட்சமாய்க் கண்ட உபமானப் பொருள் ஒருவராலும் வெளிப்படாமையால், தன் மனதிலிருக்கும் பொருளை வெளிப்படுத்துவோர்க்குப் பரிசாக ஆயிரம்பொன் கொடுப்பதாய்ச் சொல்லி, அப் பொன்னை முடிப்பாகக்கட்டி வைத்தான், அன்றுமுதல் 'அவ் வுபமானப் பொருளை வெளிப்படுத்துந் திறமையுடைய நாவலர் நமது நாட்டில் இல்லையே' என்கிற கிலேசத்துடன் எதிர்ப் பார்த்துக்கொண் டிருக்கும்போது, அகஸ்மாத்தாய்,

'பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!'

என்று சத்திமுத்தப் புலவருடைய வாக்கிலிருந்து அவ் வுவமை யடங்கிய பாடல் வெளிப்படக் கேட்டதினால், அரசனுக்கு அளவில்லாத வியப்பும் மனக்களிப்பு முண்டாயிற்று.

இவ்வாறு அரசனுக்குண்டான களிப்பினால் தான் போர்த்துக் கொண்டிருந்த வோர் விலையுயர்ந்த பீதாம்பரத்தை அப் புலவர்மேல் போர்த்துவிட்டு, ஒருவருக்குந் தெரியாமல் திரும்பிப்போய் அரண்மனை சேர்ந்தான்.

இதை யுணர்ந்த புலவர்,

"வருவது தானே வரும்"

என்பது பொய்யாதென்று, நாம் குளிரால் வருந்துவதைப் பார்த்துச் சகியாத யாரோ வொரு தருமகுணசீலன் இவ் வஸ்திரத்தை நமக்குப் போர்த்தினான்" என்று சந்தோஷித்து, 'இன்னும் நமது அன்னையாகிய நாமகளுடைய அருள், எவ்வாறு ஊட்டுவிக்கப் போகிறது பார்ப்போம்' என்றிருந்தார்.

அரசன், அரண்மனைக்குப் போனவுடன், காவலாளிகளைத்தருவித்து, "எனது பீதாம்பரத்தை யாரோ களவாடிக் கொண்டு போனான்; உங்கள் காவலின் திறமை வெகு நேர்த்தியாயிருக்கிறது; உடனே அதைக் கண்டுபிடித்து அக் கள்

வனை என்முன் கொண்டுவராவிட்டால் உங்களைத் தக்கபடி தண்டிப்பேன்'' என்றான்.

"இவ்வளவு காவலைக் கடந்து எனது பள்ளியறையில் வந்து, நான் போர்த்துக் கொண்டிருந்த பீதாம்பரத்தைத் திருடினவன் மஹா சாமர்த்தியனா யிருக்கவேண்டு மாகையால், அவனைக் கண்டுபிடித்து, அடிக்காமலும், திட்டாமலும் கொண்டுவரவேண்டும்'' என்று அரசன் காவலாளிகளுக்குப் பின்னும் கட்டளையிட்டான்.

இவ் ஆக்கினைபின்படி கா லாளிகள் உடனே புறப்பட்டுத், தீவட்டிகளைக் கொண் வீதிதோறும் தேடிக்கொண்டு வருகையில், தேரடியில் அப் பீதாம்பரத்தைப் போர்த்துக்கொண்டு படுத்திருக்கும் புலவரை பார்த்துத், "திருடன் அகப்பட்டான்'' என்று சந்தோஷித்து, அரசன் சொன்ன பிரகாரம் அவரை உபத்திரவப்படுத்தாமல், அவன் முன்பாகக் கொண்டுபோய் நிறுத்தினார்கள்.

அரசன், அவர் முகத்தைக் கண்குளிரப் பார்த்து, அவர் முகத்தில் சரஸ்வதியின் அருள் பிரகாசிப்பதை யறிந்து தன் மனதில் மிகக்களிப்புடன் அவரை நோக்கி, "அட பயலே! நீ யார்? எந்த ஊர்? நீ இவ்வளவு தைரியத்தோடு இவ் வரண்மனையிற் புகுந்து, நான் போர்த்திருந்த விலையுயர்ந்த பீதாம்பரத்தை யெவ்வாறு களவாடினாய்?'' என்று வினவினர்.

இதைக்கேட்ட புலவர், "இதென்ன ஆச்சரியம்; நாம் ஒன்றையும் அறியோமே; 'பீதாம்பரம் கிடைத்தது' என்று சந்தோஷித்திருக்க, இடியிடித்தாற்போல் நேரிட்ட இச் சம்பவங்களுக்கு நாம் என்ன செய்யப்போகிறோம்? இவையெல்லாம் நாமகளுடைய திருவிளையாட்டா யிருக்கவேண்டும்'' என்று, அவளுடைய பாதங்களை மனதில் தியானித்துக்கொண்டே, அரசனைப் பார்த்து,

"வெறும்புற் கையுமரி தாங்கிள்ளை சோருமேன் வீடுவரும்
எறும்புக்கு மாப்பத மில்லை மன்னா!''

என்று பாட ஆரம்பித்தவுடன்,

அரசன் கோபங் கொண்டவனைப்போல் நடித்து, "இவன் பாட்டில் வல்ல கள்வனுயிருக்கின்றான்; இவனை யுடனே சிறைச்சாலையில் ஆறுமாதகாலம் அடைத்துவிடுங் கள்!" என்று ஆக்யாபித்து,

மந்திரியை யழைத்து, "இவர் சரஸ்வதி விலாசம்பெற்ற மஹா வித்துவான்; இவருக்குச் சிறைச்சாலையில் அரசருக் குச் செய்யவேண்டிய உபசாரங்களைச் செய்விக்கவேண்டும்" என்று இரகசியமாய்க் கட்டளையிட் டனுப்பினான்,

மறுநாள் பொழுது விடிந்தவுடன், வேறொரு மந்திரியை யழைத்து, இப் புலவர் சிறையிலிருந்து விடுதலை யாகுமுன், நீ தேவையான திரவியங்களை யெடுத்துக்கொண்டுபோய், தான் அன்று நகரி சோதனை காலத்தில், புலவர் பாடிய பாடலில் கேட்டருந்த சத்திமுத்தமென்னும் ஊருக்குப் போய், இவருடைய வீட்டை எனது அரண்மனையைப் போல் கட்டி, அதில் எனது அரண்மனையிலிருக்கும் தந்த நாற்காலிகள், சப்பிரகூடமஞ்சங்கள், பொற்றட்டு முட்டுகள் இரத்தினக் கம்பளங்கள் முதலான வஸ்துக்களால் அதை யலங்கரித்துப், புலவர் மனைவிக்கு வேண்டிய பட்டு பட்டா டைகளையும்-இரத்தினுபரணங்களையும் - ஏவலாளிகளையும் - தோழியரையும் அமர்த்திவிட்டு, பல்லக்கு-குதிரைகள்-இர தங்கள் முதலான வாகனங்களையும் சேர்ப்பித்து வரும்படி ஆக்கினை செய்தனுப்பினான்,

இங்கே புலவர் சிறைச்சாலைக்குப் போகும்போது, தன் னைவிட்டுப் பிரிந்தமையால் துயரங்கொண்டிருக்கும் தன் மனைவி யெவ்வாறு துக்கித்துக்கொண்டிருக்கிறளோ, நாம் ஆறுமாத காலம் சிறையிலிருந்து விடுபடுமுன் அவள் பிரா ணன் நிற்கப்போகிறதோ' என்று, பலவாறு கவலைப்பட்டுக் கொண்டே அச்சிறைச்சாலையில் நுழைந்தவுடன்,

இவருக்கு ஏவலாளிகள் ஸ்நானம் செய்வித்து, அறு சுவை பதார்த்தங்களோடு கூடிய அன்னத்தைப் படைத்து, இவருக்கு அரசருக்குச் செய்யும் உபசாரங்களைச் செய்து கொண்டு வந்தார்கள்.

இவற்றைக் கண்ட புலவருக்கு, விசனமும் அதிசயமும் மேலிட்டு, நமது அன்னையாகிய கலைமடந்தையின் திருவருளினால் இன்னும் என்னென்ன விளையப்போகிறதோ பார்ப்போம் என்று, அவளைத் தியானித்துக்கொண்டே நாள் கழித்துவந்தார்.

இவ்வாறு ஆறுமாதங் கழிந்தபின்பு, அரசன், "சிறைச்சாலையிலிருக்கும் பீதாம்பரக் கள்வனைக் கொண்டுவாருங்கள்" என்று காவலாளிகளுக்குக் கட்டளையிட, அவர்கள் தக்ஷணம் போய்ப் புலவரைக் கொண்டுவந்து அரசன்முன் நிறுத்தினார்கள்.

அரசன், புலவரைப் பகலில் பார்த்து ஆனந்தித்து, சற்று மரியாதையாய், "நீர் யார்? என் வஸ்திரத்தைக் களவாடின காரணம் யாது?" என்று கடிந்து கேட்டார். அதற்கு விடையாக,—

"வெறும்புற் கையுமரி தாங்கிள்ளை சோருமென் வீடுவரும்
எறும்புக்கு மாப்பத மில்லைமுன் னுளேன் னிருங்கலியால்
குறும்பைத் தவிர்த்த குடிதாங் கியைவந்து கூடியபின்
தெரும்புற்கோள் யானை கவளங்கோள் ளாமல் தேவிட்டி
[யதே."

இப் பாட்டின் பொருள்:—

(க) "எனக்கு இங்கே வருமுன், உப்பில்லாத வெருங்கூழும் கிடைப்பது அரிதாயிருந்தது.

(உ) கிளிபோன்ற எனது மனைவியும் உணவுக்கு மார்க்கமில்லால் சோர்ந்தாள்.

(ங) என் வீடு தேடிவரும் ஒரு சிறிய எறும்புக்குங்கூட என் வீட்டில் மாவாகிலும் கிடையாது.

(ச) என்னைப் பிடித்த சனியனுகிய வறுமையை யோட்டிய அரசனே! உம்மை யடைந்த பின்பு, புல்லைத் தின்னும் யானைகள் அவற்றிற்கு இடும் பச்சரிசிக் கவளத்தை யுட்கொள்ளாமல் உமிழ்கின்றன." என்பதாம்.

"முதலில் இவர்" இப்பாடலைப் பாடியபோது, 'எறும்புக்கு மாப்பதமில்லை மன்னு!' என்று பாடினவர், ஆறுமாத காலஞ் சவுக்கியத்தை யனுபவித்ததாலும், தன்னுடைய நிலைமை மாறியிருப்பதையும் உணர்ந்த இப்போது, 'எறும்புக்கு மாப்பத மில்லை முன்னாள்,' என்று மாற்றிவிட்டார். ஆகையால். இவர் கலைமகளருள் பெற்றவர்' என்று மனதில் ஆனந்தம் உண்டாய், காவலாளிகளைப் பார்த்து,

"இவரை ஊருக்கு வெளியில் துறத்திவிடுங்கள்" என்று அரசன் கட்டளையிட்டான். அதின்படியே துரத்திவிடப்பட்ட புலவர், அதிக் சந்தோஷத்துடன்,

(க) 'அப்பா பிழைத்தேன்' என்று சொல்லிக்கொண்டு

(உ)'நம் மை அரசன் என்ன ஆக்கினை செய்யப்போகிருனோ' என்று இருந்த பயம் இன்றோடே தொலைந்தது.

(ங) மறுபடியும் நமது உயிர்த்துணையாகிய மனைவியை நாம் கண்களால் பார்க்கப் போகிறோமா' என்றெண்ணி யிருந்த எண்ணமும் ஒழிந்தது." என்று பழைய கந்தையுடன் சத்திமுத்தத்தை நோக்கித் தன் மனைவியைப் பார்க்கவேண்டுமென்கிற ஆவலுடன் புலவர் புறப்பட்டு வந்து சேர்ந்தார்.

இவ்வாறு வந்தவர்:

(க) தன் வீட்டைப் பார்க்கும்போது, அது ஏழடுக்குள்ள உப்பரிக்கையா யிருப்பதையும்,

(உ) அரசனுடைய அரண்மனையைப்போல் மேள வாத்தியங்கள் முழங்குவதையும்,

(ங) முத்துப் பல்லக்குகளும், அசுவங்களும், யானைகளும், பல ஏவலாளிகளும் அவ்வரண்மனை எதிரில் போக்குவரத்தாயிருப்பதையும்,

பார்த்து பயந்து, "ஓ! ஓ! நாமிருந்த இடத்தை, யாரோ ஒரு அரசன் அபகரித்துக்கொண்டு, இவ்விதமாய் அரண்மனை கட்டிக்கொண்டான்; இந்தச் சந்தர்ப்பத்தில் நமது மனைவி என்னகதி யடைந்தாளோ" என்று, அதிக துக்கத்

துடன், அவ் வரண்மனைக்குள் போக்குவரத்தாயிருக்கும் ஏவலாளிகளைப் பார்த்து,

(க) "இங்கே முன்னிருந்த குடிசைகள் என்னவாயின?

(உ) அதில் வசித்துக்கொண்டிருந்த எனது மனைவி யிப்போது எங்கே வசிக்கிருள்?" என்று விசாரித்தார்.

அதைக்கேட்ட ஏவலாளிகள் நகைத்து, "இவன் பயித்தியக்காரன்போலிருக்கிருன்; இவனைத் துரத்திவிடுங்கள்!" என்ருர்கள்.

புலவர், இவ்வாறு தன் வீட்டையும் அதிலிருந்த தன் மனைவியையுங் காணுமே யென்று, அதிக துக்கத்துடன் புலம்பிக்கொண்டிருக்கும்போது,

இவர் மனைவி மேலுப்பரிகையி லிருந்துகொண்டு,

(க) நமக்குப் பாண்டியராஜனுல் கிடைத்த இச் செல்வங்களால் என்ன பலன்?

(உ) நமது கணவ ரில்லாமல் இச்செல்வங்கள் நமக்கேன்?

(ங) அவர் எப்போது வருவாரோ?"

என்று கண் பூத்துப் போகும்படி, சதா மதுரைப் பட்டணத்து வழியைப் பார்த்துக்கொண்டே யிருந்தாள்.

அப்படித் தன் கணவன் வரவைப் பார்த்துக்கொண்டிருந்தும், தன் வீட்டெதிரில் புலம்பிக்கொண்டிருக்கும் புலவரை இவள் அறிந்துகொள்ளாமற் போனுள்.

ஏனென்ருல், 'இவ்வளவு செல்வங்களை யளித்த பாண்டியன், தன்னகர் விட்டுப்புறப்படும் புலவரைத் தன் சேனைகளுடன் பல்லக்கிலேற்றித், தக்க ஆடம்பரங்களுடன் அனுப்புவானல்லவா?' என்கிற எண்ணத்துடனிருந்தால், பழைய ஏழை வேஷத்துடனிருந்த தன் புருஷனைக் கண்டறியாமற் போய்விட்டாள்.

கடைசியாய், இவள் நோக்கம் புலவர்மேல் பட்டவுடன், (க) உப்பரிகையை விட்டுத்

"தாயைப் பிரிந்த சேயைப் போல்" ஓடிவந்து,

(உ) புலவரைக் கட்டி முத்தமிட்டு,

(ங) பொற்றட்டில் அவர் பாதத்தை வைத்து, ஜலத்தினால் கழுவிப், புஷ்பத்தா லர்ச்சித்து,

(ச) அதிக விலையுயர்ந்த ஆடையாபரணங்களாற் கணவனை யலங்கரித்து,

(ரு) மயில் விசிறியினால் அவருடைய சிரம பரிகாரத்திற்காக விசிறி,

(சு) அறுசுவை பதார்த்தங்களோடு கூடிய அன்னத்தை யுண்பித்தாள்.

இதைக் கண்ட புலவர்:

(க) திப்பிரமை கொண்டவராய்,

(உ) ஒன்றும் பேசத் தோன்றாமல்,

(ங) அன்னம் புசித்துக்கொண்டே,

(ச) இவ் வாச்சரியங்கள் என்ன?"

என்று மனைவியைக் கேட்டார்.

அதற்கு அந்தக் கற்பரசியானவள்:

(க) தன் கணவன் போனவுடன் பாண்டியராஜன் மந்திரிகளை யனுப்பி, இங்கே தனது அரண்மனையைப்போல் கட்டடங் கட்டி வைத்ததையும்,

(உ) அதற்குத் தேவையான தட்டு முட்டுகளையும், வேறு சாமான்களையும், யானை-குதிரை-பல்லக்கு-ஏவலாளிகள் முதலானோரை யனுப்பி வைத்ததையும்,

சாங்கோபாங்கமாய்ச் சொன்னாள்.

பின்பு புலவர், தான் போனதுமுதல் இதுவரையில் நடந்த வர்த்தமானங்களைத் தன் ஆசை மனைவிக்குச் சொல்லி

நாமகளுடைய அருளை யிருவரும் வியந்து, குபேர செல்வத்துடன் வாழ்ந்துகொண்டு வந்தார்கள்.

இவ்வாறு சில மாதங்கள் கழிந்தவுடன், பாண்டிய ராஜன், தனது மந்திரிகளுடன் ரத கஜ துரக பதாதிகளைச் சத்திமுத்தத்திற் கனுப்பிப், புலவரை யதிக மரியாதைகளுடன் எதிர்கொண்டு அழைப்பித்து, ஒருவருக்கொருவர் பழய கதைகளெல்லாம் பேசி, முன் புலவர் பாடிய, 'நாராய் நாராய்' என்கிற பாடலையும், தன் சபையிற் பிரசங்கஞ் செய்யச்சொல்லிக்கேட்டு, ஆனந்தித்து, முன்னூல்நாரைமூக்கினுபமானப் பொருளை வெளியிடுவோருக்குக் கொடுப்பதாய்க் கட்டிவைத்திருந்த பொன் முடிப்பைத் தருவித்துப் புலவர் முன் வைத்து, அவரை ஏற்றுக்கொள்ளச் சொல்லி, யானையின்பேரில் புலவரையும், முத்துச் சிவிகையில் அவருடைய கற்பு மனைவியையும் உட்காரவைத்து, வெகு ஆடம்பரங்களுடன் மதுரைப்பட்டண வீதிகளில் ஊர்கோலம் செய்வித்து, அவரை யன்றுமுதல் தன் சபையில் முதற்புலவராக வைத்துக்கொண்டு, ஒருவருக்கொருவர் வெகு அந்நியோந்நியமாய் வாழ்ந்துகொண்டு வந்தார்கள்,

இச் சரித்திரத்தினால் புலவருடைய கல்வியின் அருமையும், அவருடைய கற்புள்ள மனைவியின் பெருமையும் வெளிப்பட்டது,

## 26-ம் பாடம்

## தருமகுணம்

அந்நியர் வருத்தமுறுங் காலத்தில், அதைப் பார்த்து இரங்கித், தம்மா லியன்ற உதவியைச் செய்யவேண்டுமென்று இச்சை கொள்வது தருமகுணமாகும். இக் குணமானது, ஆண் பெண் ஆகிய இவ்விரண்டு வகுப்பாருக்கும்

இருக்கவேண்டுமென்பது அவசியம். இப்படிப்பட்ட குண மில்லாதவர்களை 'அதர்மவான்கள்' என்றும், 'பாவிகள்' என்றும், உலகத்தார் இகழ்ந்து பழிப்பார்கள்.

மேலும், தர்மங்கள் செய்வதில் பல காரணங்க ளுண்டு. எப்படி யென்றால்,

(க) சிலர், தங்களை அதிக கவுரவமானவர்க ளென்றும், தருமவான்க ளென்றும், ஊரார் மெச்சும்படியாய் அதிக பொருட் செலவுசெய்து, தருமங்கள் செய்கிறார்கள்,

(உ) வேறு சிலர், மனதில் உண்மையான பிரிய மில்லாமல் 'பிச்சைக்காரர்களா லுண்டாகும் கூச்சலை நீக்கவேண்டும்' என்றே பிச்சையிடுகிறார்கள்.

இவ்வாறு செய்யுந் தர்மங்கள் உத்தமமானவைகளல்ல,

(க) கோபம், கடுஞ்சொல் முதலிய இழிவான செய்கைக ளில்லாமல்,

(உ) மனப்பூர்த்தியாய்த் தம்மா லியன்றதை யொருவருக்குக் கொடுத்து,

(ங) அவர்களுடைய கஷ்டத்தை நீக்குவதே சிறந்த தருமமாம்,—

[அறநெறிச்சாரம்]

"இன்சொல் விளைநிலனா, ஈதலே வித்தாக,
வன்சொற் களைகட்டி, வாய்மை யெருவட்டி,
அன்புநீர்ப் பாய்ச்சி, அறக்கதிர் ஈனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்."

என்ற அறநெறிப்படி,

(க) "முகமலர்ச்சியோடு கூடிய இனிமையான சொல்லை விளைநிலமாக்கி,

(உ) ஈகையை அதில் வித்தாக விதைத்து,

(ங) கடுஞ் சொற்கள் என்பனவற்றைக் களைகளாகப் பறித்து,

(ச) உண்மை என்பதை நீராகப் பாய்ச்சி,

(ரு) தர்மம் என்னும் கதிர் தள்ளும்படியாகப் பெண்கள் தக்க பருவத்தில் ஓர் அறப்பயிரை யிடவேண்டும்"

பிச்சைக்காரர்கள் விஷயத்தில் பெண்களுக்குக்கோபம் சற்றாகிலும் உண்டாகக்கூடாது. ஏனென்றால்,

[நீதிவெண்பா: கஎ-ம் செய்யுள்]

"நாவி னுனியில் நயமிருக்கிற் பூமாது
நாவினிய நல்லோரு நண்ணுவார்;—நாலினுனி
ஆங்க டினமாகில் அத்திருவுஞ் சேராள்முன்
ஆங்கே வருமரண மாம்."

என்று சான்றோர் கூறியிருக்கிறபடி,

(க) "கடினமாகிய வார்த்தைகளைப் பேசும் பெண்களிடத்தில் இலட்சுமீகர மிருக்கமாட்டாது.

(உ) அவர்களிடத்தில் மூதேவி சேருவாள்.

(ந) அப்படிப்பட்டவர்கள், ஆயுள் விர்த்தியின்றிச் சீக்கிரத்தில் நசித்துப்போவார்கள்."

[விவேகசிந்தாமணி]

"ஒப்போடு முகம லர்ந்தே யுபசரித் துண்மை பேசி
யுப்பிலாக் கூழிட் டாலும் உண்பதே யமிர்த மாகும்;
முப்பழ மோடுபா லன்னம் முகங்கடுத் திடுவா ராகிற்
கப்பிய பசியும் போக்கிக் கடும்பசி யாகுந் தானே."

என்றபடி,

(க) "ஸ்திரீயானவள், உண்மையானமுகமலர்ச்சியோடு தக்க உபசாரங்களைச் செய்து, ஒருவருக்கு உப்பில்லாத கூழை யிட்டபோதிலும், அது தேவாமிர்தத்திற்குச் சமானமாகும்;

(உ) அப்படிக்கில்லாமல், முகக் கடுப்புடன் முப்பழங்களோடு கூட்டின பாலன்னத்தை ஒருவருக்கு இட்டபோதிலும், அது யாதொரு பலனையும் கொடாமல், முன்னிருந்த பசியைக்காட்டிலும், அதிகமான பசியை உண்டாக்கிவிடும்."

மேலும், "சிலர், தாங்கள் தருமம் செய்ய மனமில்லாம லிருப்பதோடே, அந்நியர் செய்யும் தருமத்தையுந் தடுக்கிறார்கள். இது கொடிய பாவம். அப்படித் தடுக்கும் பெண்கள், அகோரமாகிய நரகத்தில் விழுந்தழிவார்கள்." என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

[ஆத்திசூடி: ௬-ம் சூத்திரம்]
"ஈவது விலக்கேல்."

என்று ஔவையாராலும் சொல்லப்பட்டிருக்கிறது.

சில பெண்கள், தம் கணவர் தமக்கு எதிர்ப்பட்ட ஓர் பசித்தவனை யழைத்துக்கொண்டு வீட்டுக்கு வந்து, மனைவியை யழைத்துப், "பெண்ணே! இவ் ஏழைக்குக் கொஞ்சம் அன்னமிடு!" என்று சொன்னால்,

(க) சரி! சரி!! உமக்கென்ன, வேறு வேலை யில்லை.

(உ) வழியில் எதிர்ப்பட்டவர்களை யெல்லாம் சாப்பாட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்துவிடுகின்றீர்.

(௩) அவர்களுக்கெல்லாம் சமைத்துப் போடுவதற்கு இங்கே யாரும் உறுதியாயிருக்கவில்லை.

(௪) இன்றையதினம் காலையில் எழுந்திருக்கும்போது எந்தப் பாவி முகத்தில் விழித்தேனோ தெரியாது; அப்போது ஆரம்பித்த தலைவலி இன்னும் தீரவேயில்லை." என்று முறுமுறுத்துக்கொண்டு முகத்தைத் திருப்பிக்கொள்ளுகிறார்கள்.

இப்படிப்பட்ட சண்டாளிகளை மனைவியாய் வாய்க்கப் பெற்ற புருஷர்கள் எப்படித் தருமஞ் செய்யக்கூடும்?

[நன்னெறி : ௬-ம் செய்யுள்]

"காதல் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்யவே;—ஓதுகலை
யெண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய்!
கண்ணிரண்டு மொன்றையே காண்."　[நோக்கருன்

என்று சிவப்பிரகாச சுவாமிகள் சொல்லியிருக்கிற பிரகாரம்,

(க) "இரண்டு கண்களும் சேர்ந்து ஒரு பொருளைப் பார்ப்பதுபோல,

(உ) நாயகனும் நாயகியும் ஒரு மனதாய் இப்படிப் பட்ட சத்கருமங்களைச் செய்தால் மாத்திரம் அவைகள் சரியாய் நிறைவேறுமே யல்லாமல்,

(ங) அவர்க ளிருவரும் வேறுபட்ட மனதோடு எந்தக் காரியங்களைச் செய்தாலும் அவைகள் சற்றுவது நிறைவேறமாட்டா."

பிச்சை யிடும்படி கணவர் [illegible]ல்வதை மறுத்து, அதை நிறைவேறவொட்டாமல் விகாத[illegible] செய்கிற ஸ்திரீகளுமல்லாமல், ஒருவருக்குப் பிச்சைபே[illegible]டும்போது, பிச்சைக்காரர்களைத் திட்டிக்கொண்டே போடுகிற மூதேவிகளும் உலகத்தில் அநேகர் இருக்கின்றார்கள்.

[ஔவையார்]

"ஏசி யிடலின் இடாமையே நன்று; எதிரிற்
பேசு மனையாளிற் பேய் நன்று."

என்றபடி,

(க) "அவ்விதமாய்த் திட்டிப் பிச்சை யிடுவதைவிட இடாமலிருப்பதும்,

(உ) மேலே சொன்னபடி, கணவர் சொல்லை மறுத்துப் பேசும் துஷ்டப் பெண்களைவிடப் பேயும் நல்லதாகும்."

ஒரு ஸ்திரீயானவள் இப்படிக்கெல்லாம் தன் கணவனுடைய வார்த்தைக்குத் தடை சொல்லாமல், தருமம் முதலியவற்றை அவனிஷ்டப்படி ஒருமித்துச் செய்து வருவாளானால், அவளுக்கும் அவளுடைய கணவனுக்கும் இம்மையிலும் மறுமையிலும் மேன்மை யுண்டு.

ஆகையால், இவ்வித மேன்மைகளை யடைவதற்காகப் பெண்கள், தருமகுணமுள்ளவர்களா யிருக்கவேண்டு மென்பது மிக்க அவசியமா யிருக்கின்றது.

## 27-ம் பாடம்

## தருமகுணம் (தொடர்ச்சி)

### [அமிர்தவதியின் கதை]

தட்சணதேசத்தில் சில நூற்றாண்டுகளுக்குமுன், சுகிர்தமதி யென்றொரு வேளாளன் இருந்தான். இவனுக்கு அமிர்தவதி யென்றொரு மனைவி யுண்டு. இவன் அதிக வறுமையுள்ளவனா யிருந்தும், எவ்வித பிரயாசையாவது பட்டுத் தினந்தோறும் தான் சாப்பிடுமுன் ஒருவருக்கு அன்னமிட்டுப் பின்பு தானும் தன் மனைவியும் சாப்பிடுவது வழக்கம்.

இவன் மனைவியானவள் தன் கணவனைவிடச் சிறந்த தருமகுண முள்ளவளாயிருந்தாள், அவனுடைய இஷ்டத்திற்குச் சற்றாவது மாறுபா டில்லாமல், தாம் அனுஷ்டித்து வரும் தருமத்திற்கு எங்கே குறைவு வருகிறதோவென்று பயந்தவளாய், அதிக ஜாக்கிரதையுடன் நடந்துகொண்டு வருவாள்.

இச் சதிபதிக ளிருவரும் இவ்வளவு மேன்மையான தருமகுணமுள்ளவர்களாயிருந்தும், இவர்களுக்குத் தரித்திரம் மேலிட்டிருந்தபடியால், அதைப்பற்றிச் சிந்தியாமல், எங்கேயாவது இருவரும் கூலிவேலையாகிலும் செய்து, அதிதிக்கு அன்னமிடுவதை விரதமாய் அனுஷ்டித்து வந்தார்கள்.

இப்படியாக இவர்கள் அதிக கஷ்ட ஜீவனம் செய்துகொண்டு, தம்மா லியன்றமட்டும் தருமத்தை நடத்திவரும் நாளில், ஒருநாள் இவர்களுக்குத் தங்கள் சொந்த சவரட்சணைக்கே உணவுக்கு யாதொரு மார்க்கமுமில்லாமல், அதிக வருத்தப்படும்படியாக நேரிட்டது. அதினால் "இன்றைய தினம் நமக்கு இவ்வளவு கஷ்டத்தைப் பகவான் கொடுத்தாரே" என்று, இவர்கள் அதிக துயரப்பட்டுக்கொண்டு, "தினந்தோறும் அதிதிக்கு அன்னமிட்டுக்கொண்டு வரும்

விரதம், இன்று தவறுவதாயிருக்கின்றதே" என்று, இருவரும் மனங் கலங்கி, துக்காக்கிராந்தராய்த் தியங்கினார்கள்.

"இனிச் சும்மா இருந்தால் மோசம் வரும்" என்று பயந்து, ஊரிலிருக்கப்பட்ட எந்த சத் புருஷரிடத்திலாவது தன் குறைகளைச் சொல்லிக்கொள்ளலாமென்று சுகிர்தமதியானவன் வெளியிற் போயிருந்தான்.

அச் சமயத்தில் ஜகதீசனானவர், 'இவர்களுடைய தருமகுணத்தையும் உறுதியையும் உலகத்தாருக்குத் தெரிவிக்க வேண்டும்' என்று திருவுளங்கொண்டு, ஓர் விர்த்தாப்பியரான பண்டாரவேஷம் பூண்டு, இவர்களுடைய வீட்டுக்கு வந்தார்.

இவ்வாறு எழுந்தருளிய தேவனானவர், வாசற்படியில் நின்றுகொண்டு,

(க) "யாரப்பா! புண்ணியமூர்த்தியே!

(உ) அதிக பசியாயிருக்கிறது,

(ங) இரண்டு நாளாய்ப் போஜன மில்லாமல், தேகம் மெலிந்து, பிராணன் சீக்கிரத்திற் போகும்படியான நிலைமையிலிருக்கின்றது.

(ச) பசிப்புக்காகக் கொஞ்சம் சோறிடுவா யப்பா!

(ரு) உன்னுடைய தருமகுணத்தின் பிரதாபத்தை வெகுதூரத்திற் கேள்விப்பட்டு, உன்னிடம் வந்தால் 'இக் கொடும் பசியை மாற்றிக்கொள்ளலாம்' என்று மிகுந்த ஆவலாய் வந்தேன்.

(சூ) அதிக இளைப்பினால் காதடைக்கிறது; கண் இருளுகிறது"

என்று சொல்லித் தள்ளாடிக்கொண்டே கீழே விழுந்தார்.

இதைக் கேட்ட அமிர்தவதியானவள் திடுக்கிட்டு,

(க) "ஓ! ஓ!! இவர் யாரோ ஒரு மஹாத்மாவைப் போல் இருக்கிறார்.

(உ) இவரை உபசரித்து இவருடைய பசியை பாற்ற விட்டால், என்ன பாதகம் வந்துவிடுகிறதோ?

(ங) நம்முடைய கணவனும் வீட்டில் இல்லையே?

(ச) இத்தனை நாளாய் அவர் அநுஷ்டித்து வந்த விரதத்துக்கு, இன்றையதினம் பங்கம் வரும்போல் இருக்கிறதே.

(ரு) தெய்வமே! நான் என்ன செய்வேன்?"

என்று மீளாத்துயரங்கொண்டவளாய், அப்பெரியவர் முன்வந்து, அதிக வணக்கத்துடன் நமஸ்கரித்துச் சொல்லுகிறாள்:-

(க) "சுவாமிகளே! சற்று உட்காருங்கள்!

(உ) என்னுடைய பத்தா வெளியிற் போயிருக்கின்றார்; சீக்கிரத்தில் திரும்பி வந்துவிடுவார்.

(ங) இதோ! ஒரு நொடியில் தேவரீருக்கு அமுது படைக்கிறேன்," என்று அவரைத் தூக்கி ஒரு ஆசனத்தில் உட்காரவைத்தாள்.

## 28-ம் பாடம்

## தருமகுணம் (தொடர்ச்சி)

### [அமிர்தவதியின் கதை]

இவ்விதமாய் உபசார வார்த்தைகளைச் சொல்லி, அப்பண்டாரத்தை ஆசனத்தில் உட்காரவைத்துப் போன அமிர்தவதியானவள், தெருவில் வந்து நின்றுகொண்டு, "வெளியிற் போன நம்முடைய கணவன் இன்னும் வரக்காணோமே; பண்டாரம் அதிக பசியினால் வருந்தி இளைப்புடன் இருக்கின்றாரே; கடவுளே! இதென்ன சோதனை? ஏழைகளை இப்படியும் பரீட்சிக்கலாமா?

"ஊர்க்குருவிமேல் இராமபாணமா?"

இதுவரையில் ஒரு நாளாகிலும் எங்களுக்கு இப்படிப்பட்ட கஷ்டம் வந்ததில்லையே; வெளியிற் போயிருக்கும் என் பத்தா, உணவுக்குத் தேவையான பதார்த்தங்களுடன் உடனே வரமாட்டாரா? கர்த்தனே!" என்று பற்பல விதங்களாய்த்தன் இஷ்டதெய்வத்தைத் தியானஞ் செய்துகொண்டேயிருந்தாள்.

அமிர்தவதியானவள், இவ்வாறு கடவுளைப் பிரார்த்தித்துத் தன் கணவனுடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்க, இதற்குள்ளாகப் பண்டாரத்துக்குக் கோபம்வந்து, "ஓ! அம்மணி! இதென்ன கபடமாயிருக்கின்றது? இதுவரையில் நான் வேறெங்கேயாவது போய் என் பசியை ஆற்றிக்கொண்டிருப்பேன்; அப்படிப் போகவொட்டாமல்,

"வாழ்க்கைப் படுகிறதை நம்பி
அவசாரி ஆகிறதும் கெட்டது."

என்னும் கதையைப்போல் செய்து விட்டாயே; ஆ! ஆ! வெறும் வாயுபசாரம் மாத்திரம் செய்பவர்களில் உன்னைப்போல் சாமர்த்தியக்காரியை இவ் வுலகத்தில் நான் யாரையும் பார்த்ததில்லை; என்னை வேண்டுமென்று கொல்வதற்காக, இங்கே ஆசனத்தில் உட்காரச் சொல்லிவிட்டு, நீ உள்ளே நுழைந்துகொண்டு, என் பிராணன் எப்படிப்போகிறதென்று வேடிக்கை பார்க்கிறாயல்லவா? இது மிகவும் நன்றாயிருக்கின்றது! நீ இப்படி எத்தனைப்பிராணன்களை வாங்கின புண்ணியவதியோ தெரியாது; இவ்வாறு நடக்குமென்று தெரிந்திருந்தால் இந்தச் சண்டாளர் வீட்டுக்கு வந்திருக்கவே மாட்டேன்.

"வகை தப்பிக் கண்ணியி லகப்பட்ட
பறவையைப்போல்"

இந்தத் துஷ்டர்களுடைய இடத்திற்கு வந்து அகப்பட்டுக் கொண்டேனே; ஆண்டவனே! இதென்ன மாயம்? 'வேறெங்கேயாவது போய் வயிறு வளர்த்துக்கொள்ளலாம்' என்று பார்த்தாலோ பசியினால் எழுந்திருக்கவுங் கூடவில்லை;

இதோ! இந்த வாசற்படியிலேயே என் பிராணனை விட்டு விடுகிறேன்," என்று மெலிந்த குரலோடு சொல்லிக் கொண்டே மூர்ச்சையுடன் தரையிற் சாய்ந்தார்.

இவ் வார்த்தைகளையெல்லாம் கேட்ட அமிர்தவதி யானவள்,

"நெருப்பில் விழுந்த புழுவைப்போல்"

பதைபதைத்து, "ஆ! ஆ!! தெய்வமே! இப்படிக்கெல்லாம் நடக்கும்படி நீ வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறாயல் லயா? எவ்வளவோ பிரயர்சையுடன் நம்முடைய கணவன் இதுவரையில் நடத்திவந்த தருமத்துக்குச் சிதைவு வந்த பின்னிட்டு, நமக்கு இவ்வுலகத்தில் வேறென்ன இருக்கிறது? இந்தச் சேதிகளை நம்முடைய பத்தா அறிந்தாரானால், உடனே பிராணத்தியாகம் செய்துகொள்ளாமற் போகமாட் டார். அப்புறம் நாம் உயிரை வைத்துக்கொண் டிருக்க லாமா? இந்தக் கொடுமையான காட்சிகளைக் காணுமுன், நாம் கடவுளுடைய திருவடிகளைச்சேருதல் நல்லது." என்று தீர்மானித்துச், சமையல் வீட்டிலிருக்கும் ஒரு கூர்மை யான அரிவாளை எடுத்துத் தன் கழுத்தை யறுத்துக் கொண்டு, பிராணனை விடுவதற்காக அதோமுகமாய் நின்று கொண்டு, கழுத்தின் பேரில் அரிவாளை வைத்தாள்.

உடனே, "ஓ! அமிர்தவதி! சற்றே பொறு!" என்று ஆகாயத்தில் ஒரு அசரீரி வாக்கு உண்டாயிற்று.

இதைக் கேட்ட அமிர்தவதியானவள், "இதென்ன ஆச்சரியம்! இங்கே ஒருவரையுங் காணோமே! சப்த முண் டாவதற்குக் காரணமென்ன?" என்று தலையைக் கீழே குனிந்து பார்க்கும்போது, சமையலறைக்குள்,

(க) பொற்றட்டுகளில் திவ்விய அன்னமும், அறுசுவை யோடு கூடின நேர்த்தியான பதார்த்தங்களும்,

(உ) வெள்ளிக் குடங்களில் நெய், மோர், தயிர் முத லானவைகளும்,

(ங) பலவித பலகார பாயசவகைகளும், சுடுகையுடன் அப்போதுதான் சமைத்தவைபோல் நிறைந்திருந்தன.

இவ் அற்புதக் காட்சியைக் கண்ட அமிர்தவதியானவள், மகா ஆச்சரியப்பட்டு, 'இது தேவாநுக்கிரகம்!' என்று ஆநந்த பரவசமடைந்து, பரமேசுவரனுடைய அருளைச் சிந்தித்து வியந்து பாடினாள்.

அந்தக்ஷணமே சொல்லி முடியாத களிப்புடன் அதிதியினிடம் ஓடிப்போய், "சுவாமி! அன்னமெடுத்துக் கொள்வதற்கு எழுந்தருளவேண்டும்" என்று, களைப்புடனிருப்பவரைத் தக்க உபசாரங்கள் செய்து பக்குவமா யெழுப்பிக் கொண்டு வந்து, தலை வாழையிலை போட்டு, அதில் அந்த சாதம், பதார்த்தம் முதலானவைகளைத் தாமதமின்றி அதிக ஜாக்கிரதையுடன் பரிமாறிக்கொண்டிருந்தாள்.

அமிர்தவதியானவள், இவ்வாறு அன்புடன் இட்ட போஜனத்தைப் பண்டார வேஷம் பூண்டு வந்த ஜகதீசனனவர், மனமகிழ்ச்சியுடன் புசித்துக்கொண் டிருக்கும்போதே மாயமாய் மறைந்துபோய்விட்டார்.

இந்தச் சமயத்தில், வெளியிற் போயிருந்த சுகிர்தபதியும் வீடுவந்து சேர்ந்தான்.

அமிர்தவதியானவள், சாப்பிட்டுக்கொண்டிருந்தஅதிதியானவர் மாயமாய்ப் போனதைக் கண்டு, ஒன்றுந் தோன்றாமல் திப்பிரமைகொண்டவளாய், நடந்த வர்த்தமானங்கள் யாவையும் ஆதியோடந்தமாய்த் தன் பத்தாவுக்குச் சொன்னவுடனே,

(க) "இவர், நம்முடைய மனதைச் சோதிக்க வந்த ஈசனே யல்லாமல் வேறொருவருமல்ல" என்று மகிழ்ந்து சதிபதி இருவரும் அவருடைய கிருபையைப் புகழ்ந்து பாடினார்கள்.

(உ) அவருடைய மகிமையைப் பலவாறாய்க் கொண்டாடி, ஆநந்தக் கூத்தாடினார்கள்.

(ங) "நம்முடைய தவப்பயன் இன்றுதான் நிறைவேறியது" என்று, இருவரும் கைகொட்டிக் கடவுளுக்குத் துதி செலுத்திக்கொண் டிருக்கும்போதே, இவர்கள் குடியிருந்த ஒரு பழைய குடிசையானது,

(க) எழுடுக்குள்ள உப்பரிகையாக மாறி,

(உ) வீடு நிறைய நவரத்தினங்களும், தானியங்களும், வஸ்திராபரணங்கள் முதலாகிய சகல சம்பத்துகளும், நிறைந்துவிட்டன.

கடவுளுடைய அநுக்கிரகத்தால் இவ்விதமாய் உண்டான சம்பத்துகளை யெல்லாம், சுகிர்தபதியானவன் பார்த்து, ஆனந்த சாகரத்தில் மூழ்கினவனாய்த், தன் மனைவியை நோக்கிச் சொல்லுகிறான்: "ஓ! பெண்கள் நாயகமே! நமக்கு இந்தப் பாக்கியங்களெல்லாம் சடிதியில் உண்டானதைப் பற்றி யோசித்துப்பார்க்குமிடத்தில், நாம் அநுஷ்டித்துவந்த விரதத்தின் பலனாக இவைகளைக் கடவுள் நமக்கு அநுக்கிரகம் செய்திருக்கின்றார். இவைகளுக்கெல்லாம் காரணம்நீயே யொழிய, என்னால் ஆனது ஒன்றுமில்லை. ஜகதீசனே உன்னுடைய குணத்தைப் பார்த்துச் சந்தோஷித்து, உன் கையால் அன்னமும் புசித்துப் போனாரென்றால், இதைவிட எனக்கு உயர்ந்த பேறு வேறென்ன இருக்கிறது? என் கண்மணியே!

[விவேகசிந்தாமணி: முதற்பாகம் கூங-ம் பாடல்]

"நற்குண முடைய வேந்தை நயந்துசே வித்த லொன்று;
போற்புடை மகளி ரோடு பொருந்தியே வாழ்த லொன்று
பற்பல ரோடு நன்னூல் பகர்ந்துவா சித்த லொன்று;
சொற்பெறு மிவைகள் மூன்றும் இம்மையிற் சுவர்க்க
மாமே."

என்றபடி, "என்னுடைய தருமத்துக்குச் சிதைவு வராமல் காத்துக்கொண்டு, இவ்வளவு பாக்கியங்களையும் உண்டாக்

கின உன்னால், எனக்கு இப் பிறப்பிலேயே சொர்க்கங் கிடைத்துவிட்டது." என்று பலவாறாய்த் தன் மனையாளின் தரும குணத்துக்கும் ஒருமைப்பாட்டுக்கும் புகழ்ந்து, கடவுள் கிருபையால் உண்டான சகல சம்பத்துகளுடன் இருவரும் அநேக தருமங்களை விருத்தி செய்துகொண்டு, புத்திர சம்பத்தையும்பெற்றுப், பூரணாயுளுடன் வாழ்ந்து, பிற்காலத்தில் மோட்சமு மடைந்தார்கள்.

இக் கதையில்,

(க) அமிர்தவதியினுடைய தரும குணத்தின் சிறப்பையும்,

(உ) அவள் தன் கணவனுடைய தருமத்துக்குச் சிதைவு வாராமல் காத்துக்கொண்டு வந்ததினால் அடைந்த கீர்த்தியையும், பெருமையையும்,

பெண்கள் சரியாய்க் கவனித்து நடக்கவேண்டும்.

## 29-ம் பாடம்

## வீண் செலவு

வீண் செலவு என்பது, பொருளை அவசியமில்லாத வழிகளிற் செலவு செய்தலாம். பெண்பிள்ளைகள்:

(க) தங்கள் கணவருடைய வருமானத்திற்குத் தக்கபடி வீட்டுச் செலவுகளை ஒழுங்காய்ச் செய்துகொண்டு,

(உ) கூடுமான வரையில் கொஞ்சம் மீதியாகும்படி வழி தேடவேண்டும்.

அப்படி யில்லாமல், வரும்படிக்கு மிஞ்சின செலவுகள் செய்வதால், கடன் மேலிட்டுத், தங்கள் புருஷருக்கு எந்நாளும் சஞ்சலமும் அவமானமும் உண்டாவதற்கு ஏதுவாகிறது.

[கோன்றைவேந்தன்: அக-ம் சூத்திரம்]

"வளவ ணுயினும் அளவறிந் தழித்துண்."

என்னும் ஔவையார் நீதிவாக்கியத்தின்படி, "ஒருவன் அளவற்ற பொருள் வரவுள்ள அரசனுயிருந்தாலும், தன் வருமானத்திற்குத் தக்க செலவு செய்து வரவேண்டும்."

சில பெண்கள்: தன் கணவருடைய வருமானம் குறைவாயிருந்தாலும், அதைச் சிக்கனமாய்ச் செலவு செய்து, அதிலும் கொஞ்சம் மிகுதியாக வைத்து, அவர்கள் புருஷருக்கு வருமானக் குறைவு உண்டாகும் காலத்தில், அதைக் கொண்டு தங்கள் வீட்டுச் செலவுகளை நிர்வாகம் செய்து கொள்ளுகின்றார்கள். இதுதான் நல்ல புத்திசாலித்தனம்.

இதை விட்டு, வேறு சிலர்: தங்கள் கணவருடைய பொருள் வரவு அதிக அற்பமாயிருந்தாலும்,

"புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக்கொண்டது."

போல், அதிக வருமானமுள்ள தங்கள் அயல் வீட்டுக்காரரைப்போல், தாங்களும் நடக்க முயன்று, வீண் செலவுகளைச் செய்துவிட்டுப், பிற்காலத்தில் அதிக துன்ப மடைகின்றார்கள். இது பெரிய அவிவேகம்.

ஒரு காலத்தில், கருடன் முதலிய பெரிய பறவைகளெல்லாஞ் சேர்ந்து, இராமேஸ்வரம் என்னுந் தூரதேசத்துக்கு யாத்திரை போவதற்காக ஆகாயத்தில் பறப்பதைப் பார்த்து, ஒரு ஊர்க்குருவியும் தன் சக்தியை நினையாமல், அவைகளைத் தொடர்ந்து, சிறிது தூரம் பறந்துபோய், அதற்குமேல் பறப்பதற்குச் சக்தியில்லாமல், சிறகொடிந்து கீழே விழுந்து இறந்துவிட்டது.

"குருவிக்கு தகுந்த இராமேஸ்வரம்."

என்னும் பழமொழியும் வழங்கி வருகிறது.

ஊர்க்குருவியானது மற்றப் பலமுள்ள பெரிய பட்சிகளைப்போல் தன்னையும் எண்ணிக்கொண்டு தூரதேசமாகிய

இராமேஸ்வரத்துக்குப் போக முயன்றிருத்தல் கூடாது. ஒரு வீட்டின் முற்றத்திலிருந்து மற்றொரு வீட்டின் முற்றத்திற்குப் பறந்துபோவதையே அது இராமேஸ்வர யாத்திரையாக நினைத்துக்கொள்ளவேண்டும்.

இதைப்போல், பெண்கள், செல்வவான்களாகிய மற்றவர்கள் செய்யும் செலவுகளைப்போல், தாங்களும் மூடத்தனமாய்ச் செய்ய முயலாமல், தங்கள் சக்திக்கும் அந்தஸ்துக்கும் தகுந்த விதமாய்ச் செலவு செய்து, அதையே பெருமையா யெண்ணி, தம் கணவருக்கு அதினால் சௌக்கியமுண்டாக வகை தேடவேண்டும்.

அப்படிக்கில்லாமல், பிரதிஷ்டைக்காகவும், டம்பத்துக்காகவும், தங்கள் சக்தியை மீறிப் பணச்செலவு செய்வார்களானால், மேலே சொன்ன ஊர்க்குருவியைப்போல் துன்பமடைவார்கள்:—

[நல்வழி: உரு-ம் செய்யுள்]

"ஆன முதலில் அதிகம் செலவானால்
மான மழிந்து, மதிகெட்டுப்,—போனதிசை
எல்லார்க்குங் கள்ளனாய், ஏழ்பிறப்புந் தீயனாய்,
நல்லார்க்கும் பொல்லனா நாடு."

என்றபடி, "தமக்குள்ள வருமானத்துக்கு அதிகமாய்செலவு செய்பவர்கள்:

(க) மானம் அழிந்து,

(உ) புத்தி கெட்டுத்,

(ரு) தூரதேசங்களுக்கு ஓடிப்போனபோதிலும், அவ்விடத்திலும் எல்லார்க்குந் திருடராகி,

(ச) ஏழு பிறப்புகளிலும் பாவிகளாகப் பிறந்து,

(ரு) நல்லவர்களுக்குங் கூடப் பொல்லாதவர்களாவார்கள்."

30-ம் பாடம்

## வீண் செலவு (தொடர்ச்சி)

[சந்திரமணி யென்பவள் கதை]

**சுந்தரபுரம்** என்னும் ஓர் பட்டணத்தில், இந்திரவரன் என்னும் ஓர் செல்வவந்தன் இருந்தான்.

(க) இவனுக்குச் சந்திரமணி யென்னும் மனைவி யொருத்தி யிருந்தாள்.

(உ) இவனுடைய வீடு எட்டடுக்குள்ள மெத்தை வீடு.

(ங) இதுவுமல்லாமல் இவனுக்கு அநேக கிராமங்களும், மிட்டாக்களும், தோட்டங்களும், துறவுகளும், பங்களாக்களும் மிகுதியா யிருந்தன.

(ச) இவற்றோடே ஆப்பிரிக்கா, இங்கிலாந்து முதலான தூரதேசங்களுக்குக் கப்பல் வியாபாரங்களும் அதிகமாய் நடந்துகொண்டு வந்தன,

(ரு) ஆகையால், இந்திரவரனுடைய ஆஸ்தி யிவ்வளவென்று கணக்கிட்டுச் சொல்வது பிரயாசை,

இப்படியாக இந்திரவரன் திரண்ட ஐசுவரியவந்தனு யிருக்குங் காலத்தில், இவனுக்கு மனைவியாய் வாய்த்த சந்திரமணி யென்பவள், அதிக வீண் செலவுக்காரியா யிருந்தாள், எப்படியென்றால்,

இவள் தன் புருஷனை நோக்கிப், "பிராணநாதரே! நேற்றையதினம் பக்கத்து வீதியிலிருக்கும் ஜாகீர்தார் வீட்டில் நடந்த விருந்தைப் பார்த்தீர்களா? ஒரு நாளைக்கு நாமும் அதற்கு எண்மடங்கு அதிகமாயிருக்கும்படி, சிறப்பான விருந்து ஒன்று செய்யவேண்டும். அதற்குத் தேவையான பதார்த்தங்களையும், தட்டுமுட்டுகளையும், சீனு, பிரான்சு முதலான தேசங்களிலிருந்து வரவழைக்க வேண்

டும்," என்று சொல்லிப் பக்குவப்படுத்தி, அவனை அதற் கிணங்கச் செய்து, தன் உத்தேசப்படி திரண்ட பொருட் செலவுகளைச் செய்து, அதை எவ்விதத்தினாலும் நிறை வேற்றி விடுவாள்.

எளியவர்கள் யாராகிலும், 'கட்ட வஸ்திர மில்லை' என்று வந்து கேட்டால், சாதாரணமான வஸ்திரங்களை வாங்கி அவர்களுக்குக் கொடுத்தால், தங்கள் கவுரவம் குறைந்துபோகுமென்று தன் கணவனுக்குச் சொல்லி, விலையுயர்ந்த சால்வைகளை வாங்கிக் கொடுத்தனுப்புவாள்.

இந்திரவரனும், இவளுடைய வார்த்தைகளுக் கிணங்கி, இவளால் உண்டாகும் பெருநஷ்டங்களைக் கவனியாமலே,

"எருமை மாட்டின்பேரில் மழை பெய்வதைப்போல்"

இருந்துகொண்டு வந்தான்.

மேலும், இவன் வியாபார விஷயமாய் வெளி தேசங் களுக்குப் போயிருக்குங் காலத்தில், 'இதுதான் சமயம்' என்று பின்னுந் தாராளமாய் வீண் செலவுகளைச் செய்து வருவாள். 'செலவுக்குப் போதுமான பணம் கையில் இல் லாமற் போனபோதிலும், இவள் சும்மாயிருக்கிற வழக்க மில்லை, தன் நகைகளையும் கழற்றி வியாபாரிகளிடம் கொதுவை வைத்துக், கடன் வாங்கி, வீண் செலவுகளைச் செய்து வருவாள்.

(க) இப்படியே வெகுகாலமாய் நடந்துகொண்டு வந்த படியாலும்,

(உ) இந்திரவரனும் தன்னுடைய வரவு இவ்வளவு என் றும், அதிற் செலவு இவ்வளவு என்றும் அப்போதைக்கப் போது கணக்குப் பார்க்காமலிருந்ததினாலும்,

"நின்று தின்றால் குன்றும் மாளும்."

என்பதைப்போல், இவனுடைய அளவிறந்த செல்வங்க ளெல்லாம் அழிந்துபோய்க், கடன் மேலிட்டுவிட்டது.

அதின்பேரில் கடன்காரர்கள் இவனை நாள்தோறும் தொந்தரவு செய்ய ஆரம்பித்தார்கள். இதற்கு ஈடு செய்வதற்கு இவனுடைய மற்ற ஆஸ்திகளெல்லாம் ஒழிந்து போய்விட்டபடியால், தன் பெண்ஜாதி தரித்திருந்த எல்லா ஆபரணங்களையும் கடன்காரருக்கு விற்றுக் கொடுக்கும்படி நேரிட்டது. அப்படிச் செய்தும் கடன் தீராமற் போனபடியால், கடன்காரர்களுடைய உபத்திரவம்பொறுக்கமாட்டாமல், தானும் தன் மனைவியும் கட்டிக் கொண்டிருந்த வஸ்திரங்களுடன், ஒருநாள் பாதி யிராத்திரியில், ஒருவரோடும் சொல்லாமல் ஊரைவிட்டு ஓடிப்போய்விட்டார்கள்.

பொழுது விடிந்தவுடன் இவர்களைக் காணாமையால், ஊராரெல்லாம் இவர்களுக்குண்டான நிலைமையைத் தெரிந்து சிரித்தார்கள். "கடன் வாங்கிச் செலவுசெய்யச் சொல்லி இவர்களை யார் அடித்தார்கள்?" என்று பரிகாசமாய்ப் பேசிக்கொண்டார்கள்.

"இந்திரவரன் தனக்கிருந்த எத்தனையோகோடி ஆஸ்திகளைக் கடன்காரருக்கு விற்றுக்கொடுத்தும் தீராமல், தன் பெண்சாதியுடன் பரதேசம் ஓடிப்போகும்படிக்கு ஆயிற்றல்லவா!" என்று அதிசயித்துப் பழித்தார்கள்.

"இவ்வளவு செல்வங்களும் அவனால் அழிந்தவையல்ல; அவனுக்கு நேரிட்ட சண்டாளியாகிய மனைவி சந்திரமணி யென்பவளுடைய செய்கைகளால்தான்," என்று அவளையும் இகழ்ந்து திட்டினார்கள்,

அவன் கையிற் பணமில்லாமற்போனால், கடன் வாங்கியும் மணங்கொண்ட வரையில் செலவுசெய்து வருவாளே; இப்போது என்ன செய்யப்போகிறாள்? கடைசியாய் அவள் பிச்சையெடுத்துத் தான் ஜீவனம் செய்யவேண்டும்; வேறு மார்க்கம் காணோம். அந்தச்சுந்திரபுரத்து ஜனங்களெல்லாம் பலவாறாய் இவர்களைத் தூஷித்துப் பேசிக்கொண்டார்கள்.

இதுவுமன்றி, அவ் வூரிலுள்ள புருஷர்களெல்லாம் இவ் வர்த்தமானங்களைத் தங்கள் தங்கள் பெண்ஜாதிமாருக்கு எடுத்துச் சொல்லி,

(க) இந்திரவரனுடைய எண்பதுகோடி ஆஸ்தியும் அவன் கட்டிக்கொண்ட பெண்ணால் அழிந்துபோன விதத்தைப் பார்த்தீர்களா!

(உ) புருஷன் சம்பாதிக்க வல்லவன்;

(ங) சம்பாதித்த பொருளைச் சிக்கனமாய்ச் செலவு செய்து, வீட்டுக் குடித்தனத்தைச் சரியாய் நடத்திக் கொண்டு வருவது, அவன் மனைவியின் கடமையல்லவா?" என்று பற்பல விதங்களாய்த் தங்கள் வீட்டுப் பெண்களுக்குப் புத்தி வரும்படியாய் அவர்கள் திருஷ்டாந்தங் காட்டினார்கள்,

இவ்விதமாய்க் கட்டிக்கொண்டிருந்த வஸ்திரத்தோடே ஊரை விட்டுப் பரதேசம் ஓடிப்போன இந்திரவரனும், சந்திரமணியும்:

(க) வெகு கஷ்டங்களை யெல்லாம் அனுபவித்துப்,

(உ) பல்லக்குச் சவாரி செய்துகொண்டிருந்தது போய்,

(ங) பாதசாரிகளாய்த் தேசங்களெல்லாம் திரிந்து,

(ச) குடிக்கக் கஞ்சிக்கும், கட்ட வஸ்திரத்திற்கும் வழியில்லாமல் அலைந்து மடிந்தார்கள்.

ஆ! ஆ!! எவ்வளவோ கோடி ரூபாய் ஆஸ்தியுள்ள ஒரு சீமானுக்கு வீண் செலவுக்காரியான வோர் மனைவி வாய்த்ததினால் உண்டான முடிவைப் பார்த்தீர்களா?

[திருக்குறள்: சு-ம் அதி.-வாழ்க்கைத்துணை நலம் க - ம் செய்யுள்.]

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை."

என்றபடி, "கணவனது பொருள் வரவை யறிந்து, தக்கபடி செலவிடுபவளே அவனுடைய இல்வாழ்க்கைக்குத் துணை," என்று திருவள்ளுவ நாயனாரும் சொல்லியிருக்கிறார்.

இவைகளை மாதர்கள் நன்றாய்க் கவனித்து நடந்தால், அநேக நன்மைகள் உண்டு. இல்லாவிட்டால் அவர்கள் சந்திரமணியைப்போல் வறுமை யடைந்து அழிவார்கள்.

இதனால் தங்கள் வயிற்றுக்குத் தக்க விதமாய் உண்ணுமலும், உடுக்காமலும் ஈனத்தோடு பெண்கள் நடக்க வேண்டுமென்பது எம் கருத்தல்ல. அவசிய மில்லாத வீண் செலவுகளை விலக்கவேண்டு மென்பதே.

## 31-ம் பாடம்

## பிள்ளைகளைப் பயிற்றுதல்

பெண்களுக்குக் கல்வி கற்பிக்கவேண்டு மென்பதற்கு முக்கிய காரணம் என்னவென்றால், தம் பிள்ளைகளை யிளமையில் கல்வியிலும், நன்னடக்கையிலும் பயிற்றுவதற்குத் தக்க விவேகத்தை உண்டாக்குதலாம்.

(க) இளமையில், சிறுவர்கள் பெரும்பாலும் தங்கள் தாய்மாருடைய ஆதரவிலேயே காலம் போக்கவேண்டியவர்களாயிருக்கின்றார்கள். ஆகையால், அவர்களுக்கு விளையாடும் பருவத்திலேயே வாசிப்பைக் கற்பிக்க முயலவேண்டும்.

(உ) பிள்ளைகள், இளமையில் விளையாட்டிலேயே அதிக சிரத்தை யுள்ளவர்களாயிருப்பார்கள். ஆகையால், அவர்களுக்கு அப் பருவத்தில் கல்வியையும் விளையாட்டாகவே கற்பிக்கவேண்டும்.

(ந) சாதாரணமாய்க் கல்வினால் உண்டாகும் நன்மைகள் பிள்ளைகளுக்கு இளமையில் அறியத்தக்கவைகள் அல்ல. அப்போது படிப்பென்றால், அவர்களுக்குக் கசப்பாயிருக்கும்; அப் பருவத்தில், அவர்களுக்குப் படிப்பில் ஆசையும் நாட்டமும் உண்டாகச் செய்வது தாய்மார்கள் கடமை.

தாய்மார்கள் அவ்வாறு செய்யத் தவறிப்போவதினால், பிள்ளைகள் இளமையில் கல்வியை யிழந்து, வயது ஏறின பின்பு அவர்கள் சோம்பேரிகளாகவும், துஷ்டர்களாகவும், ஆய்விடுகின்றார்கள். அப்படி ஆவதினால் அப் பிள்ளைகளுக்கும்,

அவர்களைப்பெற்ற தாய்தந்தையருக்கும் உண்டாகும் பல வித கெடுதிகளையும், நஷ்டங்களையும், நாம் பிரத்தியட்சமாய்க் காண்கிறபடியால், அவற்றைக்குறித்து இங்கே விவரித்துச் சொல்லவேண்டுமா?

தாயானவள் வாசித்து விவேகியாயிருந்து, தன் பிள்ளைகளை நல்வழியில் பயிற்றி வருவாளானால், இவ்வித கெடுதிகள் உண்டாகுமா? ஒருபோதும் உண்டாகாது;

(க) அவர்கள் துஷ்ட விளையாட்டுகளுக்கும், வீண் காலப்போக்குக்கும் இடம் பெறாமல்,

(உ) தங்கள் தாய்மார்களால் நாளுக்கு நாள், நன்மார்க்கத்தில் விர்த்தியடைந்து வருவார்கள்.

பெண்களே! இப்போது நம்முடைய இந்து தேசத்தை அரசாட்சி செய்துவரும் ஆங்கிலேய தேசத்தாருடைய ஸ்திரீகளைப் பாருங்கள், அவர்கள் தம் பிள்ளைகளுக்கு அதிக சுலபமாயும் தந்திரமாயும், அட்சராப்பியாசம் செய்து வைக்கின்றார்கள். எப்படியென்றால்,

(க) துவக்கத்தில் ஒவ்வொரு எழுத்தையும் ஒவ்வொரு விளையாட்டுக்கருவியில் எழுதிவைத்தும்,

(உ) பிள்ளைகள் விளையாடும்போதே, அவர்களுக்கு அட்சரங்கள் இன்னவையென்றும் கற்பித்துவிடுகிறார்கள்.

இப்படியல்லவோ நம்முடைய தேசத்துப் பெண்களும் தம் பிள்ளைகளுக்குச் சுலபமாய்க் கல்வி கற்பிக்க முயலவேண்டும்? மேலும் ஸ்திரீகள்:

(க) தங்கள் பிள்ளைகள் இளமையில் துர்ப்பாஷைகளைப் பேசவொட்டாமலும், துஷ்டப்பிள்ளைகளோடு சகவாசம் செய்யாமலும், மிகுந்த ஜாக்கிரதையுடன் பாதுகாத்து வரவேண்டும்.

(உ) காதில் கேட்பதற்கு அருவருப்பான வார்த்தைகளை அவர்கள் ஒருவேளை பேசினபோதிலும், உடனே அவர்களைத் தகுந்த விதமாய்க் கண்டித்து, மறுபடியும் இவ்விதமான வார்த்தைகளைப் பேசவொட்டாமல் தடுக்கவேண்டும்.

(ங) பிள்ளைகள் கெட்ட வார்த்தைகளைப் பேசும்போது சில ஸ்திரீகள் சந்தோஷம் அடைகின்றார்கள்; இது மிகவும் அவிவேகம்.

(ச) அவர்களுக்குப் பரிசுத்தம், உண்மை, அடக்கம் முதலிய நன்னடக்கைகள் நாளுக்குநாள் விர்த்தியடைந்து வரும்படி, தாய்மார்கள் தாங்களும் அவ்வாறுநடந்து காட்டி அவர்களைப் பயிற்றிக்கொண்டு வரவேண்டும்.

இப்படிச் செய்வதினால் பிள்ளைகள் கல்வியிலும்நல்லொழுக்கத்திலும் தேர்ச்சி யடைந்து,—

[திருக்குறள்: எ-ம் அதி.-புதல்வரைப் பெறுதல்-கூ-ம் செய்யுள்]

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்."

என்றபடி, பிற்காலத்தில் அவற்றால் மிக்க அறிவுடையோனென்று கீர்த்தியடைந்து, அதைக் கேட்கும் தாய்மாருக்கு அவர்களைப் பெற்றபோது இருந்ததைவிட, அளவில்லாத சந்தோஷத்தை உண்டாக்குவார்கள்.

இளமையில் பிள்ளைகள் சன்மார்க்கத்தில் பயில்வதினால் இவ்வித பெரு நன்மைகள் உண்டாவதற்கு ஏதுவாயிருப்பதால், பிள்ளைகளைப் பெற்ற தாய்மார்கள் இவ் விதிகளை நன்குணர்ந்து நடக்கக் கடமைப்பட்டவர்களா யிருக்கின்றார்கள்.

## 32-ம் பாடம்
## விருந்தினரை யுபசரித்தல்

**விருந்தினரை** உபசரித்தலென்பது, தம்மை நாடிவரும் விருந்தாளிகளுக்கு வேண்டிய ஆகார முதலியவற்றைத் தம்மா லியன்றமட்டும் கொடுத்து உதவுதலாம். இப்படிச் செய்வதை முன்னொரு பாடத்திற் சொல்லியிருக்கிறபடி,

(க) முகமலர்ச்சியுடனும்,

(உ) இதமான பிரிய வார்த்தைகளுடனும்,

(ங) மனதாரச் செய்யவேண்டும்.

விருந்தினரை அன்புடன் உபசரிக்கவேண்டுமென்பது, ஸ்திரீ புருஷர்கள் இவருடைய கடமையாகவு மிருக்கிறது. தாங்கள் போஜனம் செய்வதற்கு முன்னர், தங்கள் வீட்டைத் தேடிவந்த விருந்தினரைப் பெண்கள் முதலில் உண்ணச்செய்து, மிகுதியைத் தானும் தன்கணவனும் புசிப்பது முறைமையாம். ஸ்திரீகள் தங்கள் மனைக்கு அதிதிகள் வருவார்கள் என்று அவர்களுடைய வரவை எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கவேண்டும்.

விருந்தை மருந்தாக எண்ணும் சில ஒழுக்கமற்ற பெண்கள் அவ்விதமாய்ச் செய்யாமல், தங்கள் வீட்டுக்கு யாராகிலும் விருந்தாளிகள் வந்துவிட்டார்களானால்,

(க) அவர்களைச் சற்றுவது கவனிக்காமலும்,

(உ) அவர்களுடைய முகத்தைக்கூட நிமிர்ந்து பார்க்க மனமில்லாமலும், அவர்களை அசட்டை செய்துவிடுகிறார்கள்.

(ங) வேறு சிலர், விருந்தினரைப் பார்த்தவுடன், 'இவர்கள் ஏன் வந்தார்கள்?' என்று உள்ளத்தில் அதிக வெறுப்படைந்து, மேலுக்கு மாத்திரம்,

"தேனொழுகப் பேசித் தெருக்கடக்க வழி விட்டாள்."

என்றபடி, உபசார வார்த்தைகளைப் பேசி அனுப்பிவிடுகின்றார்கள்.

இவ் விரண்டு செய்கைகளும் அன்பற்ற அற்பசெய்கைகளாம். விருந்தினரை அசட்டை செய்வதும், அவர்களுக்குக் கள்ள உபசாரங்களைச் செய்வதும், ஸ்திரீகள் தவிர்க்கவேண்டியவைகளேயல்லாமல், எக்காலத்திலும் அநுசரிக்கத் தக்கவைகளல்ல. இவ்வித செய்கைகளுள்ள ஸ்திரீகளுடைய வீடுகளில் இலட்சுமியானவள் வாசஞ்செய்யச் சற்றுகிலும் விரும்பமாட்டாள். அவர்களுக்கு வறுமை மேலிட்டு, அதினால் மெலிந்து சீக்கிரத்தில் நசித்துப் போய்விடுவார்கள்.

(க) விருந்தினரை அதிக மகிழ

(உ) அவாகளுக்குத் தகுந்த ம
சாரங்களைச் செய்து,

(ங) முகமலர்ச்சியோடு அவர்களுடன

"வாய் வாழைப்பழம், கை கருணைக்கிழ
என்றிராமல்,

(ச) அவர்களுக்குத் தேவையான ஆகார
கொடுத்து உதவுதல்,

நல்லொழுக்கமுள்ள பெண்களுக்கு இயற்கை
இப்படிப்பட்ட ஸ்திரீகளுடைய வீட்டை இலட்சுமியா
வள் தன் தாய்வீடாகப் பாவித்து, அதை விட்டலகச் சற்று
வது மனமில்லாதவளா யிருப்பாள்: அதாவது,

(க) அப்படிப்பட்ட பெண்கள் எப்போதும் குன்றாத
சம்பத்துடன் கூடி வாழ்வார்கள்.

(உ) அவர்களுக்கு எவ்விதத்திலும் யாதொரு குறை
யும் உண்டாகமாட்டாது. மேலும்.

[திரிகடுகம்: கூங-ம் செய்யுள்]

"நோவஞ்சா தாரோடு நட்பும், விருந்தஞ்சும்
ஈர்வளையை யில்லத் திருத்தலும்,—சீர்பயவாத்
தன்மை யிலாளார் அயலிருப்பும், இம்மூன்றும்
நன்மை பயத்த லில்."

என்றபடி,

(க) "ஒருவருக்குத் துன்பம் வந்ததைப் பார்த்து, அஞ்
சாதவர்களுடைய சிநேகமும்,

(உ) வீட்டுக்கு வந்த விருந்தினர்களைப் பார்த்து, 'இந்
தப் பாவிகள் எங்கிருந்து வந்தார்கள்?' என்று பயப்படும்
குணமுள்ள ஸ்திரீயைப் பெண்சாதியாய் வைத்திருத்தலும்,

(ங) துஷ்டர்களுடைய வீட்டுக்குச் சமீபத்திற் குடி
யிருத்தலும்,

... யாதொரு நன்மையையும் கொடா
...ளைவிக்கும்."

...அஞ்சும் பெண்களைப்பற்றி நூற்களிலும்
...து சொல்லப்பட்டிருக்கிறது.

...ட்டிற்கு வந்த விருந்ினரை உபசரித்துக்
...ி வரப்போகும் அதிதிகளுக்காக மனமகிழ்ச்சி
...திர்பார்க்கும் ஸ்திரீகள்,

...ருக்குறள்: கூ-ம் அதி.-விருந்தோம்பல்-ரு-ம் செய்யுள்]

"செல்விருந் தோம்பி, வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு."

என்று நாயனார் சொன்னபடி, "தேவர்களுக்கு நல்ல விருந்தினர் ஆவார்க"ளாம்; அதாவது, இவ்வித நற்குணமுடையவர்கள் மறு பிறப்பில் தேவர்களாய்ப் பிறப்பார்களாம்.

விருந்தினரை உபசரிப்பதால் உண்டாகும் மேற்சொன்ன நன்மைகளை யறிந்து பெண்கள் நடக்கவேண்டும்.

## 33-ம் பாடம்

## உபகாரம்

**உபகாரம்** என்பது, அந்நியர்க்குத் துன்பம் வந்தபோது உதவுதலாம். உலகத்தில் நாம் நம்முடைய சொந்த நன்மைகளை மாத்திரம் கருதி நடப்பது பெரிதல்ல. அப்படியே நம்மைச் சேர்ந்த பந்துவர்க்கத்தாருக்கும், அக்கம் பக்கங்களில் வசிக்கும் இதர ஜனங்களுக்கும், ஏதாவது துன்பம் வந்த காலங்களில், அது நமக்கே வந்ததாகப் பாவித்து, நம்மாற் கூடுமானவரையில் அது நீங்கும்படி வகை தேடல் வேண்டும். ஒவ்வொரு மனிதரும் அநேக சமயங்களில் அந்நியருடைய ஒத்தாசையைக் கோருவது உலகத்தில்

சாதாரணமா யிருக்கின்றது. உபகாரம் செய்வதில், இன்ன ஜாதியாருக்காவது, இன்ன மதஸ்தருக்காவது செய்யவேண்டும் என்பது விதியல்ல. இடுக்கண் உற்றவர்கள் யாரா யிருந்தாலும், அவர்களுக்கு அது நீங்கும்பொருட்டு, இயன்றதை நாம் செய்யக் கடமைப்பட்டவர்களா யிருக்கின்றோம்.

அண்டை விட்டுக்காரியினுடைய குழந்தைக்கு ஏதாவது வியாதி சம்பவித்தால், ஒரு ஸ்திரீயானவள், அது தன் குழந்தைக்கே வந்ததாகப் பாவித்து, அதற்குத் தேவையான மருந்து வகைகளைச் சம்பாதித்தல், வயித்தியரை அழைப்பித்தல் முதலானவைகளில் தானும் உதவிசெய்ய முயலவேண்டும்.

இப்படிச் செய்வதால் தன் குழந்தைக்காவது, தனக்காவது, ஒருவேளை அவ்வித சங்கடங்கள் உண்டானால், தன்னால் முன் உதவி யடைந்தவர்கள் வலிய வந்து உதவி செய்வார்கள்.

சில பெண்கள் இவைகளைச் சிறிதேனும் கவனித்து நடக்கிறதில்லை. இவர்கள் ஒருவருக்கொருவர் இதற்கு முன் நேரிட்ட மனஸ்தாபத்தை அப்போது எடுத்துக் காட்டுகிறது முண்டு.

எப்படியென்றால், ஒருநாள் ஒரு வீதியிலிருக்கும் பெண்பிள்ளையானவள், வேறொருத்தியைப் பார்த்து, "அம்மா! உங்கள் பக்கத்து வீட்டுக்காரி பிரசவித்த பிற்பாடு தேகசவுக்கியந் தப்பியிருந்தாளே; இப்போது எப்படி யிருக்கிறாள்? சவுக்கியமாய்விட்டாளா?'! என்று கேட்டாள்?

அதற்கு அவள் சொல்லும் மறுமொழியைக் கேளுங்கள்:

(க) "ஏண்டி! நீ யேது பொல்லாதவளா யிருக்கிறாய்?

(உ) அந்தச் சங்கதியை நீ யிங்கே யாரைக் கேட்கிறாய்?

(ங) அவளுடைய வீட்டுக்கு நான் போனதை நீ இந்த ஆறுமாத காலமாய்ப் எப்போதாவது பார்த்திருக்கிறாயா?

(ச) ஒருநாள் என் பிள்ளை யேதோ தெரியாமல் ஒரு வித்தியாசமான வார்த்தையைச் சொன்னதற்காக, அந்தப் பாலனைத் தலையின்மேரில் அடித்த புண்ணியவதியல்லவா?

(ரு) அவள் வீட்டுக்கு நான் ஏன் போகவேண்டும்?

(சு) அவளுடைய க்ஷேமலாபங்களை நான் ஏன் விசாரிக்கவேண்டும்?

(எ) யார் எப்படிப்போனால் நமக்கென்ன?

(அ) இனி என்னுடன் அவளுடைய பேச்சை யெடுத்துப் பேசவேண்டாம். பேசுவாயானால் நான் கெட்டவளாயிருப்பேன்.'' என்று கோபத்துடன் சொன்னாள்.

இப்படிச் சொல்வது என்ன ஞாயமென்று நினைக்கக்கூடும்? விவேகமுள்ள பெண்கள் இப்படியும் சொல்வார்களா? பழய விரோதம் இருந்தபோதிலும், அப்படிப்பட்ட சமயங்களில் அதைப் பாராட்டலாமா? நற்குணமுள்ள பெண்கள், ஒருவருக்கு ஆபத்து நேரிட்ட காலத்தில், பழய விரோதத்தையும், வேறுவிதமாய்த் தங்களுக்கிருக்கும் அசந்தர்ப்பங்களையும் யோசியாமல் விரைந்துபோய் உதவி செய்வார்கள்.

மேலும் சிலர், தங்களுக்குச் சமீபத்தில் வாசஞ் செய்யும் அயலாருக்கு ஏதாவது சங்கடம் நேரிட்டதை யறிந்தால், அதைப் பார்க்காதவர்கள்போல் ஜாடையா யிருந்துவிடுகின்றார்கள். இது மகா பாவம்.

இப்படிப்பட்ட குரூர சிந்தையுள்ள பெண்களுக்கு எப்போதாவது ஒரு விபத்து நேரிட்டால், இவர்களுக்கு உதவி செய்ய வருபவர்கள் யார்?

ஒருவருக்கு உபகாரம் செய்வதிலும், பாத்திராபாத்திரங்கள் அறிந்து செய்வது உத்தமம். அதாவது,

(க) துஷ்டர்களுக்கு உபகாரம் செய்தால் எப்போதும் அபகாரமே செய்ய யத்தனிப்பார்கள். அவர்களுக்குப் பதில் உபகாரம் செய்யவேண்டு மென்கிற எண்ணம் உண்டாகிறதே யில்லை.

(உ) அதையே நல்லவர்களுக்குச் செய்தால் அவர்கள் நன்குமதித்துப் பதில் உபகாரம் செய்ய முயலுவார்கள். அது எப்படி யென்றால்,

[நீதிசாரம்]

"பாத்திரா பாத்தி ரங்கள் பார்க்குநாள் பசுவுக் கேந்த
மாத்திரந் திரண மீந்தால் பால்தரு மந்தப் பாலை
வார்த்திடிற் பாம்பி னுக்கு விஷமதே வளரு மன்னே
ஏற்றபாத் திரம றிந்து ஈந்திடக் கடவ தன்றே."

என்றபடி,

(க) "பசுவுக்குப் புல்லைப்போட்டால், அது மதுரமான பாலைக் கொடுக்கும்;

(உ) அந்தப் பாலைப் பாம்புக்கு வார்த்தால், அது விஷத்தையே கொடுக்கும்.

(ந) ஆகையால், ஒருவருக்கு உபகாரம் செய்வதில் பாத்திராபாத்திரம் அறிந்து செய்வதோடு சமயமறிந்தும் செய்வது உசிதம்."

## 34-ம் பாடம்

## உபகாரம் வீண்போகா தென்பது

[அணிபூஷணராஜன் கதை]

**மணிபூரணம்** என்னும் ஓர் நாட்டை அணிபூஷணன் என்னும் அரசன் நீதி தவறாமல் செங்கோல் செலுத்தி ஆண்டுவந்தான். இந்நாட்டைச் சேர்ந்த ஓர் காட்டில் வாளி யென்னும் ஓர் வேடன் தன் மனைவியாகிய காளி யென்பவளுடன் வெகு காலமாய் வாசஞ்செய்து கொண்டிருந்தான். இவன், அக்காட்டில் இருக்கும் புறா, மயில், கோழி, காடை, முதலான பட்சிகளைப்பிடித்து மணிபூரணத்துக்குக் கொண்டு

வந்து விற்று, அதினுல் வரப்பட்ட பணத்தைக்கொண்டு, தானும் தன் மனையாளுமாய் ஜீவனம் செய்துவருவார்கள்.

இப்படியே ஒருநாள் இவன் சில பட்சிகளைப் பிடித்து, அவைகளை விற்பதற்காக வழக்கப்படி மணிபூரணத்துக்குக் கொண்டுவந்தபோது, அவைகளை ஒருவரும் விலைக்குக் கேட்கவில்லை, அதினுல், இரண்டு நாளாய் அவன் அந் நகரத்து வீதிகளெல்லாம் திரிந்து கால்கள் சோர்ந்து, பசியால் தளர்ந்து, இரண்டாம் நாள் இரவில், மிகுந்த துக்கத்துடன் ஒரு வீட்டின் தெருத் திண்ணையின்பேரில் படுத்துக் கொண்டான்.

இவ்விதமாய்ப் படுத்துக்கொண்டபடியே,

(க) "கர்த்தாவே! இதென்ன காரணம்; நான் பிடித்து வந்த பட்சிகளில் ஒன்றையாவது யாரும் வாங்கவில்லையே?

(உ) வாங்காமற் போனதோடே, 'இதென்ன விலை? அதென்ன விலை?' என்று வழக்கப்படி விலை கேட்பாரையுங் காணுமே.

(ங) இரண்டு நாளாய் ஆகாரமின்றித் திரிந்ததினுல், தேகம் சுவாதீனம் தப்பியிருக்கிறதே.

(ச) ஒருநாளும் இப்படி நேரிட்டதில்லையே.

(ரு) இதென்ன ஆச்சரியம்!

(சு) இதுவுமன்றிக் காட்டில் என்னுடைய மனைவியும் ஆகாரத்திற்கு மார்க்கமில்லாமல், என் வரவை எதிர்ப்பார்த்துக்கொண்டிருப்பாளே."

என்று பலவாறுய்ச் சிந்தித்துக்கொண்டே யிருந்தான்.

இவன் இவ்வாறு துயரத்துடன் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது காட்டில் இவனுடைய மனைவியும்,

(க) இதென்ன! மணிபூரணத்துக்குப்போன என் கணவனை இரண்டு நாளாய்க் காணுமே.

(உ) அவன் கொண்டுபோன பறவைகள் விலைப்பட்டனவோ இல்லையோ, தெரியவில்லையே,

(ந) ஒருவேளை அவைகள் விலைப்படாமையால் திரிந்து பசியினால் காதடைத்துக்கொண்டு, அவன் எங்கேயாவது மூர்ச்சையடைந்து விழுந்தானோ.”

என்று புலம்பிக்கொண்டு, பசியோடு வருவானானால், உடனே கொடுப்பதற்காகக் காடுகளெல்லாம் சுற்றிச், சில கிழங்குகளைச் சம்பாதித்துத், தானும் தின்னாமல் வைத்துக் கொண்டு, ஆகாரம் நித்திரையின்றி எந்நேரமும் தன் புருஷனை எதிர்நோக்கிக்கொண்டே யிருந்தாள்,

இவள், காட்டில் இப்படிப் புலம்பிக் கொண்டிருக்க, இங்கே மணிபூரண நகரத்துத் தெருத் திண்ணையின்பேரில் பசியினாலும், களைப்பினாலும் மெலிந்து, கவலையுடன் படுத்துக் கொண்டிருக்கும் வாளியை, அன்று அவ்வூர்க் காவலாளிகள் கண்டார்கள்,

இவனைக் கண்டவுடன், அவர்கள் சந்தோஷப்பட்டு, இவன்,

“கழுவுக்கேற்ற கோமுட்டி”

போன மாதத்தில் இவ் வூரில் நடந்த கன்னக்களவில் குற்றவாளியை இதுவரையில் நாம் கண்டுபிடிக்காமற் போனதற்காக, நமக்கு அரசன் நாளையதினம் கொடிய தண்டனை விதிப்பதாய்ப் பிரசித்தப்படுத்தி யிருக்கிறானல்லவா? ‘அந்தக் குற்றவாளி இவன்தான்’ என்று, மெதுவாய் இவனைக் காட்டி விட்டு, நாம் ராஜ தண்டனைக்குத் தப்பித்துக்கொள்ளலாம்” என்று, ஒருவருக்கொருவர் ஆலோசித்துக் கொண்டார்கள்.

அப்படியே அவர்கள் பேசித் தீர்மானித்துக்கொண்டு, இவனைப் பார்த்து, “அட பயலே! நீதானே அன்றிரவில் மேலண்டை வீதியில் கன்னம்வைத்துக் களவாடினவன்? உன்னை இத்தனைநாளாய் எங்கெங்கேயோ நாங்கள் தேடியும் எங்கள் கைக்குச் சிக்காமல், இன்றையதினம் வகை தப்பி அகப்பட்டுக்கொண்டாய்,” என்று அவனை அநியாயமாய்ப் பிடித்து உதைத்துத் தள்ளிக்கொண்டுபோய், இரவெல்லாம் காவற்சாலையில் வைத்திருந்தார்கள்.

மறுநாட் காலமே அரசனுக்கெதிரில் அவனைக்கொண்டு வந்து, "ஆண்டவனே! இந்தத் துன்மார்க்கன்தான் அன்றிரவில் கன்னம்வைத்துத் திருடின சோரன்" என்று சொல்லி எதிரில் நிறுத்தினார்கள்.

35-ம் பாடம்

## உபகாரம் வீண்போகாதென்பது (தொடர்ச்சி)

[அணிபூஷண ராஜன் கதை]

மேற்கூறிய விதமாய்க் காவலாளிகள், தன் முன்னே கொண்டுவந்து விட்ட குற்றவாளியின் முகக்குறியையும், அவன் பசியால் களைத்து வருந்துவதையும், அணிபூஷண ராஜன் பார்த்துத், தீர்க்காலோசனை செய்து,

'களவுபோன ஆபரணங்கள் விலை உயர்ந்தவைகளாயிருப்பதால், அவற்றைக் கவர்ந்தவன் இவ்வாறு பசியால் வருந்தவேண்டிய காரணமென்ன?' என்றும்,

"பண்டம் ஓரிடம் பழி ஓரிடம்"

என்பதைப்போல், உண்மையாய்க் குற்றம் செய்தவனைப் பிடிப்பதற்குக் கூடாமையால், வழிப்போக்கனாகிய இவனைக் காவலாளிகள் கொண்டுவந்து விட்டுத், தாங்கள் தப்பித்துக் கொள்ள வகை தேடினார்கள்' என்றும் தீர்மானித்துக், குற்றவாளியை விசாரணையில்லாமலே விடுதலை செய்துவிட்டான்,

இதன்பேரில் முன்னால் காவலாளிகளுக்காக விதிப்பதாய் அரசன் பகிரங்கப் படுத்தியிருந்தபடி, ஆறுவருஷ காலம் அவர்களைச் சிறையில் வைக்கும்படியாகவும், இந்த வேடன்பேரில் அவர்கள் அக்கிரமமாய்க் குற்றம் சுமத்தினதற்காக இது இரட்டிக்கப்பட்டதென்றும், தண்டனை விதித்தான்.

[அணிபூஷண ராஜன் கதை]

இவ்வாறு தீர்மானம் செய்தபிறகு, நிரபராதியாயிருந்து தன் முன் குற்றவாளியாய் வர நேரிட்ட வாளியின் பசி நோயைப் பார்த்து, அரசன் மனமிரங்கி, உடனே அவனுடைய பசி தீரும்படித் தன் அறச்சாலையில் அவனுக்குச் சோறு போடும்படி செய்து அவனைத் தேற்றி அனுப்பிவிட்டான்,

அதன்மேல் அவன் காட்டுக்குப் போய், நடந்த சேதிகளை யெல்லாம் தன் மனைவியாகிய காளிக்குச் சொல்லி, இருவரும் துக்கித்துத், தங்கள் அரசனுடைய நடுவு நிலைமையையும், நீதியையும் புகழ்ந்து கொண்டாடி, வழக்கப்படி அவர்கள் அங்கே வாசஞ்செய்து வந்தார்கள்.

இவ்வாறுய்ச் சில வருஷங்கள் கழிந்தபின்னர், அணிபூஷணராஜன் தன் நாட்டிலுள்ள பயிர்களை யெல்லாம் காட்டு மிருகங்கள் சேதப் படுத்துகின்றனவென்று, குடிகள் தன்னிடம் வந்து முறையிட்டுக்கொள்ள, ராஜன் "அம் மிருகங்களை இதோ! கொன்று போடுகின்றேன்" என்று சொல்லித் தன் சேனைகளிற் சிலவற்றை வேட்டைக்குத் தேவையான ஆயுதங்களுடன் ஆயத்தஞ் செய்துகொண்டு, காட்டுக்குப் புறப்பட்டான்.

வேட்டைக்காகக் காட்டுக்குட் பிரவேசித்த அரசனானவன்: அங்கே யெதிர்ப்பட்ட மான், கடம்பை, யானை முதலிய பல மிருகங்களையும் அம்புகள் எய்து கொன்று, கடைசியாய்த் தன் அம்புக்குத் தப்பி ஓடிப்போன வொரு முள்ளம்பன்றியைத் துரத்திக்கொண்டு, வெகுதூரம் வனத்துக்குட் சென்றான்,

அதிக கடுமையான சூரிய வெப்பத்தினால் குதிரையின் பேரில் சவாரி செய்துகொண்டு கற்களையும், முட்களையும், காறுறுகளையும், ஓடைகளையும் பாராமல் அவற்றைத் தாண்டிக்கொண்டு, அதிக வேகமாய்ச் சுமார் ஐங்காத தூரம் தன் சேனைகளை விட்டு வந்துவிட்டபடியால், தாகத்தினால் களைத்து, ஜலம் இருக்கும் இடந்தெரியாமல் மூர்ச்சையடைந்து,

குதிரையின்பேரில் இருந்தபடியே ஒரு நாணற் புதரின் அருகே அரசன் சாய்ந்து கீழே விழுந்துவிட்டான்,

அந்தச் சமயத்தில், அவ் வனத்தில் சஞ்சரித்துக் கொண்டு இருப்பவளாகிய முன் சொன்ன வாளி யென்பவனுடைய மனைவி காளியென்பவள், அங்கே விறகு வெட்டிக் கொண்டிருந்தாள்,

குதிரை வேகமாய் வந்த சந்தடியைக் கேட்டுத் திடுக்கிட்டுத், தன்னை யேதோ காட்டு மிருகமானது, பட்சிப்பதற்காக ஓடி வந்ததென்று பயந்து, நெஞ்சங் கலங்கி, 'இதற்கென்னசெய்வேன்?'' என்று, 'பக்கத்தில் இருக்கும் நாணற் புதரில் நுழைந்துகொள்ளலாம்' என்று எண்ணி, அதில் ஓடி நுழைந்தாள்,

அப்போது, புதரினருகில் ஒரு பெரிய குதிரை நின்று கொண்டிருப்பதையும், அதன்பேரிற் சவாரி செய்துவந்தவன் கீழே விழுந்து மூர்ச்சை யடைந்திருப்பதையும் பார்த்து, 'ஓ! ஓ!! நான் இந்த அசுவம் ஓடிவந்த அரவத்தைக் கேட்டுப் பயந்துவிட்டேன்; நான் நினைத்தபடி நரமாமிச பட்சணம் செய்யும் காட்டுமிருகமல்ல' என்று மனதைத் தேற்றிக்கொண்டாள்,

பின்பு, அவள், சமீபத்திற் போய் பார்த்தபோது அது யாரோ ஒரு அரசன் ஏறிவந்த வாகனத்தைப்போல் இருந்தது. பின்னும் நெருங்கிப் பார்த்தபோது, குதிரையின் காலடியில் இராஜவடிவுள்ள ஓர் மனிதன் இளைப்பினால் மூர்ச்சித்து விழுந்திருந்ததைக் கண்டாள்,

அவனை இன்னானென்று அறியும்படி உற்றுப் பார்த்தபோது, 'அவன் இந்நாட்டை ஆளப்பட்ட அணிபூஷணராஜனாக இருக்கலாம்' என்று நினைத்து, முன்னால் தன் கணவன் மணிபூரண நகரத்தில் அக்கிரமமாய்க் குற்றம் சுமத்தப்பட்டபோது, அதை யறிந்து, அவனை அக் குற்றத்திலிருந்து விடுவித்து, அவன் பசி நீங்க அன்னமும் போட்டனுப்பிய மஹானுபாவனா யிருக்கலாமென்று, அவனை ஸ்தோத்திரஞ் செய்து, "ஆ! ஆ!! இப்படிப்பட்ட புண்

ணிய ஸ்வரூபிக்கும் இவ்வளவு ஆபத்து வந்ததல்லவா," என்று மஹா துயரப்பட்டாள்!

இனி, 'தாமதித்தால் மோசம் வரும்' என்று பயந்து, உடனே அதிக வேகமாய் ஓடிப்போய்ச் சற்றுத் தூரத்தி லிருந்த வொரு மடுவிலிருந்து கொஞ்சம் ஜலம் கொண்டு வந்து, மூர்ச்சை யடைந்திருக்கும் அரசனுக்கு அதிக ஜாக் கிரதையாய் உண்பித்தாள்,

அரசனுக்குத் தாகத்தினால் உண்டான மூர்ச்சையான தால், நீர் அருந்திய சில விநாடிக்குள்ளாக, அவன் நித்திரையி லிருந்து விழித் தெழுந்தவனைப்போல் எழுந்து, தன்னு டைய நிலைமையைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டான்.

பின்பு, பிராணாபாயத்திலிருந்து தன்னை மீட்டவள் முன்னொரு காலத்தில் தன்னால் உபகாரம் அடைந்த வேட னாகிய வாளியென்பவனுடைய மனைவியென்று அறிந்து, 'அவள் ஓர் இழிந்த வனசரனுடைய பெண்ஜாதியாயிருந் தும், பூர்வத்தில் அவள் புருஷனுக்கு நாம் செய்த நன்றி யை மறவாமல், சமயம் வாய்த்தபோது அதற்கெத்தனை யோ மடங்கு அதிகமான இப் பேருதவியைச் செய்தா ளல்லவா?" என்று, அவளுடைய நன்றியறிதலை மிகவும் வியந்து,

[திருக்குறள்: கக-ம் அதி. செய்ந்நன்றியறிதல்—உ-ம் செய்யுள்]

"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது."

என்றபடி, "தக்க சமயத்தில் ஒருவருக்குச் செய்யப்பட்ட உபகாரமானது, அற்பமானதா யிருந்தபோதிலும், அது பூமியைவிட மிகப் பெரிது." என்று நாயனார் அருளிய பிரகா ரம், இவள் செய்த உபகாரத்திற்கு எதையும் சமானமாய்ச் சொல்லக்கூடவில்லையே" என்று சந்தோஷப்பட்டான்.

பின்பு, அரசன் தன்னுடைய புரவிக்கும் ஜலம் குடிப் பித்து, அந்தக் காளியென்பவளைக் கொண்டு அவ் வனத்தி

விருந்த அவளுடைய கணவனையுங் கண்டுபிடித்து, இவர்களிருவரையும் தன் பட்டணத்துக்கு அழைத்துக்கொண்டு போய், அவர்கள் வசிப்பதற்காக ஒரு அலங்காரமான மாளிகையைக் கொடுத்து, வாளிக்குத் தன்னுடைய சேனாதிபதி பட்டங் கட்டிவைத்தான்.

இதனால் காளியென்னும் ஓர் இழிகுலத்து ஸ்திரீக்கு உண்டாயிருந்த உபகார சிந்தையையும், அதனால் அவளுக்கும் அவளுடைய கணவனுக்கும் உண்டான மேன்மையையும் கீர்த்தியையும் பெண்கள் சரியாய் வாசித்தறியவேண்டும்.

## 36-ம் பாடம்

## பொறுமை மேன்மைப்படுத்து மென்பது

பெண்களுக்குப் பொறுமையென்பது, கணவன் என்ன சொன்னாலுங் கோபங் கொள்ளாம லிருத்தலாம்; பெண் பிள்ளையானவள், தன் கணவனைப் பிரீதி செய்து, அவனுடன் ஒருமித்து வாழ்வதற்கு இப் பொறுமையே பிரதானமானதாம். புருஷன் முரட்டுத்தனத்திலாவது, கோபத்தினாலாவது, பெண்சாதியை வைதாலும், அடித்தாலும், அதினால் அவள் மனதை வருத்திக்கொள்ளாமல், அதிக தாழ்மையுடன் அவற்றைப் பொறுத்து, அவனுடைய கோபம் தணியும்படியாக இதமாகிய வார்த்தைகளைப் பேசவேண்டும், அப்படிச் செய்யாமல், அச் சமயங்களில் சிலர், கணவனுடன் எதிர்த்துப் பேசி, அவனுடைய கோபத்தை யதிகரிக்கச் செய்கிறார்கள்.

சில மூர்க்கமுள்ள துஷ்டப் பெண்கள், தம் புருஷர் கோபத்தினால் ஏதாவது வைதார்களானால், பதிலுக்கு அவனை யலட்சியஞ் செய்து, "அட மூடா! உன் அந்தஸ்துக்குப் பெண்சாதியைத் திட்டுவதும் ஒரு கேடா! இன்னும் ஊரிலிருக்கப்பட்ட மற்றப் பெண்களுடைய புருஷரைப்போல் நீயும் எனக்கு எல்லா உடைமைகளையும் போட்

டுச் சீராய் வைத்திருந்தாயானால், உன்னைக் கையால் பிடிக்கக் கூடுமா? அப்போது எவ்வளவு அதிகாரஞ் செலுத்துவாயோ தெரியாது. ச்சீ! ச்சீ!! அந்தமட்டில் வாயை மூடு!

"வகையற்ற மூளிக்கு வாயென்னத்திற்கு?"

என்று, அவனை மதியாமல் வாய்க்கு வந்தபடி பேசிவிடுகிறாள்.

இப்படிப் பேசும் பெண்களை ஊரார், "அப்பா! இவள் அடங்காத பிடாரி! பசுவைப்போல் சாதுவான அந்தப் புருஷனுக்கு இந்தப் பிசாசு எங்கிருந்துவந்து பெண்டாய் வாய்த்தாள்!" என்று பலவாறாய் இகழ்வார்கள்.

இப்படிப் புருஷன் கோபிக்கும்போது, அவனுடன் எதிர்த்துப் பேசி, அவனைத் திட்டுகிற சண்டாளப் பெண்களுடைய கதி யென்னவென்றால்,—

[காசிகாண்டம்]

"கோழுநர் சீறிற் குறுகிமுன் வைபவர்
உழுவை யாகப் பிறப்பர் உறுத்துநேஞ்
சழல மாற்றவள் சீறும் அறிவிலோர்
கழல்கட் கூகைப் பிறப்பில் கழிவரால்."

என்றபடி, அவர்கள் புலி ஜன்மமாகப் பிறப்பார்களாம்.

வேறுசில பெண்கள், தங்கள் கணவர் ஏதோகோபத்தினால் ஒரு அடி அடித்தார்களானால், தலை மயிரை யவிழ்த்துக் காற்றில் சாமரைபோல் ஆடும்படி விட்டுக்கொண்டு, கண்களில் நீர் தாரை தாரையாய்ப் பெருக, அலங்கோலமாய் நடுத்தெருவுக்கு வந்து நின்று, "அட பாவி! தோஷி! இன்னும் உன் இஷ்டம் வந்தவரையில் என்னை அடி! கொல்லு! அந்தப் பாவி வயிற்றிற் பெண்ணாய்ப் பிறந்து, இந்தப் படுபாவி கையில் அடி படும்படியாய் விதித்தானே அந்தப் பாழும் பிரம்மா! அவன் கோயில் இடிய!" என்று அலறி யழுதுகொண்டு, இப்படிப்பட்ட அடிகளை உன்னிடத்தில் யார் படுவார்கள்? இன்றையதினம் உனக்காச்சுது,

எனக்காச்சுது. இதோ! என் உயிரை மாய்த்துக்கொள்ளு கிறேன்'' என்று சொல்லிக்கொண்டு, கிணறு குளங்கள் இருக்கப்பட்ட இடங்களை நோக்கி, ஊரார் சிரிக்கக் கூக்குர லிட்டு ஓடுகிறார்கள்.

இப்படிப்பட்ட துன்மார்க்க ஸ்திரீயினுடைய புருஷன் இதற்கு என்ன செய்வான்? இவளுடைய மூர்க்கத்தைக் கண்டு திகிலடைந்து, ''அடடா! இவளை ஒரு அடி தலையில் அடித்ததற்கு நம்மை இவ்வளவு அவமானப்படுத்திவிட் டாளே, சண்டாளி! இன்னும் இவள் எந்தப் பாழுங் கிணற் றில் விழுந்து நமக்கு என்ன பழி தேடி வைக்கப்போகிறா ளோ'' என்று அவன் பயந்து, அவள் பின்னால் தன் பந் துக்களைக் கூட்டிக்கொண்டு அவளைப்பிடித்துவர ஓடுகிறான். இவனுடைய தலைவிதியைப் பாருங்கள்!

இப்படிப்பட்ட பெண்களால் புருஷருக்கு ஏதாவது சுகமிருக்குமா? இவர்கள் புருஷருக்குக் காலமறிந்து சோறு இடுவார்களா? இப்படிப்பட்ட படுநீலிகளை மனைவிகளாய்க் கொண்ட கணவர், இவர்களால் யாதொரு பலனையும் சவுக் கியத்தையும் அடையாமல், கடைசியாய் அவர்களாலேயே வீணில் உயிரை விடுகிறார்கள். அதினால்,—

[நாலடியார் ௩௭-ம் அதி-பன்னேறி ௩-ம் செய்யுள்.]

''எறியேன் றெதிர்நிற்பாள் கூற்றம் சிறுகாலை
அட்டில் புகாதாள் அரும்பிணி—அட்டதனை
உண்டி யுதவாதாள் இல்வாழ்பேய் இம்மூவர்
கோண்டானைக் கோல்லும் படை.''

என்றபடி, ''இப்படிப்பட்ட பெண்கள் தங்கள் கணவரைக் கொல்லும் ஆயுதம்'' என்று சாஸ்திரங்களிற் சொல்லப்பட் டிருக்கிறது.

மேற்கண்ட விதமாய்த் தங்களுடைய கணவரை நடுத் தெருவுக்கு இழுக்கும் பெண்களை உலகத்தார் இகழ்ச்சி யாய்ப் பேசி நடத்துவதுமல்லாமல், பிற்காலத்திலும் இவர் கள் கொடு நரகில் விழுந்து அழிவார்கள். இப்படிப்பட்ட பழிக்கஞ்சாத பெண்ணோடு கூடி ஒருவன் வாழ்வதைவிட,—

[நல்வழி; ருக-ம் செய்யுள்]

"இழுக்குடைய பாட்டிற் கிசைநன்று; சாலும்
ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று;-வழுக்குடைய
வீரத்தின் நன்று விடாநோய்; பழிக்கஞ்சாத்
தாரத்தி னன்று தனி."

என்றபடி, தனியாயிருந்து வாழ்வதே உத்தமம்.

நற்குணமுள்ள ஸ்திரீகள் தங்கள் கொழுநர் விஷயத்தில் இவ்வாறுய் நடந்துகொள்ளத் துணிவார்களா? ஒருக்காலும் துணியமாட்டார்கள்.

[காசிகாண்டம்]

"இனிய கேள்வர் முனியி லெதிர்நின்று
துணிகோள் நெஞ்சோ டெதிர்மொழி சொல்கலார்;
அனைய கேள்வ ரேறியினு மன்போடுங்
கனிவர் நெஞ்சகங் கற்புடை மாதரே."

என்றபடி, "கற்புள்ள உத்தம ஸ்திரீகள்:

(க) தங்கள் கணவர் கோபித்தால், அவர்களுக்கு எதிர்நின்று கோபமுள்ள மனதோடு எதிர் வார்த்தை சொல்ல மாட்டார்கள்.

(உ) அன்றியும், அப்படிப்பட்ட புருஷர்கள் அடித்தாலும் அன்புடன் மனமகிழ்ந்திருப்பார்கள்."

இவ்வித நடக்கையுள்ள ஸ்திரீகளுக்கல்லவோ உலகத்தில் அதிக மேன்மையும் கீர்த்தியு முண்டு? ஆகையால், பெண்கள், தங்கணவருடைய கோபத்தையும் இன்னுமுள்ள மாமி, மாமன், மைத்துனன் முதலிய சுற்றத்தாருடைய கோப வார்த்தைகளையும் பொறுத்து அடங்கி நடக்கவேண்டும். அப்படி நடப்பதால் இவர்கள் தங்கள் கணவருக்குக் கீர்த்தியை யுண்டாக்கி, அதனுல் தாங்களும் மேன்மையடைவார்கள்,

## 37-ம் பாடம்

# புறங்கூறல் இகழ்ச்சி யென்பது

**புறங்கூறல்** என்பது, ஒருவரைப்பற்றி அவர்க ளில்லாத காலத்தில் மற்றவர்களிடத்தில் இகழ்ச்சியாய்ப் பேசுதலாம். இது இக்காலத்தில் சில பெண்களுக்குச் சாதாரணமான வழக்கமாயிருக்கின்றது. இவர்கள் வேறு பெண்களோடு சம்பாஷிக்கச் சமயம் வாய்த்தபோதெல்லாம், தம் கணவர், மாமியார் முதலியவர்களை யிகழ்ந்து அவமதித்துப் பேசுகிறார்கள். எப்படியென்றால், ஒரு ஸ்திரீயானவள் அண்டை வீட்டுக்காரியோடு பேசிக்கொண்டிருக்கும்போது முறை யிடுவதைக் கேளுங்கள்:—

"அடீ! அண்டைவீட்டு அமராவதி! என் கதையை நீ எப்போதும் கேட்கவில்லையே? அதை நான் என்னவென்று சொல்லப்போகிறேன்" என்று, சற்றே அழுதுகொண்டே சொல்லுவாள்:—

(க) அடீ! இந்தப் படுபாவியாகிய என் புருஷனைக் கட்டிக்கொண்டு நான் என்ன சுகத்தைக் கண்டேன்?

(உ) நல்ல சாப்பாட்டுக்கு வழி யுண்டா?

(ந) நல்ல சீலைக்கும் உடைமைக்கும் கதி யுண்டா?

(ச) இச்சித்த பதார்த்தத்தை வாங்கிச் சாப்பிட மார்க்க முண்டா?

(ரு) ஊரில் அங்கங்கே பெண்கள் என்னென்ன விதமப்ச் சுகித்துச் சந்தோஷமாயிருக்கின்றார்கள். அடீ! அவற்றில் ஏதாவது எனக்கிருக்கிறதா பார்த்தாயா?

(சு) இவைகளெல்லாம் போகட்டும்; என் வயிற்றெரிச்சலுக்காக எப்போதாவது வாயைத் திறந்தால், அந்தச் சண்டாளன் அடிக்க வருகின்றான்.

(எ) அடீ! இவன்தான் இப்படியென்று பார்த்தாலோ இவஷ தாயார் பின்னும் சொல்லவேண்டுவதில்லை.

(அ) "இவளைவிட அவனே மேல்" என்றபடி, அவள் எந்நேரமும் சிடுசிடு என்று முகத்தைச் சுளித்துக்கொண்டு என்னை திட்டிக்கொண்டே யிருக்கிறாள்.

(கூ) ஏதாவது சாக்கு உண்டானால்,

"வெறும் வாயை மெல்லுகிறவளுக்கு
அவல் அகப்பட்டால் சும்மாயிருப்பாளா."

என்று சொல்லுகிறபடி, அவள் அதையே பெரிதாக்கி, அடிக்கடி வாயில் வந்தபடி பேசுகிறாள்,

(ய) இத்தனைக்கும் என் வாயும் சும்மாயிருக்கிறதில்லை.

(கக) அடீ! இப்படிப்பட்ட வேதனைகளைச் சகித்துக் கொண்டிருப்பதைவிட விதவையாய் விடுகிறது நல்லது.

(கஉ) ஆகையால், அந்தப் பாவி சீக்கிரத்தில் செத்தானால் நான் சவுக்கியப்படுவேன்," என்று கைகளை முறுக்கிக் காட்டி இவ்வாறாய் அவர்களைத் தூஷிக்கிறாள்.

இப்படிப்பட்டவளுடைய அயோக்கியதையைப் பாருங்கள். இவள் புருஷன், மாமி முதலான மூத்தோருக்கு அடங்கி, அவர்களை மேற்கண்டவிதமாய்த் தூற்றாமல் இருந்தால், இவளுக்கு இத்தனைக் கஷ்டங்கள் ஏன் வரும்? 'புருஷன் இறந்து போகவேண்டும்' என்று இந்தச் சண்டாளி கோருகிறாளே! இது எவ்வளவு அவிவேகம் கவனித்துப் பாருங்கள்!

"செத்தால் தெரியும் சீமாட்டி வாழ்வு."

என்றபடி,

(க) புருஷன் இறந்த பிற்பாடு ஒரு ஸ்திரீக்கு இருக்கப்பட்ட திண்டாட்டங்கள் கொஞ்சமா?

(உ) அவன் இறந்த பிற்பாடு தான் சவுக்கியப்படலாமென்று இவள் நினைப்பது சரியா?

அவனுக்குப் பக்குவமாய் நடந்து பிரீதி செய்து, அவனுடன் சந்தோஷமாய் வாழ வகை தெரியாமல், அவனைப்

பலவிதமாய் இவள் தூற்றுகின்றாள். இப்படித் தூற்றுவதினால்,—

[கோன்றைவேந்தன்: சஉ-ம் சூத்திரம்]

"தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்,"

என்று ஔவையார் சொல்லியிருக்கிறபடி, "இவளே தன் கணவனுக்கு எமனாவாள்" என்று சொல்ல வேண்டுவதாய் இருக்கின்றது. இவ்விதமாய்ப் புருஷனைப் பழித்துப் பேசுகிறவர்கள்,—

[காசிகாண்டம்]

"கடிம ணஞ்செய்யுங் காதலர் தம்பழி
மடமை யோடு மொழிபவர் மற்றவர்
உடன்வே றுண்டுரை யாடினர் ஓரியாய்
முடிவே லாய்ப் பிறப்பர் முடிவிலே."

என்றபடி,

(க) "கடைசியில் நரியாய்ப் பிறப்பார்கள்.

(உ) தங் கணவருடனே கோபித்துப் பேசுகிறவர்கள் நாயாகப் பிறப்பார்கள்" என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன.

இவ்விதமாய்த் தன் கணவனை யிகழ்ந்து, அவனிடத்தில் அன்பு பாராட்டாதவளை மனைவியாய் வைத்திருப்பது எப்படிப்பட்ட தென்றால்,—

[ஔவையார்]

"கொடிது கொடிது வறுமை கொடிது;
அதனினுங் கொடிது இளமையில் வறுமை;
அதனினுங் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்;
அதனினுங் கொடிது அன்பிலாப் பெண்டிர்;
அதனினுங் கொடிது
இன்புற அவர்கையி லுண்பது தானே."

என்றபடி, உலகத்தில் இது அதிக கொடிதானதாம், "அப்படிப்பட்ட அன்பில்லாத மனைவியின் கையால் இட்டதைப்

புசிப்பது, அதைவிட கொடிது" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

புருஷனைத் தூற்றுவதற்குக் காரணம், அவனிடத்து அன்பில்லாமையாதலால், அவ் வன்பில்லாமையை யிங்கே வருவித்துக் காட்டப்பட்டது.

மேற்சொன்ன நீதிகளைப் பெண்கள் சரியாய்க் கவனித்துத்,

(க) தமக்கு வாய்த்த கணவர் அழகில்லாதவராயும், நோயாளிகளாயும், வறுமையுள்ளவராயும் இருந்தாலும், முன் பாடங்களிற் சொல்லியிருக்கும் கமலாவதி, நேத்திரமணி முதலான ஸ்திரீ ரத்தினங்களைப்போல் அவர்களைக் குபேரனாகவும், மன்மதனாகவும் பாவித்து,

(உ) அவர்களுடைய கோபங்களைத் தணித்து,

(ங) அவர்களிடத்தில் அன்பு பாராட்டி,

(ச) அவர்களை வெளியில் தூற்றாமல் மேன்மைப் படுத்திக்கொண்டு நடந்துவரவேண்டும்.

## 38-ம் பாடம்

## சண்டைபிடித்தல் புத்தியீனம் என்பது

பெண்களிற் சிலர் அயலாரோடு அடிக்கடி சண்டை பிடிப்பதில் அதிக விருப்பமுள்ளவர்களா யிருக்கின்றார்கள். ஒருவேளை அப்படிச் சண்டை பிடிப்பதற்குத் தகுந்த முகாந்தரம் நேரிடாவிட்டாலும், இதற்குமுன் ஒருவருக்கொருவர் பட்ட மனஸ்தாபங்களை மறுபடி பேசி, அவர்கள் வீணில் சண்டை யெழுப்புவது முண்டு. இவர்கள் சண்டைபோடுங் காரணத்தை யோசித்துப் பார்த்தாலோ, அது மகா அற்பமானது. ஆயினும், இவர்கள் போடப்பட்ட கூச்சலாலும்

பிரயோகிக்கும் துர்ப்பாஷைகளாலும் அதை மலையாய் வளர்த்தித், தெருவிலுள்ளவர்க ளெல்லாம் "இதென்ன! இதென்ன!" என்று கவனித்துக் கேட்கும்படி யாக்கிவிடு கின்றூர்கள்.

தன் குழந்தையும், தன் பக்கத்து வீட்டுக்காரியின் குழந்தையும் விளையாடிக் கொண்டிருக்கும்போது, ஒன்றை மற்றொன்று, குழந்தைகளின் இயல்பின்படி, "அட போடா கழுதை" என்ருவது, மற்றெவ்விதமான வேறு மொழிகளா லாவது திட்டிக்கொண்டால்,

(க) தாய்மார் இவற்றைச் சற்ருவது லக்ஷியஞ் செய்ய லாகாது.

(உ) "இப்படித் தூஷித்துக்கொள்வது சிறு குழந்தை களின் இயற்கை" என்று, அவர்களுக்கு நல்ல வார்த்தைக ளால் புத்தி சொல்லவேண்டும்.

(ங) அப்படிப்பட்ட வார்த்தைகளை யிவர்கள் செவி கொடுத்துக் கேட்கவுங் கூடாது.

(ச) அதைச் சண்டைக்குக் காரணமாகவும் கொள்ள லாகாது.

இவ்வாறு செய்வதை விட்டுச், சண்டையை விலைக்கு வாங்கும் சில மூதேவிகள், இப்படிப்பட்ட வார்த்தையைக் கேட்டவுடன்,

"எட்டினது சண்டை, இறக்கடி கூடையை."

என்றபடி, தாங்கள் முன் கவனித்துக் கொண்டிருந்த மற்ற றெல்லா வேலைகளையும் விட்டுவிட்டு, உடனே திட்டின குழந்தையிடத்தில் ஓடிவந்து, சண்டைக்கு ஆரம்பம் செய்து கொள்ளுகிருர்கள். எப்படியென்ருல், மேற்சொன்ன வித மாய்த் தன் பிள்ளையை வேறொரு பிள்ளை திட்டும்போது கேட்டவள்:

(க) "அட பையா! எங்கள் பையனை என்னவென்று திட்டினுய்? கழுதையா? ஆம்! ஆம்!! எங்கள் பையனும்

கழுதைதான், அந்தப் பையனைப் பெற்றவளுங் கழுதை தான்," என்று சொல்லி,

(உ) இல்லாத வியாக்கியானங்களை உண்டுபண்ணிக் கொண்டு,

(ங) "எங்கே உன் தாயார்? 'யார் கழுதை' என்று அவளையே கேழ்ப்போம் வா!"

என்று அந்தப் பிள்ளையைக் கைபிடித் திழுத்துக் கொண்டு,

"வல்லடி வழக்குச் சோல்லடி மாமி!"

என்று அவளிடத்திற்குப் போகிறாள்.

அந்தப் பிள்ளையின் தாயானவள், வேறொருத்தி தன் பிள்ளையை அநியாயமாய் இழுத்துக்கொண்டு வருவதைப் பார்த்துப் பொறுக்காமல்,

(க) "ஆரடி நீலி?

(உ) சிறு பிள்ளை தெரியாமல் விளையாட்டால் ஒரு வார்த்தை சொன்னதற்காக, அவன் சிறு பாலகனென்றும் பாராமல், இப்படியும் இழுத்துக்கொண்டு வரலாமா?

(ங) உனக்கு இவ்வளவு அதிகாரம் கொடுத்தவன் ஆரடி?

(ச) உன்னைக் கொண்டவனென்ன தேச ராஜாவோ?" என்று, இப்படியாக வயிற்றெரிச்சலால் சில வார்த்தைகளைச் சொல்லுகிறாள்.

இதைக் கேட்டு அவள்:

(க) "அடி! என்ன சொன்னாய்? என்ன சொன்னாய்?

(உ) நான் நீலியா?

(ங) இன்னொருதரம் சொல்லு? இன்னொருதரம் சொல்லு?"

என்று பேச்சுகளை வளர்த்தித், துரும்பைத் தூணாக்கி, ஆரம்பித்த வழக்கை விட்டு நூதன வழக்குகளை யேற்

படுத்தி, அவளுடைய மடியைப் பிடித்திழுத்துக்கொண்டு, அக்கம் பக்கங்களில் உள்ளவர்களெல்லாம் சிரித்து வேடிக்கை பார்க்கும்படி, சண்டை போட்டுக்கொண்டு நடுத் தெருவுக்கு வந்துவிடுகிறாள்.

இப்படிப்பட்டவர்களை எவ்வளவு அயோக்கியமானவர்களென்று சொல்லும்படி யிருக்கிறது? இவர்கள் சண்டை போடுவதற்கு ஏற்படுத்திக்கொள்ளும் காரணங்களும் எவ்வளவு அற்பமாயிருக்கிறதென்று பாருங்கள்!

இப்படிச், சிறு பிள்ளைகள் விளையாட்டுத் தனத்தினால், பேசிக்கொள்ளும் பேச்சுகளையாவது, செய்யும் செய்கைகளையாவது குற்றமாய்ப் பாராட்டாமல், பெண்கள் அலக்ஷியம் செய்துவிடவேண்டும், இவைகளன்றி, வேறென்ன முகாந்திரங்கள் நேரிட்டபோதிலும், அவைகளுக்காகப் பெண்கள் அயலாரோடு சச்சரவு செய்யக்கூடாது.

சில பெண்கள் இப்படி ஒழுங்கீனமாய்ச் சண்டைபிடிக்கும் குணமுடையவர்களா யிருக்கிறதைப்பற்றி,—

[விவேகசிந்தாமணி: க-ம் பாகம்: உகூ-ம் செய்யுள்]

"வண்டகே ளிருந்திடில் மதுவை யுண்டிடும்;
தண்டமி ழிருந்திடில் சங்கஞ் சேர்ந்திடும்;
குண்டுணி யிருந்திடிற் கோள்கள் மிஞ்சிடும்;
பெண்டுகே ளிருந்திடிற் பெரிய சண்டையாம்,"

என்பதாய், இவர்களால் உலகத்திலுள்ள மற்றெல்லாப் பெண்களுக்கும் பழிப்புண்டா யிருக்கின்றது. ஆகையால், யாவரோடும் சமாதானமாய் வாழ்வதே பெண்களுக்கு நன்மையை யுண்டாக்கும்.

39-ம் பாடம்

## பரபுருஷரை யிச்சித்தல் மகா கோடிதென்பது

**பரபுருஷரை** யிச்சித்த லென்பது, தனக்கு வாய்த்த கணவனை விட்டு, அந்நிய புருஷர்மீதில் ஆசை கொள்ளுத லாம். உலகத்தில் ஸ்திரீகளுக்கு அவமானத்துடன், தீங் கைத் தருவதும், தங்கள் குடும்பத்திற்கு என்றும் நீங்காத அபகீர்த்தியை யுண்டாக்குவதும் விபசாரத்தை விட வேறு கிடையாது.

தங்களுக்கு நேரிட்ட புருஷர் சற்றே அழகிலாவது, சம்பத்திலாவது, குணத்திலாவது குறைந்தவரா யிருந்தால் அவர்களை யசட்டை செய்து, அழகும் சம்பத்துமுள்ள பர புருஷரைச் சில ஸ்திரீகள் இச்சிக்கின்றார்கள். இது பெரிய அவிவேகம்.

"கல்லேன்றாலுங் கணவன், புல்லேன்றாலும் புருஷன்."

என்னும் பழமொழியின்படி, அவன் எப்படிப்பட்டவனா யிருந்தபோதிலும், பெண்ணானவள் அவனைத் தன் பத்தா வென்று மதித்து, அவன்மேல் விசுவாசம் வைத்து நடக்க வேண்டும். இதை விட்டு, அந்நியர்மேல் ஆசைகொள்ளும் பெண்களை உலகத்தார்:

(க) "விபசாரி" என்றும்,

(உ) "துஷ்டை" என்றும்,

(ங) "கொண்ட கணவனுக்கு இரண்டகஞ் செய்யும் கொடும் பாவி" என்றும், பலவிதமாய்த் தூஷிப்பார்கள்.

இத் தூஷணையும் இகழ்ச்சியும், நெறி தவறி நடக்கும் இப் பெண்ணுக்கு மாத்திரம் சேர்ந்தவைகளல்ல. அப் படிப்பட்டவளை மனைவியாகக் கொண்ட நிர்ப்பாக்கியனான அவள் கணவனுக்கும், தாய் தந்தைமுதலான சுற்றத்தா ருக்கும் அவைகள் சேர்ந்தவைகளாம். இவ்வித வசை

களுக்கு அஞ்சித் துஷ்டச் செய்கையுள்ள பெண்களைக் கணவர் தம் வீட்டினின்றும் நீக்கிவிடுகின்றார்கள். இப்படி நீக்குவதில் புருஷர்பேரில் குற்றஞ் சொல்வதற்கில்லை. ஏனென்றால், இவ்விதமான பெண்கள் வீட்டிலிருக்கும் வரையில் குடும்பத்தில் கலகங்களும், உயிர்ச்சேத முதலாகிய பலவித துன்பங்களு முண்டாகின்றன. ஆகையால்,—

[இனிது நாற்பது: கக-ம் செய்யுள்]

"கடமுண்டு வாழாமை காண்ட லினிதே;
நிறைமாண்பில் பேண்டிரை நீக்க லினிதே
மனமாண்பி லாதாரை யஞ்சி யகறல்
எனைமாண்பு தானினிது நன்கு."

என்று சொல்லியிருக்கிறபடி, "அவர்களை நீக்கிவிடுவதே மெத்த சுகத்தைத் தருவதாகும்."

[நீதிசாரம்: ருஉ-ம் செய்யுள்]

"தலைவனோ டெதிர்த்து ரைத்துச் சிறுதனந் தேடித் தானும்
பலரணு கூலி யாகிப் பத்தாமுன் அசனஞ் செய்தும்
கலகமா யோருவர் பேச்சை யுரைத்துப்போர் காணுவாளும்
நலமிகு சேய்கள் பெற்றுப் பெருகினும் விடுவர் நல்லோர்."

என்றபடி, "அவ்வித சண்டாளிகள் நல்ல பிள்ளைகளைப் பெற்றவர்களாயிருந்தாலும் அவர்களை வீட்டில் வைக்காமல் நீக்கிவிடுவதே நன்மையாகும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும், இக் கொடிய விபசாரம் என்னும் செய்கையை விரும்பும் அற்ப ஸ்திரீகள், அதினால் ஏதாகிலும் இலாபமடைகின்றார்களாவென்று யோசித்துப் பார்த்தாலோ, ஒன்றையும் காணோம். பிற்காலத்தில்,

"வாய்த் தவிடும்போய் அடுப்பு நெருப்பு மவிந்தது."

போல் "நம்முடைய விதிவசமாயிற்றே!" என்று தங்களுடைய விதியைத் தாங்களே நொந்துகொள்ளும்படியான ஸ்திதியில் வந்துவிடுகிறார்கள்.

வனென்றால், (க) முதலில் இப்படிக்கணவனைத் துரோ கஞ்செய்து பரபுருஷரிடம் நட்புவைக்கும் விபசாரிகளின் பேரில் அப் பரபுருஷர் வெகுகாலம் விசுவாசம் வைப்ப தில்லை.

(உ) மேலும், "மணம் புரிந்தவனை மோசஞ்செய்து நம் மிடம் வந்தவளல்லவா! நம்மையும் அப்படியே எப்போதாகி லும் மோசஞ் செய்வாள்" என்று அவர்களிடத்தில் சாதா ரணமாய்ப் புருஷருக்கு நம்பிக்கை யிருக்கிறதில்லை,

(ந) யௌவனமாயிருக்கும் வரையில் இவளிடத்தில் ப்ரீதியாயிருந்து, ஒருவன் இவளைச் சவரட்சணை செய்து வரலாம்.

(ச) பின்னிட்டு,

"ஆசை அறுபது நாள், மோகம் முப்பதுநாள்."

என்பதுபோல, அவளுக்கு யௌவனம் நீங்கின பிற்பாடு அவளை மெதுவாய்க் கைநழுவ விட்டுவிடுவான்.

அவளுடைய நிலைமை பிறகு எப்படி யிருக்குமென்று யோசித்துப் பாருங்கள்!

(க) சவரட்சணையினிமித்தம் அப்போது அவள் தன் சுற்றத்தாரிடத்திற்குப் போவதற்கும் மார்க்கமிராது,

(உ) அல்லது, வேறே புருஷரைத் தேடிக்கொள்ளவதற் கும் யௌவனம் போய்விட்டபடியால் சரிப்படுகிறதில்லை.

(ந) இதன்பேரில் கடைசியாய்க், குடிக்கக் கஞ்சிக்கும் கட்டக் கந்தைக்கும் வழியற்றுக், கையில் ஓட்டை யெடுத் துக்கொண்டு பிச்சையெடுக்க வீதிக்கு வந்துவிடுகின்றாள்.

புருஷனைத் துரோகஞ்செய்து அவனை விட்டு அயலா ரிடம் போக யிச்சைகொள்ளும் ஸ்திரீகள் பெரும்பாலும் இதேமாதிரியான முடிவுக்கு வந்துவிடுகிறார்க ளென்பதற்கு நாம் அநேக திருஷ்டாந்தங்களைப் பிரத்தியட்சமாய்க் காண்கின்றோம்.

விபசாரிகளின் செய்கையானது:

முதலாவது: அந்த ஸ்திரீக்கும்,

இரண்டாவது: அவளை மணம்புரிந்த கணவனுக்கும்,

மூன்றாவது: அவளை யிச்சித்த அந்நிய புருஷனுக்கும்,

ஆக மூன்று திறத்தாருக்கும் துன்பத்தை யுண்டாக்குகிறது. எப்படி யென்றால்,

(க) ஒரு ஸ்திரீயானவள் பரபுருஷனை யிச்சித்தாளென் றறிந்த அவளுடைய சொந்தப் புருஷனுக்கு அவள்பேரில் அதிக கோபம் உண்டாய், 'இவளால் நமக்கு இவ்வளவு அவமானம் வந்த பின்னிட்டு, இவ் வுலகத்தில் நாம் உயிரோடு வாழ்வதில் என்ன பலன்?" என்றுநினைத்துத் தன்னைத் தானே கொலை செய்துகொள்ளுகிறான்.

(உ) இன்னொருவன், தன் நாயகியை அயலான் இச்சித்தானல்லவா என்று மாச்சரியங் கொண்டு சமயம் பார்த்து, அவனைக் கொன்றுபோடுகிறான்,

(ங) மற்றொருவன், "இவள் நம்முடைய மனைவியாயிருந்தும் நம்மைத் துரோகஞ்செய்து, வேறு மனிதனை யிச்சித்தாளல்லவா" என்று துயரங் கொண்டு, அவளை உயிர் வதை செய்துவிடுகிறான்,

பின்னால் சொன்ன இருதிறத்தாரையும் கொலை செய்த குற்றத்திற்காக இராஜாங்கத்தார் பிடித்து, மரண தண்டனையும் விதித்துப்போடுகிறார்கள்.

இவ்வித தீங்குகளுக்குக் காரணமாயிருக்கும் விபசாரிக்குக் கடைசியாய் எவ்விதமான முடிவு உண்டாகுமென்றால்,

[காசிகாண்டம்]

"பொருவில் கற்பின் வழீஇய புன்மங்கையர்க்
குரிய மூன்று மரபினுள் ளோரையும்
வெருவந் தேங்க விழுங்கி யுமிழ்கிலா
வெரியுந் தீநர கிற்குடி யேற்றுவார்."

என்றபடிக்கு,

(க) "அவ்விதமான பாதகத்தைச் செய்யும் பெண்கள், கொடு நரகில் விழுந்து தாமழிவதல்லாமல்,

(உ) தங்கள் மூன்று தலைமுறையிலுள்ளோரையும் எரிகின்ற நரகத்திக்குக் குடியேற்றுவார்கள்" என்பதாய் சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது.

40-ம் பாடம்

## விபசாரியின் முடிவு

### [வச்சிராங்கியின் கதை]

மச்சராச்சியமென்னும் நாட்டில் கச்சிநாதன் என்னும் ஓர் செல்வவந்த னிருந்தான், இவனுக்கு வச்சிராங்கி யென்னும் மனைவியொருத்தி யிருந்தாள். இவள் தன் கணவன் பேரில் அதிக விசுவாசமுள்ளவளைப்போல அவன் எதிரில் மாத்திரம் நடித்துக்கொண்டு வருவாள். ஆனால், உள்ளத்தில் பரபுருஷரை யிச்சிக்குந் தன்மையுள்ளவளா யிருந்தாள். இந்நிமித்தம் அவள், தன் கணவன் வீட்டிலில்லாத சமயத்தை யெதிர்ப்பார்த்துக்கொண்டே யிருப்பாள், இவள் இரகசியமாய் அவ் வீதியிலிருக்கும் ஒரு தட்டானைச் சோரநாயகனாக வைத்துக்கொண்டிருந்தாள். புருஷன் வியாபார முதலிய அலுவல் நிமித்தம் தூரதேசத்துக்குப் பிரயாணமாய்ப் புறப்பட்டவுடனே,

"காற்றுள்ளபோதே தூற்றிக்கோள்"

என்றபடி, தன் வேலைக்காரரை விட்டுத் தட்டானை யழைப்பித்துக்கொண்டு தன்னிஷ்டப்படி யவனோடு சுகித்திருப்பாள்.

இப்படிச் சிலகாலம் நடந்துகொண்டே வந்தது; வச்சிராங்கிக்குப் பிள்ளை யில்லாமையால் ஒரு பஞ்சவர்ணக் கிளி

யையும், ஒரு உயர்ந்த ஜாதி நாயையும், இவள் மெத்த பட்சமாய் வளர்த்துக்கொண்டு வந்தாள்.

அவைகளில் பஞ்சவர்ணக்கிளியானது, மகா அறிவுள்ளதும், மனிதர்களைப்போல சாதாரணமாய்ப் பேசும் சாமர்த்தியமுள்ளதாயு மிருந்தது. இந்தக் கிளியும், நாயும் எந்நேரமும் ஒன்றுக்கொன்று விளையாடிக்கொண்டு அதிக நேசமாய்ப் பழகி யிருந்தது.

இப்படியிருக்க, கலியாண நாட்களில் தட்டாருக்கு ஆபரணங்கள் செய்யும் வேலைகள் மிகுதியாயிருந்தபடியால், அவ் வேலைகளின் தொந்திரவால் ஒருநாள் இராத்திரி வச்சிராங்கியின் சோரநாயகன் பன்னிரண்டு மணிவரையில் வரவில்லை. அதுவரையில் தட்டான் வராமையால், "ஐயோ! என்னுசை நாயகன் இன்னும் வரவில்லையே; இவ்வளவு நேரமாய்விட்டதே; இன்றைய தினம் வருகிறாரோ இல்லையோ" என்று, மகா வியாகூலப்பட்டுக்கொண்டு, நித்திரை யில்லாமல், அடிக்கடி வீதியில் வந்து அவன் வரும் வழியைப் பார்க்கிறதும், திரும்பி உள்ளே வந்து சற்றுநேரம் படுக்கிறதுமாயிருந்தாள்.

இப்படி யிவள் வாதைப்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டிருந்த பஞ்சவர்ணக் கிளியானது, இவளுடைய சொந்தக்கணவ னிருக்கும்போது அவனுக் கெதிரில் இவள் செய்துவந்த கள்ள உபசாரங்களையும், அவன் இல்லாத காலத்தில் இவள் பரபுருஷனோடு கூடிச் சுகித்திருப்பதையும், அவன் ஒருநாள் வர நேரமாய் விட்டதற்காக இவள் படுந் துயரத்தையும் பார்த்து,

[நீதிவெண்பா ருரு-ம் செய்யுள்]

"அத்தி மலரும், அருங்காக்கை வெண்ணிறமும்,
கத்துபுனன் மீன்பதமுங் கண்டாலும்—பித்தரே!
காணர் பேரிய கடவுளருங் காண்பரோ?
மாணர் விழியார் மனம்."

[விவேக சிந்தாமணி: க-ம் பாகம்: கக-ம் செய்யுள்]

"ஆல கால விஷத்தையு நம்பலாம்;
ஆற்றை யும்பெருங் காற்றையு நம்பலாம்;
கோல மாமத யானையை நம்பலாம்;
கோல்லும் வேங்கைப் புலியையு நம்பலாம்;
கால னூர்விடு தூதரை நம்பலாம்;
கள்ளர் வேடர் மறவரை நம்பலாம்;
சேலை கட்டிய மாதரை நம்பினால்
தெருவில் நின்று தியங்கித் தவிப்பரே."

என்னுஞ் செய்யுட்களைச் சொல்லித் தனக்குள்ளே அதிசயித்துச் சிரித்தது.

## 41-ம் பாடம்

## விபசாரியின் முடிவு (தொடர்ச்சி)

### [வச்சிராங்கியின் கதை]

இதைக் கேட்ட வச்சிராங்கி, "ஓ! ஓ!! மோசம் வந்தது.

"வேலிக்குப் போட்ட முள் காலுக்குத் தைத்தது."

என்பதுபோ லாயிற்று. நம்முடைய சங்கதிகளை இந்தக் கிளியானது எப்படியோ தெரிந்துகொண்டது. அதுவுமல்லாமல், "ஸ்திரீகளை நம்பக்கூடாது" என்று இகழும்படியான இரண்டு கவிகளையும் பாடிவிட்டது. இனி யிதை நாம் நம்பலாகாது. இது நமக்குத் "தலைமாட்டுக் கொள்ளி"யாய் விட்டது. நம்முடைய புருஷன் வந்தால் இந்த நடத்தைகளை யெல்லாம் இது ஆதியோடந்தமாய்ச் சொல்லிவிடுமென்பதற்குச் சந்தேகமே யில்லை" என்று பயந்து, "கிளியைக் கொல்வது பாவம்" என்று இந்தப் பாதகி சற்றுவது இரங்காமல், அந்த மகா அறிவுள்ள கிளியைப் பிடித்து, அதன் கழுத்தை முறித்துக் கொன்றுபோட்டாள்.

இதன் கழுத்தை முறிக்கும்போது உண்டான சந்தடியால் அங்கிருந்த நாயானது பார்த்துத் தன்னுடைய பிரிய நேசனாகிய கிளிக்கு நேரிட்ட விபத்துக்காக மிகவும் துக்கங் கொண்டு, தன்னையும் இந்தச் சண்டாளி சொல்லப்போகிறாளென்று பயந்து ஓடிவந்து வீதித் திண்ணையின்பேரில் படுத்துக்கொண்டது.

இதற்குள்ளாகத் தட்டான், 'ஓ! ஓ!! இன்றைக்கு வெகு நேரமாய்விட்டதே; வச்சிராங்கி யென்ன மனவருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறாளோ;

"கரும்பு தின்னக் கூலி வேண்டுமோ?"

என்று நம்மை யென்ன திட்டப்போகிறாளோ' என்று, சற்றே கூச்சப்பட்டுக்கொண்டே அதிக விசையாக நடந்து, அவள் வீட்டின் வாசற்படிக்குள் நுழைந்தான்.

இப்படி நுழைந்து கொண்டிருக்கும்போது யாரோ திருடன் தன் எஜமான வீட்டுக்குள் பிரவேசிக்கிறானென்று திண்ணையினபேரில் படுத்துக் கொண்டிருந்த நாயானது குலைத்துக்கொண்டு, அந்தச் சோரநாயகன் பேரில் விழுந்து, அவனைக் கடித்துக் கொன்றுவிட்டது.

தட்டானுக்குப் பிராணன் போகும்போது, அவன் அலறியழுத கூக்குரலைக் கேட்ட வச்சிராங்கி திடுக்கிட்டு, விளக்கை யெடுத்துக்கொண்டு வந்து பார்க்கும்போது, தன் ஆசைச் சோரநாயகன் அதற்குள்ளாக வாசற்படியில் 'அடியற்ற பனை'யைப்போல் விழுந்து இறந்து கிடப்பதைப் பார்த்து, மீளாத் துயரங் கொண்டவளாய்,

"உப்புக் கண்டம் பறிகொடுத்த பார்ப்பாத்தி",

யைப்போல், வெளியில் சொல்லிக்கொள்வதற் கில்லாமல் சற்றுநேரம் திகைத்து நின்றாள்.

பின்பு, 'ஐயோ' வீட்டுப் பிணம் காட்டுக்குப் போக வேண்டுமே! இதை நாட்டிலுள்ளோர் தெரிந்துகொள்வார்களே' என்று விரைந்து, அப் பிணத்தை யிழுத்துக்கொண்டு போய், தன வீட்டுத் தோட்டத்தில் ஒருவருக்குந் தெரியா

மல் அந்த இருண்ட இரவிலேயே பள்ளந்தோண்டி, முன் தன்னால் கொலையுண்ட பஞ்சவர்ண கிளியைப் புதைத்திருந்த இடத்துக்குப் பக்கத்திற் புதைத்துவிட்டாள்.

அதின்பேரில், தன் ஆசை நாயகனைக் கொன்றது இந்த நாயல்லவாவென்று அதிக கோபங்கொண்டு, அதைப் பிடிப்பதற்கு வச்சிராங்கியானவள் மெதுவாய் அதன் சமீபத்திற்குப் போனாள். அதை நாயறிந்து, 'கிளியின்கதி நமக்கும் வரப்போகிறது' என்று பயந்து, விசையாய் ஓடித் தெருவுக்குத் தப்பித்துக்கொண்டு வந்துவிட்டது.

இப்படியாக வச்சிராங்கி கையில் தப்பிக்கொண்டு ஓடி வந்த அந்த நாயானது, அன்றுமுதல் அந்த வீட்டின் வாசற்படியைக்கூட எட்டிப் பாராமல், அக்கிராரத்து நாயைப் போல் ஊரில் வயிற்றை வளர்த்துக்கொண்டு, தன் எஜமானன் எப்போது திரும்பி வருவானோவென்று, அவன் போன வழியை யெதிர் பார்த்தபடி தியங்கிக்கொண்டிருந்தது,

இப்படியே ஒருமாதங் கழிந்தபின்பு, வியாபாரத்துக்காகத் தூரதேசம் போயிருந்த கச்சிநாதன் தன் அலுவல்களையெல்லாம் முடித்துக்கொண்டு ஊருக்கு வந்து சேர்ந்தான்,

இவனைப் பார்த்தவுடன் வச்சிராங்கியானவள் மெத்த ஆநந்த மடைந்தவளைப்போலப் புருஷனைக்கட்டி முத்தமிட்டு, "பிராணநாதரே! இத்தனைநாள் உம்மைப் பிரிந்திருக்கும்படியான நிர்ப்பாக்கியத்தை யடியாள் பெற்றேனல்லவா!" என்று சொல்லிவிட்டு, வீட்டை யலங்கரித்துப் புருஷனுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்துகொண்டிருந்தாள்.

இப்படியிருக்கும்போது, கச்சிநாதனும் தன்மனைவியை வெகுநாள் பிரிந்திருந்தமையால் விருப்பம் மேலிட்டவனாய்ப், பிரிய வசனங்களை வசனித்துக் கொண்டிருக்கையில், பஞ்சவர்னக் கிளியைக் காணாமையால், "பெண்ணே! நம்முடைய பஞ்சவர்னக்கிளி யெங்கே காணோமே?" என்று திடுக்கிட்டுக் கேட்டான்.

அதற்கு அந்தப் பாசாங்குக்காரி, "ஓ! என் ஆசை நேசரே! ஒருநாள் அக் கிளியை மெத்தையின்பேரில் நான் வைத்துப் பாலும் பழமும் கொடுத்துக் கொண்டிருக்கையில் எங்கேயோயிருந்து ஒரு துன்மார்க்கப் பூனை வந்து பிடித்துக்கொண்டு போயிற்று" என்று, அதிக விசனத்துடன் சொல்லி யழுதாள்.

கச்சிநாதனும் இதைக் கேட்டு மகா துயரப்பட்டுக் கொண்டிருக்கையில், எஜமானன் வரவை யெவ்விதத்தினாலோ தெரிந்துகொண்ட நாயானது, அவனிடம் வீட்டுக்குள் ஓடிவந்து, இத்தனை நாள் தன் எஜமானனை விட்டுப் பிரிந்ததைத் துயரமாய்க் காட்டும்படியாக, அவன் காலண்டை வாலைக் குழைத்துக்கொண்டு, அதிக விசனத்துடன் சுற்றிக்கொண்டிருந்தது.

இதைக் கண்ட கச்சிநாதன், "இதென்ன! நாய் அடிக்கடி தோட்டத்திற்குப் போகிறதும் நம்மிடத்தில் வருகிறதுமாயிருக்கிறதே" என்று, ஒரு விளக்கை யெடுத்துக்கொண்டு போய்ப் பார்க்கையில், அங்கே கொஞ்சம் துர்க்கந்தம் உண்டாயிற்று.

"இங்கே துர்க்கந்தம் உண்டாவதற்கு என்ன காரணம்?" என்று தன் மனைவியைக் கச்சிநாதன் கேட்க, அவள் தனக்கொன்றுந் தெரியாதென்று சொல்லிவிட்டாள்.

அதினால் அவனுக்கு வச்சிராங்கிமேபரிலும் அனுமானமுண்டாய், உடனே அந்த இடத்தில் தன் வேலைக்காரரை விட்டுத் தோண்டச் சொன்னான்.

"கேட்டிக்காரியின் புளுகு எட்டுநாளில் தெரியும்."

என்னும் பழமொழியின்படி, தோண்டின இடத்தில் ஒரு மானிடப்பிரேதமும், கொலையுண்ட பஞ்சவர்னக்கிளியினுடலும் அகப்பட்டது.

இவைகளையெல்லாம் பார்த்த கச்சிநாதன், தன் நாயானது இங்கே நாமில்லாத காலத்தில் நடந்த செய்கைகள் குற்றமானவையென்று மனதில் வைத்திருந்து, நாம் வந்த

வுடன் நமக்குக் காட்டிட்டென்று, நடந்த செய்கைகளை அனுமானப் பிரத்தியட்சத்தால் கண்டறிந்து, இவைகளெல்லாம் வஞ்சனைக்காரியாகிய தன் பாரியாள் செய்த கொடுஞ் செய்கைகளின் விளைவென்று அதிக கோபாவேசங்கொண்டு அவளை யொரு கத்தியால் வெட்டிக்கொன்று,

"எதிரிக்கு வெட்டின பள்ளம் தனது"

என்பதைப்போல் கிளியைப் புதைத்திருந்த பள்ளத்தில் அவளையும் புதைத்துப் போட்டான். இது சேதி ஊரெங்கும் பிரசித்தமாய், கச்சிநாதனுக்கு அதிக அவமானமும் துன்பமும் நேரிட்டது. தன் சொந்தக் கணவனுக்கு இரண்டகஞ் செய்து, அயலானுகிய தட்டானை வச்சிராங்கி இச்சித்ததினல் உண்டான மானக்கேட்டையும் முடிவையும் இன்னின்னவை யென்று இதை வாசிக்கும் பெண்கள் சரியாகக் கவனித்துப் பார்க்கவேண்டும். மேலும்,

[நீதிசாரம் சுய-ம் செய்யுள்]

"மின்னன்மை விபசா ரத்து மிகுந்திடு தவத்தி னன்மை
மன்னிய கோபத் தாலும் வயங்குநீ ருவட்டி னலும்,
பன்னிடு மறையோர் நன்மை பரமின்னள் சேர்த லாலும்,
மன்னவ னனீதத் தாலு மடிந்திடு நன்மை தானே,"

என்றபடி,

(க) தவஞ்செய்வோருடைய பெருமை கோபத்தாலும்

(உ) ஜலத்தினுடைய தன்மை உவரினுலும்,

(ந) வேதம் ஓதும் அந்தணருடைய பெருமை பரஸ்திரீ சம்போகத்திஞலும்,

(ச) அரசனுடைய பெருமை நீதி தவறுவதினுலும் அழிந்துபோவதைப்போல்,

(ரு) ஸ்திரீகளினுடைய பெருமை யிந்தக் கொடிய விபசாரத்தா லழிந்துபோகிறது."

மேலும், பெண்களே! இவ் விஷயமாய் முன்னல் தனபதி யரசன் விபசார எண்ணங்கொண்ட தாரைக்குச்

சொன்ன நீதிகளையும் அடிக்கடி கவனித்துப் பார்த்து விப சாரமென்னுங் கொடிய நடத்தையை உங்களிடம் அணுகா மற்படி பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

42-ம் பாடம்

## சோம்பல் கேட்டைத் தருமென்பது

சோம்பலென்பது, தாம் செய்யுங் காரியங்களிற் சாக்கிரதையும் சுறுசுறுப்பு மில்லாமையாம். இச் சோம்பலானது பெண்களுக்கு மிக்க கேட்டைத் தருவதாயிருக்கிறபடியால், இது அவர்களிடத்தில் சற்றுகிலு மிருக்கக்கூடாது ஏனென்றால்,

(க) பெண்ணானவள்: தன் கணவன் படுக்கையிலிருந்து எழுந்திருப்பதற்கு முன்னால் எழுந்து, தன்னுடைய நித்தியக் கடன்களை முடித்துக்கொண்டு, அவனுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்ய வேண்டியவளா யிருக்கிறாளென்று முன்னமே சொன்னோம்,

(உ) மேலும், அவன் தன்னுடைய தொழில் நிமித்தம் வெளியிற்போய் வருவதற்குள்ளாக, அவனுக்கு வேண்டிய உணவு முதலியவைகளைச் சித்தப் படுத்திக்கொண்டு, அவன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டியவளா யிருக்கிறாள்.

(ங) இவற்றோடு தன் பிள்ளைகளுக்கும் அப்போதைக் கப்போது தேவையானவைகளைக் கொடுத்து, அவர்களைப் பள்ளிக்கூடத்திற்குக் காலந் தவறாமல் அனுப்பவேண்டியவளாயிருக்கிறாள்.

(ச) இதுவுமல்லாமல், தன் வீட்டிலிருக்கும் மாமன், மாமி, மூத்தார், மைத்துனர் முதலியவர்களுக்குஞ் செய்ய வேண்டிய பணிவிடைகளை மனங் கோணாமல் ஜாக்கிரதையுடன் செய்துகொண்டு வரவேண்டியவளா யிருக்கிறாள்.

ஒரு ஸ்திரீயானவள் இத்தனை விஷயங்களைக் கவனிக்க வேண்டியவளா யிருப்பதால், அவள் சோம்பேரியா யிருந்தால் அவைகள் எப்படி நடந்தேறக்கூடும்? சோம்பலில்லாமல் மேல் விவரித்த விஷயங்களைக் கவனித்துச் செய்வதால் மாத்திரம் பெண்களுக்குக் குடும்பத்தில் நல்ல பெயருங் கீர்த்தியுஞ் சுகமும் உண்டாகும்.

வைகறையிற் சில பெண்கள் ஜாக்கிரதையுடன் எழுந்திருந்து, தாம் செய்யவேண்டியவைகளைக் கவனிக்கத் தவறிப் போவதினால் அவர்களைக் கணவர் கோபிப்பதோடு, அவர்களுடைய மாமி, மாமன் முதலியவர்களும், "இதென்ன இவள் மூதேவியா யிருக்கிறாள்; சூரியன் புறப்பட்டும் இன்னும் படுக்கையில் தூங்கிக் கொண்டிருக்கிறாளே; இந்த அநியாயம் உலகத்தி லுண்டா? இப்படிப்பட்டவள் நம்முடைய வீட்டுக்கு எங்கிருந்து வாய்த்தாள்?" என்று பலவிதமாய்த் தூஷிக்கிறார்கள்.

மேலும், சோம்பேறிப் பெண்களுடைய வீடு சுத்தமா யிராது.

"சோம்பேறிக்கு வாழைப்பழம் தோலோடே."

என்றபடி, அவர்கள் தங்கள் வீட்டைச் சேர்ந்த விஷயங்களையும் பாங்குடன் செய்ய மனமில்லாதவர்களா யிருப்பார்கள்.

வீட்டைப்பற்றிப் பெண்கள் கவனிக்கவேண்டிய விஷயங்களில் முதன்மையானது பரிசுத்தம். சோம்பலில்லாத பெண்கள் தாங்கள், காலையில் எழுந்திருக்கும்போதே முதலில் தங்களுடைய வீடு, முற்றம் முதலிய இடங்கள் பரிசுத்தமா யிருக்கிறதா என்று கவனித்து, அப்படிக்கு இராவிடில் தக்க முயற்சிசெய்து சுத்தப்படுத்திக் கொள்ளுகிறார்கள்,

சாதாரணமாய் வீதியில் போகப்பட்ட ஜனங்களும் அதிக சுத்தமாய் வைக்கப்பட்டிருக்கும் வீட்டைப் பார்த்து.

(க) "ஆ! இந்தவீடு எவ்வளவு சுத்தமாயிருக்கிறது பார்.

(உ) இதைப் பார்த்தால் இலட்சுமி வாசஞ் செய்யப் பட்ட வீட்டைப்போல் இருக்கிறதே," என்று சிலாகித்துப் பேசிக்கொள்ளுகிறார்கள்.

அசுத்தமாயிருக்கும் வீட்டைப் பார்த்து அப்படிப் பேசுவார்களா? ஒருபோதும் பேசமாட்டார்கள்.

(க) "அட! இதென்ன! இந்த வீடு சுடுகாட்டைப் போல் இருக்கிறதே.

(உ) எந்த ஸ்திரீயாவது வீட்டை யிவ்வளவு அசுத்த மாகவும் வைத்துக் கொண்டிருப்பாளா?

(ஈ) இதில் வாழப்பட்டவள் பேயோ?

(ச) இவையெல்லாங் கொண்டவன் பாக்கியம்," என்று தூஷித்துப் பேசிக்கொள்ளுகிறார்கள்,

இவற்றிற்கெல்லாம் காரணம் சோம்பலே தவிர வேறல்ல. சோம்பலுள்ள பெண்களின் முகத்தை உற்றுப் பாருங்கள்! அவர்கள் முகத்தில் இலட்சுமி விலாச மிராது. சோம்பேறிப் பெண்களுடைய முகத்தை 'மூதேவியின் அரண்மனை' என்று சொல்லலாம்.

சோம்பலுள்ள பெண்களுக்கு இவ்வித அபகீர்த்தியும் பழிப்பும் உண்டாவதுமன்றி, வேறுவிதமான துன்பங்களும் கெடுதிகளும் உண்டாகின்றன. எப்படியென்றால்,

(க) இப்படிப்பட்ட பெண்கள் சோம்பல் மிகுதியால் தங்கள் சிறு குழந்தைகள் திண்ணையின்பேரிலிருந்து விழுந்து, அலறி யழுவதைக் கேட்கும்போதாவது,

(உ) அல்லது, சமையல் வீட்டில் சுடுகையான போஜன பதார்த்தங்கள் முதலியவற்றில் தவழ்ந்துகொண்டே போய் அக் குழந்தைகள் கைகளை வைத்துக்கொண்டு பிராணபாயம் உண்டாகி அழும்போதாகிலும்,

திடுக்கிட்டுச் சுறுசுறுப்பாய் ஓடி யெடுக்கமாட்டார்கள்.

அச் சமயத்தில் தகுந்த உதவியின்றி அவைகள் மடிந்துபோகின்றன. இவ்விதமான ஆபத்துகளைப்பற்றி நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோமல்லவா? இவைகளுக்கு முதற் காரணம் தாய்மாருடைய சோம்பலும், அஜாக்கிரதையுமே யொழிய வேறென்ன?

[கொன்றைவேந்தன்: ௩௯-ம் சூத்திரம்]

சோம்ப ரேன்பவர் தேம்பித் திரிவர்."

என்று ஔவையார் கூறியபடி, சோம்பேறிகளுக்குப் பல வித துன்பங்கள் உண்டாகின்றன.

சோம்பலானது இவ்வித கெடுதிகளை யுண்டாக்குவதற்கு ஏதுவாயிருப்பதால், பெண்கள் எப்போதும் சோம்பலற்றுச் சுறுசுறுப்பாயிருக்கவேண்டும்.

## 43-ம் பாடம்

## அடக்கம்

அடக்கம் என்பது, (க) மனம் வாக்குக் காயமாகிய இவைகளைக் குற்றமான வழிகளிற் செலுத்தாமல்,

(உ) பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சி நடத்தலாம்.

பெண்களுக்கு இக்குண மிருக்கவேண்டுமென்பது மிக்க அவசியமாயிருக்கிறது. ஏனென்றால், அவர்களுக்கு இருக்கவேண்டிய, (க) நாணம், (உ) மடம், (௩) அச்சம், (௪) பயிர்ப்பு என்னும் இந்நான்கு வகையான குணங்களுக்கும் அடக்க மென்பது தாயாக இருக்கின்றது.

(க) நாண் என்பது நாணம் அல்லது வெட்கம்; அதாவது, ஆண்பிள்ளைகளுக்கு அஞ்சி, அவர்களோடு மெதுவான குரலுடன் மரியாதையாய்ப் பேசுதலாம்.

(உ) மடம் என்பது அறியாமை; அதாவது, எந்த விஷயத்தைப்பற்றியாவது தனக்குத் தெரிந்திருந்தபோதிலும், தெரிந்ததாகத் துணிவுடன் ஜனங்களுக்கு முன் காரணமின்றிச் சொல்ல வராமல் தனக்கு அவ் விஷயம் தெரியாத பாவனையாயிருத்தலாம்.

(ங) அச்சம் என்பது பயம்; அதாவது, தான் எப்போதும் பார்க்காத பொருளைப் பார்க்கும்போதாவது, நடக்காத செய்கையைப்பற்றிக் கேட்கும்போதாவது மனதில் அச்சம் கொள்ளுதலாம்.

(ச) பயிர்ப்பு என்பது கூச்சம், அல்லது அருவருப்பு; அதாவது, தன் சொந்தக் கணவனல்லாத அந்நிய புருஷனுடைய தேகம் தன் மேல் பட்டவுடன், அருவருப்பும் அசங்கியமு மடைதலாம்.

ஒரு ஸ்திரீயானவளுக்கு அடக்க மென்பது இல்லையாயின், மேலே விவரித்த நான்கு குணங்களும் உண்டாக மாட்டா. மேலும், அடக்கமில்லாத பெண்களுக்கு மரியாதை யென்பது இராது. இப்படி மரியாதை யில்லாத பெண்களும், அவர்களால் அவர்களுடைய கணவரும், உலகத்தாரால் பழிக்கப்படுகிறார்கள்.

எப்படியென்றால், ஒரு ஸ்திரீயானவள், தன் சொந்த புருஷனையாவது, அல்லது இதரமான ஆண்பிள்ளைகளையாவது கண்டபோது, நாணமற்று இந்துதேசப் பெண்களின் ஆசாரப்படிக்கு உடனே எழுந்திராவிட்டால், அதைக் கண்டவர்கள்,

(க) "அப்பா! இவள் யார்? கொஞ்சமாவது நாணமில்லாத பெண்பிள்ளையா யிருக்கிறாள்?

(உ) இவள், ஆண்பிள்ளைகளைக் கண்டவுடன் நாணியெழுந்திராமல், எவ்வளவு அகங்காரத்துடன் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள் பார்த்தீர்களா?

(ங) "குலத்தளவேயாகுங் குணம்." :

என்று சொல்லுகிறபடி, இவள் நல்ல குலத்திற் பிறந்தவளா யிருக்கமாட்டாள்.

(ச) இப்படிப்பட்டவள் யாருடைய பெண்சாதி?" என்று விசாரித்து மிகவும் இழிவாய்ப் பேசிக்கொள்ளு கிறார்கள். பெண்பிள்ளையானவள் செய்யப்பட்ட எல்லாத் தீமைகளும் ஆசாரக் குறைவுகளும்,

[விவேக சிந்தாமணி]

"மண்டலத் தோர்செய் பாவம் மன்னரை வந்து சேரும்;
திண்டிறன் மன்னர் செய்த தீங்குமந் திரியைச் சேரும்;
தொண்டர்கள் செய்த தோஷம் தொடர்ந்ததங் குருவைச் [சேரும்;
கண்டன மொழியாள் செய்த கன்மமுங் கணவர்க் காமே."

என்றபடி, அவளை மனைவியாகக் கொண்ட கணவனையே வந்தடையும். ஆகையால்,

[திருக்குறள்: கங-ம் அதி.—அடக்கமுடைமை-உ-ம் செய்யுள்]

"காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு."

என்று சொல்லியிருக்கிற பிரகாரம்,

(க) "பெண்கள் அடக்கமென்பதைப் பொருளாக மதித்துக் காக்கவேண்டும்.

(உ) ஏனென்றால், அவர்களுக்கு அதைவிட வேறு செல்வங் கிடையாது." மேலும்

[திரிகடுகம்: ருஉ-ம் செய்யுள்]

'கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம்; காமுற்ற
பெண்ணுக் கணிகலம் நாணுடைமை;—நண்ணும்
மறுமைக் கணிகலம் கல்வி; இம்மூன்றும்
குறியுடையார் கண்ணே யுள."

என்று சொல்லியிருக்கிறபடி,

(க) "கண்ணுக்கு ஆபரணமாவது தாட்சண்ணிய முடைத்தாயிருத்தலும்,

(உ) கணவனால் விரும்பப்பட்டவளான பெண்ணுக்கு ஆபரணமாவது நாணமுடையவளா யிருத்தலும்,

(ங) பின் வரப்போகிற பிறப்புக்கு ஆபரணமாவது கல்வியும்,

ஆகிய இவை மூன்றும் நற்குணமுடைய உத்தமர்களிடத்தில் இருக்கவேண்டியவைகளாம்."

ஆகையால், பெண்கள் இப்படிப்பட்ட நற்குணத்தையே ஆபரணமாகத் தரிக்க விரும்பவேண்டுமே தவிர, பொன், வெள்ளி முதலியவற்றால் செய்யப்பட்ட ஆபரணங்களைச் சிறந்தவைகளென்று நினைக்க லாகாது.

[கொன்றைவேந்தன்: கூகூ-ம் சூத்திரம்]

"பேதைமை யென்பது மாதர்க் கணிகலம்."

என்று ஔவையார் சொல்லியிருப்பதின் கருத்தும் இதுதான். பெண்கள் அனுசரித்து நடக்கவேண்டிய நீதிகள் இவ்வாறுயிருக்க, சிலர், இவற்றிற்கு முற்றும் விரோதமாய் நடக்கின்றார்கள். எப்படியென்றால், தாங்கள் பிறந்த வீடு சம்பத்துள்ளதாகவும், வாழ்க்கைப்பட்ட வீடு வறுமையுள்ளதாகவும் இருந்தால், இவர்கள் தங்களுடைய கணவரை மதித்து அவர்களுக்கு அடங்கி நடக்கிறதில்லை. இது பெரிய அவிவேகமே யொழிய வேறல்ல,

"மலையின்பேறில் விளைந்ததானாலும்,
உரலில்தான் மசியவேண்டும்,"

என்னும் பழமொழியின்படி, பெண்கள் தாம் பிறந்தவீட்டின் பெருமையை மறந்து, உ௰-ம் பாடத்திற் சொல்லப்பட்டிருக்கும் கமலாவதியைப்போல்,

(க) தம்முடைய அதிர்ஷ்ட வசத்தால் வாய்த்த கணவருடைய வறுமையோடு கலந்து,

(உ) அவர்களுக்கும் மற்றுமுள்ள பெயர்களுக்கும் அடங்கி நடக்கவேண்டும்.

44-ம் பாடம்

## பொருமை தரித்திரத்தை யுண்டாக்கு மென்பது

பொருமை யென்பது, ஒருத்தி தன்னைவிட நல்ல ஸ்திதியில் இருப்பதைப் பார்தது மனவருத்தப் படுவதாம். அந்நியருடைய சம்பத்தைப் பார்த்து மனவருத்தப்படுவதினுல்,

(க) தன்னுடைய நிலைமை குறையுமேயொழிய, அவர்களுடைய சம்பத்து சற்றுகிலும் குறையமாட்டாது,

(உ) அல்லது, அந்த சம்பத்தில் கொஞ்சமாவது தனக்குக் கிடைக்கவு மாட்டாது.

[நீதிநெறி விளக்கம்: கசு-ம் செய்யுள்]

"தம்மின் மேலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க."

என்று சொல்லியிருக்கிறபடி, "தம்மைப் பார்க்கிலும் தரித்திரர்களாயிருப்பவர்களைப் பார்த்து, அவர்களைவிட நாம் நல்ல நிலைமையில் இருக்கிறோமல்லவா" என்று சந்துஷ்டி யடைவது, மனிதர்களுடைய கடமையாய் எண்ணவேண்டும்,

அந்நியர்க்கு உண்டாயிருக்கும் செல்வத்தைப்போல் தனக்கும் உண்டாக வேண்டுமென்று, தகுந்த விதமாய் முயற்சிசெய்வது குற்ற மாகமாட்டாது. ஆனல், அவர்களும் தங்களைப்போல் தரித்திரர்களாக வேண்டுமென்று கோருவது பொருமையாகும்.

[திருக்குறள்: கஎ-ம் அதி.—அழுக்காறுமை-எ-ம் செய்யுள்]

"அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்."

அதாவது, "இலட்சுமியானவள், பிறர் செல்வத்தைப் பார்த்துப் பொறுமைப்படுங் குணமுடையவர்களை விட்டு நீங்கி, அவர்களிடத்திற்கு மூதேவியை அனுப்பிவிடுவாள்" என்பதாம்,

இதன்படி பொறுமையுடைய ஸ்திரீகளுக்கு, எப்போதும் நீங்காத தரித்திரமும், கஷ்டமும் மேலிட்டுக்கொண்டே வரும்.

"அரசமரத்தைப் பிடித்த சனி
அதின் கீழிருந்த பிள்ளையாரையும் பிடித்தது,"

என்று சொல்லும் பழமொழியின்படி, அத் தரித்திரமானது,

(க) அவர்களை வருத்துவது மல்லாமல்,

(உ) அவர்களுடைய பிற்சந்ததியாரையும் விடாமல் வருத்தும்.

ஆகையால்,

[ஆத்திசூடி: கஉ-ம் சூத்திரம்]
ஔவியம் பேசேல்"

என்றபடி, "ஸ்திரீகள் பொறுமையான வார்த்தைகளை வாயினாற் பேசக்கூடாது." அவைகளை மனதில் நினைக்கவும் கூடாது, அப்படிச் செய்வார்களானால் பின் வரும் பாடத்திற் சொல்லப் பட்டிருக்கும் பாகீரதியைப்போல் துன்பமடைவார்கள்.

45-ம் பாடம்

# பொறுமை தரித்திரத்தை யுண்டாக்கு மென்பது

(தொடர்ச்சி)

[பாகீரதியின் கதை]

**போகாபதி** யென்னும் பட்டணத்தில் பாகீரதி யென்றொரு பெண்பிள்ளை யிருந்தாள், இவளுக்குப் பொறுமை யென்பது உடன் பிறப்பு, இவள் எந்நேரமும் தன்னுடைய

(தொடர்ச்சி,—[பாகீரதியின் கதை]

அண்டை வீட்டுக்காரியின் செல்வத்தைப் பார்த்துப் பொருமைப் பட்டுக்கொண்டிருப்பதே வழக்கம். இவள் ஒரு நாள் தன் மனதிலிருப்பதை அடக்கமாட்டாமல், தன் எதிர் வீட்டுக்காரியினிடத்தில் முறையிட்டுக்கொள்வதைக் கேளுங்கள்!—

(க) "அடி! எதிர்வீட்டுச் சுந்தரம்! எங்கள் பக்கத்து வீட்டு பாக்கியத்தைப் பார்த்தாயா?

(உ) என்னடீ! அவள் உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரையில்,

'பேரண் காய்த்த மரம்போல்'

உடம்பே தெரியாமல் நகைகளைப் பூட்டிக்கொண் டிருக்கிருளே?

(ங) அடீ! அவளுடைய வீட்டைப் பார்த்தாயா? நான்கு வருஷங்களுக்கு முன் சாதாரணமான வீடாயிருந் தது தானே? இப்போது மூன்றடுக்குள்ள மெத்தை வீடாய் விட்டதே.

(ச) அடீ! அவளுக்கு வீடு நிறைய பிள்ளைக ளிருப் பதைப் பார்! இப்படியும் உலகத்தி லுண்டா?

(ரு) அடீ! அவர்கள் வீட்டுக்கு எத்தனைபேர் வருவ தும் போவதுமாயிருக்கிருர்கள் பார்த்தாயா? எந்தப் பாவிக ளாவது நம்முடைய வீட்டைத் தேடி வருகிருர்களா?

(சு) அடீ! அவளுடைய வீட்டில் ஒரு வேளைக்கு எத் தனை விதம் காய் கறிகள் சமைக்கிருர்கள் என்பதை நீ கேட்டதுண்டா? வேளைக்குப் பத்துவிதக் காய்கறிகள் இல் லாமல் அவளுடைய வீட்டில் உள்ளவர்கள் சாப்பிடுகிற தில்லையாமே?

(எ) நான் பக்கத்து வீட்டில் இருக்கப்பட்ட பாவி யானபடியால், ஒவ்வொரு வேளையில் இந்தக் கோலங்களை யெல்லாம் பார்க்கப் பார்க்க என் வயறு எறிகிறதடீ! இதற் கென்ன செய்யலாம்? ஒன்றுந் தோன்றவில்லையே.

(அ) இந்த வீட்டை விட்டு வேறெங்கேயாகிலும் கண் மறைவாய்ப் போய்விடலாம் என்று பார்த்தாலோ, எங்கள் வீட்டுக்காரன் அப்படிச் செய்ய விடுகிறதில்லை. இந்த அநியாயத்திற்கு நான் என்ன செய்யப் போகிறேன்?

என்று மகா துயரத்துடன் பெருமூச்சு விட்டுச் சொல்லிக்கொண்டாள்.

இதைக் கேட்ட சுந்தரம், "என்னடீ! பாகீரதி! அவள் எப்படி யிருந்தாலும் உனக்கென்ன? அதற்காக நீ ஏன் வீணில் பொறாமைப்பட்டுச் சாகிறாய்?" என்று தூஷித்து விட்டுப் போய்விட்டாள்,

பாகீரதி இதோடே நிற்காமல், பின்னும் எதிர்ப்பட்ட மற்றவர்களோடும் தனக்கு வேலையில்லாத காலத்தில் இவ் விதமாய்ச் சொல்லிக்கொண்டே திரிவாள்.

இப்படி யிருக்குங் காலத்தில் ஒருநாள் பாகீரதியின் புருஷன் வேறே ஊருக்குப் போயிருக்கும்போது, ஒரு மந்திரவாதியானவன், இவள் வீட்டுத் திண்ணையின்பேரில் வந்து உட்கார்ந்தான்.

அவனைப் பார்த்து, "நீர் ஆரையா?" என்று பாகீரதி கேட்க, அவன்,

(க) "அம்மணீ! நான் உலகப்பிரசித்தமான மந்திரவாதி.

(உ) என் பெயர் வேகாவரன்; நீ கேட்டதில்லையா!

(ந) பேய் பிசாசுக்கள் என் பெயரைக் கேட்டமாத்திரத்தில் காததூரம் பறந்தோடும்.

(ச) மந்திர விஷயங்களில் எனக்குத் தெரியாதது ஒன்று மில்லை.

(ரு) ஆனையைப் பூனையாக்குவேன்; பூனையை ஆனையாக்குவேன்.

(சு) எனக்கு எதிரானவர்கள் இந்த ஜம்புத்தீபத்தில் ஒருவரும் இல்லை.

(எ) உன் முகத்தைப் பார்த்தால் உன் மனதில் ஏதோ ஒரு பெருத்த குறை யிருந்துகொண்டிருக்கிறதுபோல் தெரியவருகிறது; ஒளியாமல் என்னோடு சொல்!

(அ) இனி ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்; பகவதி துணையிருப்பாள்."

என்று மகாதீரத்துடன் சொல்லித் தன்னிடத்திலிருந்த மந்திர புஸ்தகங்களையும் பிரதிமைகளையும் எடுத்து அவள் எதிரில் போட்டான்.

இவைகளை யெல்லாம் கேட்ட பாகீரதியானவள் மகா சந்தோஷமடைந்து, "ஓ! ஓ!! இவன் நம்முடைய மனதில் இருப்பதை எப்படியோ தெரிந்துகொண்டான். இவன் பெரிய மந்திரவாதியாகவே யிருக்கவேண்டும். இவனால் நாம் வெகுநாளாய் அடைந்திருந்த கவலையானது இன்றைய தினம் ஒழிந்து போய்விடு மென்பதற்குச் சந்தேக மில்லை.

"தேடப்போன மருந்து காலில் கிடைத்தது."

என்பது போல், நாம் நினையாமலிருக்கும்போதே இவன் நம்முடைய வீட்டைத் தேடி தானாக வந்து விட்டான்.

"கூட்டி வைத்ததே குரு கடாக்ஷம்."

என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு, அவனைப் பார்த்துச் சொல்லுகிறாள்:—

"ஐயா! மந்திரவாதியே! நீர் உம்முடைய மந்திரவல்லமையால் என் மனதில் பெரிய குறை யிருப்பதாய்ச் சொன்னது சத்தியந்தான்; அது வேறொன்றுமல்ல; என் பக்கத்து வீட்டுக்காரி என்னைப்போல் ஆகவேண்டு மென்பதுதான்," என்றாள்,

இதற்கு மந்திரவாதி,

(க) "தாயே! நான் உன்னுடைய மனதில் இருப்பதை முன்னமே தெரிந்துகொண்டேன்.

(உ) நான்சொல்வதற்கு ஆரம்பிக்குமுன் நீயே சொல்லி விட்டாய்; ஆயினுங் குறை யில்லை.

(ங) இப்படி எத்தனையோ பெயர்களுடைய வயிற்று நோய்களை நான் தீர்த்திருக்கிறேன். இது எனக்கு ஒரு பெரிய காரியமல்ல.

“மலையை விழுங்கும் மாரியாத்தாளுக்கு
உரல் சுண்டாங்கிக்காகுமா?”

என்பதுபோல் எவ்வளவோ உற்பாதமான காரியங்களைச் செய்யப்பட்ட எனக்கு இது ஒரு நிமிஷ வேலைபாகவும் இல்லையே, நீ பயப்படவேண்டாம்; பகவதி துணையா யிருப்பாள்.

(ச) ஆனால், இது அற்பகாரியமா யிருந்தபோதிலும் பணச்செலவு சற்றே அதிகமாகவே பிடிக்கும்; ஆயினும் நீ தைரியத்தை விடவேண்டாம்,” என்றான்.

இதற்குப் பாகீரதி உடன்பட்டு, ஐயா! பணச்செலவு அதிகமாகவே பிடிக்குமென்றீரே; சுமார் எத்தனைப் பணம் பிடிக்கும்?” என்றாள்.

மந்திரவாதி, (க) நூறு ரூபாய்க்குமேல் ஒரு காசும் தேவையில்லை; சரியாய் அவ்வளவிருந்தால் இப்படிப்பட்ட சஞ்சலங்கள் உன் ஆயுள்பரியந்தம் எப்போதும் வாாமற் செய்துவிடுவேன்.

(உ) இதோடே அவளுடைய பாக்கியங்களெல்லாம் உன்னிடம் வந்து சேரும்படியாகவும் செய்து வைக்கிறேன்.

(ங) பிற்பாடு ஒருசக்கரம் எழுதித்தருகிறேன். அதைப் பூஜை செய்துகொண்டு வருவாயானல், உனக்குப் புத்திர பாக்கியமும் உண்டாய்விடும்,” என்றான்.

இவைகளைப் பாகீரதி கேட்டவுடன் அளவில்லாத சந்தோஷமடைந்து, தன் மேல் இருந்த உடைமைகளை யெல்லாங் கழற்றி மந்திரவாதியினிடம் ஒப்புவித்தாள்.

இவைகளைப் பார்த்த வேகாவரன் உன்னுடைய உடைமைகளெல்லாஞ் சேர்ந்து இருபது வராகனுக்கு ஆகிறது; மற்றத் தொகைக்கும் வழி சொன்னால் உன்னுடைய காரியம் அரைகுறையாய் முடியாமல் சம்பூரணமாய் முடிந்துவிடும். நான் அதற்கு உத்தரவாதியாயிருப்பேன். நீ தைரியத்தை விடவேண்டாம். பகவதி துணையாயிருப்பாள்'' என்றான்.

அதற்குப் பாகிரதியானவள், "இதென்ன!

"கடன் வாங்கியும் பட்டினி,
கலியாணம் பண்ணியும் சந்நியாசி."

என்பதைப்போல், நம்முடைய உடைமைகளை யெல்லாம் கழற்றிக் கொடுத்தும், காரியம் சித்தியாவதற்கில்லையே'' என்று வருத்தப்பட்டு, எதிர் வீட்டுக்காரியின் கம்மலை யிரவலாய் வாங்கிக் கொண்டுவந்து, மற்ற ரூபாய்க்கு ஈடாக மந்திரவாதியினிடம் ஒப்புவித்தாள்.

இதை வாங்கிக்கொண்ட மந்திரவாதியானவன்:

(க) நீ கொடுத்த பணத்தில் ஒரு காசாவது நான் எடுத்துக்கொள்ளப் போகிறதில்லை, எல்லாம் பகவதி பூஜைக்கே செலவாகப்போகிறது.

(உ) காரியம் உன்னுடைய இஷ்டப்படி நிறைவேறி முடிந்த பிற்பாடு, நீ எதைக் கொடுத்தபோதிலும் நான் சந்தோஷமாய் வாங்கிக்கொள்ளுகிறேன்.

(ங) நாளையதினம் பொழுது விடியுமுன் உன்னுடைய பக்கத்து வீட்டுக்காரியின் மெத்தை வீடு எப்படிப்போகிறது பார்.

(ச) இது விஷயத்தில் நீ சற்றுவது ஐயங் கொள்ள வேண்டாம் என்று சொன்னான்.

அதற்குப் பாகீரதி, "ஐயா! உம்முடைய இஷ்டப்படிக்கு முடித்துவிட்டேன். இனி உம்மை மலையாய் நம்பி

யிருக்கிறேன்; எப்படியாவது என்னுடைய கோரிக்கையை யீடேற்றி வைப்பீரானல், உம்மை யெங்கள் வீட்டுக் குல தெய்வமாய்ப் பூஜித்து வருவேன்'' என்ருள்.

மேற்சொன்ன விதமாய்ப் பாகீரதியின் உடைமைகளே யெல்லாம் சுருட்டிக்கொண்டு, "மசானத்திற்குப் போய்ப் பூஜைபோட்டுக்கொண்டு வருகிறேன்" என்று பக்கத்துவீட் டுக்காரியின் பெயரையும் கேட்டு எழுதிக்கொண்டு, 'இன் றையதினம் நமக்குச் சுக்கிரன் உச்சத்திற்கு வந்தான்.' என்று சொல்லிக்கொண்டே, வந்த வழியைத் திரும்பிப் பாராமல் ஒரே ஓட்டமாய் ஓடிப்போய்விட்டான்,

இதற்குள்ளாகப் பாகீரதியின் கணவன் வந்து, நடந்த வர்த்தமானங்களைக் கேட்டு, "அடி பாவி! என் தலையில் கல் லைப் போட்டாயே!" என்று மந்திரக்காரனைத் தேடி, ஊரைச் சுற்றி ஓடி,

"கோழி போனதல்லாமல் குரலும் போச்சுது."

என்னும் பழமொழியின்படி, அவனுக்குக் கால்கள் வலித்து, வீட்டுக்குத் திரும்பிவந்தான்.

இந்த சமாசாரம் ஊரெங்கும் பிரசித்தமாய், இதைக் கேட்டவர்களெல்லாம் பாகீரதியைப் பார்த்து, "அடி சண் டாளி! அண்டை வீட்டுக்காரியினுடைய செல்வத்தைப் பார்த்து இப்படியும் பொருமைப்பட்டு, உன்னுடைய உடை மைகளேயெல்லாம் பறிகொடுக்கலாமா?" என்று பலவித மாய்த் திட்டினர்கள்.

அந்த ஊரில் உள்ளவர்களுக்கெல்லாம் இது வொரு பெரிய வேடிக்கைக் கதையாய்விட்டது.

இவ்வளவானவுடன், எதிர்வீட்டுக்காரி வந்து, "கம் மல் எங்கே?'' என்று பாகீரதியைக் கேட்டாள்.

இதற்காக ஒன்றும் பதில் சொல்லத் தோன்ருமல், பாகீரதியும் அவள் புருஷனும் திகிலடைந்து, பயித்தியம் பிடித்தவர்களைப்போல் ஆய்விட்டார்கள். கம்மலின் கிரயத்

திற்காகத் தாங்கள் குடியிருந்த வீட்டையும் விற்றுக்கொடுத்துவிட்டு, வெறுங்கையராய்க் கஞ்சிக்கு மார்க்க மில்லாமல், கடைசியாய்ப் பிச்சை யெடுத்து ஜீவனம் செய்வதற்காக இருவரும் பரதேசம் போய்விட்டார்கள்.

இவ்வாறு பாகீரதி, தன் அண்டை வீட்டுக்காரியின் செல்வத்தைப் பார்த்துப் பொறாமைப் பட்டதற்காக வந்த லாபம் இதுதான்.

இந்தக் கதையினால் பொறாமை தரித்திரத்தை யுண்டாக்கும் என்பதைத் திருஷ்டாந்தப் படுத்தினதுமல்லாமல், பிழைப்பதற்கு வேறு மார்க்கந் தேடாமல், மந்திரக்காரர், சாஸ்திரக்காரர், குறிசொல்லுவோர் என்று சமயத்துக்குத் தக்கபடி பெயர் வைத்துக்கொண்டு, ஊர்களில் திரியும் பகல் வேஷக்காரரால் பெண்கள் ஏமாந்துபோகாமல் ஜாக்கிரதையா யிருக்கும்படி போதனையும் செய்யப்பட்டது.

## 46-ம் பாடம்

## சுற்றத்தாருக்கிணங்க நடத்தல்

**சுற்றத்தாருக்** கிணங்க நடத்தலென்பது, தங்களுடைய உறவின் முறையாரோடு எப்போதும் அன்பு பாராட்டி, விரோதமின்றி, மனமொத்துக் கலந்து, அவர்களை நன்குமதித்து நடப்பதாம். பெண்கள் இப்படி நடந்துகொள்வதினால் தாங்கள் பிறந்த குடும்பத்துக்கும், புகுந்த குடும்பத்துக்கும், என்றும் மாறாத கீர்த்தியைச் சம்பாதித்து வைக்கின்றார்கள், பெண்கள் தங்கள் கணவருக்கு மாத்திரம் பிரியமாய் நடந்துகொள்ளுவது போதாது. இவர்கள் தங்கள் வீட்டிலுள்ள மாமியார், மாமனார், தன் புருஷனோடு கூடப்பிறந்தவர்களான மூத்தார், மைத்துனர், நாத்தனமார் முதலானவர்களுக்கும் பிரியமுண்டாகும்படி நடந்துகொள்வார்க

ளானல், இவர்களுக்கு நல்ல பெயர் கிடைக்கும். அப்படிப்பட்ட பெண்ணை அவர்கள்,

(க) "அம்மா! எங்கள் வீட்டிற்கு மருமகளாய் வந்தவள் மகாலட்சுமி" என்றும்,

(உ) "எங்கள் வீட்டிற்கு இவள் ஒரு இரத்தின தீபம்" என்றும்,

(ந) "இவளைப் பெற்றவள் மகா உத்தமி" என்றும் புகழ்ந்து கொண்டாடுவார்கள்.

இப்படிப்பட்ட பெயரெடுத்தாலல்லவோ 'பெண்ணுப் பிறந்ததற்குப் பலன்' என்று சொல்லலாம். இப்படிப்பட்ட நல்ல பெயர் கிடைக்க வேண்டுமென்பதைப் பெண்கள் எப்போதும் மனதில் வைத்து, அவர்கள் விஷயத்தில் அதிக தாழ்மையாகவும், மரியாதையாகவும் நடந்துகொண்டு வர வேண்டும். இப்படிச் செய்வதால் தன் புருஷனுக்கும் அதிக சந்தோஷமுண்டாவதற் கேதுவாகிறது.

ஒரு இராச்சியத்தில் கலகமற்றுப் பிரஜைகள் சமாதானத்துடன் வாழ்வார்களானல், அவ்விராச்சியத்தை யாளும் அரசனுக்கு எவ்வளவு சந்துஷ்டியும் திருப்தியும் உண்டாயிருக்குமோ, அப்படியே ஒருகுடும்பத்திலும் சச்சரவில்லாமலிருந்தால், அதற்குத் தலைவனு யிருக்கப்பட்ட ஆண்பிள்ளைக்கும் மிகுந்த சந்தோஷகரமாக இருக்கும். இதற்குக் காரணம்அவ்வீட்டுக்கு மருமகளாய் வந்தவளுடைய அடக்கமும் மரியாதையுமேயொழிய வேறென்ன?

மேற்சொன்ன விதமாய் ஒரு ஸ்திரீயானவள் தன் குடும்பத்திலுள்ள மாமிமுதலான மூத்தோருக்கு அடங்கி நடக்காவிட்டால், எந்நேரமும் குடும்பக் கலகங்கள் உண்டாய்க்கொண்டேயிருக்கும். அவர்கள் இவளைச் சத்துருவாக்கிக்கொண்டு அடிக்கடி புருஷனிடத்தில்,

(க) "அப்பா! உன் பெண்சாதி யெங்களுக்கு அடங்கி நடக்கிறதில்லை.

(உ) அவள் எங்களைப் பெரியவர்களென்று சற்றாவது மதிக்கிறதில்லை; அவளுடைய வேலைக்காரர்களைப்போல் தன் மனதில் நினைத்துக்கொண்டிருக்கிறாள்.

(ஊ) இப்படிப்பட்டவளோடு இந்த வீட்டில் நாங்கள் இனி அரைக்ஷணங்கூட இருக்கமாட்டோம்; எங்கேயாவது கண்ணுக்கு மறைவாய்த் தலையின்பேரில் துணியைப் போட்டுக்கொண்டு போய்விடுகிறோம்.

(எ) நாலு வீடாச்சுது, ஒரு ஓடாச்சுது. அப்புறம் நீயும் அந்தப் புண்ணியவதியும் லட்சணமாய் வாழுங்கள்," என்று, அடிக்கடி குரூரமான வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டேயிருப்பாள்,

இதைக் கேட்ட புருஷன் இதற்கு ஞாயஞ் சொல்லத் தோன்றாதவனாய்,

"ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம்,
இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்."

என்று மயங்கி, ஆயினும் பெண்சாதி பக்ஷம் பேசலாமென்று பார்த்தாலோ, 'இவன் அவளிடத்தில் தலையணை மந்திரோபதேசம் பெற்றுக்கொண்டான்' என்று இந்தக் கிழவர்கள் நம்மைத் தூற்றிக் காற்றில் வைப்பார்கள்' என்று, பலவாறாய் யோசித்துக் கடைசியாய்த் தன் பெண் சாதியின் பேரில் கோபத்தைக் காட்டிச் சில சமயங்களில் அவளை அடிக்கிறான்.

இதைப் பார்த்த அந்தக் கிழப்பிணங்கள், தலையை யசைத்துக்கொண்டு, "இது சரி! இது சரி!! இன்னும் கொஞ்சம் பலமாகவே அவள் அடிபடவேண்டும்" என்று சந்தோஷப்பட்டு, மறுபடியும் இவள் பேரில் குற்றங் கண்டு பிடிப்பதற்காக,

"அரிசியள்ளுங் காக்கை"யைப்போல்

சமயம் பார்த்துக்கொண்டே யிருப்பார்கள், ஏதாவது தப்பிதம் அகப்பட்டால், அவள் புருஷன் எங்கேயாவது

போய்வந்தவுடன் அதை அவனிடத்தில் பாடமாய் ஒப்பு வித்துப் போடுகிறார்கள்,

இதை யவன் கேட்டவுடன் மனவருத்தப்பட்டு, வழக்கப்படி அவளை வைது அடிக்கிறான்.

இதைப் பார்த்துக்கொண்டிருக்கும் மற்ற மூத்தார், மைத்துனர், நாத்தன்மார்களுக்கும் இவளிடத்தில் இளப்பமுண்டாய், இவர்களும் அவள் பேரில் குற்றம் சுமத்த வழி தேடிக்கொண்டே யிருப்பார்கள்.

ஆகையால், (க) பெண்கள் இவ்வித கஷ்டங்களைச் சதாகாலமும் அனுபவிப்பதற்கு இடந் தேடிக்கொள்ளாமல்,

(உ) தங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கீழ்ப்படிந்து, அவர்களைத் தங்கள் தாய் - தந்தை - சகோதரர்களாகப் பாவித்து,

(ங) அவர்களிடத்தில் பட்சத்துடன் நடந்துகொள்ள வேண்டும்.

## 47-ம் பாடம்
## பேராசை பெருநஷ்ட மென்பது

பேராசை யென்பதற்கு 'அதிக ஆசை' என்று அர்த்தமாகும். இது ஆண், பெண் ஆகிய இரண்டு வகுப்பாருக்கும் இருக்கக்கூடாது. ஆசையில் கொஞ்சம் அதிகமானால்,

"காணியாசை கோடி கேடு."

என்பதைப்போல் அதிக நஷ்டமுண்டாகும்.

பெண்கள் தங்களுக்குக் கிட்டாத வஸ்துக்களில் மனதைச் செலுத்துதல் கூடாது. செலுத்தினால், அனுகூலம் உண்டாகாமல் வியாகூலமே உண்டாகும். இப்படியாகத் தங்களுடைய எண்ணத்துக்கு அதிக தூரமான விஷயங்க

ளில் இச்சை வைத்து, அநேக பெரிய நஷ்டங்களை படைந் திருக்கின்றார்கள். அப்படிப்பட்ட விஷயங்கள் கைகூடி வரா மற்போனால் மாத்திரம் பெரிதல்ல;

"புதுவெள்ளம் வந்து பழைய வெள்ளத்தையும்
அடித்துக்கோண்டு போனது" போல்

தனக்கிருந்த பழைய நிலைமைக்கும் கேடு உண்டாகும்.

[வாக்குண்டாம்: கக-ம் செய்யுள்]

"ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடனீர்
நாழி முகவாது நானாழி"

என்பதுபோல், "ஒரு பெரிய சமுத்திரத்திலிருக்கும் ஜல த்தை ஒரு படியினால் எவ்வளவு ஆழத்தில் அமுக்கி மொண்ட போதிலும், அது நான்குபடி ஜலத்தை மொள்ளாது; அல் லது மேலே வீசும்படி ஜலத்தைக்கூட மொள்ளமாட்டாது.

ஆகையால், பெண்கள், அவரவர்களுக்குக் கடவுள் கிரு பையால் கிடைத்திருப்பதோடு திருப்தியடைந்து, அதற்கு மேல் அதிகத்துக்கு ஆசைப்படாம லிருக்கவேண்டும் அப் படிக்கில்லாமல் பேராசைப்பட்டால், பின்வரும் கதையில் சொல்லப்பட்டிருக்கும் இடைச்சியைப்போல் பெருநஷ்ட மடைவார்கள்.

## 48-ம் பாடம்

## பேராசை பெருநஷ்ட மேன்பது (தோடர்ச்சி)

### [இடைச்சி போன்னி யேன்பவள் கதை]

**சென்னி** என்னும் ஊரில் போன்னி யென்றொரு இடை ச்சி யிருந்தாள். இவள், சிறுவயதிலேயே புருஷனை யிழந்து கைம்பெண்ணாகவே யிருந்தாள், இவள் ஒரு கிழப்பசுவை

வைத்துக்கொண்டு, அது சுறக்கும் கொஞ்சம் பாலினல் மோர்-தயிர்-நெய் இவைகளை யுண்டாக்கி, அவ்வூர் வீதிகளுக்குக் கொண்டுபோய் விற்று ஜீவனம் செய்துகொண்டு வருவாள். இவள் அதிக பேராசை கொண்டவளானபடியால், கால்படி மோருக்கு முக்கால்படி ஜலம்கூட்டி, அதைப் பெருக்கி விற்றுக்கொண்டு வருவாள். இப்படி மோரில் அதிகமாய் ஜலம் சேர்த்து இவள் விற்பதினல், இவளிடத்தில் மோரை விலைக்கு வாங்கப்பட்டவர்களெல்லாம் இவளை

"பேராசை பிடித்த இடைச்சி"

என்று திட்டிக்கொண்டே வாங்குவார்கள். இவ்விதமாய்த் தானும் ஜீவனம் செய்துகொண்டு, மீதியாய் ஒரு குடம் நெய்யையும் சேர்த்து வைத்துக்கொண்டிருந்தாள்.

ஒருநாள், தான் உத்தேசித்திருந்தபடி நெய்க்குடம் பூர்த்தியாய் விட்டபடியால், இதை ஏமாந்தவர்களிடம் கொண்டுபோய் அதிக விலைக்கு எப்படியாவது விற்கவேண்டும் என்று, தலையின்மீது சும்மாடு இட்டு அக் குடத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு, தான் வெகுநாளாய்க் கொண்டிருக்கும் உத்தேசங்களை யெல்லாம் சிந்தித்துக் கொண்டே நடந்து போய்க்கொண்டிருந்தாள். எப்படியென்றால்.

(க) "இந்தக் குடத்திலிருக்கும் நெய் சுமார் பதினைந்து ரூபாய் விலையுள்ளது. இதை இருபத்தைந்து ரூபாய்கருக் கஷ்டப்பட்டு யாரையாகிலும் ஏமாற்றி விற்றுப்போட்டு, நம்முடைய கிழப்பசுவுக்குப் பதிலாய் நல்ல பசுக்களாய் இரண்டு வாங்கவேண்டும்.

(உ) அவ் விரண்டு பசுக்கள் கொடுக்கும் பாலைக் கொண்டு இவ்விதமாய் இரண்டு குடங்கள் நிரம்ப நெய் சேர்த்து, அதை ஐம்பது ரூபாய்க்கு எப்படியாவது விற்க வேண்டும்.

(ந) அந்தப் பணத்தைக்கொண்டு வேறே இரண்டு பசுக்கள் வாங்க, அவற்றால் நான்கு குடங்கள் நிறைய நெய்

உற்பத்தியாக்கி, அதை நூறு ரூபாய்க்கு விற்பனை செய்ய வேண்டும்.

(ச) அப்போது நல்ல பட்டுச்சேலை யொன்று மூன்று வராகனில் பார்த்து வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டும்.

(ரு) சேலை வாங்குவதில் நாம் பெண்பிள்ளையானதால் வியாபாரிகள் நம்மை யேமாற்றி முழமில்லாத சேலைகளை நம்முடைய தலையில் கட்டுவார்கள். ஆகையால், ஜாக்கிரதை யுடன் விலை தீராததற்கு முன், நம்முடைய சொந்தக் கையி ஞல் சேலை தாராளமாய்ப் பதினாறுமுழ மிருக்கிறதா என்று இப்படியாக முழம்போட்டுப் பார்க்க வேண்டும்'' என்று, தலையிலிருந்த நெய்க் குடத்தை மறந்து, அதைப் பிடித்துக் கொண்டிருந்த கையினால் முழம் போட்டாள்.

இடைச்சியானவள், இவ்வாறு வெறுங் கையை முழம் போட்டுப் பார்க்கக் குடத்தின்பேரிலிருந்த தன் கையை எடுத்தவுடனே, அக்குடம் தரையில் விழுந்து உடைந்து, குடத்திலிருந்த நெய் முழுமையும் அங்கிருந்த மணலில் சுவ றிப்போய்விட்டது.

இதைக்கண்ட பொன்னியானவள், வாயிலும் வயிற்றி லும் அறைந்துகொண்டு, "ஐயோ! நான் வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி, நல்ல துணியும் உடுக்காமல், எவ்வளவோ கஷ்டப்பட்டுச் சேர்த்து வைத்திருந்த நெய் இப்படிப் பாழாகி விட்டதே! இதைக்கொண்டு பாவியாகிய நான், எத்தனையோ எண்ணங்களெல்லாம் எண்ணிக் கொண்டிருந் தேனே; என் எண்ணங்களெல்லாம் ஊமை கண்ட கனவைப் போ லாய்விட்டதே!'' என்று அழுதுகொண்டு வீட்டுக்குத் திரும்பிப் போனாள். இது சங்கதி கேட்ட அவ் வூரா ரெல் லாம், "இவள் ஒருபடி மோருக்கு நாலுபடி ஜலம் சேர்த்து விற்கிற பேராசைக்காரி யானபடியால், இவளுக்குச் சுவாமி இப்படி நஷ்டத்தை யுண்டுபண்ணினார்'' என்று, அவளைத்

திட்டிக்கொண்டார்களே யொழிய, யாரும் இவளுடைய கஷ்டத்திற்காக இரங்கவில்லை.

ஆகையால், பேராசை யெப்போதும் பெருநஷ்டத்தை யுண்டாக்குமென்று பயந்து, பெண்கள் எவ்விஷயத்திலும் அளவுக்கு மிஞ்சி ஆசைப்படுதல் கூடாது.

## 49-ம் பாடம்

## துன்மார்க்கப் புருஷரைச் சன்மார்க்கத்தில் திருப்புதல்

பெண்களுக்கு வாய்க்கும் புருஷரெல்லாரும் பெரும்பாலும் யோக்கியதை யுள்ளவர்களா யிருப்பார்க ளென்று நினைக்கலாகாது.

(க) சிலர் விபசாரம் செய்பவர்களாயும்,

(உ) சிலர் குடியர்களாயும்,

(ங) சிலர் சூதாடுகிறவர்களாயும், நேரிடுகிறதுமுண்டு.

அப்படிப்பட்ட புருஷர்கள் தங்களுக்கு அதிர்ஷ்ட வசத்தால் வாய்த்தார்களானால், பெண்கள் அவர்களைத் தங்களுடைய விவேகத்தால் நல்வழிக்குத் திருப்ப முயற்சி செய்ய வேண்டும். அதற்குப் பெண்களுடைய பொறுமையே தக்க மருந்தென்று சொல்லலாம். பெண்கள் தம் கணவருடைய துஷ்ட செய்கைகளைக் கூடிய வரையில் பொறுத்துக் கொண்டு நாள்கழித்து வருவார்களானால், நாளாவட்டத்தில் அவர்கள் தாங்களே நல்வழிக்கு வந்துவிடுவது முண்டு. அப்படிக்கில்லாமல்,

(க) அவர்களுடைய நடத்தையைப்பற்றி எந்நேரமும் பழித்து வெளியில் தூற்றி,

(உ) அவர்களுக்குத் தக்க உபசாரம் செய்யாமலும்,

(ங) அவர்கள் அழைத்தால் பதில் பேசாமலும்,

(ச) "ஆண்டை கோபத்தைக் கடாமேல் காட்டினன்," என்பதைப்போல், யாதொரு குற்றமும் செய்யாத தங்கள் சிறு குழந்தைகளை வீணுயழும்படி அடிக்கிறதும்,

(ரு) வேண்டுமென்று சட்டியை யெடுத்துப் பானை மேல் போடுகிறதும், பானையை யெடுத்துச் சட்டியின் பேரில் போட்டுடைக்கிறதும்,

இப்படிச் சில விவேகமற்ற பெண்கள் தாறுமாருய்ச் செய்து, தங்களைத் தாங்களே கெடுத்துக் கொள்ளுகிருர்கள்.

இப்படிக் கணவருக்கு எதிரிட்டு நடந்து கொள்வதி ஞல், அவர்களுடைய துஷ்ட செய்கையானது நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருவதோடு, அவர்களுக்குத் தங்கள் மனைவியர்மேலும், பிள்ளைகள்மேலும் உள்ளபிரியமும் அற்றுப்போய்விடும். இதனல் கடைசியாய்ப் பெண்களுக்கே யல்லவா பெருத்த கஷ்டம் உண்டாகிறது?

ஆகையால், (க) பெண்கள் எப்போதும் தங்கள் கணவ ருடைய துர்நடத்தையைக் கவனியாமல்,

(உ) அவர்கள் சன்மார்க்கரான புருஷராயிருந்தால் எப்படி நடக்கவேண்டுமோ அவ்விதமாய் அடங்கி நடந் தால்,

(ங) அவர்களுக்கே தங்கள் மனைவியர்பேரில் இரக்க முண்டாய், அதினல் அவ்வித நடத்தைகளை விட்டுவிடும் படியான விவேகமும் உண்டாகும்.

50-ம் பாடம்

# துன்மார்க்க புருஷரைச் சன்மார்க்கத்தில் திருப்புதல் (தொடர்ச்சி)

## [சண்பகவல்லியின் கதை]

தென்னாட்டில் ஓர் கிராமத்தில் சண்பகவல்லி யென்னும் பெண்பிள்ளை யொருத்தி யிருந்தாள். இவள் நன்னடக்கையிற் சிறந்தவளாய்க், கணவனுக்கு எப்போதும் அடங்கி, அவன் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடந்துகொண்டே வருவாள். இவளுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்து, சில நாட் சென்றபின், இவளுடைய அதிர்ஷ்டக் குறைவால் இவள் கணவன் வனமாலை யென்னும் ஒரு வைப்பாட்டியை வைத்துக்கொண்டான்.

(க) அவள் பேரில் அதிக மோகங் கொண்டவனாய், தன்னுடைய ஆஸ்திகளை வெகுவாய் அவளுக்குக் கொடுத்துவிட்டான்.

(உ) தன்னுடைய சொந்தப் பெண்சாதி பிள்ளைகள் பேரில் கொஞ்சமாவது அவனுக்குக் கவனமே யில்லை.

(ங) வேளைக்கு வீட்டுக்கு வந்து சாப்பிடுகிறதும், மற்றக் காலமெல்லாம் வைப்பாட்டியின் வீட்டிற் போயிருப்பதுமே இவனுடைய வேலையா யிருந்தது.

இவ்வளவுக்கும் சண்பகவல்லியானவள்:

(க) மனங் கோணாமல்,

(உ) தான் முன்னிருந்ததைக் காட்டிலும் புருஷன் பேரில் அதிக அன்புவைத்து,

(ங) அவன் வீட்டுக்கு வந்தவுடன் அவனுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்துகொண்டு வருவாள்.

(ச) மற்ற வேளைகளில் தன் கணவனுக்கு நல்லறிவு பிறக்கவேண்டுமென்று கடவுளைத் தியானித்துக்கொண்டே யிருப்பாள்.

இவளுடைய பிள்ளைகள் சில வேளைகளில் அந்த வனமாலையின் வீட்டுப் பக்கம் விளையாடப் போகும்போது, தங்கள் தகப்பன் அங்கே அவளோடு சந்தோஷமாய்ப் பேசிச் சிரித்துக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு வந்து, தங்கள் தாயினிடத்தில் சொல்லுவார்கள்.

இவைகளைக் கேட்டவுடன் அவளுக்கு மனதில் மிகுந்த துயர முண்டானபோதிலும், அதைத் தன் விவேகத்தாலடக்கிக்கொண்டு, பிள்ளைகளை அப்படி வெளியிற் சொல்ல வேண்டாமென்று கண்டித்துவருவாள்.

அண்டை அயலிலிருக்கும் மற்றப் பெண்களும் இவளைப் பார்த்து,

(க) என்னடி! சண்பகவல்லி!

(உ) உன் புருஷன் எந்நேரமும் கூத்தியார் வீடே கதியா யிருக்கிறானே?

(ங) இப்படியும் உண்டா?"

என்று சற்றே இகழ்ச்சியாய்ப் பேசுவார்கள்.

அதற்கு (க) "அவரவர்களுடைய விதியின்படி நடக்கிறது.

(உ) நம்மா லாகிறதென்ன?

(ங) அவருக்கே என்றைக்குத் தன் சமுசாரத்தின்மீது தயை உண்டாகிறதோ உண்டாகட்டும்.

(ச) "தானாய்க் கனியாத கனியைத்
தடிகொண் டடித்தால் கனியுமா?"

(ரு) எத்தனை நாளானாலும் மனைவி மக்களென்கிற ஞாபகம் அவருக்கு வராமற்போகுமா பார்க்கலாம்.

(சு) கிணற்று ஜலத்தை வெள்ளங்கொண்டு போகுமா?''
என்று மிகவும் பொறுமையோடும் பெருமையோடும் அந்தப் பெண்களுக்குச் சமாதானம் சொல்லிக்கொண்டு வருவாளேயல்லாமல், தன் புருஷனைச் சற்றாகிலும் அகவுரவமாய்ப் பேசமாட்டாள்.

இப்படியாக இவள் நடந்துகொண்டு வரும் நாளில், இவளுடைய புருஷன் போஜனவேளைக்குத் தன் வீட்டிற்குப்போய், அவனுடைய சொந்த பெண்சாதியினிடத்தில் போஜனம் செய்துகொண்டு வருவது, அந்த வைப்பாட்டிக்குச் சரிப்படாமல், 'இவனை மெதுவாய் வீட்டுவழி எட்டிப் பார்க்கவொட்டாமல் செய்துவிட வேண்டும்' என்றெண்ணி, அதற்கு அவள் ஒரு உபாயஞ் செய்தாள்.

அதாவது, அவன் ஒருநாள் இவளுடன் சந்தோஷமாய் வார்த்தையாடிக் கொண்டிருக்கும்போது,

(க) "என் உயிர்த்தோழரே!

(உ) நான் ஒரு சங்கதி சில மாதங்களாய்க் கேள்விப்பட்டுக்கொண்டு வந்தேன்.

(ந) ஆனால், அதினுடைய உண்மையை யறிகிறவரையில், அதை உம்மோடு பிரஸ்தாபிப்பதற்கு எனக்கு மனமில்லாயிருந்தது'' என்று சொன்னாள்,

இதைக் கேட்டவுடன், இவன், ''என் கண்ணே? அதென்ன சங்கதி! அதென்ன சங்கதி!! நானறியச் சொல்ல வேண்டும்'' என்று அவளை வேண்டிக் கேட்டுக்கொண்டான்.

அதற்கவள், "என் கண்ணாளரே! அந்தச் சேதியை நான் என்னவென்று வெளிப்படையாய்ச் சொல்லப்போகின்றேன்?

"சொன்னால் துக்கம் அழுதால் வெட்கம்.''

என்றிருக்கிறதே; ஆயினும் அதனால் உமக்குப் பெரிய மானக் குறைவு உண்டாவதாயிருக்குமே யென்றஞ்சி, இப்போது அதைச் சொல்லுகிறேன்," என்று விவரமாய்ச் சொல்லத் தொடங்கினாள்:—

(க) "கேளும் பிராணநாதரே! அடுத்த வீதியிலிருக்கும் உமக்கு வெகுநாளைய விரோதியான மண்டோதரன் என்பவன், தலையில் முக்காடு போட்டுக்கொண்டு, தினந்தோறும் இரவில் நீர் என்னிடம் வந்துவிட்டவுடனே உம்முடைய பெண்சாதியினிடம் போயிருந்துவிட்டுப், பொழுது விடியுமுன் ஒருவருக்குந் தெரியாமல் தன் வீட்டுக்குப் போய்விடுகிறான்.

(உ) இது ஊரெங்கும் குழப்பமாயிருக்கிறது.

(ங) நீர் ஆத்திரக்காரனென்று பயந்து, நானிதுவரையில் இந்தத் துக்க சமாசாரத்தை உம்மோடு சொல்லவில்லை.

(ச) இது நிசமோ, பொய்யோ என்று நானும் பல வகையாய்ச் சோதித்துப் பார்த்ததில், அவன் ஒருநாள் விடியற்காலத்தில் உங்கள் வீட்டிலிருந்து முக்காடு போட்டுக்கொண்டு வரும்போது, நானே என் கண்களால் பார்த்துவிட்டேன்.

(ரு) அவன் என்னைப் பார்த்தவுடன் விசையாய் நடந்து போய்விட்டான்." என்று சொல்லி முடித்தாள்.

இவ்விதமாய்த் தன்னுடைய பெண்சாதியின் துர்நடத்தையைப்பற்றி அவள் சொன்னவுடனே,

(க) இவனுக்குக் கோபாவேசம் உண்டாய்ப்,

(உ) பல்லை நறநறவென்று கடித்துக்கொண்டு,

(ங) அந்த க்ஷணமே தன் பெண்சாதியை வெட்டிப் போடவேண்டுமென்று சொல்லிக்கொண்டே கத்தியைக் கையிலெடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

இப்படிக் கொஞ்சதூரம் போன பிற்பாடு, அவனுக்குக் கோபம் சற்றே தணிந்து,

(க) "இதென்ன! ஆச்சரியம்!

(உ) நாம் எப்போதும் கேட்காத சங்கதியை இன்று கேள்விப்பட்டோம்.

(ங) நம்முடைய அனுபவத்திற் கண்டவரையில் யோசித்துப்பார்த்தால், நம்முடைய மனைவி அப்படிப்பட்ட செய்கையுள்ளவளாய்க் காணப்படவில்லையே.

(ச) அவளுடைய செய்கையை நாம் பிரத்தியட்சமாய்க் கண்டபிற்பாடு அவளைக் கொல்லுவது தகுதி" என்று நினைத்துக்கொண்டு, தன் வைப்பாட்டியின் வீட்டுக்கு வந்து, தான் திரும்பிவந்த காரணத்தை அவளோடு சொன்னான்.

இதைக் கேட்டவுடனே அவள்,

(க) "ஆ! ஆ! அப்படியே செய்யலாம்.

(உ) நீர் ஒருநாளைக்கு இரவில் மாறுவேஷம் போட்டுக்கொண்டு, எதிர் வீட்டுத் திண்ணையில் படுத்துக்கொண்டிரும்.

(ங) அப்போது நான் சொன்னதற்குத் திருஷ்டாந்தமாக அயல் மனிதன் முன்னேரத்தில் உள்ளே முக்காடு போட்டுக்கொண்டு நுழைவதையும், விடியற் காலத்தில் அவன் அதேபிரகாரம் உம்முடைய வீட்டிலிருந்து வெளியில் வருவதையும் பார்த்துக்கொண்டு,

(ச) அவனைக் கோபத்தினால் ஒன்றும் செய்யாமலும், அவனை இன்னானென்று கண்டுகொள்ளாமலும், அமரிக்கையாய் வந்துவிடும்.

(ரு) பொழுது விடிந்த பிற்பாடு உங்கள் உறவின்முறையாரை யெல்லாம் சேர்த்து, உன் பெண்சாதிக்குச் செய்ய வேண்டிய தண்டனைகளைச் செய்து, அவளை வீட்டைவிட்டு ஓட்டிவிடலாம்." என்று தந்திரம் சொல்லிக்கொடுத்தாள்.

இதைக் கேட்ட சண்பகவல்லியின் கணவனானவன், "சரி! சரி!! இது நல்ல உபாயந்தான்." என்று அதற்குச் சம்மதித்து, மறுநாள் இரவில் அப்படியே எதிர்வீட்டுத் திண்ணையின்பேரில் ஒரு வழிப்போக்கனைப் போல உருமாறிப் படுத்துக்கொண்டிருந்தான்.

வனமாலையானவள் தன் வீட்டுக்கு வரும் வண்ணானைப் பக்குவப்படுத்தி,

(க) "அப்பா! நீ இன்றைய இரவில் எங்கள் எஜமானர் வீட்டுக்குப் போய், வீட்டிலிருப்பவர்களுக்குத் துணையாய்ப் படுத்துக்கொள்!

(உ) என் தமையன் தினந்தோறும் அங்கே போய்ப் படுத்துக்கொள்வது வழக்கம்.

(ந) இன்றையதினம் அவனுக்குக் கொஞ்சம் அசந்தர்ப்பமாயிருப்பதால் அவனுக்குப் பதிலாய் இராத்திரிக்கு மாத்திரம் நீ போய்ப் படுத்துக்கொள்.

(ச) நீபோய்ப் படுத்துக்கொண்டதை எங்கள் எஜமான் பார்த்தால் என் தமையன்பேரில் கோபித்துக்கொள்வார்.

(ரு) ஆகையால், நீ வீட்டுக்குள் போகும்போது, என் தமையன் போகிற வழக்கப்படி தலையில் முக்காடு போட்டுக்கொண்டுபோய், விடியற்காலத்திலும் அப்படியே முக்காட்டுடன் திரும்பி ஒருவருக்குந் தெரியாமல் வந்துவிட வேண்டும்," என்று அவனுக்கு வேண்டிய தந்திரங்களைக் கற்பித்து அனுப்பினாள்.

அவள் கற்பித்தனுப்பிய பிரகாரம், வண்ணானும் அன்றிரவில் சுமார் ஒன்பது மணிக்கு முக்காடு போட்டுக்கொண்டு வீட்டுக்குள்ளே நுழைந்தான்.

எதிர்வீட்டுத் திண்ணையின்பேரில் படுத்துக்கொண்டிருக்கும் சண்பகவல்லியின் கணவன், இவன் உள்ளே நுழைந்ததைப் பார்த்து,

(க) "அடடா! நம்முடைய வைப்பாட்டியின் வார்த்தை நிஜமாய்விட்டது.

(உ) அவள் சொன்னபோதே சந்தேகியாமல் சண்பகவல்லியைக் கொன்றுபோட்டிருக்கவேண்டும்.

[திருக்குறள்: சூ-ம் அதி.-வாழ்க்கைத் துணை நலம்-எ-ம் செய்யுள்]

"சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை."

என்றபடி,

(க) "ஸ்திரீகள் தங்களுடைய கற்பினுல்காத்துக்கொள்வதே காவலாகுமேயன்றி,

(ங) சிறைமுதலான வேறுவித காவல்கள் அவர்களுக்கு என்ன செய்யும்?" என்று மிகுதியான வியாகூலமும் மனக்கொதிப்பு மடைந்து,

(ச) நித்திரையின்றிச் சிந்தாக்கிரந்தனய் இரவில் வீட்டுக்குள்ளே நுழைந்தவன் விடியற்காலத்தில் திரும்பி வருவதை யெதிர்பார்த்துக்கொண்டே யிருந்தான்.

வனமாலையானவள் போதித்தனுப்பியபடி வீட்டுக்குள்ளே நுழைந்த வண்ணன், தன்னை யின்னுனென்றவீட்டிலுள்ளோர் கண்டுகொள்ளப் போகிறர்களென்று அச்சப்பட்டு, நடைத்திண்ணையின் ஒரு மூலையில் படுத்துத் தூங்கிவிட்டான்.

இப்படி யிருக்கும்போது, சற்று நேரம் பொறுத்து அந்த வீட்டுக்குள் கொஞ்சம் அழுகைச் சத்தங் கேட்டது. "இதென்ன! அழுகைச் சத்தங் கேட்கிறதே" என்று தன் பெண்சாதி படுத்திருக்கும் அறையின் சுவரோரமாய் வெளியில் நின்று, சண்பகவல்லியின் கணவன் உற்றுக் கேட்டான்.

அப்படிக் கேட்டதில், அது தன் வீட்டு வேலைக்காரியின் குரலோசையாயிருக்கிறதென்று அறிந்து, 'இன்னும் என்ன நடக்கிறது கேட்கலாம்' என்று, அங்கேயே அசையாமல் நின்றுகொண்டிருந்தான்.

அப்போது சண்பகவல்லி தன் வேலைக்காரியை, "அழ வேண்டாம்" என்று தேறுதல்கள் சொல்லிக்கொண்டு வருகிறாள். எப்படியென்றால்,

(க) "அடி பெண்ணே! உன் புருஷன் நாலு நாளாய் இரவில் வீட்டில் தங்காமல், யாரோ ஒரு வைப்பாட்டியினிடம் போய்விடுகிறானென்று அழுகிறாயே.

(உ) நீ அழுவதினால், ஆகப்போகிறதென்ன?

(ங) எத்தனை வைப்பாட்டிகளிடம் போனபோதிலும், அவன் உனக்குப் புருஷனென்பது அற்றுப்போகுமா?

(ச) மாங்காய் திருட மரமேறினவன், பல் கூசினால் தானாக மரம்விட்டுக் கீழே யிறங்குவான்; அவனை ஒருவர், 'கீழே யிரங்கிவிடப்பா!' என்று, கேட்கவேண்டுவதில்லை.

(ரு) அதைப்போல், எல்லாம் அதனதன் காலம் வந்தால் தானாய் நடக்கும்.

(சு) ஆனால், அதுவரையில் நீ செய்யவேண்டிய கடமையென்னவென்றால், உன்னுடைய மனவருத்தத்தை உன் கணவனுக்குக் காட்டிக்கொள்ளக் கூடாது.

(எ) அதிக ஜாக்கிரதையாய் அவனுக்கு நாள்தோறும் செய்யவேண்டிய உபசாரங்களைச் செய்துகொண்டு வர வேண்டும்.

(அ) உன் வீட்டைவிட்டு வைப்பாட்டியின் வீட்டுக்குப் போகும்வரையில் அவனுக்கு உன் விஷயத்தில் சற்றுவது கோபம் உண்டாகாதபடி நடந்துகொள்ள வேண்டும்.

(கூ) உன் புருஷன் செய்யும் விபசாரத்தைப்பற்றி என்னுடன் சொன்னபடி வேறே யாரோடும் நீ சொல்லிக் கொள்ள வேண்டாம்.

(கய) பொதுவாய்ப் பெண்கள், கணவரால் எவ்வித மனக்குறைகள் நேரிட்டபோதிலும், அவைகளைப் பெற்ற தாயோடும் சொல்லிக்கொள்ளக் கூடாது.

(கக) தங்கள் கணவருக்குச் செய்யும் உபசாரங்களா லும், பணிவிடைகளாலும் அவர்களைச் சந்தோஷப்படுத்தி, அவர்களால் உண்டான மனக்குறைகளை நீக்கிக்கொள்ள வேண்டும்.

(கஉ) அதை விட்டு அவர்களோடு எதிர்த்துப் பேசி, 'நீ வேறே ஸ்திரீகளிடம் போனால், நானும் வேறே புருஷனைத் தேடிக்கொள்ளுகிறேன்' என்று சில இழிந்த ஜாதிப் பெண்கள் பேசுவதைப்போல் நீ பேசக்கூடாது, அப்படிப் பட்ட எண்ணத்தை நீ கனவிலுங் கொள்ளக்கூடாது.

(கங) எப்போதும் அந்நிய ஸ்திரீகளிடத்தில் புருஷர் களுக்கு நீடித்து விருப்ப மிருக்கமாட்டாது.

"ஊரெல்லாம் சுற்றினபோதிலும்,
தேர் முடிவில் தன்னிலையிலேதான் வந்து நிற்கும்."
"ஆகாயத்தில் விட்டெறிந்த கல் சந்திரமண்டலம்
வரையிற் போனாலும் தரையில்தான் விழவேண்டும்."

என்பதுபோல், கடைசியாய் உன் புருஷன் உன்னிடத்தி லேயே வந்து சேருவான்.

(கச) அதுவரையில் நீ மனதைத் தேற்றிக்கொண்டு, சீக்கிரத்தில் உன் கணவன் இப்போது கொண்டிருக்கும் எண்ணமானது மாறிப்போகவேண்டுமென்று, உன்னிஷ்ட தெய்வத்தைத் தியானித்துக்கொண்டிரு!

(கரு) வேறுவிதமாய் விசனப்படவேண்டாம்," என்று சண்பகவல்லியானவள் தன் வேலைக்காரிக்கு வேண்டிய தேறுதல்களைச் சொன்னாள்.

இந்த நீதிகளை யெல்லாங் கேட்டு, அவள் அழாமல் நின்று, "தாயே! நீ நாலு வருஷங்களாய் நம்முடைய எஜமானர் வைப்பாட்டி வலையி லகப்பட்டு, ஒரு நாளாகிலும் வீட்டில் தங்காமலிருப்பதைப் பொறுத்துக்கொண்டிருக்கும் போது, அற்ப ஸ்திரீயாகிய நான் எவ்வளவு?" என்று சொன்னவுடன், அப்புறம் யாதொரு அரவமு மில்லாமல் நிசப்தமாயிருந்தது.

சுவரின் வெளிப்பக்கத்தில் இவைகளையெல்லாம் உற்றுக் கேட்டு நின்ற சண்பகவல்லியின் கணவனானவன் திப்பிரமை கொண்டவனாய்,

(க) "அடா! இதென்ன ஆச்சரியம்!

(உ) யாரோ ஒரு அன்னிய மனுஷன் வீட்டுக்குள்ளே சற்று நேரத்திற்குமுன்-நம்மெதிரில் நுழைந்தான்.

(ங) அவனுடைய பேச்சுக்குரலைக் காணோம்,

(ச) நம்முடைய மனைவி தன் வேலைக்காரிக்கு நாம் இதுவரையில் ஒருபோதும் கேள்விப்படாத உயர்ந்த புத்திகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறாளே.

(ரு) இப்படிப்பட்ட நீதிகளைப் போதிக்கும் விவேகமுள்ள நம்முடைய மனைவியினிடத்தில் சற்றுவது கெட்ட நடத்தை யிருக்குமா?

(சு) இவைக ளெல்லாம் சூதுக்காரியாகிய அந்தப் பாவி வனமாலையின் தந்திரங்களாகும்." என்று தீர்மானித்துத், தன் மனைவியின் வார்த்தைகளைக் கேட்ட சந்தோஷப் பெருக்கினால், இதற்கு முன்னிருந்த வழக்கப்படி, "சண்பகம்" என்று கூப்பிட்டுக் கதவைத் தட்டினான்,

இதைக் கேட்ட சண்பகவல்லியானவள்,

(க) "இதேது! இந்நேரத்தில் நம்முடைய கணவன் குரல்போல் கேட்கின்றது.

(உ) மேலும், பழைய வழக்கப்படி நம்முடைய பேரிட்டு அழைக்கிறாரே!

(ங) இன்றைக்கு ஏதோ நல்லகாலம் வந்ததாய்க் காணப்படுகிறது," என்று சந்தோஷத்துடன் தன் வேலைக்காரியையுங் கூட்டிக்கொண்டு வந்து கதவைத் திறந்தாள்,

உடனே விளக்கைக் கொண்டுவரச் சொல்லி, 'உள்ளே நுழைந்தவன் எப்படிப்போனான்?' என்றுவீட்டுக்குள் அவன்

சுற்றிப்பார்த்துக்கொண்டு வருகையில் நடைத்திண்ணையில் ஒரு மூலையில் யாரோ ஒரு மனிதன் படுத்துத் தூங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து, அவனுக்குச் சமீபத்திற் போய், அவனைத் தட்டி யெழுப்பி, "யாரடா! இங்கே படுத்துக்கொண்டிருப்பவன்?" என்று கூவினன்.

"ஐயோ! செத்தேன்!" என்று படுத்துக்கொண்டிருப்பவன் அலறி யெழுந்து, "சுவாமி! நான் ஏகாலி; வனமாலையம்மாள், படுத்துக்கொள்வதற்கு இங்கே அனுப்பினள்," என்று எல்லாச் சங்கதிகளையும் உள்ளபடி சொல்லிவிட்டான்.

பின்பு அவனை ஓடிப்போகச் சொல்லித் துரத்திவிட்டு,

(க) தன் வைப்பாட்டி செய்த உபாயத்தினல் நம்மைப் பிடித்த சனி இன்றையதினம் தொலைந்து போய்விட்டதென்று,

(உ) தன் மனைவியாகிய சண்பகவல்லியைக் கட்டி முத்தமிட்டு,

(ங) அவளுடைய மேன்மையான அறிவிற்கும், குணத்திற்கும், நன்னடக்கைகளும் வியந்து,

(ச) வைப்பாட்டியின் வீட்டு வழி போவதை மறந்து,

(ரு) அன்றுமுதல் பழையபடி தன் மனைவி மக்கள் மேல் ஆசைவைத்துப் புத்தியுடன் வாழ்ந்துவந்தான்,

ஆகையால், பெண்களே! சண்பகவல்லியினுடைய பொறுமையினலும் விவேகத்தினலும், உண்டான நன்மைகளைப் பாருங்கள்! துன்மார்க்கரான புருஷரை நல்ல வழியில் திருப்புவதற்கு நீங்கள் மேற் சொன்னவைகளைக் கவனிக்கவேண்டும்.

51-ம் பாடம்

## மனைவியின் யுக்தியினால் கணவனுக்கு நேரிட்ட ஆபத்து நீங்கியது

அளகாபுரி யென்னும் பட்டணத்தில் நளகேசரி யென்னும் ஓர் அரச னிருந்தான், அவனுக்குக் கலைபூஷணி யென்னும் ஒரு மனைவி யிருந்தாள்.

அவள், (க) மகா விவேகசாலியாகவும்,

(உ) தன் கணவனுக்கு அப்போதைக் கப்போது தகுந்த யோசனை சொல்ல வல்லவளாயு மிருந்தாள்.

இப்படியிருக்கும் நாளில், அப் பட்டணத்திலிருந்து வேறோர் பட்டணத்துக்குப் போகுமார்க்கத்தில் இருந்த ஓர் பெரிய ஆலமரத்தில் ஒரு வேதாளம் (ஒருவகைப் பேய்) வசித்துக்கொண்டு, பிரயாணிகளுக்கு அடிக்கடி துன்பங்களைச் செய்துகொண்டே வந்தது. அதின்பேரில் அந்நாட்டுக் குடிகளெல்லாங் கூடி, இதைப்பற்றித் தங்கள் அரசனிடத்தில் வந்து ஒருநாள் முறையிட்டுக் கொண்டார்கள்,

இதைக்கேட்ட அரசன் தன்னுடைய தளகர்த்தனை யழைப்பித்து,

(க) "நீ போய் அந்த வேதாளத்தைப் பிடித்துத் தண்டித்து,

(உ) அந்த வழியி லிருக்காமல் ஜனங்கள் வருத்தப் போக்கில்லாத வேறோ ரிடத்திற்கு ஓட்டிவிட்டு வந்துவிடு!" என்று ஆக்கியாபித்தனுப்பினான்.

அப்படியே அத் தளகர்த்தனும் அரசனுடைய ஆக்கினையின்படி ஆலமரத்தினிடம் சென்று, அதிலிருந்த வேதாளத்துக்கு அரசனுடைய கட்டளையை அறிக்கையிட்டான்.

இதைக் கேட்ட வேதாளமானது,

(க) அவனைப் பார்த்து நகைத்து,

(உ) "போ! போ! பயித்தியக்காரா!

(ங) உங்கள் அரசனுக்கும் புத்தியில்லை. உனக்கும் புத்தியில்லை.

(ச) நான் அந்த அரசனுடைய ஆக்கினைக்கு உட்பட்டவனென்று அவன் நினைத்துக் கொண்டிருக்கிறது வீண் எண்ணம்.

(ரு) என்னைப் பிடிப்பதற்கு உன்னாலு மாகாது; உங்களுடைய அரசனாலு மாகாதென்று அவனுக்குப் போய்ச் சொல்!" என்று சொல்லிவிட்டு,

அந்தத் தளகர்த்தனுடன் கூடப்போயிருந்த யானை, குதிரை, காலாள் முதலிய சில சேனைகள் இறங்கியிருந்த இடத்தின்பேரில் பெரிய மலையைத் தூக்கிக் கொண்டுவந்து போட்டு, அவைகளை யெல்லாங் கொன்றுவிட்டது.

இதைப் பார்த்த தளகர்த்தன் பயந்து,

(க) "ஓ! ஓ! இதேது விபரீதமா யிருக்கிறதே!

(உ) "கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது" போல் ஆயிற்றே,

(ங) இன்னும் சற்றுநேரம் இதனுடன் பேசினால் நம்முடைய பிராணனையும் இது வாயில் போட்டுக்கொள்ளும் போலிருக்கிறது.

(ச) ஆகையால், நாம் தப்பித்துக்கொண்டு ஓடிப்போவதே நல்லது," என்று ஒரே ஓட்டமாய் ஓடிப்போய், அரசனிடத்தில் நடந்த வர்த்தமானங்களைச் சொன்னான்.

இதைக்கேட்ட அரசன் அதிக கோபங்கொண்டு, தன்னுடைய சேனைகளை யெல்லாம் ஆயத்தப் படுத்திக் கொண்டுபோய், ஆலமரத்தைச் சுற்றி முற்றுகை போட்டு, அந்த வேதாளத்தைப் பிடித்துக்கொண்டான்.

இப்படியாக அரசன் கையில் அகப்பட்ட வேதாளம் அவனைப் பார்த்துச் சொல்லுகிறது:—

(க) "ஓ! நளகேசரியென்னும் அரசனே!

(உ) என்னைப் பிடித்துவிட்டதினால் நீ மஹா வீர னென்று நினைத்துக்கொள்ள வேண்டாம்.

(ந) இப்படி எத்தனையோ பேர்கள் என்னைப் பிடித்து மறுபடியும் பயத்தினால் விட்டிருக்கின்றார்கள். அதில் நீயு மொருவனென்று நினைத்துக்கொள்" என்றது.

இதைக் கேட்ட அரசன்,

(க) "ஓ! வேதாளமே! நீ சொல்லுவது எனக்கு நன் றாய் விளங்கவில்லை.

(உ) உன்னைப் பிடித்தவர்கள் மறுபடியும் ஏன் விட்டு விட்டார்கள்? சொல்!"

என்று உக்கிரத்துடன் கேட்டான்.

அதற்கு வேதாளம் சொல்லுகிறது:

(க) "ஓ! அரசனே! நான் எந்நேரமும் என் சக்திக்குத் தகுந்த காரியங்களைச் செய்துகொண்டே யிருக்கவேண்டும். இது என் இயற்கை.

(உ) என்னைப் பிடிப்பவர்கள் என் சக்திக் கேற்ற வேலையை ஓயாமல் இட்டுக்கொண்டே யிருக்கவேண்டும்.

(ந) அப்படிச் செய்வதற்குச் சற்றுத் தாமதிப்பார்க ளானால், என்னைப் பிடித்தவர்களையே நான் பட்சித்துப் போடுவேன்.

(ச) அந்தப்படி யெனக்குத் தக்க வேலை யிடுவதற்கு உனக்கு வல்லமை யிருந்தால் என்னைப் பிடித்துக்கொண்டு போகலாம்.

(ரு) இல்லாவிட்டால், பேசாமல் என்னை விட்டுப் போட்டு, நீ வந்தவழியைப் பார்த்துக்கொண்டு, உன் பெண் சாதி பிள்ளைகள் முகத்திற்போய் விழி!'' என்றது.

இதைக் கேட்ட அரசன், 'இந்த வேதாளத்துக்குத் தகுந்த வேலை நம்முடைய இராச்சியத்தில் இல்லாமற் போய்விட்டதா,' என்று நினைத்து, "நல்லது! அப்படியே உன் சக்திக்குத் தகுதியான வேலைகளை யென் இராச்சியத்தில் காண்பிக்கிறேன் வா!'' என்று அதைப் பிடித்துக் கட்டிக்கொண்டு தன் நகரம் வந்து சேர்ந்தான்.

அந்த அளகாபுரி பட்டணம் வந்து சேர்ந்தவுடனே, வேதாளம், "அரசனே! நீ யெனக்கு என்ன வேலை காட்டுகிறாய்?'' என்று கேட்டது

அதற்கு அரசன், "இதென்ன! ஊர்வந்து சேருவதற்கு முன் வேலையிடச் சொல்லுகிறதே'' என்று, 'இதற்கொரு பெரிய வேலையாய்க் கொடுத்துவிட்டோமானால், அடிக்கடி வந்து நம்மை வேலை கேட்கமாட்டாது' என்று யோசித்து, 'ஒரு பழைய கோட்டையைப் பிரித்து வேறிடத்தில் கட்டிவிடவேண்டும்' என்று சொல்லிக், கட்டவேண்டிய இடத்தை அதற்கு அரசன் காட்டினான்.

இவன் காட்டின ஒரு நிமிஷத்துக்குள் இவனுடைய உத்தேசப்படி கோட்டையைக் கட்டி முடித்துவிட்டு, வேதாளம் அரசனிடம் வந்து,

(க) "இராஜாவே, நீர் சொன்ன வேலை முடிந்துவிட்டது.

(உ) வேறென்ன வேலை சொல்லப்போகிறீர்?

(ந) உடனே சொல்லும்!'' என்றது.

அதற்கு அரசன், "இதென்ன!

'சனியனை விலைக்கு வாங்கினது'போல்

ஆச்சுதே'' என்று மனதி லெண்ணிக்கொண்டு, இப்படிப் பட்ட அசாத்தியமான வேலைகளையெல்லாம் அநேகமாய்ச் சொல்லியும், அவைகளை வேதாளமானது ஒரு நொடியிற் செய்து முடித்துவிட்டு, அரசனிடம் வேலை கேட்டுக் கொண்டே வந்தது.

வேலை சொல்வதற்கு அரசன் கொஞ்சம் தாமதித்தால் "ஏன்? இராஜாவே! உம்மை பட்சிக்கட்டுமா?'' என்று கேட்கும்.

இப்படியாக வேதாளத்துக்கு வேலை சொல்லிக்கொண் டிருப்பதே அரசனுக்கு வேலையாய்விட்டது ஊர்வந்து சேர்ந்தும் இன்னும் ஸ்நான பானம் செய்துகொள்வதற் கும் சாவகாச மில்லாமல், அரசன் திகிலடைந்து,

(க) "ஓ! ஓ! இந்த வேதாளத்துக்கு ஓயாமல் வேலை சொல்ல யாராலாகும்?

(உ) எப்படியும் நாம் இதற்குப் பட்சணமாய்விடுவது நிச்சயந்தான்,'' என்று மனதில் தீர்மானித்துக்கொண்டான்.

இந்த ஆச்சரியங்களைக் கேட்ட கலைபூஷணி யென்னும் அரசன் மனைவி, உடனே விரைந்தோடிவந்து, வேதாளத் துக்கு வேலையிட்டு அரசன் களைத்து மூர்ச்சையாயிருப்பதை யறிந்து, அரசனுக்குத் தைரியஞ் சொல்லி,

(க) "ஓ! பிராண நாதா!

(உ) நீர் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்.

(ங) வேதாளம் வேலை கேட்டவுடன், 'என் மனைவியை வேலை கேள்!' என்று சொல்லிவிடும்.

(ச) அது 'பின்னும் நல்லதாயிற்று' என்று என்னிடத் தில் வரும்.

(ரு) நான் பேசிக்கொள்ளுகிறேன்'' என்றாள்,

வேதாளம் மறுதடவை வேலை கேட்க வந்தபோது, அரசன் அப்படியே சொல்லிவிட்டான்.

அந்தப்பிரகாரம் அவ் வேதாளம் கலைபூஷணியிடம் வந்து, "அம்மணி! நான் செய்யத்தக்க வேலையாது?" என்று கேட்டது.

கலைபூஷணி, (க) உடனே தன் கூந்தலை யவிழ்த்து,

(உ) அதில் ஒரு தலைமயிரை யறுத்து, அதன் கையிற் கொடுத்து,

(ங) "ஓ! வேதாளமே! இதை உடனே நூறாய்ப் பிளந்து, ஒன்றின்பேரி லொன்று கீழே சாயாமல் நேராய் நிற்க வைத்து, அதின் உச்சியில் நீ அசையாமல் உட்கார்ந்து காட்டி விட்டு,

(ச) பின்பு வேறே வேலைகளுக்கு உத்திரவு கேள்!" என்றாள்.

வேதாளம் அதை வாங்கிக் கையில் வைத்துக்கொண்டு நாலு பாகமாய்ப் பிளந்தது; அதற்குமேல் பிளப்பது அதற்கு அசாத்தியமாக முடிந்த பிற்பாடு,

(க) "ஐயோ! இதை நாலாய்ப் பிளப்பதற்கே அசாத்தியமாய்விட்டதே,

(உ) இதை இன்னம் நூறாய்ப் பிளப்ப தெப்படி?

(ங) சமுத்திரங்களெல்லாந் தாண்டிவிட்டு, ஒரு சிறு வாய்க்காலில் வந்து மாட்டிக் கொண்டோமே," என்று வேதாளம் விசனப்பட்டுக்கொண்டு, கலைபூஷணியிடம் வந்து நின்றது.

அவளும் அதைப் பார்த்து,

(க) "நான் உனக்காக அநேக வேலைகளை ஆயத்தப் படுத்தி வைத்திருக்கிறேன்.

(உ) முன்னே கொடுத்த வேலை யென்னவாயிற்று?" என்று கேட்டாள்.

அதற்கு வேதாளம் இராஜனுடைய மனைவியைப் பார்த்துச் சொல்லுகிறது:—

(க) "அம்மணீ! நானிதுவரையில் எத்தனையோ இராஜாக்களை ஏமாற்றிக் காலம் தள்ளிக்கொண்டு வந்தேன்.

(உ) இன்றைக்கு உன் கையில் அகப்பட்டுக் கொண்டேன்.

(ரு) நீ கொடுத்த வேலை யென்னால் செய்யச் சாத்தியமானதா யிருக்கவில்லை.'' என்று கலைபூஷணியின் காலில் சாஷ்டாங்கமாய் விழுந்து,

(க) ''இனி, தாயே! உனக்கு நான் அடிமை,

(உ) நீயிட்ட வேலைகளை நான் செய்துகொண்டிருக்கிறேன்.

(ரு) நான் வலிய இனி வேலை கேட்கிறதே இல்லை,

(ச) எனக்கு இதோடே புத்தி வந்தது,'' என்று சொல்லிக் கன்னத்தி லறைந்துகொண்டது.

அப்புறம் அரசன் இவைகளை யெல்லாம் கண்டு தன் மனைவியின் விவேகத்திற்காகவும், தந்திரத்திற்காகவும் அதிக சந்தோஷப்பட்டு, 'இப்போதுதான் நம்முடைய உயிர் அபாயத்திலிருந்து தப்பித்துக்கொண்டது,' என்று சந்தோஷ மடைந்து, அச் சந்தோஷத்திற்கு அறிகுறியாய்த் தன் சீமை எங்கும் சர்க்கரை வழங்கும்படி உத்தரவு கொடுத்தான்.

இவ்விதமாகவல்லவோ கணவனுக்கு இடையூறு வந்த போது மனைவி தன் விவேகத்தால் அவனைக் காப்பாற்ற வகை தேடவேண்டும்.

## பெண்பிள்ளைக் கல்வி

பெண்பிள்ளைகளுக்குக் கல்வி அவசியமென்பதைப் பற்றி இதற்கு முன் பலபல விதங்களாய் அநேக கல்விமான்கள் விவரித் தெழுதியிருக்கின்றார்கள். ஆயினும், மாதர் நீதி யென்று பெயர் வகித்த இந்நூலில் அதைக் குறித்து யாதுங் கூறாமலிருப்பது குறைவாய்க் காட்டுகிறபடியால், அதின் விஷயமாய் இங்குச் சற்றுச் சுருக்கிச் சொல்வோம்.

(க) பெண்களுக்கு ஆடையாபரணங்களினாலும், ரூப லாவண்ணியங்களினாலும் உண்டாகும் அழகைப் பார்க்கிலும் கல்வியறிவினால் உண்டாகும் அழகே மிக்க சிறப்புள்ளதாக இருக்கின்றது.

(உ) எப்படியென்றால், முருக்கம்பூவானது, பார்ப்போர் கண்களை மயக்கும்படியான நிறமும், அழகுமுள்ளதாயிருந்தும், அதனிடத்தில் புஷ்பங்களுக்கு இருக்கவேண்டிய வாசனை யில்லாமையால், அதற்கு யாதொரு சிறப்பும் இல்லாமலிருக்கிறது.

(ங) இவ்வளவு அலங்காரத்தோடு மணமுங் கூடியிருந்தால், அதற்கு எவ்வளவு மேன்மை யுண்டாகுமென்று யோசித்துப் பாருங்கள்!

(ச) அதைப்போலவே, பெண்களுக்கு மற்றெல்லா அழகுகள் அமைந்திருந்தும், வாசிப்பில்லாவிட்டால் அவர்களுடைய அழகினால் என்ன பயன் உண்டாகும்?

[சிறுபஞ்சமூலம்: ங௭-ம் செய்யுள்]

"மயிர்வனப்பும், கண்கவரு மார்பின் வனப்பும்,
உகிர்வனப்பும், காதின் வனப்பும்.-செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும்; வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு."

என்று சொல்லியிருக்கிறபடி,

(க) "பெண்களுக்குக் கூந்தலினாலும், ஸ்தன்னியங்களினாலும், நகங்களோடு கூடிய விரல்களினாலும், ஆபரணங்களணிந்த காதுகளினாலும், தந்த வரிசைகளினாலும் உண்டாகும் அழகை அழகென்று சொல்லக்கூடாது.

(உ) ஆனால், கல்வியறிவோடு கூடிய வார்த்தைகளே அவர்களுக்கு அழகென்று சொல்லவேண்டும்."

மேலும், பொதுவாய் யோசித்துப் பார்க்குமிடத்து, உலகத்தில் மனிதர்களுக்குக் கல்வியே எல்லா நன்மைகளுக்குங் காரணமாக இருக்கின்றது; அவை யாவையெனில்,

[நீதிநெறி விளக்கம்: க-ம் செய்யுள்]

"அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்;
புறங்கடை நல்லிசையு நாட்டும்;—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும்; கல்வியி னூஉங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை.

என்றபடி,

(க) "கல்வியானது மனிதருக்குத் தருமத்தையும், செல்வத்தையும், இன்பத்தையும், மோட்சத்தையும் கொடுக்கும்.

(உ) இவற்றோடே உலகத்தில் நீங்காத கீர்த்தியையும் உண்டாக்கும்.

(ங) துன்பம் வந்த காலத்தில் கைகொடுத்துதவும்.

(ச) ஆகையால், அற்ப வாழ்நாட்களையுடைய மனிதர் உயிர்களுக்கு இக் கல்வியைவிட உற்ற துணை வேறொன்றுமில்லை."

நம்முடைய தேசத்துப் பெண்களுக்குத் தொன்றுதொட்டுக் கல்வி யில்லாமலே யிருந்ததென்று சொல்லக்கூடவில்லை. ஏனென்றால், பூர்வத்தில் அநேக இந்து ஸ்திரீகள் கல்வியிற் சிறந்தவர்களாய் இருந்திருக்கிறார்கள். ஆனால் மத்தியில் கல்வியபிவிர்த்தியைப்பற்றிச் சிரத்தையில்லாத அரசர்கள் நமது தேசத்தின் அரசாட்சியைக் கைக்கொண்ட

போது, பெண்களுக்குக் கல்வி கற்பிக்கும் வழக்கம் மாறிப் போனதாகத் தோன்றுகிறது. முன்னோர் வழக்கத்தையே சாஸ்திர விதியால் அனுசரிக்கும் நம்முடைய நாட்டார் அதை மாற்றுவதற்கு முயலாமல், நாளுக்கு நாள் அவர்களை அவிவேக சாகரத்தில் அமிழ்த்திவிடுகின்றார்கள். கடவுளுடைய அனுக்கிரகத்தால் நமக்கு இப்போது கிடைத்திருக்கும் ஆங்கிலேய அரசாட்சியின் நாகரீகத் தேர்ச்சியினால், மீண்டும் நம்முடைய பெண்பிள்ளைகளுக்குப் பூர்வத்தில் இருந்த கல்வி நாளடைவில் விர்த்தியடையு மென்பதற்குச் சந்தேக மில்லை. துரைத்தனத்தார் இப்போது அங்கங்கே பெண்களுக்காக ஸ்தாபித்திருக்கும் எண்ணிறந்த கல்விச்சாலைகளும், அவற்றின் அபிவிர்த்திக்காக அவர்கள் அப்போதைக்கப்போது செய்துகொண்டு வரும் அளவற்ற முயற்சிகளுமே அதற்கு திருஷ்டாந்தமாய்ச் சொல்லலாம்.

பெண்பிள்ளைகளின் கல்வியைப்பற்றி நம்முடைய இராஜாங்கத்தார் இவ்வளவு சிரமங்களை யெடுத்துக்கொண்டு முயற்சி செய்துவந்தும், இத் தேசத்தாரில் அனேகர் இன்னும் அதினால் உண்டாகும் நன்மைகளை அறியாமலே இருக்கின்றார்கள்;

(க) "பெண்களுக்கு எழுத்து வாசனை யுண்டானால், அவர்கள் தங்கள் சோரநாயகர்களுக்குக் கடிதமெழுத வகை தேடுவார்கள்", என்றும்,

(உ) "அதினால் விபசாரத்துக்கு இட முண்டாகும்" என்றும், சிலர் சந்தேகிக்கிறார்கள்.

இது சுத்த அவிவேகம். எப்படியென்றால், வாசிப் புண்டாவதினால் ஸ்திரீகள்விபசாரம் செய்வார்கள்" என்றும், "அஃதில்லாவிடில் அவர்கள் நன்னடக்கையோடு இருப்பார்கள்" என்றும் சொல்வதற்குக் கூடவில்லை.

ஏனென்றால், இப்போது உலகத்தில் விபசாரம் செய்யும் துஷ்ட ஸ்திரீகளெல்லாம் தங்கள் சோர நாயகருக்குக் கடித மெழுதுவதினாலேயே தங்கள் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளுகிறார்களா என்று யோசித்துப் பார்ப்போம். அப்படி யொன்றுங் காணப்படவில்லை.

தமக்குத் தெரிந்த படிப்பினால் எங்கேயோ ஒரு துஷ்டை தன் சோரநாயகனுக்குக் கடித மெழுதிவிட்டாளென்றால், அப்படியே எல்லா ஸ்திரீகளும் தங்களுக்குக் கற்பிற்குங் கல்வியை துர்விநியோகப் படுத்துவார்களென்று நாம் எண்ணலாமா?

இப்போது, ஔஷதப் பிரயோகத்தால் மனிதருக்குப் பலவித நோய்கள் நீங்கிச் சவுக்கியம் உண்டாகிக்கொண்டு வந்தும், நூற்றி லொருவருக்கு அதே ஔஷதம் உட்கொண்டதினால் ஒரு மனிதன் இறந்துபோனானென்று, 'மனிதருக்கு ஔஷதமே கூடாது' என்று தீர்மானித்துவிடலாமா?

இதைப்போலவே,

(க) 'பெண்களுக்குக் கல்வி; கெடுதியை உண்டாக்கும்' என்று நினைப்பது பெரிய அவிவேகம்,

(உ) அது அவர்களுக்கு விவேகத்தை அபிவிர்த்தி செய்து, பதிவிரதா தர்மத்தை விர்த்தியாக்குமே யொழிய, ஒருக்காலுங் கெடுதியை உண்டாக்கமாட்டாது.

மேலும், இப்போது நம்முடைய துரைத்தனத்தாரின் நன்முயற்சியால் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் வித்தியாசாலைகளில் கல்விப்பயிற்சி செய்து, ஆண்பிள்ளைகள் மாத்திரம் மிகவும் தேர்ச்சி யடைந்திருந்தும், அவர்களுடைய மனைவியர் அப்படிக் கில்லாமல் அவிவேகிகளாயிருப்பது, பெரிய குறைவாகக் காட்டுகிறது.

ஒரு வீட்டில் கணவன் மாத்திரம் கல்வியிற் சிறந்து சகல கலைவல்லவனுயிருந்து, அவனுடைய மனைவி கல்வியறி வின்றி அவிவேகக் களஞ்சியமா யிருப்பாளானுல், அப்படிப் பட்ட காட்சியைக் காணும்போது அது எவ்வளவோ மன வருத்தத்தை நமக்கு உண்டாக்குகிறதல்லவா?

மனைவியும் வாசித்து விவேகியா யிருப்பாளானுல், அவள் அந்த வீட்டுக்கு ஒரு மாணிக்க தீபம்போல் காணப் படுவாள் என்பதற்குச் சந்தேக மென்ன?

மேலும், (க) கல்வியறிவு உண்டாயிருக்கும் ஸ்திரீயான வள், தன் கணவனுடைய சவுக்கியத்தைப் பற்றி அதிக ஜாக் கிரதை யெடுத்துக் கொள்ளுவாள்.

(உ) தன் கணவனையே தெய்வமென்று முழு மன தோடு எண்ணி நடப்பாள்,

(ங) தன்னுடைய வீட்டுச் செலவு விஷயங்களிலும், வரும்படிக்குத் தக்கபடி சிக்கனமாய்ச் செலவு செய்து கொண்டு வருவாள்.

(ச) சவுக்கியத்தின் அபிவிருத்தியை யறிந்து, தன் வீட்டை யெப்போதும் பரிசுத்தமாகவே வைத்திருப்பாள்.

(ரு) தன் குழந்தைகளையும் சன்மார்க்கத்தில் நடக்கும் படி முயற்சி செய்துவருவாள்.

பெண்பிள்ளைகள் கல்வியறிவுள்ளவர்களா யிருப்பார்க ளானுல், மேற்சொன்ன பலவிதமான நன்மைகளுக்கு ஏது வாயிருக்குமென்று உணர்ந்து, நம்முடைய தேசத்தார் அவர்களுக்குக் கல்வி யபிவிர்த்தியாகும்படி தக்க முயற்சி செய்யவேண்டும்.

# மூன்றாவது முதுமைப் பருவம்

## 53-ம் பாடம்

## முதுமையில் ஸ்திரீகளுக்கு உண்டாகும் துர்க்குணங்கள்

மூன் விவரித்துச் சொல்லப்பட்டிருக்கும் கணவனோடு கூடிவாழும் பருவத்திற்குப் பிந்திய பாகத்தை, முதுமைப் பருவ மென்பதாக இங்கே பெயரிட்டுச் சொல்லியிருக் கின்றோம்,

முன் பருவத்தில் ஒரு ஸ்திரீயானவள் தன் கணவ ேனோடு கூடி வாழுங் காலத்தில் அநுசரிக்கவேண்டிய விதி களையும், அவனை மேன்மைப் படுத்துவதற்கு அறியவேண் டிய பல நீதிமார்க்கங்களையும் எடுத்துக் காட்டினோம்.

இம் முதுமைப் பருவத்தில், அந்த ஸ்திரீயானவள் தன்னுடைய புத்திரனுடைய சவரக்ஷணையின்கீழ் வந்தபிற் பாடு, அவள் நடக்கவேண்டிய வகைகளையும், தன்னுடைய குடும்ப க்ஷேமத்தினிமித்தம் அவள் இருக்கவேண்டிய நிலை மையையும் இனி விவரித்துச் சொல்லப்போகிறோம்.

இப் பருவத்தில் ஒரு ஸ்திரீயானவள், தன்னுடைய பெண் குழந்தைகளும், ஆண் குழந்தைகளும், தக்க வய தடைந்ததின்மேல், தன் கணவனுடைய முயற்சியால் அவர் களுக்கு விவாகம் நடத்திவைக்கக் கடமைப் பட்டவளா யிருக்கின்றாள். இவ்வாறு அவ் வாலிபர்களுக்கு விவாகமான பிற்பாடு, முன்னால் தானும் தன் கணவனும் தங்களுடைய இல்வாழ்க்கையை யெவ்வாறு நடத்த ஆரம்பித்தார்களோ, அவ்வாறே அவர்களும் தங்கள் இல்வாழ்க்கையிற் பிரவேசி த்து, அதை ஒருமித்து நடத்தவேண்டியவர்கள் ஆகிறார்

கள். அப்போது தன் பிள்ளைக்குப் பெண்சாதியாய் வரப் பட்ட மருமகளுக்கும், தன் பெண்ணுக்குப் புருஷனாய் வரப்பட்ட மருமகனுக்கும், இவள் மாமியார் ஆகிறாள்.

பெண்ணுக்குப் புருஷனாய் வரப்பட்ட மருமகன், தனக்கு நெருங்கின பந்துவாய் இராவிட்டாலும், அவன் விஷயத்தில் நம்முடைய தேசத்து ஸ்திரீகள், இயல்பாகவே அதிக பட்சம் வைத்துக் கடைசிவரையில் அவனை மிகவும் மரியாதையாகவே நடத்திக்கொண்டு வருகிறார்கள். சிலர், தங்கள் சொந்தக் குமாரரைப் பார்க்கிலும் அதிக பட்சத் தோடே அவர்களை நடத்திக்கொண்டு வருகிறார்கள். ஆகை யால், அதைப்பற்றி இவர்களுக்கு நாம் ஒன்றையும் போதி க்கவேண்டிய அவசிய மில்லை.

ஆனால், அப்படிப்பட்ட ஸ்திரீகள் தங்கள் குமாரருக் குப் பெண்சாதிமாராய் வரும் பெண்கள், தங்களுக்கு மிக வும் நெருங்கிய பந்துக்களா யிருந்தபோதிலும், ஐயோ! அவர்களை அவ்வித பட்சத்தோடு எல்லாரும் நடத்துகிற தில்லையே; அப்படி நடத்தாமல் அவர்களுக்கு எந்நேரமும் மனவருத்தம் உண்டாகும்படி நடத்துகிறபடியால், நம் முடைய தேசத்தில் அநேக குடும்பங்களில் அளவில்லாத தீங்குகள் உண்டாவதற்குக் காரணமாகின்றது. அவ்வித தீங்குகள் உண்டாகாமல் தடுப்பதற்காக அவர்களுடைய அக்கிரமங்களையும், அவற்றின் விளைவையும் இங்கே விரிவாய் எடுத்துக் காட்டத் துணிந்தோம்.

தங்கள் மருமக்கள்மாரை அநேக ஸ்திரீகள் மிகுந்த பட்சத்தோடும், உள்ளன்போடும் சொந்தக் குமாரத்திகளைப் போல் நடத்திவருகின்றார்கள். அப்படிப்பட்ட புத்திசாலிக ளான ஸ்திரீகளுக்கு ஒருவரும் போதிக்கவேண்டிய அவ சிய மில்லை. ஆனால், தங்கள் மருமக்கள்மாரை அவ்வாறு பட்சத்தோடு நடத்தாமல், எந்நேரமும் அவர்கள் பேரில்

குற்றம் சுமத்திக்கொண்டே யிருக்கும் கொடுமைக்காரிக ளான ஸ்திரீகளுக்கு மாத்திரம், நல்வழிகளைப் போதிக்க வேண்டுவது அவசியமாயிருக்கிறது.

ஆகையால்,

"உள்ளதைச் சொன்னால்
நொள்ளைக்கண்ணிக்கு நோப்பாளம்"

என்பதுபோல், அப்படிப்பட்ட செய்கையுள்ளவர்கள் இதற்காகக் கோபிக்காமல், நாம் சொல்லப்போகிற விஷயங் களைச் சரியாய்க் கவனித்து நடப்பது உசிதம்.

54-ம் பாடம்

## ஸ்திரீகள் தங்கள் மருமக்கள்மாருக்குச் செய்யும் கொடுமைகளும், அவற்றின் விளைவும்

மேற்சொன்ன விதமாய் ஒருத்திக்கு மருமகளாய் ஒரு பெண் வீட்டுக்கு வந்தவுடன், அவளைத் தன் மகளுக்கு வந்த மருமகனைப்போல் பட்சமாய்ப் பாராமல், சந்தையில் விலைக்கு வாங்கின ஒரு மாட்டைப்போலவும், அல்லது தனக்கு வலியக் கிடைத்த ஒரு அடிமையைப் போலவும், அவள் நினைத்துக்கொள்ளுகிறாளே யல்லாமல், தனக்குப் பின் தன் குடும்பத்தை விளங்கவைப்பதற்கு வந்து தோன்றிய மங்கை யாச்சுதே யென்று சற்றுவது எண்ணிப் பார்க்கிறதில்லை.

ஒருபெண்ணை யொருவனுக்குக் கலியாணம் செய்து கொடுத்த பிறகு, அவள் தன்னைப் பிறந்ததுமுதல் அது வரையில் வளர்த்துக் காப்பாற்றி வந்த தன் தாய் தந்தை யரையும், பால்யமுதல் கூடவே பழகி விளையாடிக்கொண்டு வந்த தன் சகோதரரையும் விட்டுப் பிரிய வேண்டியவ

ளாகிறாள். அவ்வாறு பிரிந்து அந்நிய மனிதன் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு வந்தவிடத்தில், அவ் வீட்டுக்குத் தலைமை யாயிருக்கும் மாமியாரானவள்,

"பூனை யெலியைப் பார்ப்பதுபோல்"

குரூர மனதோடு பார்த்தாளானால், அந்தப் பெண்ணி னுடைய மனது எவ்வளவு வருத்த மடையுமென்று யோசித் துப் பாருங்கள். அவளை யொரு பயங்கரமான காட்டில் விட்டுவிட்டதைப்போல் அவளுக்கு இருக்குமல்லவா? அவ ளுக்குத் தன் மாமியார் வீட்டில் நிலைத்திருக்க விருப்பம் எப்படி யுண்டாகும்? எந்நேரமும் தான் தன் தாய்வீட்டில் முன் இருந்த நிலைமையை நினைத்துப் புலம்பிக்கொண் டிருப்பாளல்லவா?

மேலும் சிலர், தங்கள் மருமக்கள்மாரை இவ்வள வோடே விடுகிறதுமில்லை; அவர்கள்மேல் புருஷருடன் அடிக்கடி கோள் சொல்லி, அவர்களுக்குத் தங்கள் மனைவி யார்மேல் பிரியமில்லாமற் போகும்படி செய்துவிடுகிறார்கள்.

ஒரு வீட்டுக்கு நூதனமாய் வாழவந்த பெண்ணுக்கு இத்தனைச் சங்கடங்கள் இருந்தால், அவள் இவைகளைப் பொறுத்துக்கொண்டு எவ்வளவு காலம் குடித்தனம் செய்து வருவாள்?

(க) மாமியார் அவர்களை யிவ்வாறு நடத்துவதனால் அநேக பெண்கள் ஒருவரோடும் சொல்லாமல் மூடத்தன மாய்த் தங்கள் பிராணன்களுக்கே முடிவைத் தேடிக்கொள் ளுகிறார்கள்.

(உ) சிலர், இப்படிப்பட்ட செய்கைகளைப் பொறுக்க மாட்டாமல், தங்கள் தாய்வீடுகளுக்கு ஓடியும் போய்விடு கிறார்கள்.

இவைகளால் ஒரு குடும்பத்துக்கு எவ்வளவு நஷ்டங் கள் உண்டாகுமென்பதை விவரித்துச் சொல்லவேண்டுமா?

55-ம் பாடம்

## ஸ்திரீகள் தங்கள் மருமக்கள்மாரை நடத்த வேண்டிய நல்வழிகள்

மேற்சொன்ன விதமாய் ஸதிரீகள் தங்கள் மருமக்கள்மாரைக் குரூரமாய் நடத்துவதற்கு என்ன காரணமென்று யோசித்துப் பார்ப்போம். ஒன்றையுங் காரணமாய்ச் சொல்லக்கூடவில்லை. ஆனால்,

(க) அந்த மருமக்கள்மார் தங்கள் புருஷரோடு சந்தோஷமாய் ஒருமித்து வாழ்வதினாலும்,

(உ) அவர்கள் நல்ல உடைமைகளை அணிந்துகொள்வதினாலும்,

(ங) நல்ல சாப்பாட்டைச் சாப்பிடுவதினாலும்,

மாமியார் அவைகளைப் பார்த்து மனந் தாளாமல், இவ் வித கொடுமைகளைச் செய்ய ஆரம்பிக்கிறதாகத் தோற்றுகிறபடியால், இவைகளுக்குக் காரணம் பொறாமை யென்று ஒருவாறு சொல்லலாம்.

இந்தப் பாபிஷ்டிகள் தங்கள் மருமக்கள்மார் விஷயத்தில் இப்படியேன் பொறாமைப்படவேண்டும்? தான் ஒருத்திக்கு மருமகளாயிருந்தபோது அவள் தன்னை இவ்விதமாய் நடத்தித், தன்மீது பொறாமை கொண்டிருந்தால், அதற்காக இவள் எவ்வளவு துக்கங்களை அனுபவித்திருப்பாள்? தன் மருமகளை அதே விதமாய் இப்போது நடத்தினால் அவளுக்கும் அப்படித்தானே யிருக்கும்? இவைகளை யெல்லாம் யோசித்து இவள் தன் மருமகளை யேன் பட்சத்துடன் நடத்தக்கூடாது?

மேலும், தன் வயிற்றிற் பிறந்த பெண்ணை அவளுடைய மாமியார் இவ்வாறு நடத்தினால், அதைப் பார்க்கும்

போதாவது, கேட்கும்போதாவது, தனக்கு எப்படி யிருக்கும்? தன்னுடைய வயிறு எரியாதா? ஐயோ! தன் மகளை இப்படிக் கொடுமையாய் அந்தப் பாவி நடத்துகிறாளே யென்று, அதை நினைக்கும்போதெல்லாம் இவளுக்குக் கண்களில் நீர் சிந்தாதா? இப்படித்தானே தன் மருகளுடைய விஷயமும் இருக்குமென்று ஏன் எண்ணி நடக்கக் கூடாது?

நம்முடைய தேசத்தில், மாமியார் உத்தியோகத்திற்கு வரும் எல்லா ஸ்திரீகளும், இப்படியே கொடுமையாய்த் தங்கள் மருமக்கள்மாரை நடத்துகிறதில்லை யென்று முன்னமே சொல்லிவிட்டோம். சில புண்ணியவதிகள், அவர்களைத் தங்கள் சொந்த குமாரத்திகளைப்போல் அதிக பட்சத்துடன் நடத்திக்கொண்டு வருகின்றார்கள். அப்படி நடத்துவதில் ஏதாவது கெடுதி யுண்டாகுமாவென்று யோசித்துப் பார்த்தால், யாதொரு கெடுதியும் உண்டாகிறதில்லை.

மாமியாரால் உண்மையான பட்சத்தோடு நடத்தப்படும் பெண்ணானவள், அவளைத் தன் தாயைப்போல் எண்ணி நடக்கின்றாள். ஆனால், சில அவிவேகமுள்ள பெண்கள் அப்படிச் செய்யாமல், புருஷரைக் கைவசப்படுத்திக்கொண்டு, மாமியாரை வீட்டை விட்டுத் துரத்திவிடுகிறதுமுண்டு, இது சாதாரணமாய் எங்கும் நடக்கிற விஷயமல்ல. இது புருஷருடைய மூடத்தனத்தினால் நடக்கிறதென்று சொல்லலாம்.

[ஆத்திசூடி: உ௮-ம் சூத்திரம்]
"தந்தை தாய்ப்பேண்."

என்னும் நீதிவாக்கியத்தை மறந்து, சில ஆண்பிள்ளைகள் தங்கள் தாய்மாரை அசட்டை செய்கின்றார்கள், பத்து மாதம் சுமந்து பெற்றுப் பால் கொடுத்து வளர்த்துவந்த தாயை அலட்சியஞ் செய்வது கொடிய பாதகம்.

[பட்டணத்துப் பிள்ளையார் பாடல்]

"ஐயிரண்டு திங்களாய் அங்கமேலாம் நோந்துபெற்றுப்,
பையலென்ற போதே பரிந்தெடுத்துச்,—செய்யஇரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை,
எப்பிறப்பிற் காண்பேன் இனி?"

என்று சொல்லியிருப்பதில், தன்னைப் பெற்ற தாயை ஒருவன் எவ்வளவு மேன்மையாய் நினைக்க வேண்டுமென்று பாருங்கள். ஆனால், இவ்வளவு மேன்மையாய்த் தங்கள் குமாரர்கள் எண்ணி நடந்துவந்தபோதிலும்,—

[நாலடியார்]

"உப்போடு நெய் பால் தயிர் காயம் பெய்து அடினும்
கைப்பு அறு பேய்ச்சுரையின் காய்."

என்றபடி, சில ஸ்திரீகள் தங்களுக்கு இயல்பாய் உண்டான துர்க்குணங்களை விடுகிறதில்லை.

தங்கள் மருமக்கள்மாரை உள்ளன்புடன் நடத்திவரும் மாமியார்கள், அவர்களை யெப்போதாவது தங்கள் குமாரர்கள் கோபத்தினால் அடிக்கும்போது கண்டால், மனம் சகியாமல் தங்கள் குமாரரை அதற்காகக் கடிந்து பேசுகிறார்கள்,

மேலும், புருஷனும் பெண்ஜாதியும் ஏதாவது மனஸ்தாபத்தால் ஒருவருக்கொருவர் பேசாம லிருந்தார்களானால், மாமியார் அதைப் பார்த்து மனவருத்தப்பட்டுத், தன்னுடைய மகனுக்கு வேண்டிய புத்திமதிகளை சொல்லி அவர்கள் இருவருக்கும் சிநேக முண்டாக்குகின்றாள். இப்படிச் செய்வதல்லவோ உத்தமிகளுடைய கடமையாய்ச் சொல்ல வேண்டும்.

56-ம் பாடம்

# ஸ்திரீகள் முதுமையில் கவனித்து நடக்கவேண்டிய முறைமைகள்

ஓ சகோதரிகளே! நீங்கள் அருமையாய்ப் பெற்று வளர்த்த ஒரு ஆண்பிள்ளைக்கு, வயதுவந்த பிற்பாடு ஒரு பெண்ணைத் தேடி ஏன் விவாகம் செய்துவைக்கின்றீர்கள்? அவன் உலகத்தில் எல்லா மனிதர்களைப்போல், வேண்டிய போக பாக்கியங்களை யனுபவித்து, வாழையடி வாழையாய், உங்களுடைய சந்ததி விளங்குவதற்காகப் புத்திர பாக்கியங்களையும் பெறுவதற்கல்லவா? இவ்வளவு சிறந்த காரியங்களும் நீங்கள் கலியாணஞ் செய்துவைக்கும் பெண்ணால் தானே ஆகவேண்டும்.

ஒரு மனிதனுக்கு உலகத்தில் உண்டாகவேண்டிய சகல இன்பங்களுக்கும் அவனுடைய பெண்ஜாதியல்லவா காரணமாயிருக்கிறாள்! இதற்குத் திருஷ்டாந்தமாகக் கணவனோடு கூடி வாழும் பருவத்திற் சொல்லியிருக்கும் நீதிகளைக் கவனித்துப் பாருங்கள்; அப்படியிருக்க, ஐயோ! அந்த ஊரார் பெற்ற பெண்ணை நீங்கள் ஏன் அநியாயமாய் நடத்துகின்றீர்கள்?

உங்களுடைய மகனும் மருமகளும் எப்படியாவது ஒருமித்து நடந்துகொள்ளட்டுமே; அதனால் உங்களுக்காக வேண்டியதென்ன? உங்களுக்கு வேண்டியவை எல்லாங் கூடி, வேளைக்குத் தகுந்த போஜனமும், உடுத்திக்கொள்ளத் தேவையான வஸ்திரங்களுந்தானே? இவைகளில் ஒன்றும் அவர்கள் குறைவு செய்யாமல் நடத்திவரும்போது, வீணில் அவர்களை ஏன் வருத்தப்படுத்துகின்றீர்கள்?

உங்களுக்கு அவர்கள் அன்ன வஸ்திரங்களைக் குறைவின்றிக் கொடுத்து நடத்துவதோடு, தங்களைப் பெற்று வளர்த்த தாய்மாராச்சுதே யென்கிற மதிப்பும், விசுவாச

மும் உங்கள்மீது அவர்களுக் கிருக்கவும் பார்க்கவேண்டுவது தான். அப்படிக்கில்லாவிட்டால், அவர்களுடைய துர்மார்க் கத்தைப்பற்றி நீங்கள் அண்டை அயலில் சொல்லித் தூஷி த்து, அவர்களுக்குவிவேகம் வரும்படிசெய்வது ஞாயந்தான்.

அவர்கள் உங்கள்மீது அன்புவைத்து நடக்கும்போது வீணாய் அவர்களை யேன் தூற்றுகின்றீர்கள்? அவர்களும் அவர்கள் பெண்ஜாதிமாரும் அந்நியோந்நியமாய் வாழ்வ தைப் பார்த்து நீங்கள் ஏன் பொறுமைப்படுகின்றீர்கள்? ஒரு ஆண்பிள்ளை தன் பெண்ஜாதியுடன் ஒருமித்து வாழ்வதினால் எத்தனை அனுகூலங்க ளிருக்கின்றனவென்று யோசித்துப் பாருங்கள்! தன் பெண்ஜாதியுடன் சந்தோஷமாய் வாழ் வதற்கு அவனுடைய தாயானவள் இடந் தராவிட்டால்,

(க) அவன் இதரமான வேசியர்முதலான பரஸ்திரீக ளிடத்தில் போய்ச் சந்தோஷமாய்க் காலங் கழிக்க வகை தேடுகின்றான்.

(உ) அதனால் அவன் பொரு ளிழந்து,

(ந) மானங் கெட்டு,

(ச) தேகத்தைக் கெடுத்துக்கொண்டு,

(ரு) வியாதிகளுக்கு இடந் தேடி,

(சா) அநேக துன்பங்களை இம்மையிலும் மறுமையி லும் அனுபவிக்கின்றான்.

அப்படி அவன் கெட்டழிவது உங்களுக்கு இஷ்டமா யிருக்கின்றதா? அவன் வீட்டில் தன் பெண்ஜாதியுடன் அந் நியோந்நியமாய்க் கலந்து வாழ்வதற்கு இடமிருந்தால், இப் படிப்பட்ட கேடுக ளுண்டாகுமா? ஒருபோதும் உண்டா காது.

மேலும், உங்களுக்குக் கிழத்தனம் வந்த பிற்பாடு, உங் கள் ஆசைப் புத்திரரை ஆதரிக்கவேண்டியவர்கள் யார்?

"தாய்க்குப் பின் தாரம்."

என்றபடி, அவர்களுடைய மனைவிகளல்லவோ அவர்களுக்குத் தாயைப்போல் போஷிப்பதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யவேண்டியவர்களா யிருக்கின்றார்கள். இது உங்களுக்குத் தெரியாதா? இப்படிக்கெல்லாம் உங்களுடைய குமாரர்கள் விஷயத்தில் அன்பு பாராட்டி இன்பங் கொடுத்து நடக்கவேண்டிய அந்தப் பெண்களும், எத்தனையோ தவங்கள் செய்ததினால் உங்களுடைய மேன்மை பொருந்திய கர்ப்பங்களி லுதித்த அவ் வருமையான புத்திரர்களும், ஒருமித்து மனமகிழ்ச்சியுடன் வாழ்வதைக் கண்குளிரப் பார்த்து நீங்கள் ஏன் ஆனந்தம் அடையக்கூடாது!

"அம்மா! எங்கள் மகனும் மருமகளும் எவ்வளவு அந்நியோந்நியமாய் இருக்கிறார்கள் பார்த்தீர்களா! இனி எங்களுக்கு வேறு என்ன மனக்குறை இருக்கிறது?" என்று சொல்லி, அவர்களைப் பற்றிச் சிலாக்கியமாய் ஏன் பேசக்கூடாது! இப்படிச் செய்தாலல்லவோ உங்கள் குடும்பத்துக்கு க்ஷேமமும், விர்த்தியும், கீர்த்தியு முண்டாகும்.

அப்படிக்கில்லாமல்,

(க) அவர்களை யெந்நேரமும்,

"புண்ணில் கோலிட்டது" போல

வதைத்துக் கொண்டிருந்தால், உங்கள் கோத்திரம் விளங்குமா?

(உ) உங்கள் வயிற்றிற் பிறந்த பெண்கள் வாழ்க்கைப் பட்டுப்போனவிடத்தில் மங்களகரமாய் வாழ்வார்களா?

(ங) உங்கள் மருமக்கள் மார்களுடைய வயிற்றெரிச்சல் அவர்களுக்கு உண்டாகாதா?

உங்கள் மருமக்கள்மாரை அன்புடன் நடத்திக் கொண்டு வருவீர்களானால்,

"மாதா செய்தது மக்களைக் காக்கும்."

என்று சொல்லியிருக்கிறபடி, நீங்கள் செய்யப்பட்ட நன்மைகளெல்லாம், உங்கள் வயிற்றில் அருமையாய் உதித்து, அதிக மேன்மையாய் வளர்ந்து, வேறொரு மாமியாரிடத்

தில் குடித்தனம் செய்யும்படியாய் ஒப்புவிக்கப்படும் உங்களுடைய சொந்தப் பெண்களுக்கு ஒரு குடையைப்போல் காப்பாற்ருதா?

மேலும்,

"மருமகள் மேச்சின மாமியார் இல்லை;
மாமியார் மேச்சின மருமகள் இல்லை."

என்பதாய் இக்காலத்தில் வழங்கிவரும் பழமொழி யெதற்காக உண்டாயிருக்கின்றது? நீங்கள் செய்யுங் கொடுமையினுலல்லவா! அவ்விதமான மொழிகளை நீங்கள் கேட்கும்போது உங்களுக்கு அவமானமாகவில்லையா? அந்த மருமக்கள்மாரை யினியாகிலும் அன்புடன் நடத்திவருவீர்களாளுல், அப் பழமொழியைப் பொய்யாக்கி,

"மாமியாரை மேச்சாத மருமக ளில்லை;
மருமகளை மேச்சாத மாமியா ரில்லை."

என்று ஒரு புதுமொழி யுண்டாகாதா?

இதுவுமல்லாமல், உங்கள் மருமக்கள்மார் குடித்தனம் செய்வதில் குற்றமுண்டாகாம லிருக்குமா? இதுவரையில் அவர்கள் தாயின்கீழ்ப் பெண்ணு யிருந்தவர்கள் தானே? அவர்கள் இதற்குமுன் வேறே யாரிடத்திலாவது மருமக்களாயிருந்து பழகியிருக்கின்ருர்களா? இனிமேல் தானே அவர்கள் குடித்தனஞ்செய்து பழகவேண்டும்?

ஆகையால், ஏதாவது அற்ப குற்றங்கள் உண்டானபோதிலும், அதற்காக அவர்களுக்கு நல்லதனத்தோடே புத்திகளைச் சொல்லி, அண்டை அயலில் அவர்களைத் தூற்ருமல்,

[நறுந்தொகை: ௩௩-ம் சூத்திரம்]

"சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயிற் பொறுப்பது கடனே."

என்றபடி, பொறுத்து அடக்கிக்கொண்டு போனலல்லவா,

உங்களுக்கு மேன்மையுங் கீர்த்தியு முண்டாகும். அப்படிச் செய்வதை விட்டு, அற்ப குற்றங்களுக்கெல்லாம் அவர்களைத் தூற்றி, வாயில் வழங்காத வார்த்தைகளால் அடிக்கடி அவர்களைத் திட்டிக்கொண்டே யிருந்தால், உங்களிடத்தில் அவர்களுக்கு மதிப்பிருக்குமா?

(க) "அடீ! இந்த கிழப்பிணத்துக்கு வேறே வேலையில்லை,

(உ) ஏதாவது கொஞ்சம் தப்பிதம் அகப்பட்டால், அதையே எந்நேரமும் ஊரெல்லாம் தூற்றிக்கொண்டு திரிகின்றாளே!

(ங) அம்மா! இவள் ஒருத்திக்கு மருமகளாயிருந்த போது எப்படி வாழ்ந்திருப்பாளோ தெரியாது.

(ச) ஊரில் வரப்பட்ட சாவும் இவளுக்கு வரவில்லையே,

(ரு) எனக்கென்று இந்த ராக்ஷசி மாமியாராய் எங்கிருந்து வாய்த்தாள்?"

என்று சாதாரணமாய் இப்போது கொடுமையாய் நடத்தும் மாமிமார்களை மருமக்கள்மார் திட்டுவதைப்போல் உங்களையும் உங்கள் மருமக்கள்மார் திட்டிக்கொள்ள மாட்டார்களா?

இப்படிக்கெல்லாம் அற்ப செய்கைகளால் உங்களுக்கிருக்கும் கவுரவத்தை ஏன் வீணில் அழித்துக்கொள்ளுகின்றீர்கள்?

இவ்வாறாக மருமக்கள்மார் பட்சம் நாம் பேசுவதில் 'அவர்கள் செய்யும் எல்லாக் குற்றங்களுக்கும் அவர்களைக் கண்டிக்கவே கூடாது' என்று நீங்கள் எண்ணிக்கொள்ள வேண்டாம்.

(க) மருமகள், வீட்டை விட்டுக் காரண மில்லாமல் தனியே வேறு இடங்களுக்குப் போனாலும்,

(உ) நம்முடைய தேசாசாரத்துக்கு விரோதமாய் அந்நிய புருஷரோடு நாண மில்லாமல் பேசித் திரிந்துகொண்டிருந்தாலும்,

(ஊ) வீட்டு விஷயங்களில் வரவுக்குமிஞ்சி வீண் செலவுகள் செய்தாலும்,

அவளைக் கண்டிக்காமல் விடக்கூடாது. இப்படிப்பட்ட குற்றங்களை அவளுடைய புருஷனோடு சொல்லித் தந்தபடி அவளுக்குப் புத்தி வரும்படி தண்டிப்பது ஞாயந்தான். அதைவிட்டு, 'அவள் பேரில் ஏதாதது குற்றம் அகப்படுமா' என்று, அதற்காக எந்நேரமும் இடுப்புக் கட்டிக்கொண்டிருக்கக் கூடாதென்பது நம்முடைய கருத்து.

"ஆனைக்கும் அடி சறுக்கும்."

என்று சொல்லுகிறபடி, உலகத்தில் யாதொரு தப்பிதமும் செய்யாமல் நடக்க வல்லவர்கள் யார்? அப்படியிருக்க, 'தாயின்கீழ்ப் பெண்ணாயிருந்து சுகமாக விளையாட்டில் நாள் கழித்துவிட்டு, உடனே ஒருத்திக்கு மருமகளாய் வரும் ஒரு பெண்ணுக்குச், சமுசார விஷயத்தில் யாதொரு குற்றமும் செய்யாமல் நடந்துகொள்ளத் தெரியுமா' என்று சரியாய் ஆலோசித்து, அவர்களுக்கு நாளுக்குநாள் வீட்டு விஷயங்களில் தேர்ச்சி யுண்டாகும்படி நீங்கள் வழி காட்ட வேண்டும். இவ்வாறு செய்வதினால் உங்களுடைய குடும்பத்துக்கும் பலவித நன்மைக ளுண்டாகும்.

## முதுமைப்பருவத்தில் ஸ்திரீகள் புத்திரருக்கு அடங்கியிருக்கவேண்டு மேன்பது

ஸ்திரீகள் தங்களுக்கு வயது முதிர்ந்த பின்னிட்டு, சம்சார விஷயங்களின் சுமையைத் தங்கள் மருமக்கள்மார் தலையின் பேரில் இறக்கிவிடவேண்டும். அக்காலத்தில் அவர்கள், அவசியமில்லாமல் குடும்ப விஷயங்களில் தலையிட்டுக் கொள்வதினால்,

(க) அவர்களுடைய மனதுக்கு எந்நேரமும் சஞ்சலமாகவே யிருக்கும்.

(உ) அவைகளால் தங்கள் மருமக்கள்மாரோடு வீணில் சண்டைபோடும்படி நேரிடும்.

(ங) தங்கள் தேகத்துக்குச் சவுக்கியக் குறைவும் உண்டாகும்.

விர்த்தாப்பியம் வந்த பின்னிட்டு, இவ்வித சல்லியங்களுக்கு இவர்கள் ஏன் வழி தேடிக்கொள்ளவேண்டும்? முதுமைப் பருவத்தில் ஒரு ஸ்திரீயானவள், தன்னுடைய வீட்டு விருந்தாளியைப்போல் குறைவில்லாமல் சாப்பிட்டுவிட்டு, குடும்ப விஷயங்களில் கவலைப்படாமல், தன் பேரன்மார், பேத்திமார் முதலானவர்களை ஜாக்கிரதையுடன் வளர்த்துக்கொண்டுவந்தால், எவ்வளவு அழகாயிருக்குமென்று யோசித்துப் பாருங்கள். இதைவிட வேறே முக்கியமான வேலை யிவர்களுக்கு என்ன இருக்கிறது?

மேலும், (க) ஸ்திரீகளுடைய வாழ்நாட்களில் பால்ய முதல் அந்தியம்வரையில் இவர்களுக்குச் சுதந்தர மில்லை." என்றும்,

(உ) அதினால் முதுமையில் இவர்கள் தங்கள் புத்திரருக்கு அடங்கி நடக்கவேண்டும்'' என்றும்.

நூற்களிற் சொல்லப்பட்டிருக்கிறது.

[நீதிசாரம் : ௩அ-ம் செய்யுள்]

''மங்கையை வாழு நாளில் வளமோடு பிதாவே காப்பான்;
பொங்கிய யௌவனத்திற் பொருந்துபத் தாவே காப்பான்;
ங்கிய மூப்பி லேதன் தநயனே காப்பான் அன்றிச்
சங்கையா மேக்கா லத்தும் சுதந்தர மில்லை தானே.''

என்றபடி, ஒரு ஸ்திரீயானவள்,

(க) ''பால்யத்தில் தன்னுடைய பிதாவின் சவரக்ஷணையிலும்,

(உ) யௌவனத்தில் தன் கணவனுடைய ஆக்கினையிலும்,

(௩) முதுமையில் தன் புத்திரனுடைய ஆதரவிலும் இருக்கவேண்டியவளாய் இருக்கிறாள்.''

ஆகையால், வயது முதிர்ந்த பிற்பாடு தங்கள் புத்திரருடைய இஷ்டப்படி நடந்து, குடும்பங்களில் தங்களால் யாதொரு கலகமும் சச்சரவும் உண்டாகாத விதமாய் ஸதிரீகள் நடந்துகொள்ளவேண்டும்.

" பொங்கும் மங்களம் எங்கும் தங்குக "

மாதர் நீதி

முற்றிற்று.

'மாறன்' அச்சுக்கூடம், புரசை, சென்னை—1930.

உ

கடவுள் துணை

# நீதிமார்க்கக் கொம்மி

சீர்பெறு மிப்புவி மீதினில் மானிடர்
திண்ணமுடன் வாழ முனிவர்சொன்ன
ஏர்பெறும் ஆரிய நீதியைக் கொம்மியாய்
இயம்பப் பராபரனைத் துதிப்போம்.

க. மாதா பிதா குரு தெய்வம் இவரை
மதியாது விட்டால் மாபாதகம்;
ஆதாரம் உன்னை யீடேற்று வதற்கிவர்
ஆய்ந்து பாரடி ஆரணங்கே!

உ. உண்மையே உயிர்களுக் குற்றதுணையென்று
உபநிடதங்க ளெல்லா முரைக்கும் ;
புண்ணியங்கட்கு வழி காட்டும் அது
புந்தியிற் கொள்ளடி பூங்குயிலே !

ந. தன்னைப் போலவே அந்நியரு மென்று
தருமஞ் செய்வா யவர் தளரும்போது;
அந்நியர் துன்பம் அசட்டை செய்தல் நீ
அடைவதில்லைப் பேறு ஆரணங்கே!

ச. அந்நியர்க்குத் துன்பஞ் செய்யாதே; அதை
ஆவலாய மனதில் எண்ணாதே;
மன்னுந் தர்மமும் மற்றத் தவங்களும்
மாய்ந்து போகுமடி மானினியே!

ரு. அந்நியர் வேதைப் படும்போது மேலோர்
சொந்த நன்மைகளைப் பாரார்கள்;
இன்னுயிர்களையும் ஈவார் அதற்குப்
பின்னும் என் சொல்வது பெண்மயிலே!

கங. பொறுமையேயாவர்க்கும் பெருமை தருவதும்,
பேரகங்களை யுண்டாக்குவதும்;
சிறுமைக ளென்றும் உண்டாகாது, அதைச்
சிந்தையில் வையடி தேன்மொழியே!

கச. செல்வம் வந்தாலும் செருக்கடையாதே!
சீக்கிரம் வந்திடும் அதற்கு நாசம்;
இல்லாமை நேர்ந்தாலும் இதயத்தில் சஞ்சலம்
நில்லாமல் பாரடி நேரிழையே!

கரு. 'முயற்சி யுடையவர் எக்காலத்திலும்
இகழ்ச்சி யடையார்கள்' என்று நினை;
உயர்ச்சி யடைவாய் நீ உண்மை வழிகளால்
உறுதியாய் நம்படி! ஒண்டொடியே!

கசு. ஈசன் அளித்தது எவ்வள வானாலும்
அவ்வளவே போதுமென்றிருப்பாய்;
பேசாதே குறைகள்! பேசிடில் வந்திடும்
பெரிய துன்பங்கள் பெண்மயிலே!

கஎ. கொலை, களவு, காமம், கள்ளுண்ணலானவை
கொடிய பாதகமென்று தவிர்ப்பாய்;
நிலையாக மனதை நித்திய வஸ்துவில்
நிறுத்துவதே மேட்சம் நேரிழையே!

கஅ. தெய்வபக்தி யில்லாதவர்க்கென்றும்
தீங்குகள் நேரும்; அஃதுள்ளவர்க்கு
வையம் புகழ நல் வாழ்வுக ளுண்டாகும்;
வானோர் உறவாவார் வாள்விழியே!

கக. நீரின் மேற் பிறக்குங் குமிழியானது
நிமிஷத்தில் தோன்றி மறைவதைப்போல்
பாரின் மீது மாந்தர் தேகமும் வாழ்வும்
பார்க்கும் போதே போகும் பைங்கிளியே!

உ0. ஈசனிருப்பிடம் இதயத்திலே இதை
யின்னபடி யென் றறியாமல்,
தேசமெல்லாஞ் சுற்றித் திரிந் தலேகிருர்
திண்மை யில்லாதவர் தீங்குயிலே!

உக. நீசெய்யுஞ் செய்கையும், நினைக்கு மெண்ணமும்
நீயே யறிவாயென் றெண்ணுதே!
நேசமாயுன் னுள்ளே வாசமா யிருக்கும்
நித்திய ஆன்மா எல்லா மறியும்.

உஉ. ஜன்மங் கிடைப்பது கன்மத்தின்படியே
துன்புறுங் காரியஞ் செய்யாதே!
உண்மையாய்க் காயஞ் மனோவாக்குஇவையால்
உத்தமி யென்று உயர்வடைவாய்!

உங. தனக்குச் சத்துரு மித்துரு வாவதும்
தானேயென் றறிவாய் தையலே! நீ;
தாழ்வதும் உயர்வதும் தன்னாலே, அதன்
தன்மை யறிவது ஞானமாமே.

உச. ஆசை யுண்டாவதும், அது அழிவதும்
ஆகியவைகள் மனத்தாலே!
நேசமாய் மனதை நிறுத்தி ப்ரம்மத்தில்
நிராசை தேடடி ஞானப்பெண்ணே!

உரு. உற்ருர் பெற்ருர் முதலாகிய சுற்றத்தார்
ஒருவரும் உன்னுடன் வாரார்கள்;
பற்றும் நீ முன்செய்த பாவ புண்ணியங்கள்
பார்த்து நீத் தோடி பைங்கிளியே!

உசு. ஆரிய நீதியை ஆவலாய்த் தமிழில்
அவ்வனியி லுள்ளோர்க் குதவும்படி
சீருடனே சீநிவாச நாமன் சொன்ன
சிங்காரக் கொம்மியைப் பாடுவாய் நீ

நீதிமார்க்கக் கோம்மி முற்றிற்று.

# ஸ்ரீசாது இரத்தின சற்குரு புத்தகசாலை,

நெ. 4-34, நயினியப்பநாயக்கன்வீதி, பார்க்டவுன், சென்னை.


## இவைகளில் உங்களுக்கு எது வேண்டும்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிற்றின்ப ஞான சிந்தாமணி | 1 | 0 |
| மதனரதி | 1 | 0 |
| கொக்கோகம் | 1 | 0 |
| இல்வாழ்க்கையின் ரகசியம் (படம்) | 2 | 0 |
| இன்பவாழ்க்கையின் ரகசியம் (படம்) | 2 | 0 |
| மணவாழ்க்கையின் மர்மங்கள் (படம்) | 2 | 4 |
| சிற்றின்ப சாஸ்திர சிந்தாம | 0 | 8 |
| ரதிமதன சிருங்கார ரகசிய | 0 | 12 |
| மாயாஜால விநோதம் | 1 | 0 |
| ஜால ரத்னாகரம் | 1 | 0 |
| மனோவசிய ரகசிய சாஸ்தி | 1 | 4 |
| கருப்ப சாஸ்திரம் | 1 | 8 |
| ஜீவவசிய பரமரகசியம் | 3 | 0 |
| சரீரமர்ம சாஸ்திரம் | 1 | 0 |
| சதிபதிகளின் மர்மம் | 1 | 0 |
| ஸ்திரீபுருஷ ரகசியம் | 1 | 0 |
| இரதிசாஸ்திரம் | 1 | 4 |
| மஹேந்திர ஜாலம் | 0 | 12 |
| இல்லறவாழ்க்கையின் இன்ப ரகசியங்கள் | 2 | 0 |
| விரலி விடுதூது | 0 | 12 |
| கண்கட்டு வித்தை | 2 | 0 |
| குடும்ப விநோதகதை | 2 | 0 |
| இல்வாழ்க்கையின் கிரம ரகசியம் | 3 | 0 |
| காபாட்சி சுவாதீன கர்ப்பம் | 0 | 8 |
| சங்கீத கீர்த்தன சாரவிளக்கம் | 1 | 8 |
| சங்கீதாமிர்தக் கீர்த்தனை | 1 | 8 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| கைத்தொழில் முறைகள் | 1 | 8 |
| விகட விநோதக்கொத்து | 0 | 8 |
| பெண்மதிமாலை | 1 | 0 |
| பெண்ணின் பெருமை | 2 | 0 |
| நளவீமபாக சாஸதிரம் | 1 | 8 |
| இந்துபாக சாஸ்திரம் | 2 | 4 |
| கோலபுத்தகம் | 0 | 4 |
| பதிவிரதைகள் சரித்திரம் | 1 | 4 |
| கலியாண பாட்டு | 0 | 4 |
| 352 விடிகதை | 0 | 4 |
| காதல் வாழ்க்கையின் மர்மங்கள் | 2 | 0 |
| மூத்தத்தின் மர்மம் | 1 | 8 |
| மங்கையின் மூத்தம் | 2 | 0 |
| ஆண்பெண்மர்ம ரகசியம் | 1 | 0 |
| சிற்றின்பவெற்றி | 2 | 4 |
| ஸ்திரீபுருஷ தத்துவம் | 3 | 0 |
| இல்லறவாழ்க்கையின் மதரைதி இன்ப ரகசியங்கள் | 1 | 8 |
| காமகூளப்ப நாயக்கன் காதல் | 0 | 3 |
| [illegible]ம்பிகாபதிகோவை | 1 | 0 |
| மாதர்பூஷணம் | 0 | 6 |
| பதிவிரதா[illegible]பூஷணம் | 0 | 6 |
| பெண்கள் ந[illegible]திவிளக்க விஞ | 0 | 12 |
| வள்ளுவரும்ம[illegible]களிரும் | 1 | 4 |
| வசீகரண தந்திரம் | 2 | 0 |
| கலியுகப் புளுகன் | 0 | 8 |
| சுப்பராமய்யர்பதம் | 0 | 6 |
| ஜெனரல் ஹிந்துசங்கீதக கீர்த்தனைகள் | 1 | [illegible] |

ஸ்ரீசாது இரத்தின சற்குரு புத்தகசாலை

நெ, 4-34, நயினியப்பநாயக்கன் வீதி, பார்க்டவுன், செ

திருத்தமான 2-ம் பதிப்பு வெளியாகிவி

# கருப்ப சாஸ்திரம்

ஆயிரக்கணக்கான ஜனங்களால் நன்கு மதிக்கப்பெற்றது.

**அநேகப் படங்களுடன் விலை ரூபா 1 8 0**

இதில் காலமறிந்து கலியாணஞ் செய்யுமுறையும், பருவமறி
ந்து சங்கமஞ் செய்யும் விபரமும், பாலிய விவாகத்தின் கெடுதி
யுணருமார்க்கமும், தேகபலம் மனோபலம் வீரியசக்தி முதலியன
வுள்ள சந்ததிகளை யடையும் விதங்களும், கருப்பத்திலிருப்பது ஆ
பெண் ஆகிய இரண்டினுள் இன்னதென்றறியு முபாயமும் த
மனோ பாவனையின்படி ஆண் பெண் உற்பத்தியாக்கிக் கொள்ளு
தன்மையும் ஸ்திரீ புருஷர் மலடாவதின் காரணமும், கருப்
லத்தில் பெண்மணிகள் கவனித்து நடக்கும் விதங்களும்,
வொரு மாதங்களிலும் அவர்களுக்குண்டாகும் வியாதிகளும்,
றிற்குத் தகுந்த சிகிச்சைகளும் சுகமாகப் பிரசவிக்கும் மார்
பிரசவித்த குழந்தையைப் பிரசவகாலத்தில் ரட்சிக்கு
அதற்குப் பாலூட்டுங் கிரமங்களும், குழந்தைகளை
மார்க்கங்களும், பிள்ளை நோய்கொள்ளாமல் சுகத்
யும் விதிகளும் குழந்தைகள் போதனைப்பியாச
ளினால் அப்பிள்ளைகள் பயனடையும் வி
பெரிய இரகசிய விஷயங்களுக்கும் மி
டுள்ளன.

புத்திரசந்தான எண்ணே

**புதிய ஜோதிட நூல்!**

# ஜோதி

ஜோதிட

[இதனை வாசி

அன்பர்களே

இ

வெகு

## ஸ்ரீசாது இரத்தின சற்குரு புத்தகசாலை,

34, நயினியப்பநாயக்கன் வீதி, பார்க்டவுன், சென்னை.

---

ம், உட்கருத்துகள் இன்னின்னவென்றும், ஜாதகங்களை
...தற்கும், சுபாசுப காரியங்களுக்கும் தினத்தைக் குறித்து
...தை ஏற்படுத்தவும் வாரோபத்தி சக்கரம், திதிகள் உண்டாகும்
...ரமும், சேர்க்கப்பெற்ற ஜனனநாழிகை ஸ்புடமும் ஜன்மராசி
...வாம்ச சக்கரங்களில் கிரகங்களை அமைக்கும் விதமும், தசாபுக்தி
நட்சத்திர பரம நாழிகைகளைத் தசாபுத்தியை இருப்புக்கட்டும் வித
மும் மற்றும் ஜோதிடத்திற்கு ஆரம்பமான சுமார் 212 விஷயங்க
ளுக்கு மேலாக அநேக சம்ஸ்கிருத நூல்களினின்றும், தென்மொழிக
ளினின்றும், அநேக வருஷ ஆராய்ச்சியுள்ள சோதிட சாஸ்திரி
ஒருவரால் இயற்றப்பெற்றது. இந்நூலை அனைவரும் வாங்கி விஷ
...ங்களை ஆராய்ச்சிசெய்து ஒவ்வொரு குடும்பத்தாரும் தாங்களே
...ம்பங்களுக்கு வேண்டிய ஜோதிடத்தைக் கூறுவதற்கு ஆசிரிய
...ாகை விளங்கலாம்.

இது விலையுயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பெற்று உயர்
...பிண்டுடன் கூடியது. இதன் விலை ரூபா 1 0 0

| | | | | |
|---|---|---|---|---|
| ...ாதிட ஆசிரியன் | ஷை 2-ம் பாகம் | 1 | 0 | 0 |
| — ,, — | ஷை 3-ம் பாகம் | 1 | 0 | 0 |
| — ,, — | ஷை 4-ம் பாகம் | 1 | 0 | 0 |

## ...ாதைக் கண்டனத் திரட்டு

...த்துடன் விலை அணா 8. (தபால் கூலி வேறு)
...தற்காலம் தோன்றியிருக்கும் சுயமரியாதைக்
...க்க ஆதாரங்களோடு கண்டித்து எழுதப்
...த்திக அன்பர்கள் ஒவ்வொருவர் கையி
...ம்.

...ால்களின் விவரம்:—
...வின் ஆஸ்திகப் பேருரை.
...துவதா? ஆரியர் காலத்தில்
...ர் கோயிலை, கோயிலின்
...் சிறப்பு.
...குருடன் கண.
...தைச் சம்பாஷணை,
...ந்தர் தோத்திரம்
...அறிஞர்கள்